உ

திருவாஞ்சியத் தலபுராணம்

களந்தை-குமரன்

திருவாஞ்சிய தேவஸ்தான வெளியீடு

1959

உ

சிவமயம்

திருவாஞ்சியத் தலபுராணம்

ஆக்கியோன் :

களந்தைக் குமரன்

'சித்தாந்த வித்தகர்,
கயப்பாக்கம்-திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுடைய
குறிப்புரையுடன்.

சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர்
திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்கள் அறிக்கைப்படி,

தஞ்சை அறநிலைய உதவி ஆணையாளர்
திரு. A. சக்கரைச் சேர்வை B.A., B.L., அவர்கள்
அனுமதி பெற்றுத்

திருவாஞ்சிய தேவஸ்தானத்தாரால்
வெளியிடப்பெற்றது.

முதற்பதிப்பு ஜூலை 1959

Paari Achakam, Madras-1.

M. கிருஷ்ண முதலியார்
A. N. R. ராமசாமி பிள்ளை
தர்மகர்த்தாக்கள்.

C. ராஜாபாதர் உடையார்
நிர்வாக தர்மகர்த்தா.

S. நாகசுப்பிரமணியன்
நிர்வாக அதிகாரி.

விலை ரூ. 2-00

பொருளடக்கம்

	பதிப்புரை	...	v
	அணிந்துரை	...	vi
	முகவுரை	...	ix
1.	பாயிரம்	...	1
2.	புராண வரலாற்றுச் சருக்கம்	...	9
3.	நைமிசாரணியச் சருக்கம்	...	13
4.	தலவிசிட்டச் சருக்கம்	...	23
5.	முனிதீர்த்தச் சருக்கம்	...	34
6.	பராசர தீர்த்தச் சருக்கம்	...	50
7.	அத்திரிநாமதீர்த்தச் சருக்கம்	...	81
8.	திருமால் தவம்புரிச் சருக்கம்	...	95
9.	இந்திரன் சாபவிமோசனம் பெற்ற சருக்கம்	...	126
10.	விகுட்சிச் சருக்கம்	...	141
11.	மாகஸ்நான விசிட்டச் சருக்கம்	...	153
12.	மயிடாசுரன் வதைச் சருக்கம்	...	171
13.	மண்டூகமுத்திச் சருக்கம்	...	187
14.	காசியாதிக்யச் சருக்கம்	...	202
15.	பிரமோற்சவச் சருக்கம்	...	214
16.	சிருட்டிச் சருக்கம்	...	220
17.	திருவிழாச் சருக்கம்	...	237
18.	ஸ்ரீ மங்களநாயகியம்மை பிள்ளைத்தமிழ்	...	263
19.	பாட்டு முதற் குறிப்பகராதி	...	338

சிவமயம்

பதிப்புரை

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சிவபெருமான் கோயில் கொண்டுள்ள தலங்கள் பலவற்றுள் சைவசமய குரவர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்கள் பாடிய தலங்கள் பாடல் பெற்ற தலங்களாகும். திருவாஞ்சியமாகிய இத்தலத்தை நால்வரும் பாடியிருக்கின்றனர். இத்தலம் மூர்த்தியாலும், தீர்த்தத்தாலும், தலத்தாலும், மிகுந்த சிறப்புடையது. ஓர் தலத்தின் பெருமை அறிந்துகொண்டு பக்தி சிரத்தையுடன் வழிபாடாற்றத் தலபுராணம் பெரிதும் துணை செய்யும். ஆகையால், இத்தலத்தின் சிறந்த தலபுராணத்தைப் பதிப்பித்திருக்கிறோம். இத்தலத்தை வழிபட்டுப் பயனடைந்தோரின் பெருமைகள், இங்கு எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் மேன்மைகள் முதலியன இதில் விளக்கப் பட்டுள்ளன.

இந்நூலை அணி செய்ய ஓர் அரிய அணிந்துரை கொடுத்து உதவிய நமது மதிப்பிற்குரிய சைவப் பேரறிஞர் உயர்திரு A. உத்தண்டராமப்பிள்ளை, B. A. B.L. I. A. S. அவர்களுக்கு எங்கள் தேவஸ்தான நன்றியை முதற்கண் செலுத்திக்கொள்ளுவது எங்கள் முதற் கடமையாகும்.

இனி, இந்நூலைப் பதிப்பித்து வெளியிடும் பணியை அன்புடன் ஏற்றுக்கொண்ட சைவத்திரு G. கல்யாணம் பிள்ளை M. A. ("திருக்கோயில்" ஆசிரியர்) அவர்களுக்கும், இதைச் சரிபார்த்துக் குறிப்புரையும் விளக்க அமைப்புக்களும் தந்து உதவிய சைவச் சான்றோராகிய கயப்பாக்கம். உயர்திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்கும் இத்தேவஸ்தானத்தின் நன்றி உரியதாகும்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

இந்நூலை அன்பர்கள் அனைவரும் படித்து இறைவனின் இன் அருளுக்கு உரியராக வேண்டுகின்றோம்.

ஸ்ரீவாஞ்சியம் தேவஸ்தானம்

அணிந்துரை

(சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர். உயர்திரு A. உத்தண்டராமப் பிள்ளை அவர்கள் B. A. B. L. I. A. S. அன்புடன் அளித்த அணிந்துரை)

............விநாயகனே என்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே.

சோழவள நாட்டில் காவிரிநதியின் தென் பாலமைந்துள்ள பாடல்பெற்ற சிவ க்ஷேத்திரங்களுள் சிறந்து விளங்குவது திருவாஞ்சியம். சமயகுரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற தனிப் பெருமையுடைய தலம்.

'திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்'

என்று மாணிக்கவாசகப் பெருமானால் பாரரட்டப்பெற்றுள்ளது. நைமிசவனத்தில் சூதமுனிவர் உரைத்த இத்தலபுராணத்தை வடமொழியினின்றும் தமிழில் மொழி பெயர்த்துப் பாடியவர் களந்தைக்குமரன் எனத்தெரிகிறது. இவரது வரலாறு தெரியவில்லை. இப்புராணம் அடையாறில் உள்ளதென அறிந்து அதைத் தேவஸ்தான வெளியீடாக அச்சிட்டு மக்களுக்கு உதவ முன்வந்த திருவாஞ்சிய தேவஸ்தான நிர்வாகக் குழுவினருக்கும், இதைச் சரிபார்த்துக் குறிப்புக்களுடன் பதிப்பிக்கும் பணியை ஏற்றுச் செவ்வனே செய்து கொடுத்த உயர்திரு. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார்ரவர்களுக்கும் சைவ உலகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

மூர்த்தி, தலம் தீர்த்தம் மூவகையாலும் சிறந்த இப்பதியில் கார்த்திகை ஞாயிறு தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து வழிபடுவது ஒரு தனிச் சிறப்பு.

புகலிலாதி யுகந்தனிற் புண்ணிய தீர்த்தம்
திகழ்திரே தாயுகந்தனில் அத்திரி தீர்த்தம்
பகர் துவாபரத்தோ துபராசர தீர்த்தம்
இகலிலாத விக்கலியினிலிது முனிதீர்த்தம்.

மெய்தரு கயநோய் குட்டம் விளைத்தமுற் கொடிய சாபம்
பெய்துறல் செய்யும் வன்கட் பிரமராக்கதம் வேதாளம்
எய்திடி னன்ன தீர்த்த மிழிந்ததிற் படியத் தீரும்
செய்திடுங் கடத்தி னேற்றுத் தெளிக்கினுந் தீரு மன்றே.

இப்பாடல்களின் எளிமையும் இனிமையும் போற்றற் குரியன. இத்தலத்தின் பெயர்க் காரணத்தைப் பின்வரும் பாடல்களில் அழகாக அமைத்துள்ளார்.

கற்றை வார்குழற் றிருவைவாஞ் சியத்துள்
கருணையாலுறத் தமியேனன் மேவப்
பெற்ற திங்நக ராதலா லிதற்குப் பெயரு
மேதிரு வாஞ்சிய மெனவும்
மற்று மிங்நக ரில்வைகுநீ யகலா வாழ்வு
கொண் டருளியே யன்பற்
குற்ற வான்றுணை யாயுல கெலாமுய
வுவந்தருள் புரிதியீங் கென்றான்.

செங்கண் மாலினைய புகறலு மிறையோன்
திருவுளத் துவகைகூர்ந் தருளி
அங்கண்மா ஞால மொடுக்கமுற் றிலைய மடைந்தநா
ளகன்றபல் திருவும்
பங்கயன் மீளப்படைக்குநா ளெய்தும் பரிசவன்
வாஞ்சைகூர் வரத்தால்
இங்குவந் தெய்திற் றுதலால் நகர
மிதுதிரு வாஞ்சிய மென்னும்.

இப்பதி காசியினும் சிறந்ததென்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

உரைசெயற் கரிய வன்ன தொன்னகரை
யுள்கினும் பரமமுத்தியா
விரசதக்கிரி யினிலகு சேகரமு மிரணியப்
பதும வாவியும்
வரசுவாவினர் மரித்துளோற் கிடர்செயாத
வாழ்வுமிக வாய்த்தலாற்
கரைசிறந்த பகிரதி குலாவுமுயர்
காசியின் னிதுவிசேடமே.

இத்தலபுராணத்தைப் படிப்பவர் கேட்பவர் எய்தும் பயனைக் கூறும் ஒரு பாடல் பின்வருமாறு:

ஏற்றமாம் வாஞ்சிய மென்பதோ ருரை
போற்றினர் சிவபதம் புகுவர் திண்ணமாம்
சாற்றுமித் திருநகர் சரிதை கேட்பவர்
பேற்றினை யாவரே பேச வல்லவர்.

இத்தலத்தின் அருமை பெருமைகளை யாவரும் உணர்ந்து பயன்பெறும் வண்ணம் எளிய இனிய நடையில் அமைந்துள்ள இத்தலபுராணத்தைச் சைவ மக்கள் படித்துப் பயன்பெறுவார்களாக. இத்தலத்திலுள்ள அம்பிகை வாழவந்த அம்மை என்ற மங்களநாயகியம்மை பேரில் உள்ள பிள்ளைத் தமிழும் குறிப்புரையுடன் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் சிவராம பிள்ளை. இவர் வரலாறும் தெரியவில்லை. இப்பிள்ளைத் தமிழையும் தலத்தேவாரங்களுடன் பாடி அம்மையப்பரின் திருவருள் பெற்று இன்புறுவோமாக!

‘ வாழி வாழி யிவ்வையகமும் வாஞ்சை மாநகரும்
வாழி மன்னவன் கோல்நெறி மாமறைவாழி
வாழி யஞ்செழுத்தருள் நிலைவாழி வெண்ணீறு
வாழி யந்தணர ரனடிக் கன்பினர் வாழி ’

அ. உத்தண்டராமன்.
20—5—59

முகவுரை

கல்லால் நிழன்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே.

இத்தலம் காவிரிக்குத் தென்கரையில் உள்ள பாடல் பெற்ற தலங்கள் 127 உள் 70-வது ஆகும்.

இலக்குமியை விரும்பி (வாஞ்சித்து)த் திருமால் இறைவனைப் பூசித்த காரணத்தால் இத்தலம் இப்பெயர் எய்தியது. தென்னாட்டில் காசிக்குச் சமானமாகச் சொல்லப்பெறும் ஆறு தலங்களுள் இதுவும் ஒன்று. இத்தலத்தில் இயமன் பூசித்துப் பேறுபெற்றான். இயமனது சந்நிதியும் திருக்கோயிலுக்கு வெளியே அக்னி மூலையிலுள்ளது. இவ்வூரில் இறப்பவர்களுக்கு இயமவாதனையில்லை.

இத்தலத்துள்ள இறைவன் பெயர் **வாஞ்சியநாதர்;** இறைவி பெயர் **வாழவந்த நாயகி;** தீர்த்தம் **குப்தகங்கை;** தலவிருக்ஷம் **சந்தனம்.** இத்தலத்திற்குத் திருஞான சம்பந்த சுவாமிகள் இந்தளப்பண்ணில் அருளிய இரண்டாந் திருமுறைப் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய ஐந்தாந்திருமுறைத் திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பியந்தைக் காந்தாரப் பண்ணில் அருளிய ஏழாந்திருமுறைப் பதிகம் ஒன்றும் உள்ளன.

இத்தலத்துள்ள குப்தகங்கைத் தீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிறு நாட்களில் மக்கள் நீராடிப் பேறுபெற்று வருவது கண்கூடு. இத்தலத்திற்கு 27 கல்வெட்டுக்களுமுண்டு.

இது மாயூரம் திருவாரூர் ரயில் பாதையில் நன்னிலம் ரயில்வே நிலையத்திற்கு மேற்கே ஆறு மைல் தூரத்திலிருக்கிறது.

இத்தலத்திற்கு ஒரு தலபுராணமிருக்கிறது. அது 17 சருக்கங்களும் 828 பாடல்களும் கொண்டு விளங்குகிறது. இதன் ஆசிரியர் பெயர் திரு. களந்தை. **குமரன்** என்று மட்டும் தெரிகிறதே யொழிய இவரைப்பற்றிய வரலாறு ஒன்றும் அறிய இயலவில்லை. இந்நூல் இதுவரை அச்சில் வராதிருந்தது. இதன் குறையை நீக்க எண்ணிய திருவாஞ்சியத் தேவஸ்தானம் இதனை அச்சிட எண்ணி யப்பணியை அடியேனிடம் ஒப்படைத்தார்கள். ஒன்றுக்கும் பற்றாத அடியேனும் ஆசை வயத்தால் ஈர்க்கப்பட்டு இதனை அச்சேற்றி வெளியிட ஒப்புக்கொண்டேன். இதற்கு ஒரு குறிப்புரையும் சிற்சில பாட்டுக்களுக்குமட்டும் முன்னரே உண்டு. அதனோடு சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் தற்காலத்திற்கேற்ற வண்ணம் குறிப்புரையையும் அமைத்துள்ளேன்.

இத்தலத்து எழுந்தருளியுள்ள வாழவந்த அம்மையாருக்கு மற்றொரு பெயரும் வழங்கி வருகிறது. அது **மங்களநாயகியார்** ஆகும். அவ்வம்மையார்மீதும் ஒரு பிள்ளைத்தமிழ் உண்டு. இதனையியற்றியவர் ஷை பிள்ளைத் தமிழ் 99-வது பாட்டின்படி முத்துமணி மகன் சிவராம (பிள்ளை) எனத் தெரிகிறது. இவர் வரலாறும் ஒன்றும் தெரியவில்லை. இப்பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தையும் ஒரு குறிப்புரையுடன் அச்சிட எண்ணினார்கள். அப்பிரபந்தத்தையும் இத்தலபுராணத்து இறுதியில் இரண்டாம் பாகமாக வெளியிட்டுள்ளேன். இப்பிள்ளைத்தமிழ்ப் பாடல்களையும் அன்பர்கள் பக்தி சிரத்தையுடன் படித்து அம்மையின் திருவருளைப் பெற்றுய்வார்களாக!

இனி இந்நூலை அச்சிடுவதற்குத் துணையாயிருந்தவை **டாக்டர் மகாமகோபாத்தியாயர். உ. வே. சாமிநாதய்யர்** அவர்கள் நூல் நிலையத்தில் ஓலைச்சுவடியிலிருந்து காகிதத்தில் எழுதிவைத்திருந்த தலபுராணப் பிரதியும், முன்னாள் திருவாஞ்சிய ஆலயத்தில் பணியாற்றிய அதம்பார் திரு. ராமசாமி ஐயர் எழுதி நூல் நிலையத்தில் வைத்திருந்த

பிள்ளைத் தமிழ்ப் பிரதியும் ஆகும். அந்நூல் நிலையத்தா ருக்கும், அதம்பார். திரு. ராமசாமி ஐயர் அவர்களுக்கும் இதனையிவன் கண்விடல் என எண்ணி இப்பணியைப் அடி யேனுக்கிட்டுப் பெருமான் திருவருளைப் பெற்றுய்யுமாறு செய்த இத்தலத் தருமகர்த்தர்கள் அவர்களுக்கும், இதனை அழகுற அச்சிட்டுக் கொடுத்த **பாரி அச்ச கத்தாருக்கும்,** இத்துணைக்கும் உறு துணையாயிருந்த எனது ஆப்த நண்பர் திரு G. கலியாணம் பிள்ளை M. A. அவர்களுக்கும் (அற நிலையப் பாதுகாப்புத் துறையார் வெளியிட்டு வரும் "திருக்கோயில்" பத்திராதிபர்) என் நன் றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்!

வர்ழ்க சைவமும் தமிழும்! வாழ்க சீர் அடியா ரெல்லாம்!!

இங்ஙனம் :

சென்னை-5 }
25-6-59 }

கயப்பாக்கம்–சோமசுந்தரம்.



கோயிலும் குப்தகங்கையும்

உ

சிவமயம்

ஸ்ரீவாஞ்சியம் எனவழங்கும்

திருவாஞ்சியத் தலபுராணம்

1. பாயிரம்

காப்பு

1. போத மெய்தவும் போகந் தழைக்கவும்
தீத கன்றுமெற் சிந்தனை முற்றவும்
காத லாற்கலங் காதகை மாமுகன்
பாத நூபுரப் பங்கயம் போற்றுவாம்.

கலங்காமற் காத்த விநாயகர் துதி

2. செக்கர் வானவெண் பிறையெனத்
திருமுகத் தொருமருப் பினிதோங்கக்
கைக்க ணிந்தகங் கணமணிச்
சுடர்விடக் கன்னசா மரைதூங்க

---

1. போதம் – ஞானம்; போகம் – செல்வம்; கைமாமுகன் – துதிக்கையையுடைய யானைமுகக் கடவுளாகிய விநாயகப் பெருமான்; நூபுரம் – சிலம்பு; பங்கயம் – தாமரை.

2. செக்கர் – செந்நிறம்; மருப்பு – கொம்பு; கன்ன சாமரை – காதாகிய சாமரை; தூங்க – தொங்க; தொக்க – சேர்ந்த; மும்மதம் – கைம்மதம், கன்னமதம், கபோல மதம்; கலுழ்தர – ஒழுக; ஆர்ப்ப–சப்திக்க; கரிமுகன் – யானைமுகமுடைய விநாயகர்.

தொக்க மும்மதங் கலுழ்தர
விணையிலாத் துணையடி சிலம்பார்ப்பப்
பக்கமேசுரர் கணந்தொழ
வருகரி முகன்பதம் பணிவாமால்.

சிவபெருமான் துதி

3. சீர்தாங்கு முளரிமலர்த் திசைமுகனும்
நெடுமாலுந் தேவர் கோவுந்
தார்தாங்கு கதிர்மௌலி குனித்திறைஞ்சிப்
போற்றவரு டழைக்குஞ் சோதி
நீர்தாங்கு வளவயல்சூழ் வாஞ்சியநன்
னகர்மேய நிமலன் பெம்மான்
கார்தாங்கு கறைக்கண்டன் கனகமணி
நூபுரத்தாள் கருத்திற் சேர்ப்பாம். 1

(இதுவுமது)

4. அருவமென உருவமென அருவுருவ
மெனலாகி யகண்ட மாகிப்
பொருவரிய மறைகளினு லளவையினல்
அறியவரும் பொருள தாகி

---

3. சீர் - அழகு; முளரி - தாமரை; திசைமுகன் - பிரமதேவன்; நெடுமால் - விஷ்ணு; தேவர்கோ - இந்திரன்; மவுலி - முடி; கறைக்கண்டன் - நீலகண்டன்; கனகம் - பொன்.

4. அருவம் - உருவமின்மை; அகண்டம் - அளவுபடாத வடிவம்; மறை - வேதம்; இறுதி - முடிவு; ஓப்பு - சமானம்; இகந்து - நீங்கி;

மருவரு மிறுதிநடு வொப்பிகந்து
மூப்பிளமை மாசொன் றின்றி
ஒருமுதலா யோங்கிநிறைந் தழியாத
பரஞ்சுடரை யுள்ளத் துய்ப்பாம். 2

வாழவந்த நாயகி துதி

5. இருவகைய மாயையுபா தான மாக
எண்ணிறந்த வுயிர்புரக்கு மிறைவற் கிச்சை
தருமறிவு கிரியையெனத் தயங்கா நிற்குஞ்
சத்திபரா பரையிமையச் சயிலப் பாவை
பொருவரிய கருணைதிரு வுருவாய் வெள்ளிப்
பொருப்பொருவி விருப்பினொடு புனிதன் பூசை
மருவுமுமை வாஞ்சியநன் னகரெஞ் ஞான்றும்
வாழவந்த நாயகிதாள் வழுத்தல் செய்வாம். 3

கணபதி துதி

6. வள்ளல் தென்திரு வாஞ்சிய மாக்கதைத்
தெள்ள ருந்தமிழ் செய்யுந் திறத்தினல்
வெள்ள மும்மத வெண்மருப் பொன்றுடைப்
பிள்ளை வேழப் பிரானடி போற்றுவாம். 4

---

5. இருவகைய மாயை - சுத்தமாயை, அசுத்த மாயை; உபாதானம் - முதற்காரணம்; சயிலப்பாவை - மலைமகள்; பொருவரிய - உவமை கூறற்கரிய; பொருப்பு - மலை; ஒருவி - நீங்கி; புனிதன் - சிவபிரான்; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; வழுத்தல் - துதிசெய்தல்.

6. வள்ளல் — வரையாது கொடுக்கும் தன்மையுடையோர்; தெள்ளருந் தமிழ் - தெளிவும் அருமையுமான தமிழ் நூல்; திறம் - வல்லமை; வெண்மருப்பு — வெள்ளைத் தந்தம்; பிள்ளை வேழப்பிரான் - இளமை தங்கிய யானைமுகமுடைய விநாயகர்.

குமரவேள் துதி

7. அண்ட மாயிரத் தெட்டு மரன்றரக்
கொண்ட சூருடன் குன்றமுந் தூள்படப்
பண்டு வேல்தொடு பன்னிரு கையினான்
புண்ட ரீகப் பொலன்கழல் போற்றுவாம். 5

திருநந்திதேவர் துதி

8. இறைவர்தாள் கைலை வெற்பி
னிறைஞ்சுதற் கிமையோர் கோடி
நிறைதரு நிபுட நீக்கி
நின்றரி புரந்த ராதி
முறைமுறை வணங்கச் செங்கைப்
பிரம்பவர் முடியில் நீட்டுந்
திறலுடை நந்தி தேவர்
திருவடி சென்னி சேர்ப்பாம். 6

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் துதி

9. ஏழுலகு மீன்றாள்தன் திருமுலைப்பால்
உண்டருளி யிவனெம் மானென்
றாழிநெடு வெள்ளத்து முலையாத
திருத்தோணி யுடையான் றன்னை

---

7. அண்டம் - உலகம்; சூர் - சூரபத்மன்; குன்றம் - கிரௌஞ்சமலை; புண்டரீகம் - தாமரை; பொலன் - அழகு; கழல் திருவடி.

8. இறைவர் - சிவபிரான்; வெற்பு - மலை; இறைஞ்சுதற்கு - வணங்குதற்கு; இமையோர் - தேவர்; நிபுடம் - நெருக்கம்; புரந்தராதி - இந்திரன் முதலான; திறல் - வலிமை; சென்னி - தலை.

ஆழிநிறை புனற்கொட்டில் நின்றுவிரல்
தனைநீட்டி யமுது காட்டுங்
காழிவரு கவுணியர்கோன் பரசமய
கோளரிதாள் கருத்திற் சேர்ப்பாம். 7

திருநாவுக்கரசு நாயனார் துதி

10. குன்றனைய நெடும்புழைக்கைக் களிறலைப்ப
வொட்டாது கொடுங்கூற் றெருப்பத்
துன்றமணர் சூறைக்கு மசையாது
சுண்ணத்தின் சுடர்த்தீப் பட்டும்
கண்ணுதலின் றுயுவரி வெள்ளத்துஞ்
சாயாது கன்மே லோங்கி
நின்றநிலை பெயராமை வல்லதெனுஞ்
சொல்லரசின் நிழல்சேர்ந் துய்வாம். 8

---

9. ஏழுலகு - பூலோகம், புவலோகம், சுவர்க்கலோகம், மகாலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம்; ஈன்றாள் - பார்வதி; ஊழி - உலகமுடிவுக் காலம்; உலையாத - அழியாத; காழி - சீகாழி; கவுணியர்கோன்- கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவர்; பரசமய கோளரி - பிறசமயங்களை வென்றவர்.

10. புழைக்கை – துதிக்கை; களிறு - யானை; கொடும் - கொடிய; கூற்று - இயமன்; துன்று - நெருங்கிய; அமணர் - சமணர்; சூறை - சுழல் காற்று; சுண்ணம் - சுண்ணும்பு; கன்றுதல் - வருந்துதல்; உவரி - கடல்.

சுந்தரமூர்த்தி நாயனார் துதி

11. நீடு காவணத் தாவண நீட்டிநின்
றாடு வானமக் கர்ச்சனை பாட்டுநீ
பாடு வாயெனப் பண்டுபித் தாவென
நாடு வானடி நம்முயிர்த் தஞ்சமே. 9

திருவாதவூரடிகள் துதி

12. ஓது மன்பர்த முள்ள முருக்குமோர்
சீத வாரமு தத்திரு வாசகம்
நாத னாரடிக் கன்பு நவிற்றிய
வாத வூரரை வாழ்த்தி வணங்குவாம். 10

பொது அடியார்கள்

13. அரியயன் முனிவர் தம்மா
லளவையா லறியொ ணாதாற்
குரியபே ரன்பர் தங்க
ளுள்ளமே கோயி லென்று
பரிவினா லவர்க்கங் கேற்ற
பணிபுரிந் தடைந்த வேனைப்
பெரியசீ ரடியார் தங்கள்
பிணைமலர்த் தாள்கள் போற்றி. 11

---

11. காவணம் – பந்தல் ; ஆவணம் - முறியோலை ; ஆடுவான் - நடராசப் பெருமான் ; நாடுவான் - நினைப்பவன்.

12. சீதம் - குளிர்ச்சி ; ஆரமுது - தெவிட்டாத அமுதம் ; நாதன் – சிவபெருமான் ; நவிற்றிய – சொன்ன ; வாத வூரர் – மாணிக்க வாசகர்.

13. அரி - திருமால் ; அயன் - பிரமன் ; அளவை - நூல் ; உள்ளம் - மனம் ; பணி - தொண்டு ; சீர் - புகழ் ; பிணை மலர் - தொடுத்தற்கரிய மலர் போன்ற.

அவையடக்கம்

14. சதுமு கத்தவ னுயிர முகப்பணித் தலைவன்
இதுநவிற்றிட வல்லரோவெனமுனி யுரைத்தான்
அதுக ருத்தினி லிருக்கவு மனையவிக் காதை
புதிது செந்தமிழ் செய்வனென் ருசையின் பொருட்டு.

15. பால லோசனன் குனித்தபொற்
பருவரை யொருபேய்
சால யானிது குனிப்பனென்
றரற்றிய தகைத்தாம்
மேலை நாள்முனி சூதரால்
விரித்தவிப் புராணம்
ஏலு மாறிது புகல்வனென்
றிசைக்குமென் மடமை. 13

16. குயவர் மண்வினைக் கண்டகோடி யளபல குயிற்றும்
அயன் வெறுத்தில னறிஞரை யாற்றுமிவ் வகிலம்
கயவ ரைத்தனி நீத்திலாக் கவிஞருங் கல்வி
யியல்பி லேனிது புகன்றதற் கிகழ்வரோ விகழார். 14

---

14. பணித்தலைவன் - ஆதிசேடன் ; முனி - சூதமுனிவர்.

15. பாலலோசனன் - அக்கினிக் கண்ணுடைய சிவபெருமான்; குனித்த - வளைத்த ; வரை - இங்கு மேருமலை; அரற்றிய- சொன்ன ; ஏலுமாறு - இயன்ற வண்ணம் ; இசைக்கும் - கூறும் ; மடமை - அறிவின்மை (இங்கு அடக்கம்)

16. குயிற்றும் - செய்யும் ; ஆற்றும் - நடத்தும் ; அகிலம் - பூமி ; கயவர் - கீழ்மக்கள் ; நீத்திலா - நீக்காத ;

நூலியற்றிய காலம்

17. சாற்று மிப்பெருங் கதையினைச்
சகாத்தமா யிரத்தைஞ்
ஞூற்று முப்பதோ டெட்டென
நுவலுமாண் டெல்லை
யேற்ற மாகிய இராக்கத
வாண்டினி லிசைத்தேன்
போற்று மற்றிதன் பெயர்திரு
வாஞ்சிய புராணம். 15

ஆக்கியோன் பெயர்

18. மருந்தர் தென்றிரு வாஞ்சிய வளநகர் காதை
இருந்த தாதியின் வடமொழி யிருதிறத் தனவாம்
திருந்த வித்திரு நாட்டினுக் கேற்பது செய்யுள்
அருந்தமிழ்த்தொடர் பாயினன் ருமெனு மன்பால்.

19. வளவர்கோன் பொன்னி நாட்டின்
வந்தவே ளாளன் செய்ய
முளரிமான் றங்கு மார்பன்
முகுந்தனா ருடையந் தாலி
அளவில்மா தவப்பே றன்னா
ளமுனிவ் வடநூற் காதை
உளதுசெந் தமிழாற் சாற்றென்
றுரைக்கமிக் கன்பு கூர்ந்தான். 17

---

17. சாற்றும் - சொல்லும்; சகாத்தம் - சாலிவாகன சகாப்தம்; நுவலும் - சொல்லும்; ஆண்டு - வருடம்; போற்றும் - துதிக்கும்.

19. வளவர்கோன் - சோழன்; பொன்னி - காவிரியாறு; முளரி மான் - இலக்குமி.

20. ஆதலால் முனிவன் சொற்ற
வாரியந் தமிழ்ப்படுத்தி
யோதினன் அதனை யன்ன
வுயர்புக ழழகன் றனே
மாதொரு பாகர் வாஞ்சை
மருந்தனார் திருமுன் வைகி
காதலித் தறிஞர் கேட்பக்
காதையரங் கேற்று வித்தான். 18

பாயிரம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 20.

—(o)—

2. புராண வரலாற்றுச் சருக்கம்

21. புனித மாந்திரு வாஞ்சிய
புராண நூல் கற்போர்
இனிது புத்தகத் தெழுதின
ரிசைப்பவர் கேட்போர்
வனிதை பாகருக் கன்பராய்
வாழ்வரெஞ் ஞான்றும்
நனித ரும்பர மானந்த
நடஞ்செய்சே வடிக்கீழ். 1

---

20. ஆரியம் - வடமொழி.

21. புனிதமாம் - பரிசுத்தமான; இசைப்பவர் - சொல்லுவோர்; வனிதை - பார்வதி; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; நனிதரும் - பெருமைதரும்.

22. இந்த மாக்கதை சொற்றர
வல்லனே வெளியேன்
முந்தை யோர்திரு வாஞ்சிய
மென்பதோர் மொழியைச்
சிந்தை செய்யினுஞ் சிவபத
மென்றுமுன் றெரித்தார்
அந்த வாய்மையிற் றுணிந்திவை
யறைகுவா னுற்றேன். 2

23. வாமன மிலிங்கங் கூர்மம்
வராகமே மச்சங் காந்தம்
ஏமமில் பௌடி கம்பிர்
மாண்டமார்க் கண்டஞ் சைவம்
ஆமிவை சிவபு ராண
மையிரண் டரிக்கு நான்கு
நாமமே விண்டு பாக
வதம்நார தங்கா ரூடம். 3

---

22. சொற்றர - சொல்ல ; சிந்தை செய்யினும் - மனத்தால் நினைப்பினும் ; தெரித்தார் - தெரிவித்தனர் ; வாய்மை - உறுதிமொழி ;

23–24 : புராணம் 18 ; சிவபுராணம் 10 ; சைவம், பவிடியம் மார்க்கண்டேயம். இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மற்சம், கூர்மம், பிரம்மாண்டம் ; விஷ்ணுபுராணம் ; 4. காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம் ; பிரம்ம புராணம் 2, பிரமம், பத்மம் ; அக்னிபுராணம், 1 அக்னி ; சூரியபுராணம் 1; பிரமகைவர்த்தம் ; ஆம்.

24. பாரதி கொழுநன் காதை
பதுமமே பிரம மென்று
ஓரிரு வகைத்தே யங்கிக்
கொன்றென்ப வாக்கி னேயம்
பேரெழி லிரவிக் கொன்று
பிரமகை வர்த்த மென்றே
ஏருறு புராண மூவா
றென்பன வவை யிவற்றுள். 4

25. வரனுடை முனிவர் போற்றும்
வாஞ்சைமா நகரின் வாய்மை
புரையில்சீர் குலவுங் காந்த
புராணமாக் கதையிற் சான்ற
தரைபுகழ் சனற்கு மார
சங்கிதை தனிலைம் பான்றெட்
டுரைபெறு மத்தி யாய
மோதுவ தொருபா னென்ப. 5

26. பின்னுமோர் வகையிற் சாற்றும்
பிரமாண்ட வடபு ராணத்
துன்னரு முபரி பாகத்
துரைக்குமத் தியாய மொன்பா
னின்னன முன்னா லாய
விரண்டின தியல்பு நோக்கிப்
பன்னரும் வடநூல் வல்ல
பாவலர் விரித்துச் சாற்ற. 6

---

24. பாரதி கொழுநன் - பிரமன் ; இரவி - சூரியன்.

25. காந்தம் – 6 சம்மிதைகளையுடையது; சனற்குமாரசம்மிதை, சூதசம்மிதை, பிரம சம்மிதை, விட்டுணு சம்மிதை, சங்கரசம்மிதை, சூர சம்மிதை ஆக 6.

27. மற்ற வற்றினை யானொரு
வகைப்பட முனிவன்
சொற்ற காதைமுன் னூல்வழி
தொகுத்துவண் டமிழால்
முற்ற வோதிய செய்யுளெண்
ணூற்றின்மேன் முப்பான்
உற்ற வாய்மையின் சருக்கமு
மொருபதி னன்கே. 7

28. அறையு நூற்கதை யிந்நகர்க்
கெல்லையா மாறும்
உறையு ருதவிக் கவியையேழ
முனிவர்வென் றமையும்
துறவு நீணெறிப் பராசரர்
சுதீக்கணர் திறமும்
மறைப யின்றுள வத்திரி
மாதவப் பேறும். 8

29. செங்கண் மால்தவம் புரிந்ததுந்
திருமகள் புணப்பும்
அங்கு ரோமச ரடைந்தது
மமரர்கோ னுழந்த
வெங்க டுந்துயர் நீத்ததும்
விகுட்சிபெற் றதுவும்
துங்க மாமக மாடலுந்
துர்க்கைதன் செயமும். 9

30. இத்த லந்திகழ் காசியி
னேற்றமும் தேரை
முத்தி பெற்றது மிறைவியர்ச்
சனையும்நான் முகத்தோன்
மெத்து தோற்றமு மண்டமொன்
றவன்செய்த வியப்பும்
நித்த நல்விழா முறைமையும்
நிகழ்ந்தமை யுரைப்பாம். 10

புராண வரலாற்றுச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 30

—(o)—

3. நைமிசாரணியச் சருக்கம்

31. மலரி னான்முகன் முன்னைநாண்
மதிச்சடா மவுலித்
தலைவ னைப்பெரும் பூசைசெய்
திருந்ததோர் தானம்
உலகின் மாதவர் சூழுமியவ்
வயனையாண் டுற்று
நலமி குந்துதி புரிந்தனர்
இருடிக ளானோர். 1

32. இல்ல றத்தினை யாற்றின
மிற்றைநாள் காறும்
அல்லல் மற்றிது நீக்கியோர்
அடவியி லடைந்து
வல்ல வாறொரு தவஞ்செய
மகிழ்ந்தனம் தமியோம்
எல்ல வர்க்குமோ ரிடமரு
ளென்றலு மலரோன். 2

33. தருப்பை கொய்தொரு திகிரிசெய்
துருட்டினன் றரைமேல்
இருப்பு மக்கிது நின்றுழி
யென்றலு முனிவோர்
விருப்பி னுலதன் பின்னரே
மேவின ரதுபோய்த்
திருப்பொ லிந்ததோர் கானிடை
நின்றதத் திகிரி. 3

34. பின்ன ணைந்துள தாபதர்
பெரிதுமுண் மகிழ்வுற்
றின்ன தேநமக் கிடமென
விருந்தன ரங்கண்

32. ஆற்றினம் - நடத்திேனும்; இற்றை நாள் காறும் - இந்த நாள் வரை; அல்லல்-துன்பம்; அடவி - காடு; எல்லவர்க்கும் - எல்லோருக்கும்.

33. திகிரி – வட்டம் (சக்கரம்); மேவினர் - சென்றனர்.

34. தாபதர் - முனிவர்; அங்கண் - அவ்விடத்தில்; நேமி - வட்டம் (சக்கரம்)

அன்ன நேமியின் பெயரினா
லனையகா னகத்தை
உன்ன ரும்பெயர் நைமிசா
ரணியமென் றுரைக்கும். 4

35. செய்ய முள்ளரைத் தாமரைத்
திசைமுகன் றுரந்து
துய்ய நேமிபோய் நின்றவத்
தொன்மையா மடவி
மொய்ய ருந்தவ முனிவரர்
முத்தரெண் ணில்லோர்
உய்யு மேன்மைபெற் றுவமையி
னொப்புவே றின்றால். 5

36. சந்த னதத்தரு முதலிய
தருக்களே நிறைந்து
கந்த நாண்மல ரிலஞ்சிகள்
கலந்துவெள் ளருவி
வந்த வுந்தியின் மருங்கெலாம்
வயங்குவெண் புளின
மந்த நல்லிடந் தொறுமுள
வாகம புராணம். 6

---

35. செய்ய – செம்மை நிறமுடைய; தொன்மை-பழமை; அருந்தவர் - அரிய தவம் புரிந்தவர்; முத்தர் - சீவன் முத்தர்கள்.

36. கந்தம்-வாசனை; இலஞ்சி-தடாகம்; புளினம்-காடு.

37. திருந்து மவ்வனம் புவியினர்
செவியின்வாய் திறந்து
பொருந்து புண்ணியக் காதையா
மமுதினைப் புகட்டி
யிருந்த வல்வினைப் பசிபடர்ந்
திடருறு வண்ணம்
விருந்த ளிப்பதோர் பேரறச்
சாலையாய் விளங்கும். 7

38. இருக்கு மாதவர்க் கின்னிழ
லிறைவரர்ச் சனைக்கு
மருக்கு லாமலர்ப் பாசடை
மகம்புரி சமித்துங்
கருக்கு வெம்பசிக் கினியகாய்
கனிகள்தே னுதவி
தருக்கு லங்களுந் தனித்தனி
தருமமே புரியும். 8

39. விலங்கி னத்தொடு புட்குலம்
விரவுமவ் வனத்தில்
உலங்க லந்தன தருக்களி
லுறைந்தன யாவுஞ்

---

37. வல்வினை—கொடிய ஊழ்வினை; இடர்-துன்பம்; அறச்சாலை-தரும சத்திரம்.

38. இருக்கு-இருக்கு வேதம்; மரு-வாசனை; பாசடை-இலை; சமித்து-விறகு.

39. புட்குலம்—பறவைக் கூட்டம்; உலம்-கற்றிரள்; சலம்-கோபம்; நலம்—நன்மை; நலிபவை—துன்புறு செயல்.

சலங்க லந்தன வல்லவன்
றொன்றொடு தருக்கி
நலங்க லந்துறு மொன்றினால்
நலிபவை யறியா. 9

40. ஒட்டை சூகரம் கருணிவல்
லூகமென் றணவப்
பட்ட வல்விலங் கருந்தவர்
பாதவ நிழற்கீழ்
நிட்டை கூடினர் பரவச
நிலைநிகழ் துணுக்கந்
தட்டு மென்பதோ நடக்கினுஞ்
சருகுசற் றசையா. 10

41. அந்த நற்றவர் செயலென
வானிகை தரித்தே
வந்த நற்றிர ளெழும்புவ
வலியவெண் கினங்கள்
சந்த னத்துணி பரப்புவ
தந்திவா னரங்கள்
இந்த னக்குவை குவிப்பன
யாகசா லையெலாம். 11

42. செடிகொள் பாதவப் புதுமலர்
திருந்துமா தவத்தோர்
அடிக ளர்ச்சனைக் காமென
வறிந்தவோ வளிகள்

---

40. சூகரம்-பன்றி; கருணி வல்லூகம்-கருங்குரங்கு; அணவப் பட்ட-நெருங்கிய; பாதபம்-மரம்; துணுக்கம்-அச்சம்.

41. எண் கினங்கள்-கரடிக் கூட்டம்: இந்தனம்-விறகு.

கடிகொ ளப்புடை சூழுவ
கறங்குவ விருள்போய்
விடியி னுந்தொடா வெருவு
மத்தபோவன விசிட்டம். 12

43. செருகு செஞ்சடை முனிவர்பாற்
செஞ்சொல்மென் கிள்ளை
யருகு றத்திரு வாசக
முரைப்பவங் கதுகேட்
டுருகு மவ்விசைக் கசுணமா
யோகமே போலும்
குருகு றங்குவ கோடெலாம்
மஞ்ஞையும் குணிக்கும். 13

44. விரிக்கு மிப்பெரும் புதுமையின்
விளங்குமவ் வனத்தின்
சரிக்கு மாதவர் பெருமையின்
றன்மையா வர்க்குந்
தெரிக்க லாவதோ வுலகினிற்
சித்தசித் தெனவுங்
குரிக்கு மன்னதன் செயலெலா
முணர்ந்திடா துணர்வார். 14

45. தண்டு குண்டிகைக் கையினர்
சடையினர் சடைமேற்
கொண்ட கண்டிகைத் தொடர்பினர்
குளிர்ந்தநீ றணிமுப்

---

42. அளிகள்-வண்டு கூட்டம்; விசிட்டம்-மேன்மை.
43. கிள்ளை-கிளி; மஞ்ஞை-மயில்.
44. சித்து-அறிவுடையவை; அசித்து-அறிவில்லாதவை.

புண்ட ரத்திரு நுதலினர்
புனைந்த தூளிதத்தர்
துண்ட வற்கலை யுடையினர்
தோலுடைக் கவினர். 15

46. காம வெம்பகை கடிந்துளார்
கடியவைம் புலன்கள்
தாம டக்கிய கையினர்
தமக்குநே ரில்லார்
சோம சேகரர்க் கன்புளார்
துகளில்மெய் யுணர்வா
மேம வாள்கொடு பிறப்பையு
மிறப்பையு மறுப்பார். 16

47. புறத்து மேனியிற் பொலிவென
வகத்தினும் புனிதர்
மறைக்கு மாணவ மாயையின்
மயக்கமொன் றில்லார்
நிறைத்த விந்திர போகமு
மிமையவர் நிலையும்
அறத்து ரும்பென மறப்பவர்
அருளையே மறவார். 17

48. விருப்ப மாவன முத்திநன்
னெறியினை வெறுப்புற்
றிருப்ப தானுடை யாக்கையை
யிவையலா துலகத்

---

45. வற்கலை-மரவுரி.
46. ஏமம்-ஞானம்.
48. உவமை-மகிழ்ச்சி; முனிவு-கோபம்.

துருப்ப டும்பொரு ளொன்றிலு
முவகையும் முனிவும்
தரிப்ப தொன்றிலர் அவர்பெருந்
தகைமைசாற் றரிதால். 18

49. இத்தி றத்தினர் நைமிச
வனத்தினி திருக்குஞ்
சுத்த மாமுனிக் கணத்திடை
சூதரை நோக்கி
மெய்த்த போதனர் சவுனகர்
முதலிய மேலோர்
கைத்த லங்குவித் தொருமொழி
கழறலுற் றனரால். 19

50. தொலைவி லின்னருட் சூதமா
முனிவகேள் துகடீர்
உலகில் நின்பெருஞ் சிறப்பினை
யுரைப்பதற் கெளிதோ
அலகி லாதன நீயெமக்
கறிவுறப் புகல்நூல்
நிலவு மன்னவை மெய்ந்நெறி
நிகழ்த்தவுய்ந் தனமால். 20

51. முன்னை வாய்மையி னெவ்வெவற்
காயினு முயன்றோர்
நன்ன லம்பெறி னதுகொடு
நசையவற் கடங்கா

---

49. கழறலுற்றனர்-சொன்னார்.
50. துகள்-குற்றம்; உய்ந்தனம்-பிழைத்தோம்.

துன்ன ருந்திரு முகாம்புயத்
தொழுகுசொல் லமுத
மின்ன முஞ்சிறி தருந்துதற்
கிச்சையே பெரிதால். 21

52. கடலு டுத்தவித் தரையிடை
காசியே யதிகம்
படவு ரைத்தனை தீர்த்தமும்
பகீரதி யென்றாய்
இடனு டைப்பல புவியினி
லிவற்றினுக் கிணையாய்ப்
புடவி யின்கண்வே றுளவெனிற்
புகலுநீ யெனலும். 22

53. துற்ற பேரெழிற் சூதமா
முனிவரன் சொல்வான்
இற்றை நாள்வரை யாவரு
மிதுவினா விலராய்
உற்ற தின்றுமக் காயிடை
யுலகெலா முய்யப்
பெற்ற பேறிது நன்றலப்
பெரிதுநன் றுரைத்தீர். 23

54. அனைய தோர்பதி யுண்டெமக்
கறிவுறா துய்ய
வினவு வோரிலாது பெருங்குய்
யமாம் வெளிவிட்

---

51. நசை-விருப்பம்; முகாம்புயம்-முகமாகிய தாமரை; இச்சை-விருப்பம்.

52. பகீரதி-கங்கை; புடவி-பூமி.

டினைய தாமென வுரைத்தில
மெவற்குமே விரும்பின்
நினையு மன்பினர்க் கல்லது
நிகழ்த்துமோ வதனை. 24

55. அறுசு வைப்படும் போனக
மவாவிலார்க் கென்னும்
மறுவில் மாக்கதை விரும்புறூர்
மாச்செவி புகுமோ
கறைமி டற்றிறைக் கன்பர்நீ
ருமக்கிது கருத்தி
லுறுவ தென்பது புதுமையோ
வுரைக்கவுந் தகுமால். 25

56. என்று தன்குருத் துதிபுரிந்
திறைவர்தா ளிதையத்
தொன்று மன்பொடு கருவிக
ளனைத்தையு மொடுக்கி
நின்ற தோருணர் வகண்டித
வியாபக நிலைக்கட்
சென்று பின்செறி துணர்ந்துழி
செப்புவான் றொடங்கி. 26

57. சாற்றரும் ஞான யோகத்
தலைமைசால் முனிவர் கேளும்
ஏற்றமா முமது வேள்விக்
கியம்புவ முன்னோர் மன்னன்

---

55. போனகம்-சாப்பாடு.

57. கூற்றம்-யமன்; ஞாலம் பூமி; கதிர் மரபு-சூர்ய வமிசம்.

மாற்றலர் கூற்ற மன்னன்
மாயிரு ஞாலங் காப்போன்
சீற்றவேற் பிரக சேனன்
செங்கதிர் மரபி னுள்ளோன். 27

58. அன்னவன் விரிநீர்க் கங்கை
யமுனையோ டிணையச் செல்லும்
நன்னலந் திகழ வோர்சால்
நயந்தவாச் சிரமந் தன்னில்
இன்னருள் முனிசா பாலி
யிருங்கலை பலவும் வல்லான்
றன்னையின் னணமே கேட்ப
வம்முனி சாற்ற லுற்றான். 28

நைமிசாரணியச் சருக்கம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம் 58

—(o)—

4. தலவிசிட்டச் சருக்கம்

59. நிலவுல கத்து மாந்தர்
நினைவுரை செயலாற் பற்றிற்
றொலைவுறு மனேக கோடி
சஞ்சிதத் தொடர்பாம் பாவம்

---

59. குவலயம்-உலகம் (பூமி).

மலையரி குலிச மாகி
பரகதி வித்து மாகிக்
குலவிய கங்கை காசி
குவலயத் ததிக மென்பார். 1

60. அவற்றினுள் விசேட மெய்தி
யளப்பருந் தன்மை பெற்று
நிவப்புள தொன்றுண் டன்ன
காசிநீ ணகர்க்கு மேலாம்
சிவப்பெரு மானின் ருடுஞ்
சிற்சபை யதுபோ லென்றும்
உவப்புள சதாசி வத்தி
னுருவுகொண் டொளிக்குந் தானம். 2

61. அதனடு வால யத்துள்
அணிமதில் வடபா லாக
முதல்வனே யமைத்த முன்னை
முளரியந் தடாக மொன்று
சிதைவிலா நிலைமைத் தாகு
மன்னதத் திருந கர்க்கண்
ணுதயமாங் காலம் ஞாலத்
தொருவரா லுணர வற்றே. 3

62. அந்தநற் பதிய டைந்தோர்க்
கந்தகன் றண்ட மில்லை
இந்தவன் கலியின் றீமை
யில்லைவான் எழிலி யேழும்

---

61. முளரி–தாமரை.

62. அந்தகன்–யமன்; கலி-கலியுகம்; எழிலி-மேகம்; புணரி–சமுத்திரம்.

சிந்தவப் புணரி யெல்லாம்
திரண்டெழு பிரள யத்துஞ்
சந்ததம் மகிழ்ச்சி பொங்கத்
தருக்குவ சலன மின்றால். 4

63. செயிரறு காசி முத்தி
சிறந்திடு மிறந்த மாக்கட்
கயின்முளை நெடிய சூலத்
தருந்துநோய் சிறிதுண் டந்த
வயிரவ வாதை தானு
மில்லையந் நகரின் மாய்ந்த
வுயிர்வலச் செவிக்கெ ழுத்தஞ்
சுரைத்தர னளிப்பான் முத்தி. 5

64. அத்திரி வசிட்டசம தக்கினி யுரோமசர்
பராசரர் சுதீக்க ணர்தரும்
மதுதுவச்சர் காசிபர் பாரத்து வாசன்கௌ
தமன்கௌசி கன்வி குட்சி
இத்தகைய முனிவோரும் மகுடவர் த்தனர்மற்று
மெண்ணிலிகல் வேல் நிருபருஞ்
சித்தியுடன் முத்திநெறி பெற்றநகர் அந்நகர்
சிறந்துடைய வெல்லை பகர்வாம். 6

65. அன்னதொன் னகரிற் சோதிலிங் கத்தை
யருச்சனை புரிந்துளார் பலரும்
என்னையா ளுடைய விமயா மடந்தை
யெழிபுனை பதுமவா ரணங்கு

63. எழுத்தஞ்சு-தாரக மந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்கரம்.
64. மகுடவர்த்தனர்-சக்கரவர்த்திகள்; நிருபர்-அரசர்.

முன்னையோர் கோடி பிரமர்பா ரளிக்கு
முளரியங் கண்ணரெண் ணிலோர்
பன்னருங் குலிச பாணியர் விண்ணோர்
பார்த்திபர் முனிவரு மனேகர். 7

(குறிப்பு: இந்தச் செய்யுள் நூல் நிலையத்திலுள்ள 701 நெ. சுவடியில் அதிகமாகக் காணப்படுகிறது.)

66. புண்ணியத் தருக்கள் மல்கிப்
பொங்குவெள் ளருவி போற்றும்
விண்ணிய லமர ரெல்லாம்
விருப்புறு மேன்மைத் தாகி
எண்ணியல் பரம யோக
விருடித ணிருக்கை சூழ்ந்து
நண்ணிய வளத்தி னோங்கி
நலத்தது சைய வெற்பு. 8

67. உரைகெழு மினைய சைய
நெடுவரை யுடுத்த சாரல்
பரவிமன் னுயிர்க்காய்ப் பேராற்
பருவமு னுணர்ந்து மேவித்
தரைபெரு வளத்தை யெய்தி
சந்ததஞ் சிறந்து கீழ்பாற்
றிரைகடல் புகுங்கா வேரி
சென்னிநா டளவுஞ் சென்று. 9

---

65. இமய மாமடந்தை-பார்வதி; பதுமவாரணங்கு - இலக்குமி; முளரியங் கண்ணர்-புண்டரீகாட்சர் (விட்டுணு) பார்த்திபர்-அரசர்.

66. தரு–மரம்;

67. சென்னி நாடு-சோழ நாடு.

68. மருங்கெலாம் நாளி கேரம்
வகுளம்செண் பகங்கள் சூதம்
நெருங்குமா சினிப லாசம்
நிறைகனி வருக்கை பூகம்
இருங்கதி ரொளிப்ப வோங்கி
யிருள்படப் பொதுளி மென்பூங்
கருங்குயிற் சின்ன மார்ப்பக்
காமவே ளுலவுஞ் சோலை. 10

69. நிரைபட மரக தத்தால்
நிறுவிமேல் நீல வாடை
விரவிய விதான மார்த்து
வெண்முத்தின் றாம நாற்றி
புரையில்வெண் பவளக் கொத்துப்
புனைந்தகா வணமே போலுங்
கரையில்வெண் பாளை தூங்குஞ்
செங்குலைக் கமுகின் கானம். 11

70. குலவுவல் லிருள்து தைந்து
குளிர்புகத் தழைத்த சோலைப்
பலவின்முட் கனிகள் தூங்க
பழுத்தளி சுளையின் றேற்றங்
கலவமா மஞ்ஞை யாடக்
களியளி யிராகம் பாடச்
சிலசில நடனச் சாலை
திவவுறு தீப மேற்கும். 12

---

68. நாளிகேரம்-தென்னை; சூதம்-மாமரம்; வருக்கை-வாழை; பூகம்-பாக்கு;
69. விதானம்-மேல்கட்டி, தாமம்-மாலை; காவணம்-பந்தல்; கமுகு-பாக்கு.
70. அளி-வண்டு;

71. சித்திர கூட மெங்குஞ்
சிறந்தசோ பான மெங்கும்
சத்திர மடங்க ளெங்கும்
சதுமறை வேள்வி யெங்கும்
வைத்தபூங் கான மெங்கும்
மதகுபாய் கால்க ளெங்கும்
மொய்த்தவெண் புளின மெங்கும்
முழங்கொலி யாலை யெங்கும். 13

72. கன்னலின் பெருக்க மெங்கும்
கதலியின் படைப்பை எங்கும்
செந்நெலின் கழனி யெங்குஞ்
செழுங்கதி ரடுக்க லெங்கும்
மின்னலி னலருங் கைதை
வெள்ளிணர் குருகென் றஞ்சிப்
பொன்னலர் வரிச்சே லஞ்சும்
பூம்புனற் பொய்கை யெங்கும். 14

73. தண்டுறைப் புனல்தி ளைப்பார்
சமித்துடன் றருப்பை சேர்ப்பார்
அண்டருக் கலரெ டுப்பார்
அங்கியின் வினைமு டிப்பார்
பண்டைவே தாக மங்கள்
பன்னியங் கினிதி ருப்பார்
கண்டரு களைந்து நிற்பார்
காவிரி மருங்க னைத்தும். 15

---

72. கன்னல்-கரும்பு; கதலி-வாழை; கைதை-தாழை; குருகு-அன்னம்.

74. கங்கையங் கரைநாள் மூன்றுங்
கவுதமி யமுனை நாடி
யங்கதன் கரைநா ளைந்தும்
அமைந்துளார்க் கெய்தும் பேற்றிற்
பொங்குகா விரிம ருங்கில்
போயொரு கணப்போ தேனும்
தங்குவார்க் குரிய பேறே
தலைமையாச் சாற்று நூல்கள். 16

75. சித்தர்சா ரணரி யக்கர்
தேவர்கந் திருவர் நாகர்
மெய்தபோ தனர்கள் யாரும்
மேவியங் கதிற்ப டிந்து
முத்தரா யினர னேகர்
மொழிந்தவந் நதியின் பாங்கர்
அத்தர்வாழ் பதிகள் தீர்த்த
மளவிட வெளிய தன்றால். 17

76. நாக கங்கண ரிமையவர்
நாயகர் நாரி
பாகர் விண்ணவர் போற்றிடப்
பயில்சிரா மலையும்
பூக வண்பொழில் சேர்செழும்
பொன்னிநீ ரலங்கல்
ஆக மாலவன் விழிவள
ரரங்கவண் ணகரும். 18

---

76. நாக கங்கணர்-சர்ப்பாபரணர் (பரமசிவன்); நாரிபாகர்-அம்மை பங்காளர்; சிராமலை-திரிசிராப்பள்ளி; அரங்கவண்ணகர்-ஸ்ரீரங்கம்.

77. சம்பு மாமுனி நீழலிற்
றந்திபூ சிக்க
வம்பி காபதி வாழ்திரு
வானைக்கா நகருங்
கம்பு நித்திலஞ் சொரிவயல்
கடுவெளி நகரும்
நம்பி னூர்க்கரு ணல்குநெய்த்
தானமா நகரும். 19

78. செந்தி ருப்பயில் துருத்திதேம்
பொழிற்றிருக் கண்டி
இந்தி ராதிபர் போற்றுசோற்
றுத்துறை யிவையும்
நந்தி நற்றவஞ் செயவரு
ணல்கிவாழ் வளிக்கு
மந்தி வாண்மதிச் செஞ்சடை
யண்ணலை யாறும். 20

79. பல்க லைச்செழு முனிவர்சேர்
பழனவெம் பதியும்
மலரின் நான்முகன் வரம்பெறு
வானரேச் சுரமும்
சிலைநு தற்கொரு பங்கனூர்
திருவலஞ் சுழியுங்
குலவு மாமலர் நிலவிய
குடந்தைநன் னகரும். 21

77. தந்தி-யானை.
79. குடந்தை-கும்பகோணம்.

80. பூசை நீர்படிந் தாடிய
புண்ணியர்க் கென்றும்
மாசி லாவரம் நல்குசீர்
மருதவா ணகரும்
ஆசில் சீர்த்திரு மந்திர
மரசுழை யிருந்து
பேசு மூலர்தம் மாவடு
துறைப்பெரும் பதியும். 22

81. முன்னை நாளுமிம் முதல்வனை
வழிபடு முனிவோர்
நின்னை யொப்பவர் மூன்றுகோ
டியரென நிகழ்த்தி
அன்ன தாகலி னதுதிரி
கோடிகா வான
தென்ன வாவெலி யகத்தியற்
கெழுந்ததோர் தலமும். 23

82. தலைவர் தம்முனோர் மயிலெனத்
திருவுருத் தரித்து
மலையின் மாமகள் வழிபடு
மயூரமா நகரும்
நிலவு தண்புனல் முக்குள
நீடுவெண் காடும்
உலக மேழினும் பெருவள
னேங்குசாய்க் காடும். 24

---

80. மருதவாணகர்-திருவிடைமருதூர்;
82. முக்குளம்-சோம, சூர்ய, அக்னி தீர்த்தமெனப் படும் மூன்று குளங்கள்.

83. என்று கூடிய பதிகள்மற்
றளவில வெய்தித்
துன்று காவிரி மருங்கெலாந்
துறக்கமே நிகர்க்கும்
மன்றல் சேரதன் கரையினுண்
மணலெலா மிலிங்கம்
நின்ற கோவின்வண் குளப்படி
நீரெலாந் தீர்த்தம். 25

84. சொல்லு மிப்பெருஞ் சிறப்புடைத்
துகளில்சீர் பொன்னிக்
கெல்லை தென்றிசை யோசனை
யோரிரண் டென்ப
நல்ல நான்மறை துதிசெய
நான்முகன் பரவும்
மல்ல லம்பொழில் சூழ்திரு
வாஞ்சிமா நகரம். 26

85. பொன்பொலி யலங்க லோடைப்
புரசைமால் யானை மன்ன
தொன்மையா மின்ன தன்மைத்
துகடவிர் தலவி சேடம்
பன்மையா யுரைக்கும் பின்னுந்
தருமநூல் பலவற் றுள்ளும்
நின்மனத் துவகை நோக்கி
நிகழ்த்தின னினைய தென்றான். 27

---

83. துறக்கமே-சுவர்க்கமே.

86\. புலத்தினை வென்ற மேன்மைப்
பொருவில்மா முனிக ணத்தீர்
தலத்தியல் பின்ன தன்மை
யென்றுசா பாலி சாற்ற
உலத்தியல் மொய்ம்பின் மன்ன
னுள்ளமீக் கொள்ளு மன்பால்
நலத்தது வென்று போற்றி
நவிலுவான் பின்னு மொன்று. 28

87\. அத்தலத் தென்னை யாளு
மண்ணலா ராலயத்துக்
குத்தர திசையிற் றீர்த்த
மொன்றுமூ வுலகும் போற்றும்
எத்தனை கோடி கற்ப
மிதனிடை நோற்ற மூழ்கி
முத்தரா மவரை யெண்ண
முடியுமோ வென்றுய் முன்னர். 29

88\. அப்பெருந் தீர்த்தத் துண்மை
யனைத்தும்நீ யியம்பு வாயேல்
இப்பெரும் பவம்நீத் துன்ற
னின்னருளெய்தி யுய்வேன்
செப்புதி யையா வென்று
சென்னிமேற் கரங்கள் கூப்ப
வொப்பில்சீர் முனிசா பாலி
யுவகைகூர்ந் துரைக்க லுற்றான். 30

88\. பாவம்-பிறப்பு;

89. முனிவரர் கேளுமிம்
முதல்வர் வாஞ்சியத்
தனிநக ரெல்லையின்
றன்மை சாற்றினேம்
இனியிறை யாலயத்
தினித மைந்ததோர்
புனிதபுட் கரணியின்
புதுமை போற்றுவாம். 31

தலவிசிட்டச் சருக்கம் முற்றிற்று
ஆக திருவிருத்தம் 89

—(o)—

5. முனிதீர்த்தச் சருக்கம்

90. கதிர்மணி மவுலி மன்னன்
கட்டுரை பெறுமத் தீர்த்தம்
அதிர்கட லுலகில் மன்னும்
அணுக்கடம் வினையை யோச்சி
பதியினை யணுக வுய்க்கும்
பான்மையாற் றடமென் றோதி
இதுதிரு வருளின் கோல
மென்றிவை யுணரப் பாலை. 1

89. புட்கரணி–தீர்த்தத்தின் பெயர்.

91. தந்தையைத் தாயைச் செற்றான்
றஞ்சமென் றூரை நீத்தான்
அந்தணர்க் ககித முய்த்தான்
ஆவின துயிர்செ குத்தான்
சிந்தனைக் குரிய வாசான்
றேவிகற் பழிவு செய்தான்
எந்தவன் கண்ண னேனும்
இழிந்ததிற் படிந்தான் முத்தன். 2

92. தந்தைசொல் மறுத்த தீயன்
தாய்பசி காணும் பாவி
முந்தையோர் தம்மை யெண்ணான்
மொய்குழ லாரைச் செற்றான்
வந்தனை செய்யுங் கால
மறுத்தருள் வழக்க நீத்தான்
இந்தவன் கொடிய னேனு
மிழிந்ததிற் படிந்தான் முத்தன். 3

93. மறையையா கமத்தை யாசான்
வாய்மையைப் பழித்த தீமை
பிறனிலாள் தன்னை வேட்ட
பெரும்பவ மதுவுண் கோரம்
இறைவனா லயத்தி யற்று
மேதமற் றொருவன் செய்த
அறநிலை யழித்த தன்கே
டன்னதிற் படியத் தீரும். 4

---

91. அந்தணர்-அறவோர்; அகிதம்-கெடுதல்; ஆசான்-குரு.

92. மொய் குழலார்-பெண்கள்.

93. பிறனிலாள்-அயலான் மனைவி; வேட்ட - விரும்பிய; ஏதம் - தீங்கு.

94. மெய்தரு கயநோய் குட்டம்
விளைத்தமுற் கொடிய சாபம்
பெய்துறல் செய்யும் வன்கட்
பிரமராக் கதம்வே தாளம்
எய்திடி னன்ன தீர்த்த
மிழிந்ததிற் படியத் தீரும்
செய்திடுங் கடத்தி னேற்றுத்
தெளிக்கினுந் தீரு மன்றே. 5

95. விருந்தய லொருவி யுண்டல்
வேறில்ல மெரிப டுத்தல்
அருந்தநஞ் சூட்டி மற்றோர்
ஆருயி ரழித்தல் கற்பிற்
றிருந்துதன் மனையா டன்னைச்
செற்றங்கொண் டகற்ற லாதி
இருந்தவல் வினைக ளந்நீர்
எதிருற நோக்கிற் றீரும். 6

96. அதன்கரை மருங்கி லோர்நாள்
அருச்சனை வேள்வி யாற்றல்
இதந்தர வேத மோதல்
ஐந்தெழுத் தெண்ண வல்லோர்
பதந்தனை நேர்ந்து காசிப்
பதியிலீ தனைத்தும் போற்றித்
துதைந்திட வைகல் சாலத்
தொலைப்பவர் சூழா ரன்றே. 7

---

94. கயம்–இருமல் (கடியம்);

97. இத்தகு மேன்மைத் தாக
விலங்குபொற் றீர்த்தத் திற்கு
மெய்த்தகு யுகங்க டோறும்
வேறுவே றேது பற்றி
உத்தம முனிவர் வேண்ட
வுரைத்துள பெயரும் நான்காம்
அத்தன தருளால் முன்ன
மமைந்தன வகிலம் போற்ற. 8

98. புகலி லாதி யுகந்தனிற்
புண்ணிய தீர்த்தங்
திகழ்தி ரேதா யுகந்தனில்
அத்திரி தீர்த்தம்
பகர்து வாபரத் தோதுப
ராசர தீர்த்தம்
இகலி லாதவிக் கலியினி
லிதுமுனி தீர்த்தம். 9

99. பன்ன ருந்தவ மியற்றினைப்
படியில்நீ முன்னம்
இன்ன கேள்விவந் தெய்திய
திங்குனக் கிறைவ
நன்ன லந்திகழ் தீர்த்தமின்
ஞமநான் கோத
முன்ன ரெய்திய காரணங்
கலிமுதல் மொழிவாம். 10

100. முந்துதுவா பரயுகத்து முடிவின்கண்
முனிவரெல்லா மோன ஞானந்
தந்தமது செயல் மயங்கிச் சமாதிநிலை
கூடாது சலன மேற்று
சிந்தைபல விகற்புறலா லென்னிதுவென்
றையுற்றுத் தேரும் வேலை
வந்துகலி தோன்றியது மற்றதனால்
முறைபிறழ்வு மதித்துக் கண்டார். 11

101. அத்திரிகா சிபர்வசிட்ட ரரியசம
தக்கினிபா ரத்து வாசர்
மெய்த்தகைய வருள்கோ தமன்விசுவா
மித்திரனென் றுரைக்கு மேன்மைச்
சித்தநெறி தெரியாத செழுமுனிவ
ரெழுவோருஞ் செறிந்தோர் சார்பின்
இத்தகைய கலியின்வலிக் கென்செய்கோ
மெனமனநொந் திசைக்கு மாற்றம். 12

102. அந்தணர்தம் மரபின்வழி யொழுகார்க
ளோதுமறை யறியார் காலம்
வந்தனைசெய் தியன்றமுறை செபமோம
மருச்சனையில் வழிபா டெண்ணார்
சந்ததமு மைவகைய மகவினைசெய்
யாரதிதி தனையும் போற்றார்
முந்துபிதிர்க் கருமமுறார் எரிமூன்று
மினிதோம்பி முடியார் வேள்வி. 13

---

100. சலினம்-சஞ்சலம் (துன்பம்)

103. மன்னர் கோன்முறை கோடுவர்
மனுநெறி பிழைப்பர்
முன்னை நல்லற னழிப்பர்பின்
முடிவதொன் றறியார்
சொன்ன சொற்றக வியற்றிடார்
கொலைசெயத் துணிவா
ரின்னல் மன்னுயிர்க் குய்ப்பர்நெஞ்
சிரக்க மொன் றிசையார். 14

104. கொடிய சொல்லுவர் கூற்றெனக்
குடிநிலை குலைப்பார்
கடிய வல்லன கடிவர்தாங்
கடிவன கடியார்
மடியு நாள்வரை மனத்தெழு
பொருள்நசை மறவார்
படியின் மானுடர் நடுக்குறப்
பாவமே புரிவார். 15

105. வணிகர் வாணிபஞ் செய்துழி
வஞ்சகந் தவிரார்
துணிவ ரேதிலர் பொருட்குமோர்
சூழ்ச்சியாற் கவரப்
பணிவ ரீனரை யறந்திகழ்
நடுநிலை பகரார்
அணிய லாதன செய்வர்தம்
மரபினி லமையார். 16

---

103. கோடுவர்-தவறி நடப்பர்.
104. நசை-விருப்பம்.

106. உழவர் தந்தொழி லூதிய
முரைத்திடி னறத்துக்
கழகி தென்பது கருதிடா
ரல்லலும் புரிவார்
விழையு மைவகை யறத்தினை
மேவுத லியற்றார்
குழைவர் பொய்த்துளம் பிறர்பொருள்
தமதெனக் கொள்வார். 17

107. இனைய வீரிரு திறத்துளா
ரிவரினு மிழிந்தார்
அனைய யாவரு மொருதிறத்
தடிதலை மயங்கித்
தனையர் தந்தைதாய் தமரிவ
ரவரெனுந் தாமும்
முனையு மாண்மையு மீத்திழி
தொழிலையே முயங்கும். 18

108. தந்தை தாயர்தந் தனயரைச்
சதிப்பர்கைப் பொருளேற்
றெந்த வன்றொழி லிழிகுலத்
தெனினுவிற் றொழிப்பர்
மைந்தர் தாயரைத் தந்தையை
மதித்திடா ரொறுப்பார்
நிந்தை சொல்லுவார் வழக்கென
நிறுத்துவா ரவைக்கண். 19

---

106. ஊதியம்-லாபம்.
108. தனயர் - மைந்தர்.

109. உண்டி யின்பொருட் டுயர்ந்தவ
ரிழிகுலத் துழைப்பர்
அண்டி னர்க்கொரு தவறிழைத்
தவர்பொருள் கவர்வர்
பெண்டி ரின்னுயிர்க் கணவர்பாற்
பெரும்பகை முடிப்பர்
தொண்டி னுள்ளவர் தலைவரை
தோமுற உரைப்பார். 20

110. மாது பங்கனை மாயனை
வணங்கவு மறியார்
ஓது மைந்தெழுத் தெட்டெழுத்
துண்மையை யுணரார்
ஏது மின்றிய பேய்களைத்
தெய்வமென் றிறைஞ்சிப்
பாது காவென வதனையே
பலபடப் புகழ்வார். 21

111. அரிய ரன்பணிக் கொருபொரு
ளுதவவென் றறையின்
எரிமு கந்துமே லிறைத்தன
வுளங்கனன் றிகழ்வார்
பெரிய பிண்டமிட் டுழிதொறும்
பெரியபேய்க் கென்றால்
உரிய தென்றுதம் மாவியும்
வழங்குவ் ருவந்து. 22

---

110. மாயன் - திருமால் ; ஐந்தெழுத்து - சிவாயநம (ஸ்ரீபஞ்சா
க்ஷரம்); எட்டெழுத்து – ஓம் நாராயணாய நம.
111. ஆவி - உயிர்.

112. இறைந வின்றமெய்ஞ் ஞானநூ
லிதுபெரும் பொய்யென்
றறைவர் மற்றையஞ் ஞானமே
யறனெனக் களிப்பார்
துறவின் மெய்யுண ரறவரைத்
தூடணம் பகர்வார்
மறனி யற்றிய பதகரை
மகத்தென மதிப்பார். 23

113. அத்து வாவுணர்ந் துடல்சட
மெனவறிந் தனைத்தும்
மித்தை யென்றுதே ரறிஞரும்
மெய்ப்பொருள் விரும்பார்
சத்த மாகிய புலன்வழி
தங்கருத் தொடுங்க
உய்த்து மாயையின் சுருபமா
யுழல்வர்தீங் குற்று. 24

114. முன்னை வல்வினை முருக்கிமேல்
வருவினை முளையா
தின்ன வாறறி யனுபவ
முடலள வென்றே
யன்னை போலருள் வழங்கிய
ஆரியன் றனையு
பன்ன ரும்படி றிழைப்பர்பே
ரவையினும் பழிப்பார். 25

---

112. தூடணம்-நிந்தனை; பதகர்-பாவிகள்; மகத்து-பெரிய.
113. சடம்-அறிவற்றது; மித்தை-மாயை;
114. முருக்கி-செலவழித்து (அனுபவித்தொழித்து); ஆரியன்-பெரியோன், கடவுள்.

115. பருவ மோர்ந்துதம் பாலரைப்
பயிற்றுமே லவர்போற்
குரவர் தம்முரை கொள்பவர்
பக்குவங் குறித்து
விரவ லாவன விளம்பிடார்
அவர்பொருள் விரும்பி
உரைசெ யாமறை மந்தண
மனைத்தையு முரைப்பார். 26

116. சுருதி நல்லுரை பேதமாஞ்
சோதிடம் பொய்க்கும்
மிருதி மாறிடும் பொய்மிகும்
மெய்மையொன் றின்றாம்
திருவு முண்மையு மிழிகுலத்
தெய்திடுஞ் சிறந்தோர்க்
கருளு மாணையு மின்றியஞ்
ஞானமே விரவும், 27

117. அரிய மாதவ மியற்றினு
மதற்கிடை யூறும்
திரிவு மெய்துப கலியுகச்
செயலிது வெல்லற்
குரிய செயலினை யாதென
நினைந்துதா முறையும்
பெரிய வாச்சிர மத்தினும்
பெயர்ந்தய லெய்தி. 28

---

115. குரவர்-ஆசிரியர்; மந்தணம்-மந்திரம் (இரகசியமாய்ச் சொல்லுவது)

116. சுருதி-வேதம்.

118. கொடிய வெங்கலி வலிசெயா
நல்லிடங் குழுமிப்
படியி லோர்ந்துழி யுணர்ந்தனர்ப்
பகீரதிச் சென்னி
யடிக ளார்திரு வாஞ்சிய
மாம்நமக் கென்றே
கடிதி னெய்தினர் முனிவரோ
ரெழுவருங் கருதி. 29

119. எள்ள ருந்தவ முனிவர்க
ளெய்தியந் நகரின்
வள்ள லார்திரு விருக்கையும்
வடமதிற் புறத்துப்
புள்ள லம்புபுட் கரணியும்
பூம்பொழில் வளமும்
உள்ள மின்புறக் கண்டன
ருவந்தனர் பெரிதும். 30

120. இதுத வத்தினுக் கிடமென
விருந்துபுட் கரணிப்
புதுந றும்புனல் படிந்துதம்
நியமமும் போற்றி
யதுவ லஞ்செய்து தென்றிசை
யரியலிங் கத்தைத்
துதிபு ரிந்தனர் ஆடினர்
பாடினர் சுருதி. 31

---

118. பகீரதி-கங்கை.

119. புள்-பறவை; உவந்தனர்-மகிழ்ந்தனர்.

121. தொழுது கைத்தல முகிழ்த்துளந்
துளங்கமெய் விதிர்ப்புற்
றழுது நின்றன ரிறைவநின்
னடைக்கல மென்றார்
பழுதில் மெய்ந்நெறி முனிவர்கள்
அன்னதொல் பதியிற்
பொழுத கற்றினர் சேயநா
ளின்னணம் புரிந்து. 32

122. முனிவ ரிம்முறை முன்புபோல்
நியமமு முடித்துப்
பனிந றும்புனல் மலர்கொடு
பரிவினு லொருநாள்
இனிய வர்ச்சனை யனையலிங்
கத்திடை யியற்றத்
தனியு ருத்தன னவர்க்கெதிர்
சதாசிவப் பெருமான். 33

123. செய்யபொற் சடில முடிகளோ ரைந்துந்
திருநய னங்கள்மூ வைந்தும்
ஐயமில் குலிசம் பரசுவாள் சூலம்
அபயமென் பனவல மிடப்பாற்
கையம ரரவு பாசமங் குசஞ்செங்
கனல்மணி யிவையெலாம் விளங்கத்
துய்யபால் நிறமும் புயங்கமுந் நூலுந்
தோன்றமுன் நின்றனன் றாயோன். 34

---

121. இன்னணம்-இந்த வகை;

123. சடிலம்-சடை; குலிசம், பரசு; வாள், சூலம்-ஆயுத வகைகள்; அரவு-பாம்பு; பாசம்-கயிறு; அங்குசம் தோட்டி; முந்நூல்-மூன்று புரியாலாகிய பூணூல்.

124. கண்டனர் முனிவ ரடியில்வீழ்ந் தெழுந்தார்
கரங்கள்தஞ் சிரங்களின் முகிழ்த்தார்
கொண்டனர் புளக மெய்யெலா மரும்பக்
குளித்தனர் கண்கள்நீர் சொரியப்
பண்டரு மறைகள் பாடினு ருள்ளம்
பரவச மாயினுர் பதைத்தார்
அண்டனை யமுதை யடியவர்க் கெளிய
வண்ணலை யளவறப் புகழ்ந்தார். 35

125. அருமறைச் சிறுவ னொருவனின் மறைபுக்
கரற்றலு மவன்பகை யகற்றித்
திருவுள மிரங்கி யவன்றனக் கன்பு
செய்தருள் தேவனே சரணம்
பொருதிரைக் கடலின் நஞ்சினு லமரர்
பொன்றிடா தவருயிர் புரக்குங்
கருணைவா ரிதியே கவுரிநா யகனே
கண்ணுதற் கடவுளே சரணம். 36

126. கரியமா லயனுக் கரியநீ தமியேங்
காணவந் தருளினை போற்றி
யரியநான் முனிவர் பிறவிநோ யகல
அறனவர்க் குரைத்தனை போற்றி
திரிபுர மெரிய விரவுநாள் மூவர்
தெருமர லகற்றினை போற்றி
உரியசீ ரடியார் உள்ளமே கோயி
லுவந்தினி திருந்தனை போற்றி. 37

---

124. அண்ணல்-கிருபாஸ்வரூபி;
125. வாரிதி-கடல்; கவுரி-பார்வதிதேவி.
126. மூவர்-திரிபுராதிகள் மூவர்-தாருகாக்ஷன், கமலாக்ஷன். வித்யுண்மாலி-(திரிபுரங்கள் வெந்தும் இம்மூவர் இறைவனது அருளால் சாவாது பிழைத்தனர்).

127. எனவிரந் திரந்து போற்றுமெய் முனிவற்
கெதிர்திரு வாய்மலர்ந் தருளி
முனிவர்நீ ரஞ்சல் நன்றுநும் பூசை
முன்னிய துமக்குயா தென்று
வினவுவான் திருமுன் னிறைஞ்சியிக் கலியின்
வினையெமை வாதியா வண்ணம்
நினையடைந் துய்ந்தோ மிதுதவிர்த் தருளி
நீயருள் புரிவதொன் றின்னம். 38

128. நின்றனைப் பரவும் புனிதமிங் கெமக்கு
நிகழ்ந்ததித் தீர்த்தமேன் மையினு
லின்றதற் கிறைவ உலகமென் பெயரா
லிதுமுனி தீர்த்தமென் றிசைக்கும்
நன்றருள் புரிநீ யென்றனு முனிவர்
நவிற்றிய வரமுவந் தருளித்
துன்றுமெய்ஞ் ஞானச் சுடரொரு வடிவாஞ்
சோதிலிங் கத்தினி தமர்ந்தான். 39

129. அலகி லித்தகைமை பெற்ற புஷ்கரணி
யன்று தொட்டுமுனி தீர்த்தமென்
றுலகி னிற்கலி யுகத்தி னுக்கறிஞ
ருரைசெ யதற்கினைய காரணங்
குலமு னித்தவர்க ளெழுவ ருந்தமது
குறைத விர்த்ததிரு வருளினுற்
றலைமை பெற்றதி சயக்க லிக்கொடுமை
தனையும் வென்றருள் தருக்கினுர். 40

130. தெரிவரும்பெருமை யின்ன தாயமுனி
தீர்த்த முன்புசில நாள்செலப்
பரிய தாருவின் அடர்ந்து புன்கொடி
படர்ந்து மூடிமறை பட்டதால்
மருவ லார்களி னுடைந்து சோழகுல
மன்ன வன்மகுட வர்த்தனன்
அரிதி னிற்றிசை மயங்கி யங்கணைய
வன்ன சூழலி லடைந்தனன். 41

131. வேனில் நன்பகலின் வெய்ய தாபமுற
மேவி யங்கது படிந்தனன்
பானி யஞ்சிறி தருந்தி னுன்சிவ
பரம்ப ரன்றனை நோக்கினுன்
மான வேல்நிருபன் அன்ன தாற்செய
மடந்தை சேர்தரவு மாற்றலார்
சேனை தூளிபட மோதி னுனிதுதெய்
வீக மன்னவது தேருவான். 42

132. முன்பி லாதசெய மின்று வந்ததென்
னெதிர்ந்து ஞாட்பட முறிந்துதாங்
துன்ப மேவுற வணைந்த சூழலுழை
துன்று பொய்கையது தோய்ந்தன
மின்ப மெய்திட விருந்த தெய்விக
விலிங்க மூர்த்தமு மிறைஞ்சினேம்
பின்பு போயமர் மலைந்து வெற்றிபெறு
பெற்றி யென்றுரிமை பற்றினுன். 43

---

130. தாரு-மரம்.

131. பானியம்-நீர்; நிருபன்-அரசன்.

133\. மன்ன னிப்பரி சுளத்தினிற் கருதி
வைகி யன்னதிரு வாஞ்சியம்
பொன்ன கர்க்கிணை யெனச்செய் தான்முளரி
பூத்த தெய்வமுனி தீர்த்தமும்
பன்ன ரும்பெரு வளம்ப டுத்திவட
பாலி லோர்நதி புதுக்கியே
தன்ன ரும்பெயரி னுலெ டுத்துலகு
சாற்றி டுந்தகைமை யாக்கினுன். 44

134\. மோதுவெண் டிரையிற் சங்க
முத்தெறி முடிகொண் டானென்
றோதுமந் நகர்க்கோ ராறங்
குத்தர திசையி லோடுங்
கோதைவேல் மன்னன் சென்னிக்
குலோத்துங்க மன்னன் மூதூர்
மாதோர்பா கரையே போற்றி
வானநா டரசும்பெற்றுன். 45

135\. முன்னிய கரும முற்றும்
முரணிய வினைக ணீங்கும்
துன்னிய பகைமு ருக்கித்
தொலைப்பவோர் சுபமு மெய்தும்
பொன்னியல் முளரிச் செய்ய
பூமகள் அகலாள் என்றும்
பன்னிய வினைய தெய்வப்
பைந்தடம் படிந்துள் ளார்க்கே 46

133\. முளரி-தாமரை.
135\. பூமகள்-இலக்குமி.

136. செய்யவே லரச கேளிச்
செழுமுனி தீர்த்தத் துண்மை
யுய்யயா மிங்கு ரைத்தோம்
உற்றினி பராச ரன்றன்
துய்யநா மத்தின் றீர்த்தத்
தொல்புகழ் சொற்று மென்று
மையல்தீர் முனிசா பாலி
வகுத்திவை கூற லுற்றான். 47

முனி தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் 5-க்குத் திருவிருத்தம் 136

—(o)—

6. பராசர தீர்த்தச் சருக்கம்

137. மாநில வனுக்கள் யாரும்
வருகநும் பவங்க ணீத்துத்
தேனலர் கொன்றை யார்தஞ்
சேவடி சேர வுய்ப்பன்
யானென விளிப்ப போல்வெண்
டிரைக்கைசாய்த் திரைந்தெ ழுந்து
கானமர் பொழில்சூழ் கங்கைக்
கருங்கடற் புகுமோ ரெல்லே. 1

---

137. பவம்-பிறப்பு.

138. அடவிமிக் குடைத்தங் கான
மதனிலோ ராச்சி ராமம்
படருமெய்ந் நெறியின் மிக்க
பராசர பரம ஞானத்
தொடர்பிடை யருந்த வத்துச்
சுதீக்கண னென்றின் னோர்க
ளிடையரு நண்பி னெய்தி
யருந்தவ முயல்வா ரென்றும். 2

139. தருக்குமிம் முனிவர் வாழும்
தபோவன மனைத்துந் தாரு
வருக்கமிக் குயர்ந்து சால
வரையற வளத்தி னோங்கி
யுருக்கிளர் விலங்கும் புள்ளு
மொன்றினு லுறுக ணின்றி
இருக்குநல் வலிமை பெற்றே
ரிரும்பகை கிடையா தங்கு. 3

140. சொன்னவித் தபோவ னத்துத்
தோன்றுமுற் பாத மோர்நாள்
மன்னுபுட் குலங்க ளெல்லாம்
வானிடைப் பறந்த ரற்றப்
பன்னுமான் மரைவி லங்கு
படிந்துமண் ணிடைப்ப தைப்ப
வின்னவை முனிவர் கண்டா
ரென்கொலென் றுயும் வேலை. 4

140. உற்பாதம்-இயற்கைக்கு மாறுபட்ட செயல். (இது இறை வனதருளால் நேரும்).

141. உயர்ந்தொரு கருவரை போலு மோருடல்
நயந்துகண் ணெரியுகக் கரங்கள் நான்றிடப்
புயந்திசை மறைந்திடப் புவிந டுக்குறப்
பெயர்ந்துநின் றனனொரு பிரம ராக்கதன். 5

142. இருந்தவ ரதிசயத் திருண்ட வல்லுருப்
பொருந்திய புதுமையும் புலர நாவுமொன்
றருந்தவ முணர்வில ரறப்ப சித்துமெய்
வருந்தவும் நோக்கினார் வருக வென்றனர். 6

143. சொற்றநற் றவருரை செவியிற் றேய்தலும்
மற்றவன் முன்னைநல் வினைவ யத்தினா
லுற்றதோ ரறிவுசற் றுளத்திற் றோன்றியே
முற்றர நடந்துகை முகிழ்த்து நின்றனன். 7

144. இங்குவந் துற்றநீ யாவ னிவ்வுருத்
தங்குதற் கேதுவென் சாற்றென் றோதலுந்
துங்கமெய்ம் முனிவரைத் தொழுது வாய்புதைத்
தங்குவெய் துயிர்த்துநின் றரக்கன் கூறுவான். 8

145. முன்னையென் வல்வினை முற்றி யிவ்வணம்
பன்னரு நாளெலா முழன்ற பாவிநான்
அன்னதிவ் வாறென விரைவிற் சாலவுண்
டின்னமு முடிவதோ வென்சொல் வேனெனை. 9

---

144. ஏது-காரணம்.

146. திருப்புனை பலவளம் சிறந்து தேவரும்
விருப்புறு நாடுகான் மீர மென்பர்போற்
பொருப்பினில் மகபதி புரத்தை யொப்பவங்
கிருப்பது சிங்கள மென்னு மோர்நகர். 10

147. ஆட கப்புரிசை சுற்றி யோசனையி
ரண்டி னுள்ளகல மார்ந்தது
மாட மாளிகை செறிந்து வீதிதொறும்
மகர தோரண நிறைந்தன
மேடை யிற்றுவச மந்த ரத்துநதி
மிசைப டிந்துநறு சீகரங்
கோடை யிற்கடிய தேரின் வெய்யவர்
கொடுங்க னற்சுடரு மாற்றுமால். 11

148. அந்த நன்னகரி ராச மாநகரி
யாயி ருந்தரசு பூண்டவன்
எந்த நாடுமவ னுடைய தாகுமம
ரேற்று டன்றுகொள வெண்ணினால்
சிந்தை மேயநெறி வழுவன வன்பெயர்
தெரிக்கில் வீரதனு வென்பவன்
மைந்தன் யானவன் வழிக்கு வேறிலை
வழங்கு மேன்பெயர் மகாதனு. 12

---

147. ஆடகப் புரிசை-பொன்னாலாகிய மதில்; துவசம்-கொடி; சீகரம்-குளிர்ச்சி.

149. புரைசெய் மாகளி றடற்பெ ரும்புரவி
போரில் வென்றிபுனை
வரைசெய் தென்னவிர தத்தொ டுந்திசையில்
மன்னர் வந்துதொழ வெந்தையாம்
அரச னப்புவி புரந்து பின்னெனை
யழைத்த னைத்துமென தாக்கியே
விரைசெய் தாமமுடி சூட்டி வைத்தவன்
விரைந்த ருந்தவசின் மேவினான். 13

150. தந்தை சொற்படி வழாம லப்புவி
தனிப்பெ ருந்திகிரி யோச்சியே
முந்தை நூல்நெறி தெரிந்த மைச்சர்கள்
மொழிந்த வண்ணமுறை காத்தனன்
அந்த நாளொருவன் முன்பு செய்தவற
னழிய வேறுகுறை செய்திலேன்
நிந்தை யொன்றுவறி தேற்றி மற்றொருவர்
நிதிக வர்ந்திட நினைத்திலேன். 14

151. அறன லாதுபிறர் சொற்ற சொற்றைமொழி
யதுபு கச்செவி கொடுத்திலேன்
பிறனி லாடனை விழைந்தி லேன்குரவர்
பேசு மெய்ம்மொழி பிழைத்திலேன்
மறைபு குந்தவரை யஞ்ச லென்றருள்
வழங்கி டாதுகண் மறுக்கிலேன்
முறைபு குந்துகுடி காத்தி டாதுபொருள்
வெஃகி யேமுற நினைத்திலேன். 15

---

149. களிறு-யானை; புரவி-குதிரை.

150. திகிரி-ஆக்ஞாசக்கரம்.

151. பிறனிலாள்-அயலான் மனைவி; விழைந்திலேன்-விரும்பவில்லை; வெஃகி-விரும்பி.

152. இன்ன வாறுமனு நீதி யேதக
இருங்க டற்றரை புரக்குநாள்
மன்ன வன்னெனது தந்தை வீரதனு
மாய வாக்கையை யகன்றனன்
அன்ன வெல்லையி னியற்றி டுங்கடன்
அனைத்து மாற்றிமறை யோர்க்குமுன்
சொன்ன தானவகை நூறு கோடியுள
சுரபி தானமள வில்லையால். 16

153. தாதை தன்கடன் முடித்த பின்னுநிறை
தானை மன்னர்பர வித்தொழப்
பூத லந்தனி புரந்தி ருந்துமறை
போற்றும் வேள்விபல வாற்றினேன்
வேத வேதியர் தமக்க ருஞ்சுரபி
மிக்க பூமிசன காதியர்
நீத மானபடி தான மாரியென
நித்த நித்தமும் நிரப்பினேன். 17

154. மற்றநல் லறங்க ளாற்றி
மாநிலம் புரந்து வாழப்
பெற்றநா ளளவி னல்லாற்
பெரிதிருந் திறக்கக் காணேன்
உற்றனர் கால தூத
ருரைத்தனர் வருக வென்ன
அற்றமு மதுவே யாக
வகற்றினன் யாக்கை யானும். 18

---

152. ஆக்கை-சரீரம்; சுரபி-பசு.
153. தானை-சேனை; வேள்வி-யாகம்.

155. அளவறு துரகத் திண்டேர்
அரசனுக் கேனு மான்ற
வளமுறு கல்வி ஞான
மாண்புளற் கேனும் வாணு
ளுளவண மொழிந்தா லிந்த
வுடம்பினே டுறவு முண்டோ
களேவது திண்ண மென்ருல்
கருதவோர் நிலைமைத் தாமோ. 19

156. செறிந்ததூ துவர்கொண் டேகச்
சென்றனன் றரும னென்னே
யறிந்துநன் றுய்ப்பான் போல
வருகுற விருத்திச் சொல்வான்
பெறுந்தரு மங்கள் சாலப்
பேணினே யரச வென்ருன்
மறிந்துமென் செவியிற் றீயை
வார்த்தனன் வகுத்தா னென்று. 20

157. அவனிநீ புரந்த காலத்
தந்தணர்க் களவி லாத
வுவகைகூர்ந் துதவுந் தானத்
துள்ளதோர் சுரபி பெற்றுக்
கவர்தரு மறையோன் பற்றக்
கைபிழைத் தோடி யுன்றன்
குவைதரு நிரையிற் சென்று
கூடிநின் றுள்ள தாங்கண். 21

---

155. துரகம்-குதிரை.
156. தருமன்-இயமதர்மராஜன்; பேணினே-செய்தாய்.
157. குவை-கூட்டம்.

158. வேற்றுரு வென்று தேற்றான்
மேய்த்திடு பொதுவன் றானு
மீற்றொரு மூன்று செல்லு
மெல்லையுங் கறந்த பால்நின்
பாற்றரு கடத்தொ டுய்ப்பப்
பரிந்தினி தயின்றாய் நின்னெஞ்
சாற்றவு மறிந்தா யில்லை
யன்னதே யறவும் பாவம். 22

159. ஏப்பொருள் கவர்ந்து ளோர்க்கு
மிகலறு மொருகா லத்தின்
விப்பிரர் பொருள்க வர்ந்த
வெவ்வினை விளியா தென்றுஞ்
செப்புமத் தருமப் பேறே
தீயவெவ் வினையின் பேறே
வைப்பென நீமுன் றுயர்க்கும்
வழியினை வகுத்தி யென்றான். 23

160. ஆங்கவன் றானே பின்னும்
அனுபவ வினையி ரண்டின்
நீங்கரு பாவ மிக்கு
நிறைந்ததே யருந்த வேண்டு
மீங்குநீ யந்த ணாள
னிரும்பொருள் கவர்ந்த பாவந்
தாங்கரி ததுநீ முன்சென்
றருந்துதல் தருமந் தானே. 24

---

159. விப்பிரர்-பிராமணர்.

161. மொழிந்திடற் பிரிதொன் றில்லை
மூழ்குதி நிரையம் புக்குப்
பொழிந்திசெங் குருதிச் சேற்றிற்
புரண்டலைக் கிருமிப் பள்ளத்
திழிந்ததி லருந்து நாள்கள்
இருபதே யுகமு மென்றான்
கழிந்திடி லன்ன தன்மை
கனவெனக் கருத்திற் றோன்ற. 25

162. பின்புபேர் யுகமோர் மூன்று
பிரமராக் கதனே யாகி
வன்பெரு முருவ மேற்று
மண்ணினி லுழன்று மாறாத்
துன்புறத் திரிதி யென்று
தூதர்பின் விடுப்ப வவ்வா
றென்பெரும் பாவந் தள்ள
விழிந்தனன் நிரையச் சேற்றில். 26

163. நிரையநா லேழு கோடி
நிறைந்தநீ ணிலையிற் புக்கு
கரையில்வெங் குருதி தேக்குங்
கருங்குழிக் கிருமி வாய்க்கே
யிரையதா யுகங்க ளங்கோ
ரிருபது மிறந்து பட்டேன்
தரையிலிப் பரிசு மானென்
றணைந்திடத் தகுமோ வின்னும். 27

161. நிரையம்-நரகலோகம்; குருதி-ரத்தம்; கிருமி-புழு.
163. கருங்குழி-மாதாவின் கருப்பப் பை.

164. அந்தகன் முன்பு சாற்றும்
அவதியி னிரைய நீத்து
மிந்தவல் லுருவந் தாங்க
இயம்பிய யுகங்கள் மூன்றில்
சிந்தைசெய் தேற்ற வொன்று
சென்றது சற்றே யின்னம்
பந்தமா யுழன்றிவ் வாறு
பரிபவப் படுத்துங் காலம். 28

165. அலைகடல் கடப்பான் புக்குக்
கடல்கடந் தன்ன வின்னம்
தொலையவேண் டியதாய் நின்ற
யுகங்களோ ரிரண்டு சொல்லில்
நிலையிதற் கொன்றுங் காணேன்
என்செய்கே னெனநின் றேங்கி
உலையுறு மரக்க னீதென்
வினைப்பய னெனவு ரைத்தான். 29

166. அரக்கவல் லுருவ மேற்றா
னிவ்வண மழுங்கிச் சொல்ல
விரக்கமுற் றருளின் வாரிப்
பராசர னிவனை யாமே
புரக்கினல் லாது வேறு
புகலில னிவன்முற் றீமை
துரக்குமா றுரைத்தி யென்று
சுதீக்கணற் குரைக்க லுற்றான். 30

164. அந்தகன்-இயமதருமராஜன்; பரிபவம்-துன்பம்.

167. துங்கமெய்ஞ் ஞான யோகச்
சுதீக்கண முனியே கேட்டி
இங்கிவ னரக்க னேனு
மிறந்ததன் செயலுஞ் சொல்லி
அங்குமுன் பட்ட பாடு
மறைந்துநின் றழுங்கு மிந்தப்
பங்கமா முருவி லின்னம்
படவிவன் கடவ னுமோ. 31

168. தென்றிசை பொன்னி நாட்டிற்
றிகழ்திரு வாஞ்சி யத்தில்
நன்றிசேர் தீர்த்தத் தல்லால்
இவன்வினை நாச மாகா
தின்றியா முடன்கொண் டேகி
யித்துய ரகற்ற வேண்டு
முன்றன தியற்கை யாதென்
றுரைக்கமற் றவனு ரைப்பான். 32

169. என்னினி துணர்ந்தா யையா
வீங்கிவன் செயலி யாவும்
பன்னினன் முன்னை யூழின்
படியலால் முடிய வில்லை
முன்னிய வினைக்கீ டாக
முற்றிய சுபாசு பங்கள்
பின்னிது துறக்க வென்றாற்
பிணிக்குமோ பணிக்கும் வாய்மை. 33

170. முனிவனே யொருவற் குள்ள
விருவினை முத்தி றத்திற்
றுனிதரு சஞ்சி தத்தைத்
தொலைக்குநின் னரிய தீக்கை
யினிவரும் வினைநீ போதித்
திடுநெறி நிற்க வேனும்
புனிதனு லகற்ற வற்றே
பிராரத்த மென்னும் போகம். 34

171. அன்னதே லுலகங் காக்கு
மாதிநா ரணன்மு ராரி
மன்னவன் றயர தன்றன்
வயிற்றிலுற் பவித்துக் கானிற்
பன்னெடு நாளு ழன்ற
பரிபவம் நீக்கு மாறு
நின்னனை யார்க ளங்ங
ணில்லையோ நிகழ்த்தி டாயே. 35

172. ஒருவன்முன் செய்த வற்றை
யழித்துமுன் னுளவா றுக்க
வருமெனில் நறுநெய் நீறு
மற்றைய வடிவ மாமோ
பெருவினை யிவன்முன் செய்த
பிராரத்த மான யாக்கை
யருவருத் தொழிப்ப னென்றாய்
ஐயநின் னறிவு நன்றால். 36

---

171. முராரி-திருமால்.

173. இதுதகு மேனும் ஞாலத்
தேற்றமாம் பதியி ருக்க
வதுதிரு வாஞ்சி யத்தி
னணைந்திடி லகலு மென்றாய்
மதிபெரி தழகி தம்மா
மற்றுமந் நகரோ விந்த
முதியவல் வினையை யென்று
முனிசுதீக் கணன் நகைத்தான். 37

174. பற்றிலா முனிந கைக்கப்
பராசர முனிய ழன்று
செற்றமீக் கொண்டு சொல்வான்
செய்தவ மிகவு நன்று
கற்றநூல் அனைத்தும் நெஞ்சிற்
கருணையில் லாத தற்கோ
சுற்றமா யொழுகு நின்னைச்
சுதீக்கண நாமந் தானே. 38

175. தெருளுமெய் முனிவன் போன்றாய்
யாவரே யெனினுஞ் சிந்தை
மருளுற வலக்க ணுற்று
வந்துழி வருந்தி யன்னோ
வெருளுற வுறுதி கூறி
யோம்புதல் வேண்டு மன்றேல்
அருளின தியல்பென் னாகு
மறிவின ராய தென்னும். 39

175. அலக்கண்-துன்பம்.

176. கண்ணெதிர் நின்று தம்பா
டுரைத்தமை கண்டுங் கேட்டு
முண்மகிழ் கருணை செய்து
காத்திடா தொழிப்போ மென்னிற்
பண்ணுநல் லறமும் நோன்பும்
பயிலுநல் லியல்பு மென்னும்
எண்ணுறி லரக்க னாவா
னிவனலன் யாமே யன்றோ. 40

177. தடைபெறு திறைவ னாலும்
ஊழ்வினை சரிக்கு மென்றாய்
உடையநா யகனே வேண்டி
லோரமெனப் படுவ துண்டோ
கடையனே தலைமை யாவன்
தலைமையன் கடைய னாவன்
அடையவே றல்ல வன்னா
னருளதே யூழு மாமால். 41

178. அம்பிகை பாக னென்றும்
அடியவர்க் கெளிய னன்றோ
சம்புவென் றதுதா னென்னை
யிங்கிவன் றனக்கு நாமம்
நம்புநல் லடியார்க் கின்பந்
தன்னுமை நின்று நல்கும்
இம்பரி னதனாற் சம்பு
வென்றசொல் லியம்புந் தேறாய். 42

*179. மழைமுனிக் கங்கை கால்கள்
வள்ளுகிர் வேங்கை போன்ற
விழைவென வவன்சே யான
வியன்சிறு மதலை வேண்டப்
பழையபா லுததி பெற்ற
பண்பென விவைய னைத்து
மழகிதா மவ்வன் பற்கு
அளித்ததென் றவையுந் தேரூய். 43

180. வடிவிலோர் கும்பத் தென்பு
மடவர லான வாறென்
நெடியகற் பாறை வேலை
நீரிடை மிதந்த வாறென்

---

*இது காகிதப் பிரதியில் இல்லை. இங்குள்ள சுவடிகளில் காணப்படுகிறது.

179. உகிர்-நகம்; பாலுததி–பாற்கடல்.

180. கும்பத்தென்பு மடவரலான வரலாறு-திருஞானசம்பந்தர் மயிலாப்பூரில் இறந்துபோன பூம்பாவையின் என்பும் சாம்பரும் நிறைந்த குடத்தை யாண்டவன் திருமுன் வைத்து "மட்டிட்ட புன்னை" எனும் பதிகம் பாடிப் பெண்ணுயெழுப்பித் தந்த வரலாறு; கற்பாறை வேலை நீரிடை மிதந்தவாறு-சமணர்கள் அப்பர் சுவாமிகளைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலில் இட்டபோது "நற்றுணையாவது நமச்சிவாயவே" எனும் பஞ்சாக்கரத் திருப்பதிகம் பாடிக் கல்லே தெப்பமாக மாற அதன் மீதமர்ந்து கரையேறினர் என்ப: முதலைவாய்ச் சேய்கூட விற்றதுகொணர்ந்தவாறு–அவிநாசியில் முதலையுண்ட பிள்ளையைப் பதிகம் பாடிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாயினின்றும் மீட்டுக் கொடுத்த வரலாறு.

கொடியதோர் முதலை வாய்ச்சேய்
கூற்றது கொணர்ந்த வாறென்
அடியர்தாம் நினைந்த வண்ணம்
முடிந்ததென் றவையுந் தேறாய். 44

181. மறைகளோ விட்ட ரற்ற
மாலய னிரந்து போற்று
இறைதிரு வாஞ்சி யத்தி
னெய்திடி னிவன்முற் றீமை
குறையுமோ வென்ன வன்ன
நகர்க்கொரு குறையுஞ் சொற்றாய்
அறையுநின் னுரைய னைத்தும்
நிந்தையே யாயிற் றம்மா. 45

182. தன்னையா தரிப்பா ருள்ளந்
தன்னைவிட் டகலான் றன்னை
அன்னவ ரடியார் தம்மை
யவன்றிருப் பதியை நிந்தை
சொன்னநீ முன்னஞ் செய்த
தருமங்க ளனைத்துந் தோற்றாய்
இன்னம்நீ பெருநோய் கொண்டிங்
கிடருறக் கடவை யென்றான். 46

183. மறுத்து ரைத்ததோர் சுதீக்கணன்
மருளவே சபித்து
வெறுத்து மாமுனி பராசரன்
விரைந்துதன் முன்னங்

கறுத்து நின்றவப் பிரமராக்
கதனையிக் கணத்தே
நிறுத்து வன்சுரர் பரவுறு
நிலையிலென் றெழுந்தான். 47

184. முனியு ரைத்தசொல் வெறுப்புமுன்
னின்றராக் கதன்மேற்
கனிவு மென்றிரு புரவிபூண்
டிழுக்கவிக் கருமம்
இனிது முற்றுவிப் போமெனுந்
திண்மையா ரிரதம்
தனிக டாவிமேற் கொண்டனன்
தாபதற் கிறையோன். 48

185. அருகு நின்றதோ ரரக்கனை
யழைத்துடன் கொண்டு
கருகு கானிடைச் சிலபகல்
கடந்துகற் றடமும்
பருக நீரறு சுரங்களும்
பலபல கடந்து
குருகு லாவுநீர் நாட்டிடைக்
குறுகவந் துற்றார். 49

186. வயல்வரம் பெலாம் வால்வளை
முழக்கெழ வரிச்சங்
கயலு'கண்டெழு காவிரிக்
கரையணைந் ததுவிட்

டயல்ந டந்துயோ சனையிரண்
டகன்றுழித் தென்பால்
புயலு றங்குபொன் மதிற்றிரு
வாஞ்சியம் புக்கான். 50

187. எழுது சித்திர மண்டப
மிந்துகாந்தத்தின்
முழுது மாக்கிய வெழுநிலை
மாடமு முகில்கள்
தொழுது சூழ்தரு சூளிகைத்
திரள்களுந் துதைந்த
பழுதில் தேர்த்திரு வீதியு
மொல்லையிற் படர்ந்தான். 51

188. வந்து கோபுர வாயில்முன்
வணங்கியே வடபால்
முந்து றத்திகழ் தீர்த்தமு
முன்னுறப் பணிந்தான்
சந்த னடவி சூழுமத்
தடவரைக் குணபால்
அந்த வல்லுரு வரக்கனை
யணுகலில் லென்றான். 52

---

187. இந்து காந்தம்-சந்திரகாந்தக் கல் ; முகில்-மேகம்.
188. அடவி-காடு.

189\. வானநாடரும் முனிவரும்
மனிதரும் பயில்சேர்
பான நீடிய தண்டுறைப்
பைம்புனல் படிந்தான்
ஞான மாமுனி மறைநெறி
நடந்ததன் னியமம்
ஆன நீதியை முடித்தர
னாலயம் புகுந்தான். 53

190\. உள்ள ஊணந்தரி பிரமர்க
ளொருவரு மறியா
வள்ள ஊலத்திரு வாஞ்சிய
வளம்பதி மருந்தைத்
தெள்ள ருந்திரு மறைமுனி
சென்னிதாழ்ந் திறைஞ்சி
புள்ள லம்புபுட் கரணியின்
மீளவும் போந்து. 54

191\. முன்ப டிந்தண் டுறையில்நீர்
முகந்தொரு கடத்தில்
அன்பி னாற்குசை கொண்டுபஞ்
சாக்கர மருச்சித்
தின்பு றத்தனி நிறுவியவ்
விராக்கதன் மிசையே
நன்பு னற்றுளி பூங்குசை
நாவினாற் றெளித்தான். 55

191\. கடம்-குடம்; குசை-தருப்பைப் புல்.

192. தெளித்த நுண்டுளி பட்டதோ
வில்லையோ தெரியா
தொளித்த தக்கண மவ்வுரு
வுலகெலாம் கண்கள்
களித்து நோக்கவங் கவன்சிவ
கணத்தொடுங் கலந்தான்
குளித்து நின்றனன் அமரர்பூ
மாரியிற் குலவி. 56

193. அண்டர் பல்லிய மார்த்தெழ
வணைந்தனன் விமானங்
கொண்ட ணைந்தவர் மேற்கொள
வென்றுகை கூப்பிப்
பண்டை மாமுனி தாடொழு
தவன்விடை பணிப்பக்
கண்ட ணைந்தன னிரதமேற்
புக்கனன் கயிலை. 57

194. அங்க ணைந்துள தாபத
ரனேகர்நீ ரையா
விங்க ணைந்தனை யெம்முடைத்
தவப்பய னென்றே
பங்க யாசனன் றன்னைநேர்
பராசர முனியைச்
செங்கை கூப்பின ரிறைஞ்சினர்
துதிபல செய்தார். 58

---

193. பல்லியம்-வாத்ய விசேஷம்.
194. பங்கயாசனன்-பிரமதேவன்.

195. பன்னு நான்மறை வித்தகன்
பராசர முனிவன்
பின்னு மந்நகர் வைகிநாள்
பெருகவு மிருந்து
தன்னுடைச் செபந் தியானமுஞ்
சமாதியர்ச் சனைகள்
மன்னு மாதவ மொழிவற
வழிபட லுற்றான். 59

196. செய்த போதன னாலயச்
சேவையி லொருநாள்
மைத ருந்திரு மிடற்றிறை
மகிழ்ந்தெழுந் தருளி
மெய்த ருந்தவ நோற்றனை
மிகவுநீ முனிவா
எய்த வேண்டுவ தியாதென
முனிவனங் கிறைஞ்சி. 60

197. தூய நான்மறைப் பொருள்களுந்
தொடர்ந்து நாடறிய
தாய நின்னருள் வடிவினை
யடியனே னிந்த
மாய யாக்கையின் கண்களே
காணநீ வந்தாய்
ஏய பேறினி யென்பெற
விசைப்பன்வே றிறைவா. 61

198. வேண்டு கின்றதுன் பொன்னடிக்
கன்பும்நல் விருப்பம்
பூண்ட வித்தடம் பொய்கைநீர்
படிந்தபுண் ணியர்பா
லீண்ட வெம்பிணிப் பாசமெய்த்
தூய்மையு மெனைவந்
தாண்ட நீயருள் புரிதியென்
றடியில்வீழ்ந் திறைஞ்சி. 62

199. எழுந்து மற்றுமென் பேர்புனைந்
துலகெலா மிந்தச்
செழுந்த டந்திரு விளங்கிடச்
செய்தியென் றேத்தித்
தொழுந்த போதன னுரைக்கலும்
சூடுவெண் டிங்கட்
கொழுந்தி னன்வர மப்படி
கொடுத்தினி தகன்றான். 63

200. காடு நீடிய வரைகருங்
கல்லெழு சுரமு
மோடு மாநதி பலவுநீத்
துத்தர திசைக்கண்
நாடு மாமுனி புங்கவன்
கங்கைநன் னதிபோய்க்
கூடு மாகட லின்கரைக்
குலவு கானடைந்து. 64

---

199. திங்கட் கொழுந்து-பிறைச் சந்திரன்.

201. முன்னை யாச்சிர மம்புக
முன்னமே யாங்குத்
தன்னை நோக்குறு புன்சொலாற்
சாபமேற் றுழலுந்
துன்ன ரும்பெரு நோயிடைச்
சுதீக்கண முனிவ
னன்ன மாமுனி வந்தமை
யறிந்தரு கணைந்து. 65

202. மேக நுண்டுளிக் கேமுற்று
விண்ணையே நோக்கும்
வாகை மென்சிறைப் புள்ளென
நீவரும் வழிபார்த்
தாக நொந்தன னெளியனேன்
பிழைபொறுத் தருளி
நீக டைக்கணித் தாளென
நிலத்திடைப் பணிந்தான். 66

203. சிறியர் தம்பிழை பெரியவர்
கொள்வரோ கொளினும்
பொறிய ணைந்தசெம் பொன்
னெனத் தருமவர்புந்தி
யறிவி லேன்பிழை பொறுத்திடென்
றறைதலு மன்பின்
நெறியி னீட்டிய தபோதனன்
நீங்கினன் வெகுளி. 67

204. எடுத்த ணைத்தரு கிருத்தியே
பராசர னிசைப்பான்
தொடுத்த நோயிடை நொந்தனை
சுதீக்கண முனிவ
தடுத்த நின்மொழி யால்வரு
சாபமிங் குனையே
யடுத்த தற்கொரு தீர்வுள
ததனை நீ கேட்டீ. 68

205. காவ தந்திகழ்
காவிரி தென்கரை
மேவு யோசனை
யோரிரண் டுள்ளது
தேவர் தேவன்
திகழ்திரு வாஞ்சிய
மாவ தோர்தல
மத்தலத் தேகுதி. 69

206. அக்க ணிந்தவ
ராலயத் துத்தர
திக்கி லென்பெயர்த்
தீர்த்தமொன் றுள்ளது
புக்க திற்படிந் தேறுதி
பூண்ட நோய்
தக்க நின்பெருஞ்
சாபந் தணிக்குமால். 70

207. செங்கண் மா லுக்கு
நீமுன்பு செய்பிழை
யங்கு தோன் றுமுன்
னப்பிழைக் காயவன்
பங்க மேவிடச்
சாபம் பணித்தனன்
றுங்க நாமச்
சுதீக்கண னென்னவே. 71

208. நீய தற்குளம்
நெக்குரு கிப்பதைத்
தேயு மெற்கிது
மோசன மென்றென
மாய வன்மனத்
தேயருள் வைத்துறு
மாய கால
மறிந்த தியம்புவாம். 72

209. பன்னு மேன்மைப்
பராசர னேவநீ
இன்ன லாற்றிரு
வாஞ்சிய மெய்துவை
மன்னு நாம
வசுதேவ ரிடத்துதித்
துன்னை யாளவங்
கேவரு வோமென்றான். 73

210. ஒல்லை சென்றவ
னுற்றநின் சாபநோய்
அல்ல றீர்ந்துமற்
றத்திரு வாஞ்சியத்
தெல்லை யேயிக
ழாதிரு மாயவன்
மெல்ல வெய்துவ
னவ்விட மேவென்றான். 74

211. இன்ன வாய்மை
முனிவ னிசைத்தலு
மன்ன காலையி
லஞ்சலி செய்துநீ
சொன்ன தென்செவி
தோய்வறப் பெற்றிலேன்
முன்னை யூழ்வினை
முற்றிய திப்படி. 75

212. இன்று நீபணித்
திட்டதென் நோயள
வன்று தேரி
னுறுதி தொடுத்தெனைத்
துன்று நீபவ
மூலந் துடைத்தரிக்
கின்ற வாளிது
கேள்விற் பெற்றனன். 76

213. ஐய நீயருள்
செய்தமை யேயலால்
செய்ய வேறொன்று
சிந்தைசெய் யேனென
வைய மெண்திரு
வாஞ்சியம் நாடியே
துய்ய நீதிச்
சுதீக்கண னேகினான். 77

214. கோல மேனியிற்
கொட்புறு நோயினும்
சீல நீதி
சிறிதும் சிதைந்திலான்
சால நாள்கள்
தடத்திடை யேசெலப்
பாலை நீணெறி
யாவும் படர்ந்தனன். 78

215. வஞ்ச மில்பெரி
யோர்சொல் மறுத்ததால்
நெஞ்சு தன்னை
நினைக்குந் தொறுஞ்சுட
வெஞ்சு ரஞ்சுட
வெய்யவ னுஞ்சுட
அஞ்சு மாறு
மளவில் நீங்கினான். 79

216. மெல்ல வந்து
வியன்றிரு வாஞ்சியத்
தெல்லை சேர்தலு
மின்புற் றிறைஞ்சினான்
மல்லன் மாளிகை
மாமணி வீதியும்
ஒல்லை யேபணிந்
தூடுற மேவினான்.

217. மூடு நோயின்
முயங்கியு மந்தநோய்
வீடு நாளது
வாக விரைந்தன
நீடு பாரத்தி
னின்றுதள் ளாடுவான்
போடு மோரெல்லை
காணப் பொறுப்பனோ 1

218. அண்டர் நாயக
ராலய முன்னுற
மண்டு காதலின்
வந்து வணங்கியே
பண்டை வேதப
ராயண ருந்திருந்
தொண்ட ருந்துதை
யுந்துறை மேவினான். 82

219. வாய்த்த திண்கரை
சுற்றி வலஞ்செய்து
பார்த்த கண்களி
கொள்ளப் பராசர
தீர்த்த மாடிச்
செழும்படி யேறினான்
ஆர்த்த நோயு
மகன்றன வங்கிலே. 83

220. நீதி சாலதன்
நியம முடித்தகன்
ருதி யாலயம்
புக்கரு ளாழியைச்
சோதி யேயெனை
யாளெனத் தோத்திர
மோதி னானிறை
தாள்மனத் துன்னியே. 84

221. மாயா தனு வின்கண்வினை
வருமந்தவி னைக்கீ
டேயாகுவ தனுவிம்முறை
யேசுற்றும் வற்ரு
லோயாதபி றப்பேழு
முழன்றேனினி யிந்த
வீயாத பிணிப்பொன்றற
வினையேற்கரு ளாயே. 85

222. அன்புற்றற நெறிநின்றுன
தடிபேணவு மறியேன்
இன்புற்றுன தடியார்பணி
யிறையும்புரி கில்லேன்
துன்புற்றப வத்தேபடு
துரிசற்றக வில்லா
வன்புற்றவு லண்டொத்தனன்
மன்னுவரு ளென்றுன். 86

223. கையஞ்சலி செய்யாவிரு
கண்ணும்புனல் கலுழா
மெய்யன்பின் விதிர்ப்புற்றிட
விம்மாமொழி குழறு
ஐயன்றிரு முன்னங்தொழு
தரிதாகவ கன்றுன்
வையம்புகழ் பொற்கோயிலே
வலமாகவும் வந்தான். 87

224. தேசு சேர்திருக் கோபுரஞ்
சென்னிதாழ்ந் திறைஞ்சி
வாச மாகியே யங்நகர்
வைகினு னெடுநாள்
ஆசை கூர்திரு மாலுமுன்
னறைந்தசொற் பரிசே
யீச னுரிரு தாடொழ
வெய்தினு னங்கண். 88

222. துரிசு-குற்றம்.

225. தூய மாயவன் வருதலுஞ்
சுதீக்கண முனிவன்
நேய மோடவன் ருள்தொழ
நிகழ்ந்தமுற் சாப
மாய தன்னிலே நீங்கின
வனைந்தன பொறையு
மேய வங்நெறி பெற்றவன்
விளங்கவீற் றிருந்தான். 89

226. இருந்து பின்னரு மெம்பிரா
னிணையடி வழிபட்
டருந்த வத்தினன் சுதீக்கண
னடைந்தனன் முத்தி
திருந்து நீணெறிப் பராசர
தீர்த்தமிம் முறையே
பொருந்து மத்தலத் ததிசய
மினையவை புகன்றும். 90

227. சொற்றவிச் சரிதை முற்றுந்
துவாபர யுகத்த தாகும்
கற்றறி மன்னு விங்கோர்
கதைதி ரேதா யுகத்தில்
நற்றவன் சுருதி வாய்மை
நயந்தவத் திரிநன் னுமம்
பெற்ற தீர்த்தங் கேண்மி
னெனமுனி பேசு கின்ருன். 91

பராசர தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.
ஆக சருக்கம் 6-க்கு திருவிருத்தம் 227.

7. அத்திரிநாம தீர்த்தச் சருக்கம்

228. அருமறை நான்கு மோதி
ஆகம மனைத்துந் தேர்ந்து
பொருவிலா வந்நூல் சொற்ற
போதமே தலைநின் றுள்ளான்
திருவமர் செல்வ மிக்குச்
சிறந்ததோர் அந்த ணாளன்
குருபரன் விரத சீலன்
கோத்திர கர்த்தா வென்பான். 1

229. பரவுவெண் டிரைநீர் துங்க
பத்திரை நதியின் பாங்கர்
விரவுமோ ராச்சி ராம
மேவியங் குறைவோ மென்று
மரபினி லவன்ற னக்கு
மனையவள் சுவேச்சை யென்பாள்
உரைமிகு கேள்வி சான்ற
சீடரு முளர நேகர். 2

230. அன்னவ னில்ல றத்தி
னங்கமார்ந் தருளி னார்ந்து
முன்னையா ரணங்கள் சாற்று
முறைமையிற் றருமந் தானம்
பன்னரு மகங்க ளாற்றிப்
பயில்பர போக முன்னிப்
பின்னரோ ரரிய யாகம்
பெருத்தது தொடங்கி னானல். 3

231. தொடங்கிய மகத்தின் நாமம்
துவா தச யாக மென்னு
மடங்கலு முடிய வீரா
ருண்டளை வியற்றல் வேண்டும்
முடங்கிடா திடையூ றின்றி
முறைபுரிந் தியற்று மென்றே
யுடன்பட மாண வற்கங்
குபசரித் தினிய சொல்லி. 4

232. சிறப்புறு வேள்விச் சாலை
செய்திடு தான வர்க்கம்
முறைப்படி யூப கம்ப
முதலிய திரவி யங்கள்
நிறைப்பன பலவுந் தேர்ந்து
நிறைந்தபின் அதற்கு வேண்டும்
மறைப்பெரு முனிவர் தம்மை
வரவுரை செய்து விட்டான். 5

233. கவுதமர் வாம தேவர்
காத்தியா யனர்வ சிட்டர்
பவநெறி வென்ற வேதத்
தவத்தினர் பரத்து வாசர்
தவமிகு முனிவர் கோனும்
சமதக்னி முனிக டோன்று
மிவர்முத லாய தக்கோர்
எய்தினர் பலரு மங்கண். 6

---

231. வேள்வி-யாகம்.

234. முனிவர்கள் எய்தி னோரை
முறைமையின் வழிபட் டன்பின்
இனியவை புகன்று தானங்
கியன்றவேள் வியைமு டிப்பான்
தனித்தனி யவர வர்க்குச்
சரிதமீ தெனவ மைத்துப்
புனிதநான் மறையி னீதிப்
பூசனை தொடங்கி மெல்ல. 7

235. முண்ட கத்திசை முகனருள்
முனிவர்நா ரதனார்
கண்ட ணைந்தனர் அங்கவன்
கருமவேள் வியினை
எண்ட ரத்தகு முனிவர
ரெதிர்நடந் திறைஞ்சிக்
கொண்ட ணைந்தனர் சாலையிற்
கோத்திர கர்த்தா. 8

236. ஆத னங்கொடுத் தருச்சனை
புரிந்தரு கணைந்து
மாத வத்தினர் சூழ்வுற
மறையவ னிருப்ப
வேத வித்தக நாரதர்
விரவுமத் திரிபாற்
காத லித்தவ னியல்பினை
வினவுவான் கருதி. 9

---

235. முண்டகத் திசைமுகன் - பிரமதேவன்; கோத்திர கருத்தா - யாகம் செய்யும் தலைவர்.

236. வேதவித்தகர்-வேதத்தில் வல்லவர்.

237. நின்ம கத்தொழி லருச்சனை
நிகழ்பவோ வினிதாம்
உன்ம னைக்கொடி சோபன
மோவென நன்றும்
தன்மை சாற்றினன் தனையரோ
வென்றலுந் தலைசாய்த்
தின்மை சொற்றில னத்திரி
யிருநிலங் கீறி. 10

238. மைந்த ரின்மையின் சொற்றிலன்
மாதவ னென்றே
சிந்தை செய்து நாரதமுனி
சிறிதெடுத் துரைப்பான்
அந்த மில்மறைப் பொருளுணர்
அத்திரி முனிகேள்
சந்த திப்பெரு வளமுநீ
யெய்துவை தளரேல். 11

239. மறுகு திண்கட லுலகினில்
மக்களா மெவற்கும்
உறுபெ ரும்புகழ் கிடைப்பரி
துதாரமே யற்றாற்
பொறுமை யற்றிடிற் பெருமையும்
பொருந்துறா தவைபோல்
பெறுவ தெப்படி பரகதி
புதல்வரைப் பெறாதார். 12

---

237. மகம்-யாகம்; மனைக்கொடி-மனைவி; தனயர்-மக்கள்.
239. பரகதி-மேல் நிலை

240. குறைவில் மாதவப் புலிமுனி
குலசீர்த் தந்தை
அறையும் வாய்மையின் மணம்புணர்ந்
தில்லறத் தமைத்து
பெறல ரும்உப மன்னிய
முனிவனைப் பெற்றான்
மறையி னீதிசெய் பிற்கடன்
மாட்சிவேட் டன்றே. 13

241. ஓசை யூறொளி சுவைமண
மென்னுமைம் புலனுக்
காசை தீர்தர நுகரவு
மகன்றவேழ் பிறப்பிற்
பாச நீத்திடு கடன்முறை
பரிந்துபின் செயலும்
மாசி லாமகப் பேறிலாற்
கெவ்வகை வழங்கும். 14

242. சுருதி யின்வழி யொழுக்கமும்
தொன்மைசால் தவமும்
அருளு மேன்மையு முடையநின்
றன்னையா ரறிவார்
பெருக வீதுனக் கொருகுறை
பெய்துற லொழிநீ
உரிமை யாமகப் பேறுற
வுரைப்பனோ ருபாயம். 15

---

240. புலிமுனி-வியாக்ரபாதர்.
242. பெய்துறல்-வருந்துதல்.

243. எனந விற்றிய நாரதற்
கெழின்முனி யிசைப்பான்
அனைய தோர்நெறி பகரில்நின்
னருளினா லுய்வேன்
தனைய ரெய்துமா றியற்றிய
தவங்களோ சால
வினைய னேனது பெற்றிலன்
விதிப்பய னன்றோ. 16

244. என்றி சைத்தலு நாரத
னிலங்குநீர்ப் பொன்னி
தென்றி சைப்புறத் தோரிரு
காவதஞ் சென்றால்
குன்றி சைத்தன வெழுநிலை
கோபுரந் தோன்றுந்
துன்றி சைச்சுரும் பெழுமலர்ப்
பழுவமுந் தோன்றும். 17

245. புறந்த ழீயபொற் புரிசையும்
புனிதநல் விழவும்
நிறைந்த பன்மணித் தேர்களும்
நெடியவீ திகளும்
துறந்து விண்முக டுரிஞ்சிய
சூளிகைப் பரப்பும்
சிறந்து பல்வளஞ் திகழ்திரு
வாஞ்சிய நகரம். 18

---

244. சுரும்பு-வண்டு; பழுவம்-நந்தவனம்.
245. விழவு-திருவிழா.

246. அங்கு முன்னுள வாலயத்
ததன்வட திசைபால்
திங்க ளஞ்சடை யான்மகிழ்
தீர்த்தமொன் றதனிற்
பங்க யன்மக பதிபணிப்
பாயலான் படிந்து
சங்கை யற்றபே றுற்றவத்
தன்மைசாற் றரிதால். 19

247. அத்த டம்புகழ் திவலைபட்
டகன்றபை சாசம்
மொய்த்த தீவினை வன்பிணி
முயலகன் சாபம்
இத்து ணைத்தென வெண்ணரி
திழிந்ததிற் படிந்த
வித்த கற்குநன் மகப்பெற
லரியதோ வரிதே. 20

248. சிதைவில் செல்வமு கல்வியுஞ்
சிறந்துள ரானதம்
புதல்வ ரைப்பயந் துண்மகிழ்
புனிதருங் கோடி
யதனி டைப்படி பவர்பய
னளப்பதென் னவர்தம்
மிதைய மெப்படி யப்படி
யெய்துவர் திண்ணம். 21

---

246. மகபதி - இந்திரன் ; பணிப்பாயலான் - ஆதிசேடன்மீது அறிதுயிலமரும் திருமால்.

249. முனிவ கேண்மக மிங்கிது
முடித்துநின் கற்பின்
வனிதை தன்னொடும் நீயுமம்
மாநகர் அணைந்தப்
பனிம லர்த்தடம் பணிந்திறை
தாள்பணி பண்பி
னினிய செல்வரைப் பெறுவையங்
கொல்லை செல்லென்று. 22

250. இத்தி றத்தினை நாரத
ரிசைத்தகன் றிடமுன்
னுய்த்த மாமக முடிந்தபின்
னுயர்பெருங் கற்பிற்
றத்தை மென்மொழி மனையவ
டன்னுடன் போத
அத்தி ரித்தவ முனிவர
னதுகருத் திருத்தி. 23

251. கான கம்பலத் தெய்வமா
நதிகள் கற் கடங்கள்
தான கன்றுயர் காவிரித்
தண்டுறை படிந்து
தேன கும்பொழிற் சூழ்திரு
வாஞ்சிய மென்னும்
மாந கர்ப்புற வெல்லையை
வணங்கியுள் வந்தான். 24

---

250. தத்தை-கிளி

252. வந்து மாமுனிவ னந்த ணாளருறை
மனைக டோறுமண முரசமுஞ்
சந்த நான்மறை முழக்க மும்மவர்
சமைத்த வேள்வியின் வழக்கமும்
பந்த பாசமற வந்து வாசமுறு
பண்பி னோர்கள்பயில் வீதியும்
முந்தை நாளினி திருக்கு மம்முறைமை
முனிவ ரன்சிறிது நோக்கினான். 25

253. ஆக மப்படியி னாதி யர்ச்சனைசெய்
யன்பர் தங்கள்மட மெங்கணும்
பாக மிக்குறு சுவைப்ப டுத்தடிசில்
பருகு நல்லடியர் பூசையும்
நாக கங்கணர் புராண காதைபல
நண்ணி யோதுமவர் கூட்டமும்
யோக மேவுசிவ ஞான யோகிகள்
ஒடுக்க மாமெவையும் நோக்கினான். 26

254. அயந கர்க்கணுறை வோர்க ளந்நகர்
அணைந்து புட்கரணி யாடிமுன்
வியனு டைத்தனையர் பெற்றெ டுத்துவரு
மிகுதி யுந்தனைவி டாததோர்
முயல கப்பிணி பிசாசு கண்குருடு
மூகை தீர்ந்துதிரு முன்பெழும்
இயல்பி னோர்திரளும் நிபுட மிட்டுலவும்
இறைவர் சந்நிதியும் நோக்கினான். 27

---

252. முரசம்–வாத்தியம்.

253. நாககங்கணர்-பாம்பையணிந்துள்ள பரமன்.

255. இன்ன தன்மைபல கண்டு முன்முனிவ
ரெய்து மாச்சிரம வெல்லையில்
பன்ன சாலைசிறி தங்க கர்க்கணொரு
பாற்ற னக்குமமை வித்தபின்
முன்ன முன்னிவரு கரும முற்றும்வகை
முனிவர் நாரதர் மொழிந்ததோர்
அன்ன பொய்கையி னணைந்து பன்னியொடு
மாடி னுன்மறைகள் பாடினுன். 28

256. சந்தி வந்தனை முதற்ற னக்குரிய
தரும நீதியை முடித்தபின்
புந்தி யின்னுவகை கூர்ந்து சென்றரி
புரந்த ரன்ருெழ நிரந்தரம்
நந்தி வானவ ரிருந்த வாயிலெதிர்
நண்ணி முன்னுற வணங்கியே
இந்து சேகரனை யேழை பங்கினனை
யெய்தி யேதுதி யியம்புவான். 29

257. வரதாமழ விடையாமணி
மன்ருநட மருவும்
சரதாநர சீயம்பொரு
சரபாதனி வீரா
புரதாகன நகையாபணி
பூணுவரி போதன்
சிரதாமவி னோதாசெய
சிவனேசெய சரணம். 30

258. மூவாமுத லேயாரண
முடிவேமுடி வேதும்
மேவாவடி வேயென்னினை
விழியேவிழி மணியே
காவாயெனை யென்றேயிரு
கையஞ்சலி செய்தே
யோவாதவி ருப்புற்றெழுந்
துன்றின்று மகன்றான். 31

259. சூழும்பரி வாரம்பல
தொழுதான்றுணை வன்பால்
வாழும்பெரு மாடன்னை
மலர்த்தாள்வழி பட்டான்
ஆழும்பரி வாலங்கண
மர்ந்தேதவ முயலத்
தாழும்புரி குழலாளொடு
தன்சாலைபு குந்தான். 32

260. அங்கவன் வைகியே யரிவை தன்னொடைப்
பங்கய வாவியிற் படிந்து நாடொறுஞ்
செங்கனல் மாமகந் தியான மர்ச்சனை
சங்கர னடிகளிற் றவாதி யற்றினன். 33

261. இந்நெறி யாண்டுமூ வாயி ரஞ்செலப்
பின்னொரு ஞான்றிறை பிறங்கு கோவிலுள்
முன்னவர் முன்னர்கை முகிழ்த்து நொந்துளம்
நின்னருளென்றுகொல் நிகழும் நாளென. 34

260. அரிவை–மனைவி.

262. பரிவொடு பன்முறை பரவு வானெதிர்
தெரிவொடு நின்றனன் தேவர் தேவனங்
கெரியுறு மெழுகென யாக்கை யெங்கணு
மருமுனி யுருகினான் அவச மாயினான். 35

263. ஐம்புல வழியெலா மமுத தாரையாய்க்
கம்பமு மெய்யுறக் கரண மொன்றியே
சம்புவின் நூபுரத் தமனி யஞ்செழுஞ்
செம்பது மத்தின்முன் சென்னி சேர்த்தினான். 36

264. எழுந்துநின் றிறைவன்முன் னிருகண் மாரியே
பொழிந்தரு மறைகளாற் போற்ற லும்மதிக்
கொழுந்தணி மவுலியான் குன்ற வில்லினான்
தொழுந்தவ முனிக்குளஞ் சுரந்து கூறுவான். 37

265. போற்றிய முனிவநீ புரிந்த மாதவம்
சாற்றரி துவந்தனந் தருதும் நீபெறும்
பேற்றினை யுரையெனப் பெருந்த வன்னொரு
மாற்றமு மறிகிலன் மைந்த ரென்றனன். 38

266. எந்தைதெத் தாத்திறை யென்னும் பேரமை
மைந்தனை யீந்தனம் வாழி நீயென
அந்தமி லாமுனிக் கருளி மற்றவும்
சிந்தைசெய் யாமுனம் திரோப வித்தனன். 39

267. திருவுள மென்கொலோ திரோப வித்ததென்
றருள்பெற வேண்டியாண் டாயிரம் பினும்
பொருவரு முதலினைப் போற்றி யேபுகழ்
மருவிய முனிவரன் வருந்த நேர்ந்தனன். 40

---

263. தமனியம் பொன்.

266. திரோபவித்தனன்-மறைந்தனன்.

268. பாவல னொருவன்முன் பாட வேயுழன்
றேவல்செய் தொழுகுவா னிவன்க ருத்தினுட்
டேவக மாயொரு திருவு ருச்செய்து
வாவென வுருகினல் வராதி ருப்பனோ. 41

269. துய்த்திடு பால்நசைச் சுரப்பு மாறினும்
கற்றிய கன்றெனக் கனைத்து மீளுமா
மத்தக முனிவர னடுத்து வேண்டலும்
வித்தக நிருமலன் மீள வெய்தினன். 42

270. பின்னரும் மாமுனி பெரிது மேத்தியே
முன்னவ னடியினில் முடிவ ணங்கிநின்
றன்னையு மாயெனை யாண்ட சோதியே
இன்னமு மொருவர மென்றி யம்புவான். 43

271. கரியமால் பிரம னின்னங்
காணுக் கடவுள் நின்னைத்
தெரியுநீ டியல்பும் பெற்றேன்
சேயுடைப் பேறும் பெற்றேன்
அரியவித் தடம்ப டிந்தேன்
ஆதலால் இத்த டத்திற்
பெரியதோர் நாம மின்றென்
பெயரினிற் பிறங்கு மாறும். 44

272. மகப்பெற வேண்டு மாதர்
மைந்தரிவ் வளஞ்சேர் கோக
நகப்பெரு வேள்வி யாளர்
நயந்திடி லிருந்து மூன்றின்

மிகப்பரி வுறுக ருப்பம்
விளைவு பெற்றுய்யு மாறும்
மிகப்பெருங் கருணை கூர
வென்னையாட் கோடி யென்றான். 45

273. அடியவர்க் கெளிய னாகி
யடியவர் நினைந்த வண்ணம்
முடியவே முடிக்கு முன்னோன்
முனிவரன் மொழிந்து வேண்டும்
படியெலா மெய்த வேண்டும்
பவளவாய் திறந்து ரைத்துத்
துடியன விடையாள் போற்றும்
தொல்சிவக் குறிநி னைந்தான். 46

274. திருவருளின் றகைமையுணர்ந் தத்திரிமா
முனிபோற்றிச் சென்னி தாழ்ந்து
பெருகவுமங் நகர்வைகிப் பெறலரிய
சேயினையும் பெற்றான் மற்றும்
மருவருமெய்ஞ் ஞானநெறி முதலாய்
வேண்டியநல் வரமும் பெற்றான்
பொருவரிய பரம்பரனே கருணைபுரிந்
தாலரிதோ புதல்வர்ப் பேறே. 47

275. செய்யமலர்ப் பொய்கையுமத் திரிதீர்த்தமென்
றுரைக்குஞ் சிறந்த நாமம்
ஐயமற உலகுதிரே தாயுகத்தி லென
முனிவ னறைந்தான் பின்னும்

---

273. துடி-உடுக்கை.

துய்யதிரு நகரதனிற் றவமுயன்றார்
முனிவர்களுஞ் சுரரு மேயோ
வையமெலா மினிதளிக்கும் மாலவனு
நோற்றிலனோ மன்னே யென்றான். 48

அத்திரி நாம தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் ஏழுக்கு திருவிருத்தம் 275.

---(o)---

8. திருமால் தவம்புரிச் சருக்கம்

276. என்றுமுனி சொற்றிடவு மரசனிவை
யென்னுரைத்தி யையா விந்தத்
துன்றுபல புவனத்துத் தோன்றுசரா
சரங்களெனுந் தொடர்ப றுது
நின்றவுயி ரத்தனைக்கு மினிதளிக்குந்
திதிகர்த்தா நெடுமா லன்றோ
சென்றிவனோர் பொருள்கருதி தவமு
யன்றா னென்னுமுறை தேற்றமாமோ. 1

277. சேலுருவங் கமடமோ(டு) ஏறுழியாய்
யடல்நார சிங்க மாகி
மாலவனிங் கெடுத்ததிரு வவதாரம்
புவிபுரத்தல் மதித்தே யன்றோ

276. திதிகர்த்தா-காப்புக்கடவுள்.
277. சேல்-மச்சாவதாரம்; கமடம்-கூர்மாவதாரம்; ஏறுழி-வராகாவதாரம்.

நாலுமுகன் ருனுமவன் றிருநாபி
யந்தடத்து நளினம் பூத்த
கோலமத னுலலவோ குவலையமெல்
லாம்படைத்துக் குலவு மேன்மை. 2

278. ஆதலினு லிவனுலகுக் காதார
மூலமே யமரர் யாரும்
வேதன்முத லனைவோரும் வணங்கவரு
கடவுளிவன் வேறு ளார்போல்
மாதவமே புரிந்திடுதற் கரிதாய
பொருளேது வரமீ வார்யார்
போதமுற வீதெனக்குப் புகலென்று
சாபாலி புகல லுற்ருன். 3

279. விளைபுல மொன் றமைத்ததனிற் பைங்கூழ்செய்
ததன்போகம் விளைவு நாடிக்
கொளுமவனே வவன்பணிப்பக் காப்பவனே
களைகணெவன் கூறு வார்பால்
அளவறயா வையுமொருவ னுக்கவமைத்
தழிக்கவழிந் தவன்கண் ணேநின்
றுளவுமிவ னவனளித்த வதிகார
முறையினனென் றுணரப் பாலை. 4

280. மாயையுபா தானமாய்ச் சத்தியதன்
கருவியாய் வகுத்த ஞாலத்
தாயவுயிர்த் தொகையனைத்தும் வினைவழியே
போகமுள தருந்த வூட்டித்

280. போதம்-ஞானம்.

தீயமலச் செருக்ககற்றும் பருவமுணர்ந்
 தருட்போதம் தேக்கித் தன்றாள்
ஏயவருள் சிறந்தளிக்கு மவனன்றே
 தலைவனவ னெவனென் பாயால். 5

281. அத்தகைய னெவ்வெவர்க்கு மறிவரிய
 சின்மயத்த னகள மூர்த்தி
யெத்தகைய பொருளினுக்கு மின்றியமை
 யாமுதல்வ னிணையொன் றில்லான்
அத்தனடி முடிவில்லான் அனாதிமல
 முத்தனவன் நிருவி காரி
சுத்தவியா பகன்சலன சொல்லிறந்த
 துரியத்தன் சுகசொ ரூபி. 6

282. திருத்தருமப் பரஞ்சுடரே செப்பியவத்
 திருநகரிற் சிவகோ சத்திற்
தரித்தருளி யொழியாத கருணையுருக்
 கொண்டென்று தழைத்தா னென்றால்
அருத்தியுடன் றவம்புரிந்தார் அழியாத
 வரம்பெற்றா ரளவொன் றுண்டோ
கருத்திலொரு வருத்தமுறத் திருமாலுந்
 தவம்புரிந்த கதையுங் கேட்டீ. 7

283. குலவு மெய்த்தவ முனிவரும்
 இமையவர் குழுவும்
மலரி னான்முகப் பிரமனும்
 வணங்குவை குந்தத்

திலகு செம்மணிக் கண்பணிச்
சுடிகையா யிரவாய்
யலகெ யிற்றடல் வாளர
வமளியிற் றிருமால். 8

284. திங்க ளாயிரஞ் செழுங்கதி
ராயிரஞ் சிறந்தாங்
கங்க மைந்துசங் காழிக
ளரியமெய் காப்பப்
பங்க யத்துறை திருமகள்
பார்மக ளென்னும்
மங்கை மாரிவ ரிருவரு
மலர்க்கழல் வருட. 9

285. கையும் உந்தியும் சரணமும்
கண்களும் வாயும்
செய்ய தாமரைக் காடெனச்
சிலம்பிடைக் கிடந்த
மைய தாமென நீலமால்
வரையென நெய்தற்
பொய்கை யாமெனக் கண்டுயில்
பொருந்தலி லொருநாள். 10

286. அங்கி ருந்துதாள் வருடிய
வரியதே வியர்தாங்
தங்க ளிற்சிறி துரைகொடு
சரதமே புரிவின்

வெங்க டுஞ்சொலா லொருவரோ
டொருவர்பின் வெறுத்துச்
செங்க னற்பொறி விழியுகச்
செற்றமீக் கொண்டார். 11

287. கொண்ட வெஞ்சினங் கதுவுறக்
கொடியசொற் பறைந்து
மண்டு பூசலே மிக்குற
வருதலின் வெருவி
யண்டர் போற்றினர் வணங்கின
ரமைந்திடார் முனிவு
கண்ட கன்றன ரென்கொலீ
தென்றுளங் கலங்கி. 12

288. பைய ராவணைத் துஞ்சிய
பச்சைமா லிவர்தம்
வெய்ய வாயசொற் றுழனியின்
விழிதுயி லுணர்ந்து
தையல் மீர்வரு பூசலைத்
தவிரும்நீ ரெனத்தன்
கையி னுலிவர் கைபிடித்
தினியகட் டுரைத்தான். 13

289. தலைவ னீங்கிவர் கரங்களைத்
தன்கைபற் றிடும்போ
தலர்ம டந்தையை யிடக்கையாற்
பற்றிமற் றவளாம்

நிலம டந்தையை வலக்கையாற்
பற்றவங் நிலையே
யுலைவு கொண்டன ளொருத்தியங்
கதுபொரு துள்ளம். 14

290. செய்ய பங்கயத் திருமகள்
செற்றமீக் கொண்டு
மையல் கூர்நில மங்கையை
வலக்கையால் அணைத்தி
யைய விங்கெனை யிடக்கையா
லணைத்தியா னிவளின்
நொய்ய ளோவென கைபறித்
தகன்றிது நுவல்வாள். 15

291. கண்ணி ரண்டினுஞ் சமஞ்செய்து
நோக்குதல் கருதா
தெண்ண மென்னிது விழித்ததொன்
றிமைத்ததொன் றிவ்வா
றுண்ணெ கிழ்ந்திடு வஞ்சமுங்
களவுநும் முடைமை
மண்ணி லிங்கிது புதுமையோ
மாயைவல் லாற்கு. 16

292. எம்ம னோர்க்குள பெண்பிறப்
பியற்கையாற் பேத
மம்மர் கூர்தரும் வினைவழி
திரிவுறும் வழக்கால்

---

292. மம்மர்-மயக்கம்.

தம்மி லொன்றெனச் சராசர
மனைத்தையுந் தாங்கும்
செம்மை யாரருள் தன்னிலுஞ்
சிவணுமோ பேதம். 17

293. கருத்தி லின்புறச் சுவைதராக்
கனியொரு கலத்தி
னிருத்த லாற்பய னென்றிலை
யகற்றிடு லென்னும்
பொருத்த லாவதே னிற்றகாய்
குலைதனிற் புகுமோ
வருத்தி யின்னதைக் கண்டன
னகல்வதே நன்றால். 18

294. இறையு மேவில னிவ்விடத்
தெனவெழுந் தம்பொற்
பொறையின் மாடுதன் பெயரிலோர்
சரயுவின் புறத்துப்
பெறல ரும்புகழ்த் தந்தையாம்
பிருகுமா முனிவன்
உறைவ தாமொரு தபோவன
முற்றுவை கினளால். 19

295. கரிய மாலவ னுயிரெனக்
கண்ணெனப் பரிவுற்
றுரிய தன்பெருஞ் சத்தியை
யுலகெலாம் நிறைத்துப்

295. அலமரல்-துன்பம்.

பிரிவு றாதசெந் திருமகள்
பிரிவுழிக் கலங்கி
யரிய மெய்யுணர் வகன்றுநெஞ்
சலமர லடைந்தான். 20

296. திருமகள் பிரிவா லுள்ளந்
தேற்றொணா மம்ம ரெய்திக்
கருமுகில் வண்ண னார்தாங்
கவலையுற் றிரங்கும் பொழுது
வருகநின் வருத்தந் தீர
வாழ்திரு வாஞ்சி யத்தென்
றொருமொழி யெழுந்த தும்பர்
உறைபவம் வியப்ப வானில். 21

297. ககனமீ தெழுந்த வாக்குக்
கண்ணுத லருளீ தென்று
மிகவுமுன் மகிழ்ந்து சென்னி
மீதிரு கரங்கள் கூப்பிப்
புகலிட மாக முன்னம்
பொருந்துவை குந்தம் நீங்கித்
திகழ்திரு வாஞ்சை மூதூர்
சென்றனன் செங்கண் மாலோன். 22

298. அங்கவன் விருப்பி னாலே
யணிநகர் வலம்வந் தேத்தி
பொங்கர்சூழ்ந் திலங்குந் தெய்வப்
புண்ணிய தீர்த்த மூழ்கித்

---

297. ககனம்-ஆகாயம்.

துங்கநான் மறைகள் பாடுஞ்
சோதிலிங் கத்தைக் கண்டு
செங்கணீ ரருவி பொங்கச்
சென்னிதாழ்ந் திறைஞ்சிப் போந்து. 23

299. திருந்தவப் பதியி னும்பர்
செய்தவாச் சிரமத் தெய்தி
யிருந்தனன் கருத்தில் முன்ன
மெண்ணிய வண்ண மெய்தத்
தருந்திரு வருளே யென்று
சம்புவி னடிகள் போற்றிப்
பொருந்தினன் சிவயோ கத்தைப்
பொலிவுறு சமாதி பற்றி. 24

300. வாக்கிறந் துணவு நீத்து
மனுதியு மொடுங்கி வாயு
போக்கொடு வரவு செய்யும்
புரையிரு வழியு மற்றுத்
தாக்குறு சுழுனை நேர்போய்ச்
சலனமு மிழந்து தொக்குள்
ஆக்குமைம் புலனு லாவு
மரும்பொறி வழியு மாறி. 25

301. ஒருப்படு திறத்தி னுற்றன்
உளக்கம லத்தி னூடு
திருப்பொலி பிரம மான
சின்மய வியோமந் தன்னை

விருப்புற நோக்கி யுள்ளே
விழித்தறி வழுந்தி யொன்றாய்
இருப்பதாம் நிலைமை பற்றி
யின்புறு புணரி புக்கான். 26

302. ஆண்டொறு நூறு நூறும்
அமரராண் டதனிற் செல்ல
ஈண்டிய சமாதி சாதித்
திருப்பமூ லாதா ரத்திற்
றூண்டரு மெரிகி ளர்ந்து
சுழுமுனையின் வழியைச் சுட்டு
நீண்டது மேலு மன்னான்
பிரமரந் தரத்தை நீங்கி. 27

303. பரந்தது வான மெங்கும்
பானுமண் டலத்தைப் பற்றி
விரைந்துசந் திரப தத்தும்
விளங்குபே தத்துந் தாவி
யுரந்தரு மண்ட வோடு
முருகவே தெண்ட பாணி
புரந்தனைப் பற்றி யந்த
புரத்திலும் போய தன்றே. 28

304. தாரக மாகி நின்ற
தரணியே சலன முற்றால்
யாரிது தவிர்க்கப் பால
ரின்னுயி ரனைத்தும் காக்குங்

302: பிரமரந்தரம்-உச்சிப்பள்ளம்.

காரண முதலே யுள்ளங்
கலக்கமுற் றவியா விந்தப்
பேரழ விட்ட தென்றாற்
பிறிதெவ ராற்று வாரே. 29

305. சீதரன் முயன்ற யோகத்
தீச்சிகை விரிந்து தீய்க்கும்
பூதலங் கருகிற் றேழு
புணரியும் பொங்கக் காய்ந்த
மீதருந் தருக்க டய்ந்த
வெதும்பிய தரையுங் கீடகா
கோதர முடல் பதைத்த
கொதித்தன வானக் கங்கை. 30

306. அண்டருந் திரண்டோர் சார்பி
னச்சமுற் றணைந்தா ராங்குப்
பண்டைநா ரதனா ரெய்திப்
பகர்வர்செந் திருவை நீத்த
கொண்டல்சேர் வண்ண ரிட்ட
கொடுங்கன லிற்ற விப்பான்
முண்டக வலரி னாடன்
முனிவுதீர்ந் திடில்நன் றென்றார், 31

307. சரதமே யிந்த வாய்மை
தருவன வென்று சென்று
சுரர்பதி யியக்கர் சித்தர்
சாரணர் தொக்கு வானோர்
பிரமனே முதலா யுள்ளார்
பிருகுவின் றபோவ னத்தின்
விரைமலர்த் திருவைப் போற்றி
விளம்புதன் மேவி னாரால். 32

308. அன்னைநீ எவ்வு யிர்க்கு
மகிலநின் னருளி னாலே
இன்னலொன் றின்றி வாழு
மீங்குநீ முனிவை யேற்று
மின்னவிர் நேமி யானை
விட்டுநீ பிரிவா யென்னிற்
கன்னல்நேர் மொழியா யுன்றன்
கற்பினுக் கியல்ப தாமோ. 33

309. தேவிநின் கொழுநன் றன்னைத்
திருவளர் மார்ப னென்னப்
பூவுல குரைக்கு நாமம்
பொய்யெனப் புரிகின் றாயோ
ஆவியங் கமலக் கண்ண
னணிதுழாய் மருமச் செம்பொற்
கோவிலு நின்னை யல்லாற்
குடிபுக வேற்குமோ சொல். 34

310. கறங்குபாற் கடலி னின்று
மெம்முடைக் கவர்ச்சி நீங்கிப்
பிறங்குமா ரமுதத் தோடு
பிறந்தநீ யாகி லெம்பால்
மறங்கொளா தன்னை யின்னே
வருதிமுன் வைகுந் தம்புக்
குறங்குவா னின்னை வேண்டி
யோகஞ்செய் துறுக ணீங்கான். 35

---

308. கன்னல்-கரும்பு.
309. கொழுநன்-புருஷன்.
310. உறுகண்-துன்பம்.

311. கொழுநர்தம் குற்ற முண்டோ
குடிப்பிறந் தாரு மன்ன
பழுதினை நினைப்ப ரோதம்
பயிர்ப்பினை நினைப்ப தல்லால்
தொழுமுதல் வேண்டிற் றேனுந்
துணைவனை யன்றி யேபின்
மொழியவே றுண்டோ தாயே
முனிவுதீர்ந் தருள்செய் யென்றார். 36

312. வானுளார் யாரு மிந்த
வண்ணமே வருந்திப் போற்ற
மோனமா யிருந்தா ளொன்று
மொழிந்திலள் முனிவுந் தீராள்
ஞானநா ரதனார் நோக்கி
நமக்கிது முடியா நஞ்சம்
போனக மாயுண் டார்முன்
போயிது புகல்வோ மென்றார். 37

313. ஆவது கரும மீதென்
றனைவருந் திரண்டு தேவ
தேவனு மெந்தை யிந்து
சேகரன் தெரிவை பாகன்
மூவர்த மிருக்கை யான
மும்மதில் முற்று நீறாய்
வேவமுன் முறுவல் செய்தான்
வெள்ளிவெற் பணுகிப் போந்து. 38

---

311. முனிவு-கோபம்.
312. போனகம்-அமுகம்.

314. கருங்கட லொலிக டுப்பக்
கறங்குவெள் ளருவி தூங்கப்
பொருங்க ஞக மாறப்
புயலினந் தழுவுஞ் சாரற்
பெருங்கட றனைத்துந் துன்றிப்
பிரளய நீத்தம் போல
வருங்கட வுளரெல் லோரும்
வந்தடி வரைவ ணங்கி. 39

315. முந்தொரு தொகுதி செல்ல
முடியொடு முடிக டாக்கிச்
சிந்திய மணியும் பொன்னும்
சிதைந்தகற் பகப்பூந் தாரும்
பிந்திய திரடு கைப்பப்
பிறங்குசோ பான மேறிப்
புந்தியி னச்சத் தோடு
மண்ணல்தன் கோயில் புக்கார். 40

316. அங்கவ ரமலன் கோயி
லம்பொனின் கோபு ரத்துட்
டங்கிய நந்தி தேவர்
தடைபெருங் கடையி னின்று
செங்கைகள் கூப்பி யையா
சென்றுநீ யிறைவன் முன்னம்
எங்கடம் வரவு கூறி
யிடர்தொலைத் தருள்செய் யென்ருர். 41

317. அன்னதே யாக வென்று
நந்தியுள் ளணைந்த வேலை
முன்னரே சநற்கு மாரர்
முதலிய முனிவோர் போற்றத்
தன்னருங் கருணை கூருஞ்
சமயநன் ருத லாலே
இன்னதே கால மென்ன
இறைவன்முன் சென் றிறைஞ்சி. 42

318. இந்திரன் விரிஞ்ச னாதி
யிமையவர் யாரு மீங்கு
வந்தன ரிறைவ வந்த
மணிக்கடை முன்றி லென்று
வெந்திற னந்தி தேவர்
விண்ணப்பஞ் செய்ய வண்ணல்
செந்திரு வாய்ம லர்ந்து
தேவரை யழைமி னென்ருன். 43

319. அருகுநின் றின்ன வாய்மை
யரனருள் செய்ய ஓடி
ஒருகையிற் பிரம்பு தாங்கி
யும்பரை நந்தி தேவர்
வருகவென் றழைக்க வன்னோர்
வள்ளறன் திருமுன் னெய்தி
இருகர முச்சிமேல் வைத்
திறைஞ்சிநின் றிதுது திப்பார். 44

---

318. விரிஞ்சன்-பிரமதேவன்.
319. உம்பர்-தேவர்.

320. அருமறைப் பொருளே போற்றி
யாதிநா யகனே போற்றி
கருணையங் கடலே போற்றி
கயிலைநா யகனே போற்றி
பருமவா டரவ வல்குற்
பாவைபங் கினனே போற்றி
பொருவரு மிறைவா போற்றி
புனிதனே போற்றி போற்றி. 45

321. செக்கரஞ் சடையாய் போற்றி
சிவபெரு மானே போற்றி
அக்கர வணிந்தாய் போற்றி
யம்பலத் தரசே போற்றி
தக்கநின் புகழே பாடி
தஞ்சமென் றடைந்த தொண்டர்
துக்கசா கரந்தொ லைக்குந்
துணைவனே போற்றி போற்றி. 46

322. அன்றுநஞ் சருந்தி யெங்க
ளாருயிர் காத்த சோதீ
இன்றுமெம் முயிர்பு ரக்க
விரங்குவாய் போற்றி யென்றே
நின்றிவை யமரர் போற்ற
நிருமல னுங்கள் நெஞ்சத்
தொன்றிய தியம்பு மென்ன
வும்பர்வின் ணப்பஞ் செய்வார். 47

---

321. அக்கு-எலும்பு.
322. சாகரம்–சமுத்திரம்.

323. தெருளுற வுலக மெல்லாம்
விளக்குவன் செய்ய பானு
இருளென வொன்று நின்னை
யிடை யிடை மறைந்து
னருளினா லினிது வாழ்வோ
அடியேமை யெங்க ளுள்ளம்
வெருளுறு மாறு வெப்பம்
விளைந்ததோர் தீயின் வெப்பம். 48

324. அடுக்குமிப் புவன மெல்லாம்
அருளினி லளித்து நீநின்
றொடுக்குநா ளனலு மல்ல
ஊழிவெந் தீயு மல்ல
வெடுக்குமிவ் வண்ட வோட்டி
னிருந்தகா லாங்கி தேவர்
கடுக்கமேல் நோக்குங் காலக்
கடுங்கனற் பிழம்பு மல்ல. 49

325. எண்டிசைப் பரப்பு மெங்க
ளிருக்கையு மேகச் சுற்று
மண்டிய தழலி தொன்று
வருந்தின மிதனா லெந்தாய்
கண்டிது தெரிய லுற்றோங்
கரியமால் யோகச் செந்தீ
வொண்டொடி கமல மங்கை
யூடலால் விளைந்த தென்றார். 50

---

323. பானு-சூரியன்.
325. கமலமங்கை-இலக்குமி.

326. விண்ணவ ரின்ன தன்மை
விளம்பிவாய் புதைத்து நிற்ப
அண்ணலங் கவரை நோக்கி
அஞ்சுவ தொழியு முங்க
ளெண்ணமின் புறமு டிப்போம்
யாமென விடை கொடுப்பப்
பண்ணவ ரகன்று தத்தம்
பதியினை நண்ணி னூர்கள். 51

327. அன்புசெய் திறைஞ்சி விண்ணோ
ரகன்றபின் னண்ணல் செய்தி
தன்பதம் பணிந்து தன்னைத்
தஞ்சமென் றடைந்தோர்க் கென்றும்
இன்பமே மிக்க மைப்போ
னிதுபுகப் பொறுப்ப னேதான்
தென்புவி விளக்க மெய்தப்
போதுவான் சிந்தை செய்து. 52

328. வான துந்துபி முழவமும்
வாணன்வன் றடக்கைக்
கானபொற் குடமுழவமு
மறைகடல் நிகர்ப்பப்
பானு கம்பர்த மாயிர
முகத்தினும் பணிலந்
தான திர்ந்தெழு கம்பலை
யோமெனத் தழங்க. 53

329. அருத்தி மிக்குள வானவ
ருக்கர்பன் னிருவர்
உருத்தி ரக்கட வுளர்பதி
னொருவரெண் வசுக்கள்
மருத்து வத்துறை யிருவர்கள்
மாதிரத் தலைவர்
திருத்த குஞ்சிவ கணமிவர்
திரண்டுசே விப்ப. 54

330. கந்த வேளொடு கணபதி
முன்செலக் கவுரி
வந்து மால்விடை மிசையொரு
மருங்கினி லிருப்ப
இந்து சேகரன் கயிலையில்
நின்றெழுந் தருளி
முந்து றத்தவ மிருந்துசெய்
முராரிமுன் னின்றான். 55

331. கண்டு செங்கண்மா லுச்சியிற்
கரதலங் கூப்பி
கொண்டு மண்ணிடைப் படிந்திரு
கண்கள்நீர் கொழித்தான்
மண்டு காதலி னெழுந்துமெய்
விதிர்ப்புற வழுத்தித்
தொண்டு கொண்டருள் நீயெனப்
பின்னருந் துதித்தான். 56

332. கண்ணன் பெரிது துதித்திடலுங்
கங்கா தரனுங் கனிவெய்தித்
தண்ணந் துளபத் திருமாலே
தவமங் குரிய வகை முயன்றீ
எண்ணந் தனைநீ ரெமக்கறிய
விசைப்பீ ரின்னே ரினிதென்னும்
வண்ணந் தருவோ மெனத்திருவாய்
மலருற் றிடலு மாயோன்றான். 57

333. கங்கைச் சடையுங் கறைமிடறுங்
கருணை பொழியும் விழிமூன்றுஞ்
செங்கைப் புயங்கக் கங்கணமுஞ்
செய்ய பவளத் திருவாயும்
மங்கைக் குதவு மிடப்பாலு
மழுவெள் விடையு முடையபடி
எங்கட் கரசே யுனைக்கண்டேன்
இனியென் பேறு பெறல்வேண்டும். 58

334. நல்லா ரமுதே தெளிதேனே
நாடுந் தமியேன் நற்றுணையே
வல்லார் வல்ல படிபோற்றும்
வடிவே முடியா மறைப்பொருளே
சொல்லாய் பொருளாய் சொற்சுவையாய்
சுவையுண் பவனாய்ச் சுவைப்பேறாய்
எல்லாப் பொருளு மாயினைநீ
யானென் றறிய விசைப்பேனே. 59

335. என்று முன்றுதி புரிந்து மாயவ
னெடுத்தி யம்புதலு மெம்பிரான்
அன்ற கன்றதிரு மங்கை யைத்திரு
வுளத்த டைத்துவர வுள்கலுந்
தன்று ணைப்பத மடுக்க வந்துதலை
சாய்த்து நிற்பவவ டன்னைமுன்
னின்ற மாதவனை யன்பி னால்வர
வழைத்த ளித்திது நிகழ்த்துவான். 60

336. மங்கை நீமுனி விகந்து முன்புபோல்
வைகிவாழி முகில் வண்ணர்நீர்
இங்கி ருந்தவ மியற்றி டத்திருவு
மிச்சை யுற்றபடி யெய்தினா
ளங்கு நங்கயிலை வெற்ப கத்தமரர்
அச்ச மெய்தியணை வோர்க்குநாம்
தங்க ளிற்குழுமி வந்தெ மக்கவர்கள்
தாழு றும்பரிசு சாற்றினார். 61

337. இந்த மாநகரி லிப்பெ ருந்தவ
மியற்றி னார்கள்பெற லரிதென
சிந்தை யின்பமுறு முத்தி சித்திபல
செல்வ மெய்துறும தன்றியே
தந்த மாதரவி லித்த லத்தவ
தரிக்க வோர்கண மரைக்கணம்
வந்த புண்ணிய வயத்தர் தாமெமை
வணங்கி டுஞ்சிவ கணங்களே. 62

338. முன்ன மிந்நகரின் மேன்மை யாயுடைய
தொன்று கேளுமுனி ரோமசன்
தன்ன ருந்தலை விசிட்ட ரென்னுமிவர்
தம்மு டன்றரணி யெங்கணும்
பன்ன ருள்நதிகள் தெய்வ வாவிகள்
படிந்து சென்னிவள நாட்டினுங்
கன்னல் வெங்கதலி காடு கொண்டுவளர்
காவி ரிப்புனலு மாடினுன். 63

339. அன்ன தண்டுறையின் முன்ன ரேசில
ரருந்த போதன ரிருந்துதன்
முன்ன ராதியலர் புன்னை யம்பொழிலின்
மொய்பெ ரும்புளின மேவியே
நன்ன லந்திகழ் புராண காதையை
நவிற்ற வங்கணிவ நண்ணியே
என்ன காதையிது எத்த லத்துள்ளி
சைத்தி டும்மென வியம்புவார். 64

340. தென்தி சைக்குளொரு பதிபு விக்குளிது
திலக மென்பர்திரு வாஞ்சியம்
என்று ரைக்குமித னும மேயிதி
லிறந்த வர்க்கியம வாதையும்
வன்றி றற்கொடிய சூல நீனுனியின்
வயிர வன்புரியு வாதையு
மொன்று மில்லையிது காசி யின்னதிக
மோது நூலிதனி னுண்மையே. 65

341. காசி யின்னிதனை யதிக மென்றவுரை
காசி யின்மரண மெய்தினால்
மாசின் முத்திவரு மன்ன திற்சிறிது
வயிர வன்புரியும் வாதையுண்
டாசி லிந்நகர் நினைக்க முத்திதரு
காரி வாதையு மிதற்கிலை
பேசி லித்தகைய பெற்றி யாலிது
பெருமை பெற்றநக ரென்றனர். 66

342. தொக்கி ருந்திடும ருந்த போதனர்கள்
சொற்ற வாய்மையின் மற்றவன்
மிக்கெ ழுந்துவி ரைந்து தென்றிசையின்
மேவு வான்விடை பெற்றுமுன்
னொக்க வெய்தின ரெய்த மஞ்ஞை
யுலாவு சோலைம ருங்கெலா
மைக்கு லந்தவிழ்பொன் மாம திற்றிருவின்
வாஞ்சை மாநகர் நண்ணினான். 67

343. இந்ந கர்க்கண் வந் தெய்திய மாமுனி
தன்ன ருந்திரள் தன்னொடு மெம்முரு
வன்ன புண்ணிய தீர்த்தமு மாடியே
முன்ன ருள்ள நியம முடித்தபின். 68

344. மாசில் தீர்த்தத் ததன்வட கீழ்த்திசை
ஆசி ராம மமைத்ததின் மேவியே
தேசு சேர்சிவ யோகஞ்செ யும்படி
நேச மார்தரு நிட்டை பொருந்தினான். 69

341. காரி-இயமன்.

345. மாரி வேனில் மருத்துப் பெரும்பனி
சேரி ராப்பகல் யாதுந் தெரிந்திலான்
பாரில் முன்னருள் பற்றித் தவஞ்செய்தோர்
யாரி னும்மரி தாக வியற்றினான். 70

346. தெருளும் மேன்மைத் தியானம் புரிந்தெம
தருள்பெ ருந்துணை யாறிரண் டாயிரம்
வருட மெய்த வருந்தித் தவஞ்செய்தான்
பொருளி தேயெனப் போற்றிய மாமுனி. 71

347. இந்த மாமுனி யிவ்வகை நோற்றிட
வந்த தார்பத மாற்றிட வோவென
அந்த வானவ ரம்புய னிந்திரன்
சிந்தை சால மருண்டு திரண்டனர். 72

348. விண்ண கர்க்கிறை வன்னிவை வெய்துயிர்த்
தெண்ண முற்றவை யின்க ணியம்புவான்
வண்ண மென்மல ரோன்பத மன்னுயிர்ப்
பண்ண மைத்தவ னீதெனப் பற்றிலான். 73

349. மேரு வெற்பை வலஞ்சுழல் வேலையேன்
தேரு டைகதி ரோன்பத மெள்ளுவான்
பாரு ளேழ்திசைப் பாலர் பதங்களுஞ்
சாரு தற்கெனின் காவல்த காதென்ன. 74

350. இந்த வேலை யிவன்றவ மீடறச்
சிந்த வல்லவ ராரெனச் செப்பவே
வந்த பேரவை மாத ரரம்பையர்
முந்த யாமிது போய்முடிப் போமென்றார். 75

351. நெடிய கற்பக நீழ லிருத்தலும்
இடிமு ழக்கயி ராவத மேறலு
கொடியி டைச்சசி கொங்கையில் புல்லலும்
உடைய நம்பத மேயிவ னுள்கினன். 76

352. வீணை யாழிசை விஞ்சையர் யாமவர்
காண வெய்தி னிசையின் கயிற்றினைப்
பூணு மாறு செவித்துளைப் பூட்டியே
சேணி டைக்கொணர் வோமெனச் செப்பினர். 77

353. காம வேளெனக் கருப்புவில் லிற்றொடு
பூம லர்கணைப் போற்கெதி ராமுனி
சேம வுள்ளஞ் சிதைந்துக மாநலந்
தூம மின்றிச் சுடப்பொரு வேனென்றாள். 78

354. எவ்வச் சத்தினு மின்னிலை நீவிர்போய்ச்
சைவ மாமுனி செய்யுந் தவத்தினைக்
கவ்வை செய்து கலைத்திடு வீரென
யவ்வ வற்கிறை கூறி யகற்றினன். 79

355. செய்ய பொற்கொடி போலுந் திலோத்தமை
ஐய நுண்ணிடை யாயிழை மேனகை
பைய ராவல்குற் பாவை யுருவசி
தையல் மாரிவர் யாவருஞ் சார்ந்தனர். 80

356. யோக மெய்திய ரோமசன் முன்னமே
மேக பந்தியின் மின்வெளிப் பட்டெதி
ராக நின்றங் கசைவது போலவே
தோகை மார்நடஞ் செய்யத் தொடங்கினர். 81

357. பாத சாலம் பரிபுர மார்த்தெழ
நாத மும்மவர் காட்டிய நல்லிசைக்
கீத முஞ்செவி பெற்றது கேட்குமே
ஓதல் வேறெ னுருகுவ கல்லுமே. 82

358. இடைநு டக்கமு மீர்க்கிடைச் செல்லொணுத்
தடமுலைக்கணி தாமமு மார்வமுங்
கடைவி ழிக்குள்ள கள்ளமும் நோக்குவா
ருடலு யிர்க்கொரு கூற்றமும் வேண்டுமோ. 83

359. இத்தி றத்தவர் நாட்டிய மேசெயச்
சித்த சன்மலர் வாளி செலுத்தியே
கைத்தி றம்பல காட்டியு மாமுனி
வைத்த சித்திர மான விருந்தனன். 84

360. பெருகு நல்லிசை விஞ்சையர் பேணியே
அருகு றப்பல பாடின ரவ்விசைக்
குருகி யோடுவ கல்லு முரோமச
னிருசெ விக்க ணுழைந்தது மில்லையே. 85

361. அன்ன நல்லிசைக் காகச் செவித்துளை
யின்ன நாமிரு வேற்கிட மாக்கினேம்
முன்னை ஞான முனிவன் செவிக்கது
கன்ன டுவிற்க டாமுளை யொத்ததே. 86

362. பொறிக டோறு முலாவு புலன்களின்
செறிவு சேர்ந்திடுஞ் சிந்தை புறம்பெனில்
அறிவ தெப்படி யாடினர் பாடினர்
குறிகொ ளாருயிர்க் கோடிகொண் டாலுமே. 87

363. மெய்மை சேரும் விழுத்தவன் விண்ணவர்
இம்ம ருட்சி விளைக்கினு மேனிதான்
பொய்மை மாயப் பிறப்பிது போக்குவான்
செம்மை சேர்தவ மிக்குஞ் செலுத்தினான். 88

364. விண்ணி னின்றவன் மெய்நெறி சென்றிட
நண்ணி னாருமிந் நற்றவஞ் செய்த வத்
துண்ணி லாவெரி சுட்ட வுடற்பசும்
புண்ணி னேடுவிண் ணாடுறப் போயினார். 89

365. வாச வன்சபை சென்றுமுன் வன்றிறல்
பேசி னார்பின் பிழைத்துவந் தோமுயிர்
தேச மாமுனி செய்தவத் தீச்சுடர்
வீச வெந்தது மேனியெ லாமென்றார். 90

366. இந்தி ரன்இமை யோரிவர் கேட்டலுஞ்
சிந்தை யச்சந் தெளிந்தில ராதலால்
தந்தி ரப்பிர கற்பதி தன்முனே
வந்திவ் வாறு வணங்கி விளம்புவார். 91

367. அண்ணல் கேளா ரதிசய நம்பதம்
நண்ண வோநளி னன்பதம் நண்ணவோ
வண்ண வார்சடை ரோமசர் மாதவம்
பண்ண லுற்றனர் பார்க்கரி தென்றனர். 92

368. கூறு வான்பிர கற்பதி கொற்றவா
வேறு போகம் விரும்பிலன் மெய்முனி
யீறி லாநிலைக் கேயென விந்திரன்
தேறி னான்மன வச்சமுந் தீர்ந்தனன். 93

369. இந்த வண்ண மிமையவ ரிந்திரன்
சிந்தை தேறிடத் தேசிகன் செப்பலு
தந்த முள்ளத்தி லையந் தவிர்ந்துபின்
வந்த தின்றுநம் வாழ்வென வேகினன். 94

370. இங்கிருந் தருந்தவ மியற்று மாமுனி
புங்கவன் செயலையென் புகலு வோமுடற்
றங்கவு முணவிலை சரிக்கும் வாயுவே
யங்கது தானுமுள் ளடக்க வும்பொருன். 95

371. கைத்தல மடியினீழற் களநி மிர்த்தலுந்
தைத்திட நாசியிற் றரித்த பார்வையும்
மொய்த்ததோள் படிதலு முயக்க மின்மையுஞ்
சித்திர மாகவே சிறந்தி ருந்தனன். 96

372. காந்தமெம் முருவமாய்க் கலந்தி ரண்டறப்
பாய்ந்ததன் மனமதிற் பற்று மூசியாய்ச்
சேர்ந்துள பாவனை செய்தி சாலவும்
வாய்ந்தன லெமக்கதின் மகிழ்வு போந்ததால். 97

373. உண்ணிறை மகிழ்வெமக் குற்ற தால்முனி
கண்ணினி லெதிர்பெறு காட்சி நல்கியே
மண்ணினி லினிவரா வாழ்வு வேண்டுமென்
றெண்ணிய வரமவ னெய்த வீந்தனம். 98

374. இத்தகு தவத்திற னெண்ணி றந்தநா
ளுய்த்திடல் வேறிடத் தொருவற் கேயிறுஞ்
சித்தசித் தெவையினுஞ் சிறந்த நம்முரு
வித்தக மவற்கிது விளம்ப லாகுமோ. 99

375. தோற்றரி தென்றநம் முருவந் தோன்றிடு
மேற்றிடு பக்குவ ராகி லெங்கணுஞ்
சாற்றுமத் தகவிலார் சால நோற்கினும்
போற்றுமோர் தலநலம் பொருந்த வேண்டுமால்.

376. மெய்திக ழித்தலம் விளங்கத் தாபிதஞ்
செய்தது கயிலையின் சிகர மாதலால்
நொய்தென வெண்ணலை நுவலின் மாநிலத்
தெய்திய பதிகளி னிதுவி சிட்டமாம். 101

377. செப்பு மித்தலத் தொப்பில்சீர் புண்ணிய தீர்த்தத்
திப்பு விக்குள தெய்வமா நதிகடம் மிடத்தின்
மெய்ப்பு டன்படிந் துள்ளவர் விடுத்தலுந்தொடுத்த
வப்பெ ருந்தவ மகத்துவந் தாடுமா லனிதம். 102

378. அரவமோ ரிருசுட ரினையணைகுசெய் பொழுதின்
விரவு திங்களின் புகுதியின் அயனத்தின் நடுவிலப்
பரவு மிப்புனற் றிளைத்துளார் பயில்வர்நம் பதத்தில்
சரத மீதுமக் கறிவுறச் சாற்றினே மென்றார். 103

379. இன்ன நன்னல முடையதிந் நகரென வியம்பு
முன்ன வன்றனை நெடியவன் முடிபணிந் திந்தத்
தொன்னகர்ப்புகழ் சாற்றினை சோதியே யுய்ந்தேன்
நின்ன டித்துணைக் கடியனேன் நிகழ்த்தலொன்றென்று

380. கற்றை வார்குழற் றிருவைவாஞ் சியத்துள்
கருணை யாலுறத் தமியனேன் மேவப்
பெற்ற திந்நக ராதலா லிதற்குப்
பெயரு மேதிரு வாஞ்சிய மெனவும்

மற்று மிந்நக ரில்லைகுநீ யகலா
வாழ்வு கொண்ட ருளியே யன்பற்
குற்ற வான்றுணை யாயுல கெலாமுய
வுவந்தருள் புரிதியீங் கென்றான். 105

381. செங்கண் மாலினைய புகறலு மிறையோன்
திருவுளத் துவகைகூர்ந் தருளி
அங்கண்மா ஞால மொடுக்கமுற் றிலைய
மடைந்தநா ளகன்றபல் திருவும்
பங்கயன் மீளப் படைக்குநா ளெய்தும்
பரிசவன் வாஞ்சைகூர் வரத்தா
லிங்குவந் தெய்திற் றதலால் நகர
மிதுதிரு வாஞ்சிய மென்னும். 106

382. என்றுரைத் தருளி யிறைவனே பின்னும்
இரசத வரையையா மொருவி
யன்றிவ னுமையா ளுமையருச் சிக்கு
மன்பினு லணைந்ததிந் நகரம்
நன்றுநீர் நவிற்ற லாலுமிங் ககலோம்
யாமெனக் கருணையே நல்கித்
துன்றுபுத் தேளிர் கணமெலாம் போற்றச்
சோதிலிங் கத்தினி தமர்ந்தான். 107

383. மன்னவ கேண்மினோ மால வன்றவ
இன்னண மேமுயன் றெய்தி னாருள்
பன்னரி தாகுமிப் பதியில் நன்னலம்
அன்னவை யாவரே யளக்க வல்லவர். 108

384. என்றரு மாமுனி யெடுத்தி யம்பலும்
வென்றிகொள் வேற்படை வேந்தன் மற்றவன்
முன்ெருழு தங்கைக ளுச்சி மேல்முகிழ்த்
தொன்றிது கேட்டியென் றினிது ணர்த்துவான். 109

385. நண்ணிய யுகந்தொறும் நாமம் நான்கும்வே
றெண்ணிய வாயுள தென்றவற்றினுள்
புண்ணிய தீர்த்தநீ புகன்றி லாயெனத்
திண்ணியல் மாமுனி செப்பன் மேயினுன். 110

386. திருமகள் பொருட்டு நேமிச்
செங்கண்மா லினிது நோற்ற
தருமகா தையினைச் சொற்ருேர்
தகைசெறி யலங்கல் வேலோய்
இருமைசேர் காதை மற்றிங்
கிதுதிரேதா யுகத்திற்
பொருவிலிந் திரனுர் பெற்ற
புண்ணிய தீர்த்தஞ் சொல்வாம். 111

திருமால் தவம்புரிச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் எட்டுக்கு திருவிருத்தம் 386.

—(o)—

9. இந்திரன் சாப விமோசனம் பெற்ற சருக்கம்

387. அரச ரெண்ணிலா ரித்தவி
சமர்ந்துபல் கோடி
புரவி தேர்பரி சேனைகா
வலர்புடை போற்றப்
பரவை மாநிலம் புரந்துதம்
பரம்பர முறையின்
விரவி யேயர சாள்வது
மிதிலைமா நகரம். 1

388. அந்ந கர்ப்புறம் பொலிவதோ
ரரியவாச் சிரமம்
முன்ன ரேயதிற் கவுதமா
முனிதவம் புரிவான்
மின்ன னுளவன் றேவியோ
வியவுரு வொப்பாள்
இன்ன பொற்பின ளவள்பெய
ரகலிகை யென்பார். 2

389. தேற்ற மாகி மெய்
நெறிசெறி தவமுனிக் கங்கே
ஏற்ற பண்பினில் நண்பினி
இனியசெய் பணியில்
சாற்று மின்புறு செயலினிற்
றகைமைசேர் கற்பின்
ஆற்றல் சா லுயிர் போல்பவ
ளாரணங் கென்பாள். 3

390. இன்ன நல்லெழி லகலியை
இந்திரன் காமுற்
றன்ன நாளில்நள் ளிருளினி
லரும்படி றிழைப்பப்
பன்ன சாலைவிட் டருமுனி
பார்த்தில் விடிபோ
தென்ன வேகலு மவன்கரந்
தில்லுழைப் புகுந்து. 4

391. மின்ற யங்குநுண் ணிடையினை
வலிதினில் விழைந்து
முன்றி லின்கடை பிறபட
முனிவனள் ளிருளீ
தென்று மீண்டுழி வாசவ
னெதிர்வரக் கண்டு
நன்று நன்றென முனிவரன்
வெகுளியி நகையா. 5

392. அறனு னக்கிதே சாலவு
மழகிதே யம்மா
மறனு மச்சமும் பழியும்வன்
பகையுநீ மதியாய்
பிறனி லாடனை வேட்டனை
பெருகவு மிதுவே
முறைமை யாமென நின்குரு
முதல்வனே மொழிந்தான். 6

393. மண்ட முற்பொறி நன்றென
மடியினி லணைப்பார்
கண்ட திங்குனை யென்கொல்நீ
கருதினை யிழுதாய்
அண்ட ருக்கர சாயுனை
யமரர்நா டுய்க்கும்
பண்டை நின்றவப் பயனையும்
பழித்தனை யன்றே. 7

394. ஒருவர் வாழ்மனைக் கற்பழித்
தின்னெறி யுழைக்குந்
திருவி லார்தமக் கென்னைகொல்
பெருமையுஞ் சிறப்பு
மிருசு டர்க்குள காலமு
மிடையறுத் துன்புற்
றருவ ருப்புறு நிரயவாய்
அழுந்துவர் திண்ணம். 8

395. பொன்ன யத்தரு நீழலி
லரியணை பொங்க
மின்னை யொக்குநுண் ணிடையர
மகளிர்சே விப்ப
முன்னை வானவ ரிருடிகள்
முடிகவித் திறைஞ்சி
நின்னை யோதமக் கரசென
நிறுவினர் மோடர். 9

396. அடவி மிக்குள விரைதொடா
தயலவர் புனம்புக்
கிடருறப்படுபுகு மிபமென்ன
நீயாள் விண்
மடநல் லார்பல ரிருக்கவெங்
குடில்புக மகிழ்ந்தாய்
தொடரு மிப்பெருந் தவறினை
யென்றுகொல் தொலைப்பாய். 10

397. எண்ணில் போகமு மிருக்கையு
மரசுநீ யிகழ்ந்து
விண்ணு ளார்களும் நகைக்கநின்
மெய்யெலாங் கண்டோர்க்
குண்ண டுக்குறப் பகக்குறி
யெய்தவென் றுரவோன்
கண்ணெ லாம்பொறி யெழமுகக்
கதங்கொடு சபித்தான். 11

398. பன்ன சாலையிற் பின்னரும்
புகுந்துதன் பன்னி
தன்னை நோக்கின னன்னவ
டமியள்யா னுளவென்
றென்னை யீங்கிவன் வலிசெய்தா
னென்றலுங் கோபித்
துன்ன ருங்கருங் கல்லுருக்
கோடியென் றுரைப்ப. 12

399. எந்த நாளினி லுன்னருட்
பெறுவதென் றிரந்தாள்
சந்த நான்மறை முனிவரன்
றயரதன் மகவாய்
வந்து ராகவன் மிதிலையில்
மணவினைக் கேகும்
அந்த நாளெனக் கல்லுரு
வாகின ளகலி. 13

400. புரந்த ரன்முனி சபித்தலும்
மானமுட் புழுங்கப்
பரந்த மெய்யெலா மம்முறை
பகக்குறி யெய்தி
யரந்தை யுற்றர சிகழ்ந்துபோ
யாடகக் கிரிபாற்
கரந்து புக்கனன் மானத
சரயுவிற் கலுழ்ந்து. 14

401. விண்ண கத்தினிற் கடவுளர்
மிடைந்து.மே வித்தம்
அண்ண றன்றிரு கோயிலுள்
ளரசிருப் பணைந்து
வண்ண மென்மலர்க் கற்பக
நீழலிற் மடங்கற்
பண்ண மைத்தபொன் னணைமிசைப்
பார்த்தனர் காணுர். 15

400. ஆடகக்கிரி-மேரு (பொன்மலை)

402. அமரர் பொற்பதி யமங்கல
முற்றது பவ்வம்
தமர நீத்தவுஞ் சிமையமில்
தமனியக் கிரியும்
பமர நீடர விந்தமில்
பைம்புனற் றடமும்
திமிர மீரிருங் கதிரிலாத்
தெய்வமும் நிகர்ப்ப. 16

403. அரம டந்தையர் நாடகத்
தொழிலொழிந் தயர
விரவு விஞ்சையர் வீணையாழ்
முழவுகை விடுப்பப்
பரவு பூண்முலைச் சசிமனம்
பதைபதைத் துருகப்
புரைசெய் நான்மருப் பொருகிரி
புறத்துநின் றேங்க. 17

404. வான வன்பதி யிவ்வணம்
வனப்பழிந் தலைய
ஆன தென்னிது வென்றணைந்
தமரரெல் லோரும்
ஞான தேசிகன் றனக்கிவை
நவிற்றிலு லன்னோன்
ருன றிந்துரை செய்யுமென்
றவனுழைச் சார்ந்தார். 18

405. வந்து விண்ணவர் குருவினை
வணங்கியீ துரைப்பச்
சிந்தை செய்திவர் கணத்தினுக்
கியம்புவான் றேற
இந்த கோமகன் மையலா
மிழிவினு லேற்கு
மந்த நீதியை யென்சொல்கே
னறிவில னுனுன். 19

406. கவுத மன்பெருந் தேவியைக்
கற்பழித் திட்டான்
அவன்வி ரைந்தது காண்டலுஞ்
சபித்தன னதனு
லிவன்உ டம்பெலாம் பகக்குறி
யெய்தலும் நாணிப்
புவியின் மானத சரயுவின்
பொருப்பகத் தொளித்தான். 20

407. அரச னுக்கிது தருமமோ
வல்லமற் றினிநா
முரைசெ யத்தகா தவனை
யிங்குடன் கொணர்ந்த மைப்பான்
சரசு வின்னிடத் தேகுதுஞ்
சசியுமன் னவன்பால்
வரந விற்றுமி னெம்முடன்
நீவிரும் வம்மின். 21

408. என்று விண்ணவர் குருபிர
கற்பதி யெழுந்து
சென்று மானத சரயுவிற்
செய்யதா மரையிற்
றுன்று பாசடைக் கவிகையே
சூழ்ந்துமேற் கவிப்ப
நின்று நீள்கயத் துலவிய
நிருபனைக் கண்டார். 22

409. குரவர் நிற்கவிண் ணவர்கரங்
கூப்பியே புகழ்வா
ரரசர் சேகரா வடலயி
ராவதப் பாகா
சுரச னாதிபா வெனப்பல
புகறலுஞ் சுரர்கோன்
பிரச நாண்மலர் முளரியங்
கானினும் பெயர்ந்து. 23

410. தேசி கன்றனை வந்துமுன்
வணங்கினான் சென்னி
கூசி நின்றனன் மகபதி
குரவனே வினவ
மாசு கொண்டெழு மனத்தினன்
வாய்திறந் தொன்றைப்
பேச லாவதோ பிதற்றினான்
சிறிதுதன் பிழையை. 24

411. உள்ள வாறுமுன் னுணர்ந்தவக்
குருபர னுரைப்பான்
வள்ள லேயுனக் கிப்படி
மதிமயக் குறுமோ
தெள்ள லைப்பெரும் புணரியே
கலங்கிடிற் றேற்றிக்
கொள்ள வேறுமோர் பிடகதங்
குவலையத் துளதோ. 25

412. மல்லன் மாளிகை வைகவே
பலசெல மண்ணிற்
புல்ல வங்கொரு செங்கனற்
புலிங்கமுய்த் ததுபோ
லெல்லை யில்தவ நோற்றிட
வெய்துநின் னரசுக்
கல்ல லொன்றிது சேர்த்தனை
யாரிது புரிவார். 26

413. உழந்து பெற்றவின் னமுதினுக்
கொருதுளி விடம்போற்
றழைந்த நின்னர சியற்கிது
சாரவுந் தகுமே
விழைந்த விச்செயல் தீச்செய
லாயினும் விடுமோ
வழைந்த காமமென் றொருபிணி
யாவரை வருத்தா. 27

414. தீயி னுஞ்சுடுங் கள்ளினுந்
தீய்க்குறுந் திருமா
லாயி னுந்தணப் பரியது
புணர்ப்பதொன் றறியாப்
பேயி னும்பெரும் பித்தினும்
பேதமை விளக்குங்
காயி னுந்தெளி விப்பதிங்
கெளியதோ காமம். 28

415. செழும றைப்பொரு ளகத்தியற்
குணர்த்திய செவ்வே
ளிழிகு லத்தொரு குறமகட்
கென்னபட் டுழன்றான்
பழுதில் நான்முகன் படைத்ததோர்
பைந்தொடி வடிவ
மழகி தென்றுபின் றழுவவு
மாசையா யிலன்றே. 29

416. செங்கண் மாலுமுன் சலந்தர
னிறந்தநாட் டியங்குற்
றங்க வன்றன துருவுகொண்
டன்னவன் கற்பின்
மங்கை யாகிய கலன்கழி
மடந்தையைப் புல்லி
பங்க முற்றவந் நகையினை
யாவரே பகர்வார். 30

417. இறைவ நீயதற் கிடருழே
வெவ்வெவற் கேனும்
உறுவ தோர்பிணி யுண்டெனின்
மருந்துமொன் றுண்டாம்
மறுவில் நின்னுடல் பழுதுபோ
மாறிலா வரமும்
பெறுவை நீயதற் கொருதிறம்
பேசுமற் றதுகேள். 31

418. சென்னி நாட்டினிற் பொன்னிநன்
னதிக்கரைத் தென்பால்
மன்னு சீர்திரு வாஞ்சிய
மென்னுமா நகரம்
அன்ன திற்திரு வாலயத்
ததன்வட புறத்துப்
பொன்னி தழ்க்கம லங்களாற்
பொலிவதோர் தீர்த்தம். 32

419. கங்கை யேமுதல் நருமதை
கவுதமி யென்னத்
தங்கு மிப்பெரும் புடவியிற்
றழைத்ததீர்த் தமெலாம்
அங்க ணைந்துதம் பவமறப்
படிந்திடு மதுமுன்
திங்கள் வேணியன் தாபிதஞ்
செய்ததத் தீர்த்தம். 33

420. சதுமு கத்தவ னத்தலத்
தல்லவோ தலைநான்
பதும சாதக மானதும்
பண்டு நாரணரும்
அதனி லல்லவோ வருந்தவம்
புரிந்தது மகலா
மதும லர்த்திரு மாதொடு
வாழ்வுபெற் றதுவும். 34

421. நீயு மங்கதிற் றவம்புரி
நிகழ்ந்தவிச் சாபம்
வீயு மென்பது புதுமையோ
மேலுநல் வரங்கள்
ஏயு நின்னுடங் கணைவரு
மெய்துதும் போதென்
றுயு நூலறி குரவனீ
தறைந்துமுன் நடந்தான். 35

422. துக்க நீள்கயத் தழுந்தினர்
துணையெனப் புணையே
கைக்க கப்படில் விடுவரோ
வாங்கது கடுப்ப
வொக்க வேதொடர்ந் தெய்தின
னும்பருக் கரசன்
முக்க ணன்திரு வாஞ்சிய
முதுநக ரடைந்தான். 36

423. உடன ணைந்தவர் தம்மொடு
மும்பர்கோ னிழிந்தத்
தடாந றும்புனல் படிந்தனன்
தபோதனன் சாபம்
விடவ கன்றது பகக்குறி
மறைந்தது விண்ணோர்
கடலி ரைந்தன வார்த்தன
கண்டதி சயித்து. 37

424. இத்தகு புதுமை பெற்றவிண் ணவர்கோன்
இறைவர்தாள் கோயில்புக் கிறைஞ்சி
மெத்தநல் வரங்கள் வேண்டுவான் பின்னும்
விமலர்சந் நிதிக்கொரு பாங்கர்
சித்தமின் புறவோ ராயிரம் வருடந்
திருந்திய வருந்தவஞ் செய்தான்
அத்தன்மெய் யடியார்க் கெளியனு தலினல்
அருட்கட லாவெதி ரணைந்தான். 38

425. முடித்தசெஞ் சடையுங் கங்கையும் பிறையு
முள்ளெயிற் றரவமுந் தோன்ற
வெடுத்தகைத் தலத்தின் மான்மழுத் தோன்ற
வீரிரு புயங்களுந் தோன்றக்
கடுத்தரித் திருண்ட கண்டமுந் தோன்றக்
கண்களோர் மூன்றுமே தோன்ற
உடுத்ததோ லுடையு மூருவிற் றோன்ற
வுமையொரு பாகமுந் தோன்ற. 39

426. அருக்கரா யிரநூ றுதயமண் டலம்போ
லருணமால் வரைபழுத் ததுபோ
லிருக்குமெய் யொளியுந் தோன்றவங் கிறைவ
னிடபவா கனத்தின்மேல் தோன்றத்
தருக்குவா னவர்கோ னிருகரங் கூப்பிச்
சரணபங் கயத்தின்முன் வீழ்ந்து
செருக்கினுற் றமியேன் செய்பிழை பொறுப்பாய்
தேவனே யெனப்பல துதித்தான். 40

427. அன்றுநான் முகன்மா லறிவரும் பொருளே
ஆதியே யமலனே யப்பா
நின்றவான் வளிதீ நீர்நில னாகி
நிறைந்தவெம் பரமனே நித்தா
கொன்றைவார் சடையாய் கோலமால் விடையாய்
குறைவிலா வரும்பெருங் குன்றே
இன்றெனா தரவு தீரவந் தனையே
என்னமா தவஞ்செய்தே னெளியேன். 41

428. என்றுமுன் போற்றி நின்றவிந் திரனாற்
கெதிர்திரு வாய்மலர்ந் தருளி
அன்றுனைச் சூழ்ந்த முனிபெருஞ் சாப
மகன்றதித் தடத்தின்மூழ் கலுமே
நின்றுபின் னருமோர் ஆயிரம் வருடம்
நீபுரி தவத்தினால் வந்தோம்
உன்றனுக் கினிவேண் டுவவுரை யென்றா
னும்பர்கோன் பரவமுன் நின்றான். 42

429. இந்துவாழ் மவுலி யிவைபுகன் றருள
இமையவர்க் கரசன்வாய் புதைத்து
முந்தைநாட் டமியேன் முனறபிறழ்ந் துழன்று
முனிவனுற் பெற்றசா பமும்போய்
வந்தவென் னுறுகண் மாசுதீர்த் திந்த
வாழ்வுபெற் றுனதடி யடைந்தேன்
சிந்தையே செய்யி லிப்பெருந் தடத்திற்
றிளைத்தபுண் ணியத்தினு லன்றோ. 43

430. நண்ணிய வடியாற் கினியவே பலிக்கும்
நளினபுட் கரணிமற் றிதற்கு
புண்ணிய தீர்த்த மெனப்பெயர் நிறுவி
புகுந்திதிற் படிந்துளோ ரென்போற்
பண்ணிய தீங்கு நீங்கிவாழ் வெய்தப்
பணியெனப் பதத்தின்வீழ்ந் திறைஞ்ச
எண்ணிய பரிசே யளித்தன மென்றுங்
கினிதுரைத் திறைதிரோ பவித்தான். 44

431. மகபதி சாப நீத்து
வரங்கள்பெற் றகன்முன் வானிற்
றிகழுமித் தடங்கி ரேதா
யுகத்தினிற் சிறந்த நாமம்
புகலுமூன் றுலகும் போற்றப்
புண்ணிய தீர்த்த மென்றே
நிகரிலித் தீர்த்த மேன்மை
நிகழ்ந்ததின் னணமே யாகும். 45

432. கலியுக மாதி யாக
யுகமொரு நான்கு காறும்
பொலிவுறு மினைய தீர்த்தம்
பொருந்து நாமங்கள் சொற்றும்
வலிகெழு தானை மன்னா
மற்றுமோர் காதை கேட்டீ
ஒலிமிகு மித்த லத்த
தெனமுனி யுரைப்ப தானான். **46**

இந்திரன் சாப விமோசனம் பெற்ற சருக்கம்
முற்றுப்பெற்றது

ஆக சருக்கம் 9-க்கு திருவிருத்தம 432

—(o)—

10. விகுட்சிச் சருக்கம்

433. பொருகட லுடுத்ததொரு
பூதல வணங்குக்
கிருகன தனத்திலிடு
முத்தரிய மென்னப்
பருவரை களிற்றிரை
பரப்பிநெடி தோடும்
நிருமதை யெனப்பெயர்
நிகழ்த்துநதி யொன்று. *1*

434. அப்பெரு நதிக்கரையி
லாச்சிரம மாயங்
கெப்பொழுது நன்னெறி
முயன்றினி திருப்பான்
விப்பிர னவன்பெயர்
விகுட்சிமனே வாழ்வாள்
துப்பிதழ் மடக்கொடி
சுமந்துவின் மடந்தை. 2

435. பொன்னியல் மலர்க்கமலை
போலுமெழி லுள்ளாள்
தன்னிரிற் கற்புடையள்
சாருமதி யென்பாள்
இன்னியல்பி னுளிவளோ
டில்லற மியற்றி
மன்னுமறை நீதியின்
வழா துறையும் நாளின். 3

436. அங்கவன் விகுட்சிதனை
யாடல்வரு ணன்ருன்
துங்கமறை வேள்விசெய
வொன்றது தொடங்கா
விங்குவரு கென்றறி
வுறுத்தலு மெழிற்றன
மங்கைதனை யிவ்வரையில்
வைத்தவ னகன்ருன். 4

437. ஆயவரு ணன்பதியி
லந்தணன் விகுட்சி
போயபின் னவன்மனை
பொற்பினிறை கற்பாள்
ஏயதன தாச்சிரம
வில்லுறை யிருந்தாள்
நாயகன் வரும்பகல்
நவின்றதிற னெண்ணி. 5

438. தையலிவள் சாருமதி
தங்குமனை யின்கண்
மெய்யயர வெப்பின்விழி
துஞ்சலுறு மோர்நாள்
மையலுறு கார்க்கிய
மகாமுனி பகற்கண்
ஐயமென முன்றிலி
னணைந்துதனி நின்றான். 6

439. வந்துமுனி ஐயமெனு
மாற்றமது கேளாள்
பந்தமிகு வெப்பினோடு
பார்ப்பினி துயின்றாள்
அந்தமுனி நம்மையிவள்
அர்ச்சனைசெய் யாதே
சிந்தைவலி துற்றன்
ளெனுமுனிவு செய்தான். 7

440. அல்லலுறு வெம்பசியி
லையமென நின்றா
லில்லையென வுள்ளதென
யாதுமுரை யாடாள்
நல்லதிது வில்லறமும்
நாடியிவ ளில்லிற்
கல்லடு புலிக்கினிய
காடுநனி நன்றால். 8

441. என்றுமிகு செற்றமுட
னேயிதழ் துடிப்பக்
கன்றிமன நொந்துடைய
கார்க்கியன் வெகுண்டே
துன்றுகய நோய்கொடிவள்
சார்தல்கட னென்றே
தன்றளர்வி னாலிது
சபித்தயல் நடந்தான். 9

442. அன்னவள் விழித்தறிய
வந்தமுனி சாபஞ்
சொன்னபடி யுற்றது
தொடர்ந்துகய நோயும்
முன்னரொரு நோய்மிசை
முளைத்ததொரு நோய்பின்
எள்ளிது விளைந்தபரி
சென்றுமனம் நொந்தாள். 10

443. தொட்டகய நோயுடல்
தொலைத்துணவு கொள்ளாள்
துட்டகய மேனியு
முணங்குசரு கொத்தாள்
பெட்டகைய பார்ப்பினி
பெரும்பிணி வலைக்கே
பட்டகயல் போல்பதை
பதைத்திவை யுரைப்பாள். 11

444. நெஞ்சறிய வோர்பிழை
நினைக்கில னெவற்கும்
வஞ்சவினை யிப்படி
வரும்புதுமை பெற்றேன்
தஞ்சமென வாழ்கொழுநர்
தாமுமய லுற்றார்
அஞ்சலென வாற்றுபவர்
யாவரினி யென்றாள். 12

445. இந்தவகை சாருமதி
நொந்துமெலி வெய்தா
வந்தகய நோய்கொடு
வருந்துமமை யத்தே
முந்தவொரு வேலென
மொழிந்து தனியேவெய்
தந்தவரு ணன்பதி
யடைந்தமுனி வந்தான். 13

446. வந்துபுகுந்தான் மறையவ
னுந்தன் மனைவாயிற்
பைந்தொடி முன்னையின்
வடிவ மிழந்து பசாசேபோற்
சிந்தை தளர்ந்தயர்
கின்றவள் கண்டாள் தெளிவுற்றாள்
சந்த மறைத்தலை வன்றாள்
வீழ்ந்தாள் சரணென்றாள். 14

447. ஆங்கவ னீங்கிவள் யாரென
நின்றா னறியானாற்
பாங்கினா ளார்நின் மனையவ
ளென்றார் பரிவுற்றான்
ஏங்கினன் மற்றினி யாதுசெய்
கோமென் றிடர்சூழப்
பூங்கொடி யேயிவ் வினைவரு
வானேன் புகலென்றான். 15

448. அன்னவ ளீங்கோ ரந்தணன்
வந்தா னதுகாணேன்
சொன்னது மோரே னென்னயர்
வாற்கண் துயில்கூர்ந்தேன்
தன்னை மதித்தில னென்ன
வவன்றான் றழல் கோபித்
தென்னை வெறுத்தே சாப
முரைத்தா னென்றாள்பின். 16

449. காய்தரு வெற்பி னழற்சிகை
மூடக் கனல்வேனுக்
கீதொரு நோய்கய நோயது
வீற விறக்கின்றேன்
மாதவ னிட்டதோர் சாப
நெருப்பிது வாளாவிங்
காதலி ஞன்மிக நோதலி
னுற்றன னிதுவென்றாள். 17

450. வைதிக ஞனே னிவ்வுரை
கேளா மனநொந்து
செய்தது நீதான் அவமதி
யன்றோ திருவே நான்
எய்திய தெல்லா மனையற
னென்று விதனுலிங்
குய்திற னன்றோ பிச்சை
யொழிந்தா யுரையாயே. 18

451. ஐய மெனப்போந் துற்றவர்
கோடற் கன்பூடே
செய்ய நினைந்திலை யிப்படி
நீபகை செய்வாயோ
உய்ய வெனப்பல வூர்தொறு
மோடி யுழன்றாலும்
துய்ய வறப்பயன் யாவையு
மின்று தொலைத்தாயே. 19

452. இரப்பவ ரென்பவர் சாதியின்
வேறோ விவர்தங்கட்
டரப்பெறு வோமென் றேற்றகை
மாற்றினர் தாமன்றோ
பரப்புற வாழ்குனர் தாமுமில்
லாமை பகர்ந்துற்றால்
வரப்பெறு வோமென நல்குன
ரன்றோ மதியில்லாய். 20

453. மலையை நிகர்ப்பவ ரேனும்
பலிகொள் பவர்வந்தாலுண்
டிலையெனு மத்துணை நின்றில
ரய்யோ விதுசெய்தா
ரலவெனில் நீயு மறிந்திலை
யிப்படி யாமா றுன்
றலையி லெழுத்தினை யெம்முறை
யாவர் தடுப்பாரே. 21

454. அந்தணர் மிக்கோ ரங்க
ணரன்பின ராசானென்
றிந்த முறைப் பெரியோர்
முனிவுற்றா லெளிதாமோ
வந்தது சாப மினித்தீ
ராதென மனநொந்தே
சிந்தைசெய் போதி லெழுந்ததோர்
வாக்குச் சேணாடே. 22

455. விண்ணிடை யெழுந்த வாக்கோர்
வேதியன் றன்னை முன்ன
மெண்ணிலள் வறிதே சாப
மிட்டன னன்ன சாபந்
துண்ணென விவள்பால் வந்து
சூழ்ந்தது தொலைக்க வேண்டி
அண்ணல்தென் வாஞ்சை மூதா
ரடைதியென் றெழுந்த தன்றே. 23

456. அவ்வகை விசும்பி னோசைக்
கந்தணன் றுயர நீங்கிச்
செவ்விய மனத்த னாகித்
திருவருள் அதனைப் போற்றி
மௌவல்வெண் ணகையாள் சாரு
மதியையு முடன்கொண் டேகி
நவ்வியங் கரத்தார் வாழும்
வாஞ்சிய நகர டைந்தான். 24

457. வந்துபுண் ணியதீர்த் தத்தின்
மனைவியுந் தானு மாடி
முந்திய நியம முற்று
முடித்துடன் கோவி லெய்தி
இந்துவாழ் சடையார் தன்முன்
இருவருங் கைகள் கூப்பிச்
சிந்துகண் மாரி யோடுஞ்
சென்னிதாழ்ந் திறைஞ்சி னார்கள். 25

458. மேதிவெம் பகட்டுச் சென்னி
வீரன துயிர்தொ லைத்த
ஆதியந் தரியைப் போற்றி
யந்நகர் வாழ வந்த
மா தினை வணங்கி யிந்த
வண்ணமே வைகல் தோறும்
நீதியின் வழாம லங்கண்
நெடிதுநாள் வைகி ஞர்கள். 26

459. நிறைபுன லாடல் கோயில்
நியமம்நல் விரத மோமம்
மறையவ ணியற்ற வன்னுள்
வாயுவுஞ் சருகுந் துய்த்துக்
குறைவற நோற்றிவ் வாறு
குலவுவின் மாதம் போக
அறைதரு மகநீ ராடற்
கணைந்தனன் மகர வெய்யோன். 27

460. மாகநீ ராடன் முற்றும்
மறைநெறிப் படியே யாட்டி
ஏகநா யகன்முன் னெய்தி
யிருவரும் பரவு மோர்நாள்
நாகபூ ஷணனூர் பங்கின்
நங்கையார் கொங்கை யானைப்
பாகனூர் தாமுன் னின்றூர்
பாததா மரையில் வீழ்ந்தார். 28

461. அரியயற் கரியாய் போற்றி
அகிலகா ரணனே போற்றி
திரிபுர மெரிய மூரல்
செய்தசே வகனே போற்றி
உரியசீ ரடியார் பேறே
யுள்ளுறை யுணர்வே போற்றி
கரியகந் தரனே போற்றி
கயிலைநா யகனே போற்றி. 29

462. பொறிபுலன் கரண மாகிப்
பூதமோ ரைந்து மாகி
அறிவினுக் கறிவு மாகி
யாதியா யந்த மாகி
குறிகுண மிறந்த கொள்கைக்
கோலமாய்க் குறிகு லாவு
நெறிவரும் பொருளு மாகும்
நித்தனே போற்றி போற்றி. 30

463. என்றிவை யன்பு நீடி
யிரந்துதோத் திரம்பு கன்று
நின்றுழி வேண்டிற் றேது
நிகழ்த்தென வாளா நின்றான்
பொன்றிகழ வனச மார்த்த
புண்ணியத் தீர்த்த மாகும்
அன்றுநின் றனைத்தும் பெற்றா
லறையவோர் குறையுண் டாமோ. 31

464. இறைவனே பின்னுஞ் சாற்று
மெமதுபுண் ணியதீர்த் தத்தின்
நிறைபுனல் படிந்த வன்றே
நீங்கின முனிவன் சாப
முறையின்மெய்க் கவின் அனைத்தும்
முன்னுள தின்ற ளித்தோம்
உறுதிமற் றினிவே றுள்ள
துள்ளிய தனைத்து மென்றான். 32

465. நிருமல னினைய சாற்றி
நிறைந்தனன் திரோப வித்து
வருமறை யோனுஞ் சாரு
மதியுநல் வரங்கள் பெற்றார்
பெருமைசேர் தீர்த்தத் துண்மை
இதுவெனப் பிரகற் சேனற்
கருள்புரி முனிசா பாலி
யறைதலு மன்னர் மன்னன். 33

466. எந்தைநீ தீர்த்த மேன்மை
யிசைத்தனை யந்த ணாளன்
வந்ததிற் றிளைத்த பின்னு
மாகநீ ராட வென்றாய்
அந்தநீ ராடுங் கால
மதற்கேற்ற தீர்த்த மாடி
லுய்ந்திடு பயனீ தோதென்
றுரைப்பன்மா முனிவ னோர்ந்து. 34

467. வாய்த்தமா மகநீ ராடன்
மந்தண முரைப்ப தென்று
கார்த்தவீ ரியற்குத் தைத்தாத்
திரையர்கட் டுரைத்த காதை
பார்த்திப வதனை யன்ன
பரிசுனக் குரைக்கக் கேளென்
றூர்த்தபே ரருளி னாலே
யரசனுக் கியம்ப லுற்றான். 35

விகுட்சிச் சருக்கம் முற்றிற்று.
ஆக சருக்கம் 10-க்குத் திருவிருத்தம் 467.

—(o)—

11 மாக ஸ்நான விசிட்டச் சருக்கம்

468. மதிதவழ் புரிசை சூழ்ந்துநால் வகைய
மரபின்மாக் குடிகளா லோங்கும்
பதிநவ நிதியின் மிக்குநல் வளத்துப்
பன்னரு மளகையே போலும்
பொதியவிழ் கடுக்கை மவுலியார்க் கன்பும்
புனிதவெண் ணீறுமஞ் செழுத்தும்
விதிமுறை விழைந்து தழைந்து பல்புகழின்
விளங்குமோர் புரமது விசாலை. 1

469\. சொற்றதோர் நகரில் நிகரிலான் தருமத்
துவசனென் றுரைக்குமோர் வணிகன்
அற்றவர்க் குதவு மன்பினு லறத்தால்
அளவில்பல் வளத்திஞல் மிக்கோன்
மற்றவன் சரித மினையகேண் மையினுல்
மகிழ்ந்தொரு ஞான்றுபல் கலையுங்
கற்றமா ணவர்கள் போற்றவங் கவன்பாற்
கவுதம முனிவர்கோ னணைந்தான். 2

470\. அந்தமில் தவத்தோ னணைதலு மவன்ற
னடிகளா தரித்துவீழ்ந் திறைஞ்சிச்
சிந்தையின் புறவே சிறப்புடன் பூசை
செய்தலு மிகவுமுண் மகிழ்ந்து
மைந்தர்தா மிவனுக் கின்மைதேர்ந்து
வணிகனை வரவழைத் தருளி
இந்தநின் றகைமைக் கினியதோர் குறையென்
றிரக்கமுற் றின்னவா றிசைப்பான். 3

471\. மன்பெருந் தமர வாரிதிக் குவர்ப்பு
வடுவெனப் படுவபோ லுலகில்
நின்பெருந் தகைமை யளவிலா ததற்கு
நின்னுழைக் குறையுமொன் றுண்டால்
இன்புறப் புதல்வ ரில்லதே யாயி
னெவ்வகை பெருகும்நின் வருக்கந்
தன்பெருந் தன்மை விளங்குமோர் புடவி
தரணிமண் டலத்தினு லல்லால். 4

472. உலகமோர் மூன்றும் புகழ்ந்திட விளங்கு
முயர்திரு வாஞ்சைமா நகரம்
இலகுமித் தலத்திற் புண்ணிய தீர்த்த
மெனவொரு தீர்த்தமுண் டதன்கண்
தலைமைசால் கற்பின் மனைவியும் நீயுஞ்
சார்ந்ததில் மாகநீ ராடில்
அலகில்சீர் புதல்வர் பெறுதிநீ திண்ண
மாடுதற் கடைவுகே ளிசைப்பாம். 5

473. உன்னரு மகர பானுவின் மதிபுக்
கொடுங்குநாட் டொடங்கிமுப் பானுள்
என்னுமா மாக மன்னநா டோறு
மிரவியோர் பாதிதோற் றத்தில்
நின்னுளம் வேட்ட தெய்தவென் றுள்கி
நெடியமால் தன்னையும் போற்றி
மன்னுநீ ராடி முடிந்தபின் மறையோர்
மகிழ்ந்திட வழங்குநற் றானம். 6

474. முன்னிய தனைத்து மெய்துமென் றுரைத்து
முனிவர னேகலு மன்னன்
பன்னிய பரிசே வணிகனுஞ் சென்றப்
பதியினில் மனைவியோ டெய்தி
மன்னிய முறைமை வைகலும் வழாமல்
மருவிமா மகத்துநீ ராடி
யின்னியல் விரத முடிந்தபின் மறையோற்
கின்புறப் பூசைசெய் திறைஞ்சி. 7

475. வைகியந் நகரின் வாசமா யிருந்து
மைந்தரோ ரிருவரைப் பெற்றுச்
செய்கடன் சாத கருமமே முதலாய்ச்
செலுத்தியாண் டாறிரண் டெய்த
வுய்கதி நோக்கி மைந்தர்பாற் றலைமை
யுதவியே தவமுயன் றிறப்ப
மொய்கதிர் விமான மணையவான் புக்கான்
முக்கண னருளினால் வணிகன். 8

476. என்றுமுன் தைத்தாத் திறையரிச் சரித
மிசைத்தனர் கார்த்தவீ ரியற்கு
சென்றதில் நீயு மாகமூழ் கென்னச்
செப்பினன் விரதிசா பாலி
வென்றிவேற் பிரக சேனனும் மகிழ்ந்து
விளம்புவன் மாகமூழ் கற்கு
நன்றிசேர் தீர்த்த முலகினுள் ளவைநீ
நவிற்றென முனிவர்கோன் நவில்வான். 9

477. காசிகே தாரம் புட்கரம் சரயு
கண்டகி நைமிசா ரணியம்
மாசிலா விமலை நிருமதை சுவால
மாலைசா னவிபிர யாகை
தேசுசேர் சோணை சிந்துகா வேரி
திரணைபோ கரடியை விசாலை
வீசுபா தாள சானவி கவுரி
வேகைகும் பிகைமது தீர்த்தம். 10

478. தாரையா னந்தஞ் சரயுவா ராகஞ்
சந்திர பாகைபுட் கரணி
காரணு வமுதங் கேரிணை வசிட்டங்
கவுதமி சம்புபுட் கரணி
வீரைபை சாச மோசனம் பம்பை
விசாலக மேமபுட் கரணி
பாரதி துங்க பத்திரை ரோகா
பகைகுரு கேந்திரம் பிரதை. 11

479. விண்ணியலு மலர்ச்சோலை மாயூ ரத்தும்
விளங்குமிடை மருதினிலும் விரிநீர்ப் பொன்னி
நண்ணியசீர் பேரளத் திலங்கு தீர்த்தம்
நயந்ததிரு வெண்காட்டில் நவிலு வாணி
திண்ணியவன் மீகத்துந் தெய்வ தீர்த்தஞ்
சிறந்ததிசை முகனமரர் திருமால் போற்றும
புண்ணியபுட் கரணிதிரு வாஞ்சி யத்தும்
புவியிலிவை யகன்மேன்மை புகலுந்தீர்த்தம். 12

480. தீர்த்தமிவை முற்றும்பூ தலத்தின் மிக்குச்
சிறந்துடைய விவையிற்றிற் றிளைத்த முன்னம்
பார்த்திபர்விண் ணோர்முனிவ ரெண்ணி லார்கள்
பரகதிபெற் றுயர்ந்துளார் பகரிற் சற்றே
வார்த்தசுடர் மணிமவுலி மன்ன ரேறே
யறைந்தவிவை யனைத்தினுநா மம்பு சாதம்
பூத்தவயற் றிருவாஞ்சை நகரில் மேவு
புண்ணியபுட் கரணியே புனித மாகும். 13

481. ஆயுமறைப் பிரமனெழுந் தண்ட கோடி
யவன்படைப்பக் காரணத்த தாத லானு
மேயுமுயிர்க் கெண்ணிறந்த பதங்க ணல்கி
யெண்ணியவாழ் வின்புறவே யீகை யானுங்
காயுமரு வினைநோய்பை சாசஞ் சாபங்
கலந்ததுய ருலந்திடச்சங் கரித்த லானுஞ்
சேயுமலர்ப் புண்ணியபுட் கரணி யீதே
சிருட்டிமுதல் முத்தொழிற்குந் தெய்வ மாமால் 14

482. மருத்துவமே பலவுமுள நோயுற் றோர்க்கு
வந்தநோ யுடன்றீரு மருந்து தானே
கருத்தறிய வொன்றுற்று லதுமெய் யாமல்
கவலையுறல் காரணமேன் கருதி நீயுந்
திருத்தகுபுட் கரணிதனி லாட வேண்டுஞ்
சிந்தித்த வரம்பலவுஞ் சித்தி யாகும்
பொருத்தமுற வதற்கிறைவன் வகுத்த நாளும்
புகுந்தாடப் பெறும்பேறும் புகலக் கேட்டி 15

483. மாதமெலா மூவகைத்து முன்னோர் சொற்ற
வகைசவரஞ் சந்திரஞ்சா வன்ன மென்ன
போதமுடை யோய்சவர மாதம் மாதப்
புகுதிமுதல் வருமாதம் புகுதி காறு
மோதுமமா வாசையமா வாசை யாதி
யுரைப்பதுசாந் திரமென்பர் உயர்சா வன்னம்
யாதுமொரு நாட்டொடங்கி முப்பா னாளே
யிங்கிதுசாந் திரபக்கத் திசைப்பன காலம். 16



தர்மராஜா கோயில்

484. சித்திரையின் வளர்பக்கத் தட்டமிசெவ் வாயா
திரைகெவுரி சங்கரயோ கமதாமதீர்த்தமும்
உத்தரதீர்த் தந்துறைபுக் கிறைதாள் சிந்தித்
துறும்பேறு மனத்துநினைத் துரையா டாமல்
முத்தரமே தர்ப்பணமு முழுக்கு முக்கால்
முழ்கினிய மத்தடையு முடித்துப் போற்றிப்
பத்தியுட னிரவுபக லங்கண் வைகிப்
பண்டித்த வுண்டியையும் பரிவால் நீத்து. 17

485. வைகறையி னெழுந்துடலஞ் சுத்தி செய்தும்
மற்றைநாள் நவமியின்முன் வகுத்த வாரப்
பொய்கைநறும் புனல்மூழ்கித் துய்ய வாடை
புனைந்துநிய மத்தியல்பும் புரிந்து தானச்
செய்கைசிறி தேதேனுஞ் செய்து தாணுத்
திருவாலை யம்புகுந்து சென்னி தாழ்ந்து
மொய்கதிருச் சியின்முன்பா ரணமே எண்ணி
முதுபிரம கத்தியதும் மொழியுங்காலே. 18

486. வளங்கெழுசித் திரைத்திங்கள் பிற்பக் கத்தின்
வந்ததிதி பதினொன்கின் வாரஞ் செவ்வாய்
விளங்குபரி நாள்மருவும் யகம யோகத்தின்
மேவியவத் தீர்த்தத்தின் வடபால் மேய
தளங்குறுகி யறுகரிசி யெள்ளுங் கொண்டு
தருப்பணமத் தண்டுறையின் முன்போற்
பண்ணிக்
களங்கமில்தென் றிசைநோக்கி யமனைப்போற்றிக்
கைக்கூப்பிப் படிந்தெழுந்து கரையிற்
போந்தே. 19

487. உற்ற செழுந் துகிலுடுத்து நியமம் போற்றி
உளுந்தடிசில் படிநமனை யுள்கி யூட்ட
மற்றவனே தெண்டதர ளுகித் தோன்றி
மகிழுமவ ளுலுயிர்க்கோர் வாதை யில்லை
சுற்றமெனும் நிரையத்தார் சொர்க்கத் தாராஞ்
சொற்பரி சிவைபுரியத் துணிந்து ளார்க்கே. 20

488. வாயந்தவை காசித் திங்கள்
வளருமுற் பக்கந் தன்னில்
சேர்ந்திரு தினத்தில் மூன்றும்
திதியிரே வதிபு காரோ
டேய்ந்தவை விளங்கிற் ருயி
னிதுகுரு யோக மென்பர்
போந்திது தன்னி லன்ன
புண்ணிய தீர்த்தம் மூழ்கில். 21

489. கட்டளை நியமம் போற்றி
மோனமாய்க் கால மூன்றும்
சிட்டனை யெம்பி ரானைத்
திங்கள்வார் சடையி னானை
மட்டவிழ் வனச மீரைஞ்
ஞாற்றினின் வகுத்த மாலை
யிட்டருச் சனைபு ரிந்தோ
ரிருப்பர்சா ரூபத் தென்றும். 22

490. இன்னயோ கத்தின் மூழ்கி
யிரும்பகட் டசுரன் சென்னி
அன்னையங் தரியை நூற்றெட்
டம்புயத் தருச்சித் தார்க்குச்
சொன்னல மிகுந்து மாரி
சொரிவ போல் சொரியும் வாக்குப்
பன்னரு மவதா னங்கள்
பலதிறத் தானு மெய்தும். 23

491. ஆனியின் முற்பக் கத்தில்
அட்டமி பரணி சேரு
மீனமில் யோகஞ் சேட்ட
வட்டமி யென்னும் நன்னுள்
பூநிறை புனல்ப டிந்தோன்
பொன்றினோர் பேரை யுள்கி
தானிறை நிலத்தின் மூன்று
தருப்பணம் புரிய முத்தர். 24

492. பார்த்திபா வினிது கேண்மோ
பகருவ மின்ன மன்ன
தீர்த்தமே திளைக்குங் காலஞ்
சிறந்தவை பலவற் றுள்ளுங்
கார்த்திகைத் திங்க டன்னிற்
கதிரவன் றினமே நன்று
வாய்த்திடின் மனிதர் தாமும்
வானவ ராவ ரன்றே. 25

493. பொருவில்கற் கடகத் திங்கள்
பொருந்துபூ ரணையும் மீனுள்
திருமறை யவற்கி யன்ற
தெக்கணை நல்கித் தெண்ணீர்
பருகவந் நகரிற் றானம்
பண்ணுநின் பிதிர்க்கள் முத்தர்
குருமதி தனக்கு முள்ளங்
குளிர்ந்துபே ருவகை கூடும். 26

494. மறையவர்க் களித்த தானம்
வயங்குவெண் மதிபி
நிறையுமுண் மகிழ்ச்சி யென்று
நிகழ்த்திய தென்னை யென்னில்
இறைவகேள் அந்த ணாள
ரிமகரன் வடிவ மென்றே
அறையுநூ லதனு லன்னோர்க்
களித்தலே யறமு மென்றான். 27

495. முனிவனிப் பரிசு ரைக்க
மன்னவன் முடிவ ணங்கி
இனியவ ரமுதத் தான
மிப்பெருந் தினத்தி லந்தத்
தனிநகர் தனில ளித்தோர்
யாவரத் தலத்தி னெல்லை
புனிதமெவ் வளவிற் றென்ன
முனிவரன் புகல லுற்றான். 28

496. கானமார் சோலை நீடு
கவுதமி நதிதீ ரத்தி
லானதோ ராச்சி ராமத்
தருந்தவன் சுதபா வென்னும்
ஞானமா முனிவன் றன்பால்
நயந்தமா ணுக்கர் தம்முள்
ளீனமி லறத்தி னுண்மை
யியைந்துளான் சுயஞ்ச னென்பான். 29

497. அன்னவன் சுருதி வல்லான்
அறநெறி விருப்பின் மிக்கான்
றன்னருட் குரவ னான
தவமுனி சுதபா விந்த
நன்னர வியப்பு மற்ற
நாள்களும் யோகச் சார்பும்
பன்னரி தான தானம்
பான்மையும் பகரப் பெற்றான். 30

498. தண்ணரும் புனல ளிக்கத்
தருமமிக் கென்ற காலம்
நண்ணலுங் குரவன் றானும்
நவின்றிட விடைபெற் றேகி
யண்ணலார் வாஞ்சை மூதூர்
அணைந்தொரு சார்பின் வைகிப்
பண்ணமர் வீதி நாப்பண்
பனிநிழற் பந்தல் செய்து. 31

499. புதியமட் கலங்கள் தோறும்
பூரிதஞ் செய்து தூநீர்
விதிமுறை மறையோர் யார்க்கு
மேவுதெக் கணையி னூடே
முதியதன் குலப்பி திர்க்கள்
முத்தரா முறைமை யுன்னி
மதியுடை வேதி யன்ருன்
வழங்கினன் ருன மாக. 32

500. சொற்றவிப் பரிசு நல்குஞ்
சுருதிநான் மறையோன் சுற்றந்
துற்றதென் புலத்து ளோர்கள்
உய்ந்தன துறக்க மேவி
மற்றவன் ருனு மந்த
மாநகர் வைகி வாசம்
பெற்றவப் பயனு லெந்தைப்
பிரானடி பிரியா துற்ருன். 33

501. ஓதுமிந் நகருக் கெல்லை
யோசனை யிரண்டொன் ருென்றிற்
பாதியைங் குரோச மென்னப்
படுத்திடு தொகைகள் நான்கு
மாதியி லுகந்து டங்கிக்
கலியுக மந்த மாகி
நீதியிற் கொடிய தெவ்வர்
நெட்டுயிர்க் கவரும் வேலோய். 34

502. குலவிய கலியு கத்துக்
கிசைந்தவைங் குரோசந் தன்னில்
நிலவுநான் மறையோ ராதி
நீசரே கடையா யிந்தீத்
தலனிடை வாச மேவி
தமதுடல் துறக்கம் பெற்றோர்
கலைமதி முடிய ராகிக்
கயிலைமால் வரையு நீங்கார். 35

503. புண்ணிய தீர்த்த மென்னப்
புகன்றபுட் கரணி தன்னுள்
நண்ணிய சேறு வார்தல்
நலனழி பாசி நீக்கல்
எண்ணியங் கியற்று மன்பர்
இரும்பரி மேத யாகம்
பண்ணிய பலனு மெய்திப்
பரிப்பது சிவசா ரூபம். 36

504. மாலய னமரர் போற்றும்
வாஞ்சைவாழ் மருந்தர் செம்பொன்
ஆலயந் தொழுதல் சுற்றல்
அலகிடல் மெழுகல் சுற்று
வேலைநன் மலர்தொ டுத்தல்
விளக்கிடல் தூபம் போற்றல்
ஏலவா தரிப்பார் வாழ்வ
திறைவன துலகி லென்றும். 37

505. திருமதில் மண்ட பாதி
திருப்பணி திருவி ழாவுக்
குருவிடை யுபசா ரங்க
ளுதவினோ ருதவு மென்றோர்
பொருவருஞ் சிவலோ கத்தின்
போகமே யினித ருந்தி
இருவரு நூறு கோடி
கற்பமங் கிருந்து வாழ்வார். 38

506. ஈசனைப் பொறிகள் மூன்றி
லிகழ்ந்துள வபரா தத்தோர்
வாசமங் நகரிற் செல்ல
மற்றது நாச மாகும்
ஆசையா லங்கி றைஞ்ச
வசத்தரத் தலத்தில் வாழுந்
தேசரைக் காணில் சென்று
தெரிசனஞ் செய்த தொக்கும். 39

507. மையமர் கண்டர் வாழ்தென்
வாஞ்சைமா நகரின் மேவி
யையமோர் பிடிய ளிக்க
யன்றியோ ரவிழ்தன் கையால்
ஈயெறும் புணவ ளிக்க
வின்றெனி லிருந்து வாசஞ்
செய்யவோர் கணத்துக் கூழி
சிவபதம் பெறுவார் திண்ணம். 40

508. இத்தலத் தணைந்து தீர்த்தந்
திளைத்தவ ரியற்றுந் தானந்
தத்தமக் கியன்ற தொன்று
சகத்திர மாய்வி ளங்கும்
அத்தகு தானந் தன்னில்
அதிகநன் றறையு மென்ன
மெய்த்தரு மிடப தானம்
விரவிய சுரபி தானம். 41

509. கந்தரங் குளம்பு கண்கள்
கறுத்துவால் நீண்டு மெய்யிற்
சுந்தர வுறுப்பி னூனஞ்
சூடின்றி முன்னீற் றன்றி
சிந்துகோ டாய்ப்பின் னுவின்
சேர்ந்துகால் சிவந்து மாட்சி
யிந்தவீ ரைந்து பெற்ற
விடபமே தான மீய்வான். 42

510. உதவின ரிந்த வேற்றி
உரோமமோ ரொன்றிற் காண்டு
சதுமுகன் பதத்தி ருப்பர்
தணந்திட்ட தரணி யாள
விதமுறு மன்ன ராகி
மேவுவர் சிவப தம்பின்
பிதிர்மர போரு மந்தப்
பிநாகிதாள் பெறுவா ரன்றே. 43

511. பாற்பசு மருப்பிற் செம்பொன்
பரித்தனர் உரத்தின் வெள்ளி
மேற்புனைந் தினிய பாலின்
கும்பமும் வெண்க லத்தா
லேற்பவன் வேத வாய்மை
யியல்புடை மறையோர் நீதி
நூற்புல வோனு மாக
வழங்குவன் நுவன்ற தானம். 44

512. நல்கினர்க் கினைய தானம்
நயந்தவா னினத்தின் வர்க்கம்
பல்குமற் றவையு டம்பிற்
பயிலுரோ மத்தி லொன்றுக்
கல்கலி லமர ராண்டொன்
றுயதன் னளவு மெய்த
கெல்கதி முளரி யேற்குந்
திசைமுக னுலகு தானே. 45

513. ஆவினைத் தான மேற்றான்
அன்னவன் புரந்தி டாது
மேவியங் கதனை விற்றால்
விற்றவன் விலைகொ டுத்தோன்
நாவினில் விலைம தித்து
நடுநிலை நின்றோ னிந்த
மூவரும் நிரைய மெய்தி
முயங்குவர் முனைத்தி டாரே. 46

514. கன்னியைத் தான நல்குங்
கருணையான் றந்தை தாய்தன்
பன்னியிம் முத்தி றத்திற்
பகருமேழ் மரபி னேரு
மின்னியற் பிரம லோகத்
தெய்துவ ரிலைய மெய்திற்
றன்னிக ரில்லாச் சோதி
தாணிழற் றருக்கி வாழ்வார். 47

515. மறையவர்க் கன்ன தொன்மை
மாநகர் வாசஞ் செய்ய
வுறையுள்ளெவ் வளவிற் றேனு
முதவின ரும்பர் நாட்டுக்
கிறையமர் தாரு நீழ
லிரணியத் தவிசில் மேவி
யறநவில் முனிவர் சூழ
வணைந்துவீற் றிருப்ப ரன்றே. 48

516. மாதொரு பாகர் வாஞ்சை
வளநக ரெல்லை யின்கண்
வேதவே தியருக் கன்பின்
வெறுக்கையெட் டுணைய தேனு
மேதரு குன்ற மென்ன
கொடுத்தவர் இயக்கர் கோனுங்
காதலின் விரும்பச் செல்வ
மெய்துவர் கணித மின்றே. 49

517. ஆயுநூ லறிவின் மிக்கோய்
அடுதிற லரச ரேறே
மாயிரு ஞாலம் போற்றும்
மாகநீ ராடும் பண்பும்
ஏயுமிந் நகரிற் றான
விசிட்டமு மிவ்வா றென்ப
நீயுமித் தகவே செய்தி
நிகழ்ந்ததின் னினைய தென்றான். 50

518. இன்னநல் லியபிற் றாகு
மாகநீ ராட லென்னா
முன்னைமா தவன்சா பாலி
மொழிதலு முனிக ணத்தீர்
தன்னது விருப்பி னாலே
தராபதி கரங்கள் கூப்பிப்
பன்னரு முனிவ கேளென்
றின்னவை பகர லுற்றான். 51

519. அரியபல் கலைகள் தேர்ந்த
வருந்தவப் பெரியோய் முன்னம்
பரிவினா லித்த லத்துப்
பண்புள மகத்தின் காதை
விரியநீ யுரைத்த வற்றுள்
விளம்பினை தொகுத்தோர் மாற்றம்
வரிவிழி யணங்கு துர்க்கை
மயிடனைக் காய்ந்தா ளென்றே. 52

யமதீர்த்தக் காட்சி

520. செயமிகு மயிடற் காய்ந்த
தேவிதெய் வீகந் தன்னால்
வியனுறு கல்வி செல்வம்
வீரமிக் கெய்தும் வேந்தற்
கியல்பது கேட்க வேண்டு
மென்பரா லடியேற் கிந்த
உயர்நெறி புகல்வா யென்றான்
முனிவனு முரைக்க லுற்றான். 53

மாக ஸ்நான விசிட்டச் சருக்கம் முற்றுப் பெற்றது.

ஆக சருக்கம் 11-க்கு திருவிருத்தம் 520.

—:(o):—

12. மயிடாசுரன் வதைச் சருக்கம்

521. அடையத்தெழு கடைநாள்முகில்
அதுவொத்தெழு முருவன்
இடைபுக்குயிர் ககனத்திரி
யிடிபோலுரை கொடியன்
கடல்விட்டெழு விடமும்முயிர்
கவரத்தொடர் நமனும்
வடவைச்சுடு கனலும்பொரு
மயிடாசுர னென்பான். 1

521. கடைநாள் - பிரளய காலம்; ககனம் - ஆகாயம்; வடவை- பெண் குதிரை முகம்போலுள்ள அக்னி (இது கடல் மத்தியி லுள்ளது என்பர்.)

522. வானத்திமை யோரைப்பெரு
வலிசெய்து தொடுத்தே
யீனத்தொழில் புரியத்தின
மேவிப்பணி கொள்வான்
மோனத்தவர் நியமத்திறன்
முடியாதிடர் படலாற்
கானத்திடை யசலத்திடை
கடிதோடி யொளித்தார். 2

523. உலகத்தொடு பாதாளமும்
உயர்வானமு மடையக்
கலகத்திடு மிவனலைவர்
கதிவிட்டறை போகப்
பலகற்புடை மடவாரிடர்
படவுஞ்சிறை செய்தான்
நிலைகெட்டலை வுறுமிப்படி
நெடுநாள்களி லொருநாள். 3

524. முதுவானவர் பலரும்மிக
முறையோவென வொருசார்
அதுமேவினர் குழுமித்தம
தாசாரியன் முன்போய்
மதுபானம யக்குற்றெமை
மயிடாசுர னிடுபோர்
இதுவேபட முடியாதினி
யென்செய்குவ மென்றார். 4

522. அகலம்—மலை.

525. கண்ணிற்புனல் கலுழத்தனி
யசுரன்செயல் முன்னே
யுண்ணீற்கவி டுக்கட்படு
முயர்வானவர் குரவன்
விண்ணிற்றெருகு திரள்கூடி
விளம்புஞ்சொல் செவிக்கே
புண்ணிற்சுடு கோல்பட்டது
போல்நேர்ந்திவை புகல்வான். 5

526. காவானல மதுபற்றிய
ககனத்திடை நடுவே
வேவானெனை யேனிங்கிது
வேறென்சில புகல்வேன்
மூவாவர னாலும்மிது
முடியாதது போலே
யோவாவினை யீங்குற்றன
வுய்வாரினி யாரே. 6

527. என்றாலுமி தற்கோர்வகை
யாமின்றனை வோரும்
நன்றாமிறை திருவாஞ்சிய
நகராலய வடபாற்
சென்றால்முறை யிட்டாலிடர்
தீர்ப்பாளொரு துர்க்கை
கொன்றாலவ ளேயல்லது
கொடியோனுயிர் மடியான். 7

525. வானவர் குரவன் - தேவகுரு (பிரகஸ்பதி)

528. அந்தத்திரு நகரேயர
ணல்லாற்பிறி தேநா
மெந்தப்பதி புக்காலு
மிவன்கைக்கது திலதம்
வந்தக்கண மேபற்றுவன்
வாளும்பல வுடையான்
சிந்தைத்துணி விதுவல்லது
செயல்வேறிலை யென்றான். 8

529. பிரகற்பதி யிதுகூறலு
மிமையோர்பலர் பெரிதும்
விரவிக்குரு பரனோடும்
விரைந்தே கினர்விரவார்
புரமுற்று மெரித்தேயலர்
போதன்றன துச்சிச்
சிரமட்டு மறுத்தானுறை
திருவாஞ்சிய நகரில். 9

530. வந்து சித்திர கோபுர
மணிமதில் மறையோர்
முந்து மாளிகை சூளிகை
முகில்தவழ் மாடஞ்
சந்து சண்பக சூதமும்
பலாசமா திவையென்
றிந்துலாவரு சோலைகள்
எங்கணும் நிறைந்தார். 10

531. நீடு மன்பினில் நினைக்கினும்
நெடிதுமுற் பிறப்பில்
கோடி வல்வினைப் பற்றுங்
குறைபடாச் செல்வம்
தேடி யெய்திடு மென்றுசொல்
புண்ணிய தீர்த்தம்
ஆடி னாரதில் நியமும்
அடைவினில் முடித்தார். 11

532. வளவர் தங்குல பூபதி
மகுடவர்த் தனன்முன்
னுளம கிழ்ந்துசெய் பூசனை
யுவந்துகொண் டருள
மிளநி லாநகை யந்தரி
யெண்கர தலத்தி
துளப நாரணற் கிளையவள்
சுமங்கலை துர்க்கை. 12

533. மங்கை பங்கின னாலயத்
ததன்வட புறத்துச்
செங்க ரங்களோ ரெட்டினு
சிறந்தவெம் படையும்
தங்கு மெய்யொளி நீலமுந்
தழைத்திட விழைந்தாள்
அங்க ணெய்தின ரிறைஞ்சின
ரன்பினாற் புகழ்வார். 13

534. பங்கயப்பொன் மலர்த்திருவே பச்சைமயி
லேயுமையே பனுவல்மானே
திங்கணுத லேயடியார் சிந்தைசெய
தித்திக்குந் தெய்வத்தேனே
எங்களமு தேயுயிரே யெவ்வுலகு
மெப்பொருளு மீன்றதாயே
பொங்கரவப் புண்ணியக்கோ மளமேயா
மளையேபோற்றி போற்றி. 14.

535. எங்குமாய் நிறைந்தசிவ மெண்ணிலுயிர்
புரந்தளித்ததற் கிச்சையாகி
தங்குபே ருருவங்கள் அத்தனைக்கும்
வெவ்வேறு சத்தியாகி
அங்கெலாம் வடிவுபெயர் தனித்தனிகொண்
டைந்தொழிலு மமைவிப்பாய்நீ
மங்கையே பார்ப்பதியே நின்புகழை
மதித்தொருவர் வழுத்தற்பாற்றே. 15

536. அண்டமெலா முனதுதிரு விளையாட்டு
மணற்சிற்றி லண்டத்துள்வே
தண்டமெலாம் நின்கரத்துக் கம்மனையும்
பந்துமாஞ் சலதியேழும்
புண்டரிக மலர்க்கையில்நீ யிறைத்தாடுஞ்
சிற்றூற்று புகன்றயாவு
மொண்டொடியே யுனக்கிதொரு கணப்போதில்
விளையாட்டிங் குரைக்குங்காலே. 16

536. சலதி–கடல்

537. அன்னைநீ யெடுத்ததிரு வவதாரந்
தானவர்க ளகந்தை நீக்கி
யின்னல்மன் னுயிர்காத்து உலகளிக்கும்
பொருட்டன்றோ இப்போ தெங்கள்
பொன்னுலகு மல்லாது பூதலமும்
பாதலமு புகுந்து லாவிப்
பன்னரிய கருமேதிப் பகட்டசுர
னிடுதுயரம் பகரொ ணாதால். 17

538. போனகமே சமைத்தெடுத்தும் புகுந்தமது
வூனெடுத்தும் புலமைக் கேற்ற
ஈனவினை பலபுரிந்து மாற்றாம
லுனையடைந்தோ மிங்கே யங்கே
மானனையார் பலருமவன் வரைக்குக்காத்
தடைத்தசிறை மனையிற் புக்கார்
தானவனுக் கேவலினிச் செயமுடியா
துன்னருளே தஞ்ச மென்றார். 18

539. என்று வானவ ரரற்றுலு மிறைவி
யங்கவற் குருத்துமுன்
னின்று நீர்சிறிது மஞ்ச லஞ்சல்
நீதி செய்துளநி சாசரன்
வன்றி றற்றலை துமித்து மக்குரிய
வாழ்வு நல்குவம் விசும்பிடைச்
சென்று வேறொளி விருந்து காணுமமர்
செய்த லென்றுறுதி செப்பினாள். 19

537. கருமேதி - கரிய எருமை.
539. நிசாசரன் - அசுரன் (இரவில் சஞ்சரிப்பவன்).

540. இறைவி யிப்பரி சுரைப்ப வானவ
ரிறைஞ்சி விண்ணிடை யெய்தியே
மறைய நிற்றலு மணங்கு தேவியுமை
வலிய தானவர்கள் வயிரியாய்
விறலு டைக்கர தலப்படைக்கனல்
விதிர்ந்தெ ழுந்தனள் வருதினிக்
குறைவில் பூதகண நெடிய பேரலகை
குழுமி யார்த்தபல கோடியே. 20

541. சுறிய தாளின் நெடியவெள்
ளெயிற்றின குவடுஞ்
சிறிய தாமெனப் பெரியவல்
லுருவின செழுநீர்
மறிக டற்பெரு வயிற்றின
மழைமுகில் நிறத்த
பொறியு கச்சுழல் பார்வைய
பூதவெம் படைகள். 21

542. வடவை வெங்கன லவிப்பதம்
வாயில்வெந் தீயிட்டு
உடனெ ழுப்புவ வுருமென
முழக்குவ வுயரவான்
றடவி மீனமு முகுப்பவச்
சுரநதி பெருக்கு
மடைய வுண்பன வுமிழ்வன
வலகைமாப் படைகள். 22

---

540. அலகை - பேய்.
542. உரும் - இடி.

543. தேவி யிப்பெரும் படைகொடு
சென்றுசென்று வல்லசுர
ஞுவி கூற்றுண வளித்துட
லலகை வெம்படைக்குத்
தாவில் நல்லிரை வழங்குவன்
சமர்மலைத் தென்ன
மேவி ஞளவ னிருக்கையா
மருணவெற் பகத்தில். 23

544. அன்ன வெற்பினி லடிவரை
யிருந்தவல் லசுர
னின்ன தன்மையை யறிந்தெரி
கிளர்ந்தென வெழுந்து
தன்ன ருந்திறல் தானைபின்
தொடர்தரச் சமர்க்கு
முன்ன டந்தன னிறுதிஞள்
முகிலென முழக்கி. 24

545. இருதி றத்தினர் சேனையு
மெதிர்த்தனர் களத்திற்
பருதி வட்டமு மதியமு
மறைத்தன பராகங்
கருதி கற்கரி திருதுவுங்
காலமுந் திரியா
தொருதி னத்தினு மிடைவிடா
துடற்றினர் நெடுநாள். 25

546. வச்சி ரஞ்சிலை சக்கர
மழுவெழுத் தண்டு
கச்செ றிந்தவெம் படைகொடு
வழங்கினர் களப்போர்
நச்ச ராமுடி நடுங்கின
ஞாலமுங் கம்பித்
தச்ச முற்றன வதிர்ந்தன
வண்டக டாகம். 26

547. தான வன்றிரள் தேவர்தன்
றிரளொடுதாக்கி
யான வாறம ருழந்தன
ராயிரம் வருடம்
போன தெண்ணிலா புகுந்தநாள்
நெடிதென முனிந்தாள்
வான வர்க்குமுன் சொல்லிய
வண்ணமே முடிப்பாள். 27

548. கைகொள் பாசமங் குசங்கதை
கடியநா ராசம்
வைகொள் வேல்வடி வாளெறி
சூலமா முசல
மொய்க வின்களெண் தோளினும
புரள்தர முனைப்போர்
செய்க ளம்புகுந் தருஞ்சம
ருடற்றினள் தேவி. 28

549. கூற்றமும் வெருக் கொளவடு
கொலைத்தொழில் அசுர
ஞற்றல் சால்பெரும் படையெலா
மறுத்தனள் களத்தில்
வேற்றடங் கைகா லுடறுணி
விழுந்தன வதிர்வெங்
காற்ற றைந்தழி கதலியங்
கானமே கடுப்ப. 29

550. சேனை முற்றுமக் கொற்றவை
சிதைத்தெதிர் நிற்பத்
தானவன்விழி தழலெழத்
தடிநெடு மருப்பு
வான கந்தொடச் செவித்துணை
மாதிர மறைப்ப
மேன டந்தனன் அண்டமும்
வெடிபட நகைத்து. 30

551. திக்க ணத்தினு முயிர்த்தபின்
றீச்சிகை விரிய
அக்க ளத்தினிற் கொற்றவைக்
கெதிரெழுந் தாற்று
மிக்க சூலமொன் றேவினன்
விமலைமொய்ம் பிற்பட்
டுக்க தப்படை குன்றெறி
திரையென வுலறி. 31

552. சூல மொன்றுநா ரூயிரந்
துகள்படப் பிண்டி
பால மொன்றெடுத் தெரியுமுன்
பகட்டுவல் லசுரன்
மேல டித்தனன் கதைகொடு
மேருவிற் றதுவே
போல மூந்தன விழுந்தனன்
பொறியெலாங் கலங்கி. 32

553. விழுந்த வன்றலை துமிப்பது
வீரமன் றெனவே
யெழுந்து ணர்ச்சிறி தமைந்தன
ளெழுந்துவல் லசுரன்
கொழுந்து விட்டெரி தீயென
விசும்பினிற் குதித்தான்
மொழிந்த னன்பல சபதமு
முடிவதொன் றறியான். 33

554. சென்று சேணினுந் தாவினன்
தேவியங் கவன்முன்
னின்று வேல்தொடுத் தெறியுமுன்
னீதிகை பிழையா
தென்று கீழுற குதித்தனன்
இறைவியுங் குதிப்ப
தன்றி றைப்படை வழங்கினன்
தானவன் பலவும். 34

555. வட்ட மிட்டுடன் வலனென
வளைந்துபல் விதத்து
மட்ட திக்கினு மடர்ந்தடர்ந்
தசுரனை நெருக்கி
நெட்ட லர்ப்பொழில் வாஞ்சிய
நீணகர் தன்கண்
விட்ட ருஞ்சுடர் படைகளின்
வெய்யபோர் விளைத்தான். 35

556. எடுத்தெ றிந்தன னெடியகற்
பாறையொன் றிறைவி
பிடித்து திர்த்தன ளன்னவல்
லசுரனே பின்னும்
மடுத்து முன்னுறப் பாய்ந்தனன்
வன்மருப் பொருகை
விடுத்தி டாதுறப் பற்றியோர்
தாளினில் மிதித்து. 36

557. செற்ற மிக்குற வெறிந்தனள்
தேவிகை வாள்கொண்
டற்ற தோரிரு துணிபட
வசுரன்வன் கழுத்துத்
துற்ற சோரிவிண் முகட்டினுந்
தெறித்தது சுரரும்
பொற்ற ருக்களின் மலர்மழை
போற்றிமுன் பொழிந்தார். 37

558. கொடிய வானவ னுடற்பெருங்
குருதிவா ரிதிபோற்
படியெ லாநிறை வுற்றது
பரந்துமேற் பொங்கிக்
கடிது போகியன் னீலியக்
கடற்கொரு திடராய்
நெடிய கோட்டிரு மோட்டவன்
சென்னிமேல் நின்ருள். 38

559. அண்டவன் புறத்தி னுச்சியி
னமைந்துவீற் றிருக்குங் கன்னி
மண்டனிற் கற்பந் தோறும்
வந்துமால் தங்கை யாகி
யெண்டரு மரக்க ரைச்செற்
றிமையவ ரிடுக்கண் டீர்ப்பான்
கொண்டநல் லுருவத் தன்மை
கூறுதற் கெளிதோ வன்றே. 39

560. செங்கண்மால் தங்கை யான
தேவிதன் சரிதை தன்னை
வெங்கடுங் கானிற் போரில்
வேந்தர்முன் சொல்லிற் சோரர்
தங்களா லிடுக்க ணெய்தித்
தம்முடற் றளர்வு கூறி
னங்கது நவிற்ற வந்நோய்
அந்நிலை யகலு மன்றே. 40

558. வாரிதி - கடல்.

561. நவமிநாட் கால மூன்று
முழ்கியிந் நூல்ந விற்றுந்
தவறில்சொற் றுதியால் நூறு
தருப்பணஞ் செபமி யற்றி
உவகையா லைய மேற்றுண்
டோரறு திங்கள் போற்ற
சிவையுருத் தெதிரே நிற்பள்
சித்தியும் பெறலா மன்றே. 41

562. விண்ண கத்துள தேவரும் முனிவரும்
வெருளெய்தி விளியாளுேய்
பண்ண கத்தொழில் மேதிவல் லவுணனிற்
பரிபவம் பலபல சாற்ற
அண்ண கைத்தடல் வாள்வி திர்தத்வனுடல்
துணிபடுத் துயர்கோட்டுத்
திண்ண கத்தலை யெறிய நீலிதன்
திறமிது தெளிவாய் மன். 42

563. தெம்முனை முருக்கஞ் சீற்றஞ்
செங்கண்மால் யானை மன்னன்
மைம்மலி கண்ட னெந்தை
வாஞ்சைமூ தூரின் றன்மை
யெம்மைநீ வினவு மன்பா
லிப்பெருஞ் சரிதை நின்கண்
மெய்ம்மையே யனைத்துஞ் சொற்ரு
மிகவும்நீ வாழி யென்ருன். 43

564. திருந்த மெய்முனி கணத்தீர்
செந்திரு வாஞ்சை மூதூர்
பொருந்திய மேன்மை காதை
புராணத்து ளிவைய னைத்தும்
பெருதவ முனிசா பாலி
பிரகற்சே னற்கு ரைத்தா
னிருந்தவெல் லோருங் கேட்ப
யானுமக் கியம்பி னுறல். 44

565. என்று சூதமுனி சொற்ற வாய்மையை
யிருந்தவர் குழாமெலாம்
நன்று நன்றென மகிழ்ந்து கைதொழுது
பின்னுமோர் மொழிநவிற்று வார்
அன்று நீயிது தொடுத்த போதுபிர
மாண்டநீடுவ புராணமுண்
டொன்று பின்னருரை செய்து மென்றனை
உரைக்கவேண்டுமஃ தென்றனர். 45

566. மாத வத்தினர் சால வருந்தியீ
தோத வேண்டுமென் றுள்ள மிரங்கலாற்
பேத மில்பிர மாண்டத் தெடுத்தன
சூத மாமுனி சொற்றர மேயினன். 46

மயிடாசுரன் வதைச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் 12-க்குத் திருவிருத்தம் 566.

---

13. மண்டூக முத்திச் சருக்கம்

567. முனிவ கேளுமி னிங்குநீர்
மொழிந்தவிப் பரிசே
புனித நான்மறை வசிட்டனும்
பொதியமால் வரைக்கண்
ணினிது கேட்பவக் குறுமுனி
யவன்றனக் கிசைத்தான்
அனைய காதையை யறைகுவ
னடைவினி லுமக்கே. 1

568. தேவர்க ளரியயர்
திக்கி லுள்ளவர்
யாவரும் வழிபட
விமையஞ் சார்ந்தது
நாவலந் தீவினில்
நந்தி யெம்பிரான்
காவலை யுடையது
கயிலை யங்கிரி. 2

569. பாற்கடல் கடைந்தநாள்
பகுந்த வானவ
ரேற்கவே கடவுளுக்கென
விருத்தல் போலத்

தீற்கமா மமுதவெண்
டிரளை போன்றது
மேற்கக னத்திலும்
விளங்கு மக்கிரி. 3

570. விளங்கிய மேன்மையின்
விரிந்த வக்கிரி
வளங்கெழு மாலயன்
மற்று ளோரெலா
முளங்கவர் மலத்தினு
ளொருத்த தாற்சிவன்
களங்கமி லானெனக்
காட்டல் போன்றது. 4

571. அலகின்மன் னுயிர்க்கெலா
யகவி ருட்டுரந்
திலகிய செஞ்சுட
ரிருக்கு மக்கிரி
திலதமோர் வெள்ளியந்
தீப தண்டமா
யுலகெலாந் தெரிவுற
வுருத்த தொக்குமால். 5

572. இப்பெருந் தகையவா மிரச தக்கிரி
மைப்புரை கண்டரெம் வள்ளல் வைகலா
லொப்பதற் கொருவரை யொன்றி னுயினுஞ்
செப்புவ னதிற்சில சிறப்ப றிந்ததே. 6

572. இரசதகிரி – வெள்ளிமலை.

573. கற்பகத் தருக்களே கலந்த தானமும்
பொற்பது மத்திரள் பூத்த பொய்கையும்
அற்புத வாடல்செய் யரம்பை மாதர்கள்
வெற்பட வெங்கணும் விழவு செய்வரால். 7

574. எற்படு மடிவரை யின்கண் மாமயில்
அற்புத நட்டமிட் டதன்கண் மீமிசை
கற்பகத் தருவலர் கடிது சிந்துவ
பொற்புட னமரர்பூ மாரி போலுமே. 8

575. துந்துமி முழவமு மருவி தூங்குநீர்
வந்திழி துழனியு மாறு கொண்டெழ
முந்திய கடையுக முகில்க ளேழுமேழ்
சிந்துவு மதிரினுந் தெரிவ தொன்றில. 9

576. நீள்கட வுட்கிரி நிறைந்த சோதியிற்
தாழ்கதி ருடுபதி தார கைக்குல
மூழ்கிட வொளியெலா முகம ழுங்கின
வாழ்குன ரின்னுழை வறிஞர் போலுமே. 10

577. விண்ணவர் வந்திழி விமான கோடியுந்
தண்ணமர் பொன்னுருத் தருவின் சாலமும்
வண்ணமொன் றுகலின் மயக்க முற்றுழி
பண்ணமர் பாகனும் பரியுங் காட்டுமால். 11

578. அண்டமுங் குலைத்தெடுத் தடுக்கு மாழிநீ
ருண்டிடும் வரையதற் கொருகை பந்துமாம்
பண்டையிற் புவனமும் பசிக்குத் தீனெனக்
கொண்டிடு மவ்வரை பூத கோடியே. 12

576. உடுபதி-சந்திரன் (உடு-நட்சத்திரம்); தாரகை-நக்ஷத்திரம்.

579. அங்கையின் மழுவினர் அணிநு தற்கணர்
திங்களஞ் சடையினர் சிவக ணத்தவர்
சங்கரன் வடிவமே தருக்கி யக்கிரி
யெங்கணு முறைகுன ரெண்ணி லார்களே. 13

580. கழறுமித் தகையவாய் கயிலையம் பொருப்
புழைமணி மதிலுடுத் துயர்பொற் கோபுரந்
தழைவறு பொற்பினிற் றம்பி ராற்குளம்
விழைவுறு மாலயம் விளங்கு மென்றது. 14

581. எண்டகு புவனமு மெண்ணில் மேருவு
மண்டமு மளவற வடுக்கி யேற்றினுங்
கொண்டதெப் புறத்துள கோண மோவென
மண்டப மொன்றதன் வரையி னுச்சியின். 15

582. துரிய தீதமோ சுருதியி னந்தமோ
பெரியவ ருள்ளமோ பிறங்கு மன்றமோ
வரியயர் போற்றிட வமலன் மேவுதற்
குரியதம் மண்டப முரைக்க லாவதோ. 16

583. அன்னதோர் மண்டபத் தமலன் மாதொடும்
பொன்னரி யாசனம் புக்கி ருந்தனன்
கன்னலு மிரதமுங் கண்ணுஞ் சோதியு
முன்னருங் காயமு முயிரும் போலவே. 17

584. அருமுனி சாபமொன் றகற்று மைந்துகை
கரிமுக னொருபுறங் கலந்து நிற்கவே
கிரியொடு சூருரங் கிழித்த வேலனும்
பரியொடு மொருபுறம் பற்றி நிற்கவே. 18

585. திசைமுக னல்வகை செனிக்கும் தோற்றமும்
அசைவறு புவனமு மண்ட கோடியும்
வசையற நீதரு வரத்தி னற்பெரி
திசைவற வகுத்தனன் யானென் றேற்றிட. 19

586. சதுமுகன் வகுத்தவிச் சராச ரம்மெலாம்
திதமுற நீயருள் செய்த வண்ணமே
விதமுற வளித்தனன் விணையனென் பணி
இதுவென நாரண னிறைஞ்சிப் போற்றிட. 20

587. கருடகந் திருவர்கள் காசி வாசிகள்
கெருடர் கின்னரர் சித்தர் சாரணர்
இருடறு தபோதன ரேக தேசத்தர்கிம்
புருடர்பா தலத்தவர் போக பூமியர். 21

588. மருத்துவ ரிருவரெண் வசுக்கள் மற்றுள
திருத்தகு வானவர் திரண்டு போற்றிட
அருத்திசேர் மண்டபத் தம்பி காபதி
யொருத்தரு மிணையிலா னுறையு மவ்வயின். 22

589. நாதனுக் கினியனும் நந்தி வானவன்
ஆதரித் தருகுநின் றணிப்பி ரம்பினுற்
றீதற விமையவர் திரண்டு துன்றிய
வோதமோ ரிருபுற மொதுக்கி நிற்கவே. 23

590. அண்ணல்தன் திருமுனே யரம டந்தையர்
விண்ணுறு மின்னென விளங்கி வீணையாழ்
பண்ணுறு கருவிகள் பலவி சைத்திட
வொண்ணுத லுருவசி யுயர்ந டஞ்செய்தாள். 24

591. இந்து சேகர னிமையவர்
நாயக னிறைவன்
பந்து மெல்லடிப் பருவரை
மயிலொடும் பரதத்
தந்து முருவசியவடன்
தனிநட நோக்கிச்
சிந்தை யின்புறக் கண்களாற்
றிளைக்குமவ் வெல்லை. 25

592. செய்ய பொன்னினும் மணியினுஞ்
சித்திரத் தமைத்துத்
துய்ய பன்மலர் அலங்கலிற்
றுலங்குமோர் விமானம்
வெய்ய வன்கதி ராயிரம்
விளங்குதோற் றத்தின்
வைய கத்தினின் றெழுந்தது
வானுளார் வியப்ப. 26

593. அன்ன திற்புய நான்குமுக்
கண்ணுமா டரவச்
சன்ன வீரமு மான்மழுத்
தரித்தகைத் தலமுஞ்
சின்ன வெண்பிறை மவுலியுஞ்
சிறந்தசா ரூபத்
தின்ன ருட்புனை கணுதிப
னிருத்தலு மவனை. 27

594\. சுரர்பு கழ்ந்திடச் சிவகணத்
தவர்பலர் சூழ்ந்து
விரைவி னிற்கொணர்ந் தவ்வரை
மிசையின்மே விடலு
மரம டந்தைதன் நடத்தினை
யருளினால் நோக்கும்
பரையி மாசலை திரிபுரை
பார்ப்பதி கண்டாள். 28

595\. காண்ட லுந்திரி புரைவியப்
பெய்திய கணத்தில்
பூண்ட வன்பொடு மிறைஞ்சினள்
தலைவனா புரத்தாள்
ஆண்ட நாயக விங்கிதோர்
அதிசயம் பெரிதா
யீண்டு நம்வரை யுச்சியி
னெழுந்ததோர் விமானம். 29

596\. அதனில் நின்றிரு உருவமே
யமைந்து சாலவுமற்
புதமிகுந்தொரு கணாதிபன்
பொற்பின் வீற்றிருந்தா
னிது தெரிந்திலன் யாரிவ
னெப்பெரும் புவன
முதல்வ நீயெனக் கறியவும்
மொழிதியிங் கென்றாள். 30

597. இறைவ னன்னசொற் றிருவுளத்
தமைத்துமைக் கிசைப்பான்
குறைவில் சீரிமை யாசலக்
கோதைநீ கேட்டி
யறையு மற்றது பூதலத்
தநேகதெய் வீக
முறையு மோர்தல் வியப்பின
லுற்றதத் தகைமை. 31

598. அம்புவியின் நடுவில்நிறைந் தாடகமே
ருப்பொருப்பொன் றதனைச் சூழ்ந்து
பம்புநவ கண்டமவை கிம்புருட முதலாகப்
பாத மீருமச்
சம்புநெடும் பாதவமொன் றதன்தென்பால்
நின்றுளதத் தருவின் பேரால்
இம்பரினில் வடவரைக்குத் தென்புவியைச்
சம்புத்தீ வென்று சாற்றும். 32

599. உரைக்குமித னெல்லைநூ ருயிரயோ
சனையகல முடைய தந்தத்
தரைக்குளொரு பாற்பரத கண்டமெனச்
சாற்றுமது தன்னிற் றென்பால்
திரைக்கடல்சூழ் உலகிலுயர் காசியெனச்
செப்புமதிற் றிரள்கல் லோல
மிரைக்கவருங் கங்கையதன் ரேழியர்க
ளென்னதியெட்' டிசைக்கு மாதர். 33

600. நிருமதை காவேரி கவுதமிசரயு
சரச்சுவதி நீல வேணி
பெருகுஞ் செழுந்திரை யமுனை துங்க
பத்திரையெனவே பிறங்கு மேன்மை
மருவுநதி யிவையெட்டுந் தருமநதி
யாமிவற்றுள் வளமை சார்ந்து
கருதரிய காவிரியே கங்கையினும்
மிகப்புனிதங் கழறுங் காலே. 34

601. இத்தகைய காவிரிமாட்
டுளதாரு யிரந்தானம்
உத்தமமா மிவற்றுள்ளு
முயர்காசிக் கொப்பாக
வைத்தபதி யோராறு
மற்றவற்றுள் ளும்புகழ்சேர்
மெத்தகைய காசியினும்
விசிட்டமுள தொருதானம். 35

602. மற்றதுகா விரிநதிக்கு
மன்னியசீர்த் தென்றிசையி
னுற்றதுயோ சனையிரண்டி
னுயர்திருவாஞ் சியமென்பர்
சுற்றுமத னெல்லைகலிக்
கைங்கோசஞ் சூழ்ந்துறையப்
பெற்றவர்கள் முத்திநெறி
பெறுமிடமா மிவையனைத்தும். 36

603. அல்லார் குழலா யங்நக
ரதன்மாட் டொருபொய்கை
செல்லார் பொழில்சூழ் புண்ணிய
தீர்த்த மதனுமம்
கொல்லா வுயிர்கொன் றுண்பவர்
குருதற் பகர்சுரையின்
பொல்லா ரெவரேனும்
மதுபுக்கா டினர்முத்தர். 37

604. வேதந் தெரிதரு மந்தணர்
விண்ணோர்தவ முனிவோர்
ஓதங்கிளர் கடல்போலவு மொலியிட்
டளவில் லோர்
ஏதங் கெடவதின் மூழ்கிமுன்
னெமையெய் தினரெண்ணார்
பூதங் கலிபேய் நோய்வினை
போமென் பதுபொய்யோ. 38

605. அன்பா லுல கேழும்புகழ்
புண்ணிய தீர்த்தத்
தென்பாலருள் வடிவின்னொரு
தெய்வீக விலிங்கந்
தன்பாலெம துண்மைச்சிவ
சாதாக்கிய வடிவி
னின்பா லதில்யாமென்று
மிருப்போமிக வோமால். 39

606. முன்னந்த விலிங்கத்திடை
முயல்பூசையி னயன்மால்
இன்னந்தல வாசம்மதி
லுறையுந்தொழில் பெற்ருர்
மன்னுந்தவ முனிவோர்களும்
மறையோர்களு மேவித்
தன்னந்தனி யானந்த
சமாதிப்பய னுற்ருர். 40

607. அத்தகு சோதி லிங்க மூர்த்தத்தி
னரியயர் போற்றிநின் றிசைப்ப
நித்தமும் யாமிங் கமர்ந்தகா ரணமும்
நிலவுபுட் கரணிபோந் தமையு
மித்தரா தலமு மெண்ணுநன் காசிக்
கேற்றமாம் பண்புமிவ் வரைமேல்
வித்தக விமானத் தொருவனின் றணைந்த
வியப்பும்நீ கேள்விளம் புவமால். 41

608. விண்முத லவனி படைத்தளித் தழிக்கும்
வினைவழி சிருட்டிபல் விதமாங்
கெண்ணுறி னெமது தகைமைசேர் சிருட்டி
யிதுரவுத் திரியமென் றிசைக்குந்
தண்ணருந் துளப மாலய னிவர்கள்
தரமும்யா முதவிடப் பெற்ற
பண்ணுமற் றவர்தஞ் சிருட்டியு மெமதாம்
பண்டிர தாந்தகற் பகத்தின். 42

609. ஏழிருங் ககனத் தெழிலியுங் குழுமி
யெழுந்துகீ ழுவரிமேற் பொங்கத்
தாழிருங் கரிக்கை மானவள் ளுறையின்
றுரைசாய்ந் திடப்பாகத் தோங்கு
மூழிவெள் ளத்து முறுகணென் றின்றி
யுவந்துநம் பதிகளோ ராறும்
வாழமற் றுள்ள வுலகெலா மழிந்து
மாயையின் வயினடங் கினவால். 43

610. ஒடுக்கமுற் றடைந்த வுலகமு முலகத்
துயிர்களு முயிர்வினை வழியே
தொடுக்குமா மாய யோனியின் வகுப்புஞ்
சுபாசுப விகற்பமு மண்டத்
தடுக்குமந் திரங்கள் மறைகளா கமங்க
ளனைத்துமிம் முறைமையே மீள
வெடுக்குமா கருதிச் சிருட்டிநாந் தொடங்கி
யியற்றிடு மினையதோர் ஞான்று. 44

611. வந்துபூ தலமா னெமைப்பணிந் தரற்றி
மன்னுயிர் அனைத்துமுன் புரிந்த
பந்தவல் வினையின் பாரமே பெரிது
பரித்திடப் படாவென விரப்ப
வந்தவல் வினைதீர்த் தணுக்களுய்ந் திடவு
மரற்றிய வவனிமா மங்கை
சிந்தையின் புறவு மரியதோ ருபாயந்
தெரிந்தொரு செய்திசெய் தனமால். 45

612. இங்குநா முறையுங் கயிலையஞ் சிகரத்
திரணிய பதுமபுட் கரணி
தங்குமோர் சிமையம் அதனையத் தடாகந்
தன்னெடுந் தகைபெற வெடுத்து
மங்கைகேள் நமது தொன்மையாச் சிராம
மாந்திரு வாஞ்சியத் தமைத்தோம்
பொங்குசீ ருலகம் போற்றியத் தலத்துப்
புண்ணிய தீர்த்தமென் றுரைக்கும். 46

613. யாமதற் கணிய தென்றிசை மருங்கி
னிருந்ததோ ரிலிங்கமூர்த் தத்தின்
பூமிசை யயன்மால் போற்றவே யனந்த
பூரண கலைகளோ டமர்ந்தோம்
வாமமா யெமக்கங் கிருந்தநின் றனக்கும்
வாழவுந் தாளெனப் புகலுஞ்
சேமமாய் விளங்கு மத்தல மகிமை
செப்புதற் கரியதா மென்றார். 47

614. கயிலையம் பொருப்பின் சிகரமு மதன்
கமலபுட் கரணியு மகலா
வியல்பினி னீயும் யாமுமங் கிருக்கு
மிப்பெரும் பெருமைபெற் றதனால்
புயல்வளர் சோலை வாஞ்சைமா நகரம்
பூகயி லாசமென் றுரைக்கும்
அயலவற் கறிய வெளியதோ வினைய
வதிசய மமர்ந்தபுட் கரணி. 48

615. கற்பகத் தருக்கள் மருங்கெலாஞ் சூழ்ந்து
கடிகமழ் கமலமெய் சார்ந்து
பொற்புடன் விளங்கு மதற்கு யாம்விதித்த
புண்ணிய காலமும் பலவா.ல்
அற்புத மிகவு மாகமா தத்தின்
அமரபக் கத்தினட் டமிநா
ளெற்படு மமயத் தெழுந்ததிற் படிவார்க்
கெய்துவ தெம்பெரு முருவம். 49

616. மறையோர் பலர்சென் றந்தமகத்
தட்டமி வாரத்
துறையூ டவர்புரி தர்ப்பண
கிரிகைக்கிணை சொரியும்
நிறையார்சிறு திலதண்டுல
மதுகண் டனநீர்வா
யுறைகின்ற தோர்மண் டூக
மெடுத்திட் டனவோடி. 50

617. இரைபற்றிய சிறுதேரையை
யெதிர்காணுமோ ரரவம்
விரவிக்கது விப்பற்றி
விடாதாக விடஞ்சேர்
நிரைபற்பட வுயிர்போயவி
யாமுன்விட நேரே
வரவுய்த்தது மெலிவுற்றிடு
மரணத்துயிர் விலகி. 51

---

615. மாகமாதம் - மாசிமாதம்; அமரபக்கம் - தேய்பிறை; அட்டமி-பௌர்ணமி கழித்த எட்டாம் நாள்.

618. மற்றந்த மணற்றேறரை
வலப்பாற்செவி யின்கண்
உற்றன்பி னெழுத்தஞ்சு
முரைத்தே யதனுக்கங்
கற்றந்தனி லெம்போலுள
சாரூப மளித்தோஞ்
சுற்றந்தக விமையோர்களு
மலர்மாரிசொ ரிந்தார். 52

619. அந்தக்கண மேநங்கண
மாயுள்ளவ ரவன்முன்
சந்தக்கக னத்தேரிர
தங்கொண்டெதிர் சார்ந்தார்
சிந்தைக்களி யுற்றன்னவன்
அத்தேர்மிசை கொண்டே
யிந்தக்கிரி சிகரத்தினி
லிமையோர்தொழ வந்தான். 53

620. வண்டேன்மொழி யாயிங்கிவன்
வரையின் மிசையேநீ
திண்டேரினி லெம்போலொரு
சிவரூப மிருக்கக்
கண்டேனென வின்றிங்குரை
செய்யுங்கண நாதன்
விண்டேசொல வாறேநமை
மேவும்பரி சுற்றான். 54

மண்டூக முத்திச் சருக்கம் முற்றிற்று.
ஆக சருக்கம் 13-க்கு திருவிருத்தம் 620.

---

618. திலபுண்டுலம்-எள் கலந்த அரிசி (பிதிரர்களுக்கு இடும் பிண்டம்) மண்டூகம்—தவளை;

14. காசியாதிக்யச் சருக்கம்

621. உற்ற சித்திர மறிவிலாத்
தேரையொன் றதற்கே
மற்ற தத்தல வாசமும்
மானமும் பெறலாற்
சொற்ற ரும்பொழு திதற்கிணை
யாதெனச் சொல்வோம்
நற்ற லங்களி னுரிமையந்
நகரமே நமக்கு. 1

622. சிறந்த காசியி லிறக்கினுஞ்
செனித்தமுற் பவத்திற்
றுறந்த வல்வினைத் துயரெலாந்
தொலைக்கவோர் முகூர்த்தம்
நிறைந்த வேதனை வயிரவர்
சூலநீ ணுதிபுக்
குறைந்து பட்டபி னிச்சய
முத்தியவ் வுயிர்க்கு. 2

623. இந்த நன்னகர் வாஞ்சியத்
திறந்துளோ ரெவற்கும்
முந்த யாமவர் செவிக்கெழுத்
தஞ்சையு மொழிவோம்
அந்த வெந்திறல் வயிரவர்
வாதையு மடையார்
வந்து நங்கணத் தவரொடு
வாழ்வரந் நிலையே 3

624. வாதை செய்தொழி லின்மையின்
வயிரவப் புத்தே
ளேத மொன்றற வாதனத்
திருக்குமா லையத்திற்
றீதி லாத்திரு வாஞ்சிய
மிளையதெய் வீக
மாத லாலது காசியின்
அதிகமென் றுணர்தி. 4

625. என்றிவ் வாறெலா மிறைதிரு
வாய்மலர்ந் தருள
மன்றன் மென்மலர்க் குழலுமை
மகிழ்கூர்ந் தருளிக்
கொன்றை வார்சடைக் கொழுநரை
யிருகரங் கூப்பி
யொன்று பின்னந் தன்பெரு
விருப்பினு லுரைப்பாள். 5

626. உடையநா யகனே யந்நக ரியற்கைகேட்
டுவகைமிக் காயின தமியேற்
கிடைய றுமல்நீ யெண்ணில்சத் திகளோ
டிருக்குமத் தொன்மையா மிலிங்கத்
தடைவில் யானுனை யருச்சனைபுரிவதற்
காசையே னெனவதற் கிசைந்து
விடையின் மேவினன் வருகென வுமையுடன்
வெள்ளியங் கிரிமிசைப் பெருமான். 6

627. வான கத்துள விமையவ ரிருடிகள்
மாதிரத் தலைவரெண் வசுக்கள்
தான வத்திரள் மருத்துவ ரியக்கர்
பாதலத்தவ தபனரா மிருவர்
ஏனை வான்வ ருருத்திர கணத்தவ
ரிந்திரன் றிசைமுகன் நெடுமால்
கான யாழிசை நாரதர் தும்புருக்
கருடகின் னரர்புடை விளங்க. 7

628. மறைகள் போற்றிட வந்தர பல்லியம்
வலம்புரி குடமுழா வொலிப்ப
விறைவன் வாணிடைத் தென்றிசைப் போதுவா
னிடமருங் குமைமுக நோக்கிக்
கறையி லங்குவேற் கண்ணிநங் கயிலையைக்
காசியை நிகர்க்குமா தலங்கள்
அறைவம் நீணிலத் துளபல காண்டிநீ
யன்னவென் றறையலுற் றனனால். 8

629. தம்மை யோர்ந்துதம் பாசமுஞ்
சடமெனத் தேறி
யெம்மை யும்பெரி துணர்ந்துதம்
மிழந்துளா ரிருக்கும்
மெய்ம்மை நற்பதி யிதுபெயர்
விளம்பில்மா காள
மைம்ம லர்ப்பொழில் சூழ்பதி
யிதுவட மதுரை. 9

630. தாம ரைத்திரு விளங்குகே
தாவிரித் தக்க
ராம மென்னுமோர் செழுநகரிது
வும்நம் மிடமால்
மாம றைப்பெரு முழவரு
வரைபருப் பதமென்
நாம நீள்பதி யிதுவும்நம்
தலைமையாம் நகராம். 10

631. புதுமணித் திரைகொ ழிக்கும்
பொங்குபொன் முகரித் தீர்த்த
மதுநமக் குரிமை யாகு
மணிநகர் திருக்கா ளத்தி
யிதுமணற் றிரட்டி யருச்சித்
தெம்மைநீ யிறைஞ்சு மெல்லை
கதுமென விரைத்தெ ழுந்த
கம்பையா றுடுத்த கச்சி. 11

632. என்றிவை முதலாய்ப் பொன்னி
நதிமருங் கிறுவா யாகத்
துன்றிய தலங்கள் யாவுஞ்
சுரிகுழற் குணர்த்தி யெங்கோன்
மன்றலஞ் சோலை சூழ்நம்
வாஞ்சிய மிதுவென் றங்கண்
வென்றிவெள் விடையி ழிந்தான்
விபுரர்பூ மாரி தூர்த்தார். 12

633. அண்ணலங் கணைந்து தேவ
ரரியயர் முனிவர் போற்றப்
பண்ணரு மறைகள் பாடப்
பண்டுமேற் றிசையை நோக்கி
யெண்ணரு மூழி ஞான்றங்
கிருந்ததெய் வீக லிங்கத்
தொண்ணுதல் காண ஞால
முய்யவே யினித மர்ந்தான். 13

634. பாடின மறைகள் நான்கும்
பம்பின பேரி சங்கம்
ஆடினர் தட்ட மிட்டங்
கரவொலி பெருக்கி யன்பர்
நீடினர் விண்ணு ளோர்கள்
நிறைந்தனர் மண்ணிலுள்ளோர்
வீடின வினைகள் யாவும்
விளங்கின வுலக மெல்லாம். 14

635. கன்னியங் கிறைவற் போற்றிக்
கரகம லங்கள் கூப்பிச்
சென்னிதாழ்ந் திறைஞ்சி நின்றாள்
தெரிசன மெய்தா தாக
முன்னியல் வெள்ளி வெற்பின்
மொழிந்தவை முன்னி யையா
வென்னையிங் ககல நீத்தோ
வெனப்பணி கொள்வா யென்றாள். 15

636. அன்புநெஞ் சங்கு ழைப்ப
அங்குநின் றரிதி னீங்கிப்
பொன்பயில் முளரிக் கானம்
பூத்தபுண் ணியதீர்த் தத்தை
யின்புற நோக்கிச் சூழு
மும்முறை வலஞ்செய் தேத்தித்
தன்பெரு விருப்பிற் கீழ்பாற்
தமனியப் படிமா டெய்தி. 16

637. மங்கையஞ் ஞான்று மாசி
மகத்தில்முற் பக்காந் தத்தில்
செங்கையி லணிந்த பைம்புற்
பவுத்திரஞ் சிறந்தி லங்க
வங்கணின் றகில தீர்த்த
மனைத்தையு முள்க வாங்கே
கங்கையே முதலா யாவுங்
கடிதுவந் தெய்திற் றன்றே. 17

638. வையகத் தரும தீர்த்த
மாநதி பலவும் வைகும்
பொய்கைமற் றதனைக் கண்டு
புந்தியி னுவகை பொங்க
வையரஞ் செழுத்து முள்ளத்
தமைத்தகன் புனற்றி றினைத்து
துய்யவெண் பட்டு டுத்திச்
சுரிகுழற் புலர வாற்றி. 18

---

637. முற்பக்கம்-பௌர்ணமிக்கு முன்: அந்தம்-கடைசி;

639. தெய்வவெண் ணீறு சென்னி
திருநுதல் முதலா யெங்குஞ்
சைவநன் னெறியிற் சாத்தித்
தயங்குவித் துரும சாலங்
கைவர நடுவு கோத்த
கண்டிமார் பிலங்கப் பூண்டு
மெய்வரு தவ வேடத்தின்
விமலர்பொற் கோயில் புக்காள். 19

640. பரிசன மான தெய்வப்
பாவையர் பலரு மீண்டி
வரிசையின் வடித்த தூய்நீர்
மதுமலர் அலங்கற் கோவை
விரைசெறி கலவை பொற்பூண்
வேண்டிய நிவேத னுதித்
திரவிய மனைத்தும் பூசைக்
கேற்றவை தெரிந்து நல்க. 20

641. சுருதியா கமங்கள் சொற்ற
சொன்முறை துவார பூசை
யரியவாங் தேக சுத்தி
யந்தரி யாக மாதி
புரிதரு சுத்தி நான்கும்
போற்றிய பின்ன ரன்ன
திரிபுரை லிங்க சுத்தி
செய்வளத் திருமு னின்று. 21

(இச்செய்யுள் காகிதப் பிரதியில் மாறுபட்டுள்ளது.)

642. செய்யபொன் வள்ளத் தார்ந்த
செழுநறுந் தயிலக் காப்புந்
துய்யமா மஞ்சள் நெல்லித்
துகளறுங் காப்புஞ் சாத்தி
யையருக் கினிய பஞ்சா
வமிர்தமு மமைவித் தன்பின்
நெய்யளப் பரிய பெய்து
நீடிள வெந்நீ ராட்டி. 22

643. இனியபாற் றயிர்செந் தேறல்
இக்குமுக் கனியின் சாறு
புனிதநன் னீர்பூ ரித்த
பொற்குடங் கோடி கோடி
கனிவுடன் மடவார் நல்கக்
கைமலர் சிவப்ப வாங்கித்
தனிமயிற் பேடை போல
தம்பிராற் கபிடே கித்து. 23

644. சகத்திர தாரை நீத்தஞ்
சந்தனக் குழம்பு சங்கி
னகத்தினி தமைத்த சுத்த
அருக்கிய மடைவி லாட்டி
விகற்பதுண் டூசு சாந்த
மெளியகற் பூர ஞானந்
தொகுத்தபன் மலர லங்கல்
சுடர்மணிக் கலங்கள் சாத்தி. 24

---

643. செந்தேறல்-செந்தேன்; இக்கு-கரும்பு; முக்கனி-வாழை, மா, பலா;

645. குலவிய தூப தீபங்
கொடுத்துநல் லடிசில் வர்க்கம்
பலபரி கலத்து மேற்றிப்
பண்புடன் மாற்றி யேவெள்
ளிலையடைக் காய்நி வேதித்
திறைவனுக் குபசா ரங்கள்
நிலவுமா லாத்தி மற்றும்
நிகழ்த்தியம் முறையே செய்து. 25

646. சிந்தைமிக் குவகை கூர்ந்து
செப்பித்தநன் மலருஞ் சாத்தி
அந்தமில் தலைவர் தம்முன்
அடிபணிந் திருகை கூப்பி
இந்தவென் பூசை கோடற்
கேற்பதே விறைவற் கென்று
நைந்துநைந் திருகண் மாரி
நனிபுக வழுத்தல் செய்தாள். 26

647. அரியா ரயனு ரெவராலு
மறிதற் கரியாய் அடியேனைப்
பிரியா வாழ்வே பெம்மானே
பேரா னந்தப் பெருங்கடலே
வரியா டரவ மரைக் கசைத்த
மன்னே பொன்னே மாமணியே
துரியா தீதப் பரஞ்சுடரே
சுருதிப் பொருளே தோன்றுயே. 27

648. கண்ணே மணியே கமழ்தேனே
கனியின் சுவையே கலைவல்லோ
ரெண்ணே வடிவே முடிவில்லா
வென்னா ரமுதே யின்னுயிரே
பெண்ணே யாணே யலியேயெம்
பிறப்பை வெறுப்பார் பெறும்பேறே
விண்ணே வளியே யொளியேவெள்
விடைமே லரசே விரவாயே. 28

649. என்று தரவிற் றுதிகூறு
மிமையா சலைதன் னெதிராகக்
குன்று மேன்மைக் குடிலையிடைக்
குறையா விந்து பரநாத
மொன்றாய் ஞாலத் துயிர்காப்ப
வுருக்கொண் டருளுஞ் சதாசிவமாய்
நின்று னங்கண் மலைமானும்
நிலத்திற் பணிந்தாள் நெடிதுயிர்த்தாள். 29

650. பணிவார் பயில்வார் பற்றறிந்தும்
பற்று நிற்கும் பரஞ்சோதி பரமேட்டி
மணிவா ணகையை யெடுத்தணைத்து
மடிமேல் வைத்து மகிழ்ந்தருளித்
தணியா வன்பிற் பெரும்பூசை
தனையிங் கமைத்தா யெமக்குமையே
யணியா வனநல் வரம்வேண்டிற்
றறைநீ யென்று னறைகின்றாள். 30

651. இறைவகேள் கயிலை மலையினும் புனித
மிப்பெரும் பதியிதற் குள்யா
முறையுமா றருள்நங் கணமும்வா ரணத்தின்
முகன்குகன் விசும்புளோ ரெவரும்
நிறையவீண் டினிய வாசமெய் திடவும்
நின்னையித் தினமிறைஞ் சிடவும்
முறையிலர்ச் சனையைப் புரிந்துளோர் காய
முத்திசித் தியினியெய் திடவும். 31

652. இலகு கார்த்திகை யருக்க வாரமுட
னிந்து வாரமிவை யேற்றமாய்
நிலவு மிப்பெரிய தரும புட்கரணி
நீர்ப டிந்துநினை வழிபடுந்
தலைமை யார்கள்நினைக் கின்ற நன்மைபெறு
தன்மை யுந்தருதி வரமெனச்
சிலைநு தற்கவுரி சொல்ல வவ்வியல்
சிறக்கவென் றருள சிறந்தனன். 32

653. அன்ன மன்னவ ளுரைத்த வாறருள்செய்
யமல னன்னிலை யுவந்துதன்
னின்ன ருட்படிவ மாய்வி ளங்குசிவ
லிங்க மின்புற நிறைந்தனன்
மின்ன னாளுமிறை வன்றனக்கிட
மருங்கில் மேவினள்விண் ணோர்களு
முன்ன வன்றனை விடாது சேவைபுரி
முறைமை பெற்றருள் முயங்கினார். 33

---

652. அருக்கவாரம்-ஞாயிற்றுக்கிழமை; இந்துவாரம்-திங்கட்கிழமை.

654. உரைசெ யற்கரிய வன்ன தொன்னகரை
யுள்கினும் பரம முத்தியா
விரச தக்கிரியி னிலகு சேகரமு
மிரணி யப்பதும வாவியும்
வரசு வாவினர் மரித்து ளோற்கிடர்
செயாத வாழ்வுமிக வாய்த்தலாற்
கரைசி றந்தபகி ரதிகு லாவுமுயர்
காசி யின்னிதுவி சேடமே. 34

655. வீசுவெண் டிரைய ளக்கர்
விரித்தபூங் கலையாய்ச் சுற்றுங்
காசினி தனக்குள் மிக்குங்
காசியே விசிட்ட மென்பர்
தேசமா ரன்ன காசிச்
செழுநகர் தனிலு மேலாம்
மாசில்தொல் புகழி னோங்கும்
வாஞ்சிய வளமை சொற்றோம். 35

காசியாதிக்யச் சருக்கம் முற்றிற்று.
ஆக சருக்கம் 14-க்குத் திருவிருத்தம் 655.

15. பிரமோற்பவச் சருக்கம்

656. இன்னு மோர்கதை முனிவரர்
கேளுமிங் கிசைப்பன்
முன்ன மிந்நகர்த் தருமபுட்
கரணியின் முளரிப்
பொன்ன லர்த்தவி சின்னிடை
நான்முகப் புத்தேள்
உன்ன ரும்பர னருளினு
லுற்பவ முறைமை. 1

657. பரம காரணன் பரசிவன்
பரமகற் பத்தின்
விரவி யேயொரு திருவிளை
யாட்டினை விரும்பி
வரைம கட்கொடி தன்னெடும்
வனசபுட் கரணி
குரையு நற்புன லாடுதல்
குலவினு னொருநாள். 2

658. ஆடு தண்புனல் அகன்றதென்
கரையினுக் கயல்தெண்
மாடு சோதியி னிறைந்தருள்
மல்குலிங் கத்தி
னூட மர்ந்தன னமர்ந்துழி
யுவகைமிக் கதனுல்
நீடு மத்தடம் புனலெழில்
நினைந்துகண் ணுற்றுன். 3

659. கருணை நோக்குவைத் தருளது
மன்னபுட் கரணி
தெருந றும்புன லதனிடைச்
சிறந்தவா யிரந்தோட்
டருண முண்டக மொன்றெ
ழுந்தலர்ந்தன வதன்கண்
ணுருந லந்திகழ் பொகுட்டிலோ
ரயன்விரைந் துருத்தான். 4

660. விருப்பி னுற்றது நோக்கினான்
மேற்றிசை முகத்துத்
திருப்பு னைந்ததோர் பேரொளி
தெய்வலிங் கத்தி
னிருப்ப தோர்பர சிவனையு
மிறைவி யையும்பொற்
பொருப்பி லோர்பசுங் கொடிபடர்
பொற்பெனக் கண்டான். 5

661. கண்டு தன்கருத் தினிதுறக்
கமலவுற் பவமீ
தெண்ட ருந்திறத் திவரருட்
காரண மென்றே
கொண்ட தன்கரை யளாவிய
குளிர்புனல் படிந்து
மண்டு காதலி நியமமு
மறைமுறை முடித்து. 6

662. பூசை செய்தலை விரும்பியப்
புனிதலிங் கத்தை
யோசை நான்மறை யோதியஞ்
செழுத்தையுச் சரித்து
தேசு சேர்மலர் மஞ்சனந்
திரவியம் பலகொண்
டாசை தீர்தர வருச்சனை
யடைவினி லியற்றி. 7

663. இரந்து நிற்பவங் கயனெதி
ரிறையெழுந் தருளிச்
சுரந்த வின்னருட் கடலெனத்
தோற்ற மெய்திடலுங்
கரைந்த வன்பொடு கண்களி
கூர்தரக் கண்டு
சிரந்த னிற்கரங் குவித்துவீழ்ந்
திறைஞ்சி ஞன்றிருமுன். 8

664. பணிந்தெழுந்துதன் கண்கள்நீர்
பகீரதி பெருக்கிற்
றணிந்தி டாநெடுந் தாரையே
சாய்ப்பவண் டுளசப
மணிந்த மால்புவி கீண்டுமவ்
வண்டவப் புறத்துந்
துணிந்து தேடவு மரியதாள்
தொழுதுமுன் றுதிப்பான். 9

665. மாது பாகனே வானவர்
தலைவனே சரணம்
தாது லாமல ரிதழியந்
தாமனே சரணம்
ஆதி நாதனே யகண்டித
வடிவனே சரணம்
கோதி லாதவென் குணப்பெருங்
குன்றமே சரணம். 10

666. சித்த சித்தென நிறைந்தவை
யாவையுஞ் செறிந்த
சுத்த னேதொழு வார்மனத்
துணைவனே சரணம்
முத்த னேமுடி வொன்றிலா
முதல்வனே சரணம்
அத்த னேயெனை யாளுடை
யண்ணலே சரணம். 11

667. எனத்து தித்தெதிர் நின்றநான்
முகன்றனை யிறையோன்
கனத்த கங்கணக் கைகளா
லணைத்துநும் பூசை
யனைத்து நன்றுநன் றுவகைமிக்
காயின நம்பால்
நினைத்த நல்வர மென்னென
நிகழ்த்துவா னவனும். 12

668. ஒடுக்க மெய்திய வுலகமு
முலகயோ னிகளும்
அடுக்கு முன்னேயி னமைப்பவு
மதனிடை கற்பத்
திடுக்கண் ணுற்றகல் திருவெலாம்
எய்தியின் புறவும்
கொடுக்க வேண்டுமென் றயன்வரங்
கூறினன் றொழுது. 13

669. ஆங்க தற்கினி திருவுள
மகிழ்வுசெய் தறைவான்
ஈங்கு நீர்மனத் தெண்ணிய
வண்ணமிவ் வண்டந்
தீங்கு றுவகை படைத்திடுந்
திறமுமக் களித்தோம்
பாங்கி னுற்புவி யமைத்திடு
மெனப்பணித் தருளி. 14

670. சீல முற்றெமைப் பற்றியித்
தருமதீர்த் தத்தி
ஞலு மானந்த கூபநீ
ராலு மர்ச்சிக்குங்
கால மேன்மையை விதித்தன
மன்னவே கருதி
யேல வாதரிப் பவர்களே
யெம்முருப் பெறுவார். 15

670. எம்முரு-சிவசாரூபம்.

671. ஈண்டி ருந்தெமக் காலய
மியல்பினு லெடுத்து
வேண்டு மிந்நகர் வீதியும்
விழாவும்நன் கமைத்து
மூண்ட பேரணி புவிதொழ
முற்றுவிப் பீரென்
ருண்ட நாயக னருளியந்
நிலைதிரோ பவித்தான். 16

672. ஆதி நாயக னருட்கடை
நோக்கினு லலர்த்த
போதி னுன்முக னுற்பவ
முற்றமை புகன்ருய்
கோதி லாமலர்த் தவிசிருந்
தன்னவன் குயிற்று
மேத மில்பிர மண்டத்தி
னியல்பினி யுரைப்பாம். 17

பிரமோற்பவச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் 15–க்கு திருவிருத்தம் 672

16. சிருட்டிச் சருக்கம்

673. மாது பாகன் மகிழ்ந்தருள் வண்ணமே
தாது கொண்ட சரோருகப் போதினுன்
மீது கீணிலை நள்ளென மேலவர்
ஓது நீள்பிர மாண்ட முயர்த்தினுன் 1

674. இருக்கு மிப்பிர மாண்ட மியற்றிய
பெருக்கு முள்ளவை யாவும் பிறங்கவே
தருக்கம் வெம்பணி ராசனுஞ் சாற்றிலன்
சுருக்க மாயிவை தேர்ந்துசொல் வாமரோ. 2

675. ஏறு செம்பொனி லண்டவோட் டின்கனம்
கூறின் மேலொடு கீழிரு கோடி யுள்
ளாறு பத்துமுப் பானெட்டு யோசனே
நூறு கோடி யனேத்து நுவன்றிடில். 3

676. புவன மொன்றடி யின்னக வாய்ப்புனேந்
துவமை யற்றகா லாங்கி யுருத்திரர்
அவரி ருந்ததி கார மியற்றுவர்
நவ்ம வர்க்குள நன்மை யியற்றுவாம். 4

677. கருமை செம்மைபொன் வெண்மை கலந்தநாற்
றிருமு கங்கள்நான் மூன்று திருக்கைபத்
தொருப திற்றுநா ருயிர மேயுயர்
அரிய ணைக்கிரண் டாயிரம் யோசனே. 5

---

674. பணிராசன்-ஆதிசேஷன்.

678. கைகள் பத்தினுங் கட்டுவாங் கஞ்சிலை
யெய்யு மம்பு கபால மிலங்குவாள்
வெய்ய பாசம் பரிசையோ டங்குசம்
ஐய மில்லவர் தம்மவை யம்மிவை. 6

679. கோவில் யோசனை கோடி யதனுழை
மேவு மங்கவர் மெய்யிற் சுவாலைமேற்
றூவு மீரைந்து கோடி தழற்புகை
யாவ துமதன் மேலுமைங் கோடியே. 7

680. சொற்ற விங்கிவ ரைப்புடை சூழ்ந்துகை
பற்று சூலப் படையி னுருத்திரர்
முற்று மாரழல் மூர்த்த மெனத்தகு
முற்று வாழ்புர மும்மொரு கோடியே. 8

681. உறையு மிப்புவ னத்துள யோசனை
குறைவி லெண்ணிரு கோடி யுயர்ச்சியின்
முறைவ ழாது குயிற்றி முடித்தன
னிறையு மேவரி தெங்கெவ ராலுமே. 9

682. விரவி யிப்புவ னத்தை விடுத்துமேல்
நிரைய மன்பது கோடி நிறுத்தினு
னுரைசெய் வாரிவை யார்க்கென்ன வோதிடிற்
றரையில் வல்வினைத் தீயவர் தமக்கவை. 10

683. பெருக்க மாமிவற் றுட்பிர தானமா
யிருக்கும் மாநர கென்பதெண் ணுன்கிவற்
றுருக்கி ளர்த்திடி லொன்றின்மே லொன்றுற
நெருக்கி யேத்தி நிறுவினன் மீமிசை. 11

684. கோடி யோசனை யோரொன்று கூறிடி
னூட தற்கதற் கூனநா ருயிரம்
ஈடி லாத விடைவெளி யீங்கிவை
நாடில் முற்றுமெண் ணுன்குள கோடியே. 12

685. வான்ற ருந்திறல் வாய்த்தகூன் மாண்டர்சீர்
ஊன்று மப்புவ னத்துள்ள யோசனை
யேன்ற வாயிரம் நூறுழி முப்பதின்
மூன்று கோடி யமைத்தனன் முற்றுமே. 13

686. மற்று மன்னதின் மீதுகூன் மாண்டர்சீர்
உற்ற தோர்புறங் கோடி யுயர்ச்சியின்
அற்ற யோசனை யாயிர நூற்றின
சுற்று மெண்ணில் புரம்புடை சூழ்ந்தது. 14

687. இன்னு மேலுமோ ரேழுள பாதலம்
பன்னு மோரொன்று பரந்துள பான்மையை
யுன்னி லொன்பதி னுயிரம் யோசனை
யின்ன தன்றி யிடைவெளி யாயிரம். 15

688. பாத லத்தி னுயர்ச்சி பகர்ந்திடின்
ஈத னைத்து மெழுபதி னுயிர
மீது மோர்புர மாடகர் மேவிய
தாது மப்பரி சேபதி னுயிரம். 16

689. எட்டு மெண்பதி னுயிரம் யோசனை
மட்டு யர்ந்து கவிகைவைத் தாங்குருப்
பட்ட னைத்தும் பசும்பொன் மயத்தவா
யுட்ட ருக்கிய செல்வமுற் ரேங்குமால். 17

690. ஆடகேச ரரும்புவ னத்தின்மேல்
நீடு மேதினி நின்ற வடிக்கனம்
நாடி லைந்துநான் காயிரம் யோசனை
பீடு சேர வமைத்திவை பேணினன். 18

691. அண்ட வோடுதொட் டம்புவி யின்கணங்
கொண்ட யோசனை யன்பது கோடிகீழ்
முண்ட கத்தயன் முன்னி முடித்துமேல்
மண்ட லத்தை வகுத்தமை கூறுவாம். 19

692. ஓங்க லொன்றுநா றுயிர
யோசனை யுயரப்
பாங்கு றச்சமைத் தெண்ணிரண்
டாயிரம் படிக்கீழ்
வாங்க லூன்றியெண் பத்துநா
லாயிர மண்மேல்
வீங்கி விண்டொட நிறுவினன்
பசும்பொனால் விளங்க. 20

693. அடிய தெண்ணிரண் டாயிர
யோசனை யகலம்
முடிவி சாலமுப் பத்திரண்
டாயிர மொழியின்
வடிவு கண்டிகை யதனின்மேல்
மனோவதி யெனப்பே
ருடைய தன்சபை யொன்றுமே
லுச்சியி னமைத்து. 21

694. சூழ வெண்டிசைப் பாலருஞ்
சுரர்பெருந் திரளும்
வாழ வெண்ணிலி புரங்களா
லயங்களும் வகுத்துத்
தாழ மற்றத னடிவரை
வளையவித் தரையி
ஞூழ வெற்பின மவ்வரை
கடைக்கலா யமைத்தான். 22

695. கிழக்கு மந்தரந் தென்றிசை
கந்தமா தானம்
தழைக்கு மேற்றிசை
விபுலமுத் தரஞ்சுபாரிசமா
மழைக்கு லந்தவ ழினையமால்
வரைகள்நாட் டிவற்றி
னுழைக்கி ளர்ந்ததோர் தருக்களின்
வருக்கநான் குய்த்தான். 23

696. மந்த ரந்தனி லொருதருக்
கதம்பமவ் வரைமேல்
விந்த மொன்றது வயிப்பிரா
சம்மென விளம்பும்
அந்த விந்திய நடுவரு
ளேக்கமென் றுன்னும்
கந்த நாண்மலர் தடமிவை
கவின்பெற விருத்தி. 24

697. கந்த மாதனத் தொருதிரு
நாவலக் கிரிமேல்
தந்த னப்பெய ருற்றதோ
ரடவியின் நடுவி
னிந்த மாநில மானத
சரயுவென் றியம்பும்
பைந்த டாகமொன் றின்னவும்
பயின்றிடக் குயின்று. 25

698. புடைய ரங்தெழு விபுலமே
லரசுமப் பொருப்பின்
அடவி யொன்றுசித் திரரத
மெனவுமாங் கமைத்துத்
தடமு மொன்றுவெண் மதியினுந்
தண்ணெனத் தெளிவுற்
றிடமி குந்தசீ தோதக
மென்பது மியற்றி. 26

699. விரிசு பாரிசத்தொருவட
தருவுமவ் வெற்பி
னருகு றப்பிதிர் வனமெனு
மடவியு மமைத்துப்
பெருகு நீர்மகா பத்திர
மெனும்பெயர்த் தடமும்
நிருமி தஞ்செய்தா னதனடு
நின்றதம் மேரு. 27

700. அன்ன மேருவின் பாதிதொட்
டலைகட லளவும்
முன்ன ரும்புவி யோரொரு
திசைகளின் பரப்புச்
சொன்ன யோசனை யைம்பதி
னுயிரஞ் சுற்று
இன்ன பண்பினா ருயிரம்
யோசனை யெங்கும். 28

701. வைத்த மேருவுக் குத்தரந்
தெற்கெனு மருங்கி
னுத்த ரத்திமே லுவரிகீ
ழுவரியின் காறு
மெத்து நூலெனக் கிடந்ததோ
ரெழில்வரை மூன்று
சுற்று நீலமுஞ் சுவேதமுஞ்
சிருங்கவா னுமென. 29

702. தென்றி சைக்கணு மேல்கடல்
கீழ்கடல் சிவணி
நின்ற தம்முறை நிரைந்துநீ
ளத்தினில் நிடத
மென்ற தோர்பொருப் பேமகூ
டம்மெனும் பொருப்புப்
பொன்ற யங்கிம வானெனும்
பொருப்புமூன் றிவையாம். 30

703. நீலமு நிடதமுந் தொடநி மிர்ந்தது
கோலமே ருவினது குணக்கு மேற்கிரு
பாலினு மோரிரு பருப்ப தங்கடா
மாலிய வான கந்தமா தனம்மென. 31

704. மேருவைச் சூழ்ந்ததொன் றதனை விட்டுமேற்
பாரிசத் தொன்றுகீழ் பாலி னொன்றது
சீரிய தெற்குமுன் றுத்த ரத்தின்மூன்
றேரிய வகண்டமு மிசைக்கி லொன்பதே. 32

705. சுண்டமோ ரொன்பதுங் கலந்து மேந்தவே
தண்டமு மளவிடச் சம்புத் தீவிதிற்
கெண்டகு யோசனை யிலக்க மன்னதே
யுண்டிது சுற்றிய வுவரி யெல்லையும். 33

706. தருக்கிய வுவரியுஞ் சம்புத் தீவுமென்
றுரைக்குமிம் முறைமையி னொன்றை யொன்றுசூழ்ந்
திருக்குமேழ் கடலென வேழு தீவெனப்
பெருக்கமு மொன்றினொன் றிரட்டி பேதமும். 34

707. உவரொடு மினியபா லுற்ற வெண்டயிர்
தவலருக் கருப்பிர தந்தண் ணுமது
கவின்மிகு நன்புனல் கடல்க ளேழிவை
இவைநடு மேவிய தேழு தீவுமே. 35

708. தெரிந்தவற் றேரொரு தீவி லேழ்கிரி
யிரைத்ததி லோடுமா நதிக ளேழுள
தரித்தகல் வயினெவர்ந் தழிய தண்புனல்
விரித்தவெண் டிரைகெழு வேலை வாய்புகும். 36

709. தழுவிய பொன்வரைத் தீவுதொட்
டெழுவகைத் தீவினு மிறுதித் தீவென
மொழிவது புட்கரந் தீவு மொய்த்ததைப்.
பொழிபுயல் நன்குநீர்ப் புணரி சூழ்ந்ததே. 37

710. மற்றது தனைப்புடை வளைந்து சூழ்ந்தது
பொற்றரை நாமமு மேம பூமியே
சொற்றன ரின்னது சுரர்கு மாமெலா
முற்றனு தினம்விளை யாட்டு கந்தது. 38

711. பொன்னமர் பூமியின் புறம்பு சூழ்ந்தது
பன்னரு மிரணியப் பருதி மால்வரை
தன்னக லத்தொரு புதுச கத்திர
முன்னத மாயிர னூறு யோசனை. 39

712. ஆதவ ருதையமத் தமன மன்னபொற்
பூதர மட்டுமே புறஞ்சொ லாவதி
லேதமி லுருத்திர னிந்தி ரன்முதல்
மாதிரத் தலைவர்கள் மன்னி வாழ்வரால். 40

713. அன்னபொன் வரைப்புற மந்த காரமே
யன்னதி லுறைபவ ரரக்க ரெண்ணிலா
ரன்னதி னப்புறம் பெரும்புறக் கடல்
அன்னத னப்புற மண்ட வெல்லையே. 41

714. இவ்வகை யண்டவோட் டெல்லை யேமுடி
வவ்வட மால்வரை யாதி யாப்புடை
மைவரை யெழுகடல் வளைந்த தீவெனச்
செய்வன யாவையுந் தெரிந்த மைத்தனன். 42

715. பூமிசை வானினிப் புதல்வன் வெய்யவர்
தாமினி துலவிய சார்பின் கீழெலாந்
தோமற வாயுவீ ரைந்து சூழ்பத
மாமிது யோசனை யாயி ரஞ்சதம். 43

716. ஏயுமற் றிதுபகுத் தியம்பி லையிரண்
டாயிர மோரொரான் றமைந்த யோசனை
மாயிரு நிலனிடை மன்னு யிர்க்கெலா
மாயென வுலவுமா லனைய வாயுவே. 44

717. ஓரொரு தினத்திலுற் பாத மாயுயர்
தாருவோ டருவரைத் தகர மோதுவ
பாரிடை யில்லெரி பாவச் சூழுமவ்
வாருதி நிரையு மவற்ற வேற்றுவ. 45

718. மைம்முகி லேழையு மாக்க லந்தத்
தம்முறை யெய்திடத் தரித்து லாவுவ
வம்முகி லாருயிர்க் கவனி யின்கணே
மெய்ம்முறை பெய்வன விழுமந் தீரவே. 46

719. துன்புறு நாள்களிற் சொரிவ சோரியு
மின்புற வாமைமண் டூக மீனமும்
வன்புறு சிலையையும் வருட மாகவா
னின்புற வாயுவி னிருக்கு மேகமே. 47

720. கொண்டலித் தகைமையே குழுமிக் கொட்புற
விண்டவத் தெறிவளி விரவித் தாங்குமம்
மண்டலத் துறைபவர் மாதி ருக்களா
கண்டன னேவலா லமரக் கன்னியர். 48

721. அங்கியில் நீரினி லாக்கள் மீட்சியிற்
பொங்கிய போரிடைப் புறங்கொ டாதுடல்
மங்கினர் தாமுமம் மண்ட லத்தினிற்
றங்குவர் பிருகுவென் சயிலத் துச்சியில். 49

722. சக்கர மழுவெழுச் சத்தி முப்பிடி
கைக்கதை வாளெறி சூலங் கார்முகத்
தக்கவெம் படையுடைத் தடிகள் தாம்பல
தொக்கன வில்லவை சூழ வெங்கணும். 50

723. உரியமெய் கணிபல உதவி யன்பினுற்
பெரியவர் மொழிவழி பேணு நல்லவர்
விரிவுடை யறிவினர் வித்தி யாதரர்
அரியய ரிவரென வமைய வெண்ணிலார். 51

724. இன்னன புதுமைய ரியங்கு மண்டல
மன்னவை மூவிரண் டவற்றின் மேலுமே
பொன்னமர் வன்சிறைப் புள்ளின் வேந்தெனும்
பன்னக வயிரியும் பயில்வ தப்பதம். 52

725. நலமி லாதவர் பண்ணிய புண்ணிய நாடிப்
பலனெ லாமினி தருந்திய பதத்தினி லிருப்பார்
மலைவில் லாளிதன் வரத்தினுல் வரும்விஞயகர்கள்
குலவு முப்பதி னுயிர கோடியோர் குழுமி. 53

726. திக்க யங்கள்மந் தாகினி சித்தர்கந் திருவர்
தக்க காசிபன் மைந்தராந் தபனர்பன் னிருவர்
ஒக்கல் சேர்பதி னொருவரா முருத்திர ரினையோர்
புக்கி ருப்பரவ் வாயுவின் பதமிவை புகன்றும். 54

727. முத்தி நாயகன் முடிவிலா
முன்னவன் கிரியா
சத்தி ரூபக மாகவித்
தரையெலாம் விளக்கு
மெய்த்தி வாகர னுலகமு
மதன்மிசை விதாதா
வைத்த பல்புவ னங்களு
மதித்துமே லுரைப்பாம். 55

728. அருக்கன் மெய்யுயர மொன்பதி
னாயிர மொளிசூழ்ந்
திருக்குமண் டலமும் மடங்கி
லங்குதேர் மதங்க
ளுருக்கு மேழிசை யச்சுமெஞ்
ஞானமே யுருள்வெம்
பரிக்கு ழாமறை பணிவட
மருணனே பாகன். 56

729. வாயு வேகமே தேர்விசை
வாய்மையே பீட
மாயு லாவரு பானுவி
னுலகமொன் றனக்கி
னேயு மாயுள நூறுள
யோசனை யிதன்மேற்
றாய சந்திரன் பதமுமவ்
வுயரமே சொல்லும். 57

727. திவாகரன் - சூரியன்.

730. சந்தி ரன்பத மேலுள
யோசனை தழலோன்
புந்தி பொன்புகர் சனியென
புகலுமை வர்க்கு
மந்த மண்டலம் பத்துநூ
றுயிர மதன்மேல்
முந்தை மாதவ ராமெழு
முனிவர்மண் டலமே. 58

731. சொற்ற நற்றவர் பதமுமேற்
றுருவன்வாழ் பதமு
முற்ற யோசனை யிரண்டுநூ
றுயிர முயர
மற்றி தெண்டரின் வாயுமண்
டலமுதல் வழக்க
முற்று மேபதி னைந்துநூ
றுயிர மொழியும். 59

732. துருவ னேழிரண் டுடுக்கண
மெடுத்துள சரீரம்
மருவி மற்றுள வுடுக்கள்வான்
வலம்வர வியக்குந்
தரும தீர்ந்தம தாடியுந்
தழல்மக முடித்தும்
பெருமை பெற்றுளா ரங்கண்வாழ்
வெய்துவர் பிறங்க. 60

---

732. உடுக்கணம் - நட்சத்திரக்கூட்டம்.

733. உளவி தற்குமே லதுமக
லோகமென் றுயர்த்த
தளவி லக்கமு வைத்தழி
மூன்றுகோ டியதாம்
வளமை சேர்சிவ யோகிகள்
வாழ்வதங் கவரிற்
களக ஞலினி திருப்பர்மெய்
முனிவர்மார்க் கண்டர். 61

734. இனைய தன்மிசை யேசன
லோகமென் றிசைக்கும்
பனவர் வற்கலர் பவுரக
ரேகபா தத்தர்
செனனு மாதவர் கபிலரென்
றிவர்முதல் சிறந்த
முனைவர் வாழ்பத முயரமெண்
கோடியே மொழியும். 62

735. குலவுசன லோகமிசை தவலோக
மீராறு கோடி யாங்கு
தலைமைபுனை சனகர்சனந்தனர்சனு
தரராதி சனக்கு மார
ரிலகுதிரி சங்கமேவி நிலைபெற்ற
வுலகிதற்கு மேலு மென்று
நிலவுபதி னறுகோடி சத்தியலோ
கம்பகரில் நிகரொன் றின்றால். 63

736. அங்கதுசாற் றிடின்மறைக ளுபநிடத
மிதிகாச மாறங் கங்கள்
பொங்குதவ மேவிய யத்திரி
புராணமிவை புடைசூழ்ந் தேத்தச்
செங்கதிரி னுதயவொளி சிறந்தபிர
மாதனத்துத் தேவர் போற்றப்
பங்கயனங் கிருந்துவரு நிலைநிறுவிப்
பல்லுயிரும் படைக்குந் தானம். 64

737. வேதனுல கத்துமிசை யிருகோடி
நிவந்துளது விண்டு லோக
மாதவளங் கினிதமர்ந்து வளையாழி
தரித்தபய வரத னாகித்
தாதவிழ் பங்கயன் வகுத்த சராசரங்க
டனிகாக்கத் தண்ணென் பூவைப்
போதலரு மணிவரைபோற் றிருமாதின்
உடனமரப் பொலிவ னென்றும். 65

738. விண்டுபுர மென்பதன்மே லுருத்திரலோ
கம்படிக விளக்க மாகி
யண்டகடா கத்ததன்கீ ழிருநான்கு
கோடியுறு மதுபொற் றுருத்
தண்டலையின் வளமோங்க வாயிர நூ
றிதழுடைய தவளச் செந்தாட்
புண்டரிக வனஞ்சூழ்க கற்பூர
நறைத்தென்றல் புகுந்து லாவ. 66

739. பரந்தநதி யேரேழு பாயநறு
மலர்க்கானம் பலவு மல்க
நிரைந்தமணி மேடைகளாற் கனகவிமா
னங்களினால் நிறைந்த தாங்குப்
புரந்தரன்மால் அயர்பரவ வுருத்திரகன்
னியர்நடனம் புரிந்து பொங்கச்
சுரந்தளா விசைவீணைத் தும்புருநா
ரதர்பாடச் சுருதி போற்ற. 67

740. உற்றதொரு பொற்பினது சருவதோ
பத்திரமென் றுளதோர் கோயில்
மற்றதனி லங்கடைவாய் நந்திமா
காளரிரு மருங்கு காப்பத்
துற்றகலை மதிமவுலி யாதிபர
னெங்குநிறை சோதி மூர்த்தி
பொற்றவிசி னங்குமிருந் துலகுய்ய
வனுக்கிரகம் புரியுந் தானம். 68

741. புகலுமதன் மீதுமொரு புரமுள்ள
ததுயோக பொலிவு நீடி
யகமருவு மூங்காரத் தாலலது
பேதித்தற் கசையா வண்ட
முகடுதிறந் தடைவிப்பர் கைத்தெண்டா
லதற்குவினை முற்றி னோரை
மிகுதகைமை யாற்றெண்ட பாணியரென்
றோதுமவர் மேவுந் தானம். 69

742. தெண்ட பாணிவாழ் புரமுடி
வெல்லைமேற் றிகழு
மண்ட வோடதன் கனமொரு
கோடியீ தனைத்துங்
கண்ட தன்பது கோடியிக்
காசினி மிசைத்தண்
மண்ட லத்துயர் பிணையென
யாவையும் வகுத்து. 70

743. தோற்ற மீரிரு வகையிலேழ்
பிறப்பெனுந் தொடர்பிற்
சாற்று மாருயிர் வர்க்கமுந்
தாவரக் குழுவும்
போற்ற வுண்ணிலை யமைத்துமற்
றண்டவப் புறத்து
மாற்றல் சேர்சத வுருத்திரர்
புரங்களு மமைத்தான். 71

744. முண்ட கத்தய னிப்பிர
மாண்டமே முற்றுங்
கொண்ட யோசனை யதுசத
கோடியுஞ் சொற்று
மண்டர் கோன்றிரு வாஞ்சிய
மாங்கவன் புதுக்கி
யெண்ட குந்திருப் பணிவிழா
வியற்றிய திசைப்பாம். 72

சிருட்டிச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம்16-க்கு திருவிருத்தம் 744.



யமதர்மராஜா வாகனப் புறப்பாடு

17. திருவிழாச் சருக்கம்

745. முத்தொழிலி லுன்றனை
முதற்றொழில்செய் யென்றே
வைத்தகரு ணாலயனை
வந்தடி வணங்கிச்
சித்தமுவ கைக்கடல்
திளைப்பமல ரோன்றன
தத்தனுரை செய்தபணி
யன்பினில் முடிப்பான். 1

746. செம்மைதரு மாலையம்
அமைக்கும்வகை தெய்வக்
கம்மியரை யாதிபுரி
நூலிநெறி காட்டி
யிம்முறையி னீவிரடை
வேசெயுமி னென்றே
மெய்ம்மைவினை யாளரையு
மேவவர மேவி. 2

747. இறைவனுறை கர்ப்பகிரு
கஞ்சிகர மென்றங்
கறைபவையு பானமுதல்
தூபியள வாகக்
குறைவற விதிப்படி
யுறுப்பொடு கொழும்பொற்
பொறையென வெடுத்துநிறை
பொற்பினி லமைத்தார். 3

748. மற்றுமணி மண்டப வருக்கமவை முற்றுஞ்
சுற்றுமதில் வாயில்பல சூழவமை வித்தே
நற்றட வரைத்திரள்கள் நண்ணிய நவம்போ
லுற்றபல கோபுர மொருங்குற நிறைத்தார். 4

749. தும்பிமுகன் வேல்முருக ஞதிசுர ரெல்லாம்
பம்பியமர் கின்றதிரு மாளிகை பணித்துச்
சம்புவி னிடத்துவட கீழ்திசை தரிக்கு
மம்பிகைபொன் ஞலயமும் யாவுமமை வித்தார்.5

750. ஆதியி னளப்பரிய வூழிபல வாற்றுங்
கோதில்பர மானந்தக் கூபமுள ரிச்செம்
போதின்வினி யுந்தரும் புட்கரணி தீரத்
தீதில்துறை தோறுநிறை பொற்படிநிறைத்தார்.6

751. இந்தவகை நோக்கிமகிழ் வெய்திய விரிஞ்சன்
முந்தவரன் விக்கிரக மாகமொழி சோமாற்
கந்தர்நட ராசர்முத லாங்கடவு ளோர்நா
லைந்திறெடு மைவரையு மன்பினமை வித்தார். 7

752. அன்னவர் தமக்குறையு ளாலைய மதன்கண்
மன்னுமறை யின்படி-வகுத்தவ னிருத்திப்
பன்னுமக பூசைநெறி பன்முறை தெரிந்தாங்
கின்னவகை செய்மினென வேயினி தியம்பி. 8

753. அணிபவள மாரமணி யங்கிமகு டம்போற்
பணிநவநி திக்குவைகள் பட்டுடை பதாகை
தணிவில்கவி கைத்தொகுதி சாய்மரைநி ருத்தத்
தணிகைய ரெனப்பல கணிப்பிலவை நல்கி. 9

754. பரிசன மெனக்குலவு பான்மையர்கள் பூசைக்
கரியசிவ வேதியர்க ளாதிமறை வல்லோர்
வரிசைபுனை தானிகர்ம யேசுரர்கள் மற்று
முரிமையினில் யாவரையு மோர்ந்தினி தமைத்தான்

755. தொன்மைதரு மங்நகரி சுத்தன்மகிழ் நித்தத்
தன்மையது மாயையுத ரத்தினது போல்மாய்
வின்மையது சின்மயம தாகமுன் இருக்கும்
நன்மையத னைச்சிறி துணர்த்துவ நவின்றே. 11

756. தம்ப மாயிர நிரைசத விரசதத் தமைத்த
செம்பொன் மாமணி மண்டபத் திரள்சில வீதி
யும்பர் வான்றொடப் பளிங்கிழைத் துச்சிமேல் வயிரக்
கும்ப மேற்றிய சூளிகைக் குவைசில வீதி. 12

757. நிரைகொள் சாளரக் கருமணி நிரைபகல் தனையும்
விரவி நல்லிரு ளாக்குவ வவைசில வீதி
பரவு தோரண வாயலிற் பதுமரா கங்க
ளிரவு தன்னையும் பகல்செயு மிவைசில வீதி. 13

758. பந்து மெல்லடித் துணைகளே பதுமநாண் மலரென்
றுந்து காரளி மொய்ப்பவங் குலவுமங் கையர்பால்
வந்து சூழ்தரு காமுகர் மகரவார் குழையிற்
சிந்து மென்புழுக் கள்ளலே சிலசில வீதி. 14

759. *துளங்கு சோதிவெண்
பளிங்கினுஞ் சோமகாந்தத்துந்
தளங்கு யின்றுயர் பித்திகை
தமனியத் திழைத்த
வளங்கொ ளேழ்நிலை மாடமேல்
வயங்குபன் மணிகள்
விளங்கு மிட்டசெவ் விளக்கென
விளைவசில வீதி. 15

760. மேவு மித்தகு பொற்பினில்
விளங்குபல் வீதி
யாவு மேதகு தொன்மையி
னியைந்தபல் குடிக
ளோவு றாதுநம் பெருவள
மமைந்துதம் மொழுக்க
மாவ லேசெயுந் தன்மையா
லறநெறி பிறழார். 16

761. அந்த ணாளர்தம் மனைதொறு
மருமறை யொலியு
மெந்த வேலையு மோமமு
மிறைவரர்ச் சனையு
மைந்தர் மாதருக் கியற்றிய
மணமுமா மகமும்
பந்த பாசம தகற்றிடப்
பரனையுன் னுதலும். 17

*இப்பாடல் 701 செ. சுவடியில் இல்லை.

762. அறுவ ராமவற் குபசரித்
தாற்றலு மவர்பா
லுறவி ருந்துவே தாந்தநன்
னெறியுரைத் திடலும்
நிறைய வின்னமு ததிதியர்க்
களித்தலு நிகழப்
பெறல ருந்தொழி லாறினும்
பெருமையே பெற்றார். 18

763. அரசர் மாளிகை யளவில
வவையெலாங் கவனத்
துரக தத்திர ளணியணி
குழுமியத் தொகையும்
புரசை மாகரி யினம்பல
பொருதிறல் வியப்பு
மிரத சாலமும் பாகரு
மிடையறா நிபுடம். 19

764. பொருளின் மேம்படு வணிகர்தம்
பொருள்செய்வா ணிபத்தின்
உருள்த ராசென வினையிரு
தலையுநேர் ஒப்பார்
தெருளு நீரென நாவென
நடுநிலை திரியார்
அருளி னோரவ ரில்லகத்
தியல்புசாற் றரிதால். 20

---

763. நிபுடம்-நெருக்கம்.

765. வயிரம் நித்திலம் மரகதம்
மாணிக்கம் வைடூ
ரியமி லங்குகோ மேதகம்
புட்பரா கம்சோ
தியின்மி குந்துசீர் நீல
மின்னன குவைசெய்தாங்
குயர டுக்கலை நிகர்ப்பன
வோரொரு மருங்கு. 21

766. திருந்து மேருமு வளத்திறற்
செப்புமை வகையிற்
பொருந்து மில்லற நெறியினைப்
புகழொடு முலவா
திருந்து போற்றும்வே ளாண்குடித்
தலைமைய ரில்லம்
விருந்தி னூர்ப்பவர் துழனியே
வேலைவாய் மறைக்கும். 22

767. கட்டு செந்நெலின் கூடது
கருமுகி லுறங்கும்
விட்ட வான்சிறு கன்றுதுய்த்
தொழுகுபால் மிச்சில்
மட்டி லாமையிற் சேதக
மறுகெலா மதுகால்
பட்டு லர்ந்துநுண் டுகளெழப்
பகடுசார் தருமால். 23

766. துழனி - கடல்.

768. கூறு மந்நகர்ந் கின்னமும்
வளமையோர் கோடி
நாறு தேமலர்க் கானமும்
நல்வயற் செறிவு
மூறு நீர்ச்செழு கூவலு
முயர்பெருங் காவு
மாறு மோடையு முளவள
மளவிடற் கரிதால். 24

769. தாமரைத் தடமெலாந்
தருண வோதிமந்
தேமலர் வனமெலாஞ்
சிறைவண் டோதையே
பூமலர்க் காவெலாம்
பொழியுந் தேன்மழை
மாமதிற் புறனெலாம்
மஞ்சு துஞ்சுமால். 25

770. துன்னிலை நீர்த்தடந்
துறைகள் தோறுமே
பொன்னல வெள்ளியும்
பொழிவ புன்னையே
கன்னலை முத்துகக்
கடிக்கும் மேதியைச்
சென்னலங் கழனிவாய்ச்
சேல்து ரப்பவே. 26

769. மஞ்சு-மேகம்

771. மங்கையர் தன்னியல்
மஞ்ஞை காமுறப்
பங்கய வாவிசூழ்
பழுவஞ் சேர்தலு
மங்கவர் கண்ணிணை
யவாவிச் சேலினங்
கொங்கையில் முத்தணி
குலையப் பாயுமால். 27

772. காவியல் மாங்கனி
கதலித் தீங்கனி
தாவிய சேல்பொரத்
தாரை சாய்த்ததேன்
வாவியின் மதகினில்
வயலிற் பாய்ந்தயல்
மேவிய நதிகளின்
விரவி யோடுமால். 28

773. சேணமர் காவிடைத்
தென்ற னங்கையர்
பூணவிர் கொங்கையிற்
பொலிவு காமுகர்
காணவுத் தரியமென்
கலைய கற்றலும்
நாணமில் லவரென
நகைக்கும் முல்லையே. 29

774. தேசமர் சோலையிற்
செறிந்த கிள்ளையும்
பேசிய மழலைவாய்
பிறிது ரைத்திடா
நேசமா மன்பரி
ணிகழ்த்தி டுந்திரு
வாசக மொன்றல
மறைக ணுன்குமே. 30

775. கூற்றமு மாங்கிலைக்
குலவு பேரணி
போற்றவே றினியுமிப்
பூத லத்திலைச்
சாற்றருந் தன்மையித்
தகைய வாஞ்சியத்
தேற்றமெப் பரிசுயா
னெடுத்தி யம்புவேன். 31

776. மலரய னிணைய வாஞ்சை
வளநகர் மருந்தர் மேருச்
சிலையர்செம் பொற்றே ரேறுந்
திருவிழா மாசித் திங்கள்
அலகில்சீர் முற்பக் கத்தி
லணைந்தவா யிலிய நாளென்
றிலகிய பரிநாள் வெள்ளேற்
றிருங்கொடி யேற்று வித்தான். 32

777. வந்தனர் விழாவுக் கந்த
மலரயன் படைப்பி லுள்ள
அந்தரத் தமர ராதி
யண்டவப் புறத்துள் ளார்கள்
சுந்தரக் ககன மேருச்
சூழ்நவ கண்டத் துள்ளா
ரிந்தநற் றரையின் மைந்தர்
மங்கையர் யாரு மீண்டி. 33

778. நிறைந்ததேர் வீதி மன்றம்
நெடுநிலா முற்றந் தெற்றி
சிறந்தவான் புரிசை செம்பொற்
சிகரகோ புரஞ்ச துக்கந்
துறந்தசா ளரமு கப்புச்
சூளிகை மண்ட பங்க
ளுறைந்தன நிபிட மிட்டங்
கொளிகடல் முழக்கி னேங்க. 34

779. கனகமா ளிகைக டோறுங்
கட்டுதோ ரணங்கள் காலைத்
தினவிழா விறைஞ்சும் வெய்யோன்
தேர்வடஞ் சிறந்தாங் கென்ன
பனகபூ டணனூர் சேர்வை
பண்ணியங் கேகும் வேலை
புனைகவின் மாலை யென்னப்
புலன்மறு கலங்க ரித்தார். 35

780. தவளமா டம்பு துக்கித்
தமனிய மிழைப்பார் வாசற்
பவளநன் னிலைகள் சேர்த்துப்
பளிக்குவெண் படிய மைப்பார்
கவளமா கரிம ருப்புக்
கால்பல நிறுவி மேலுந்
திவளுமா ரத்தின் தாருச்
சித்திரப் பந்தர் செய்வார். 36

781. வீதிமுன் னில்லந் தோறும்
விரித்தபூம் பந்த ரெங்கும்
போதியல் தாம நாற்றி
பொற்கலை விதானஞ் சூழ்வார்
தீதில்பைங் கமுகு கன்னல்
செழுமுகைக் கதலி நாட்டிக்
கோதில்பூ ரணபொற் கும்பங்
குலவிபா லிகைநி ரைப்பார். 37

782. குங்கும மெழுதி முத்தங்
குளிர்பனி நீர்தெ ளிப்பார்
அங்குவெண் முத்தின் சுண்ணம்
அதுகொடு கோலஞ் செய்வார்
பொங்குபொன் னுருக்கி வார்த்துப்
புதுக்கிய வண்ணத் திண்ணை
எங்கணு முடுக்க ணம்போல்
இலங்குதீ பங்கள் வைப்பார். 38

783. அங்நக ரின்ன தன்மை
யணியமைத் தார்வங் கூர
முன்னவன் செம்பொற் கோயில்
முன்திருக் காவ ணத்திற்
பொன்னணி கோடு சின்னம்
பொங்கொலி படகம் பேரி
பன்னரு முரச மென்ற
பல்லியம் பலவு மார்ப்ப. 39

784. திருத்தகு மார்ப நேமிச்
செங்கண்மால் திசையி லெண்மர்
உருத்திர கணத்தோ ரையீ
ரொருவ ரீரா றருக்கர்
உருத்திசே ருரகர் நார
தாதிகந் திருவர் சித்தர்
மருத்துவ ரிருவ ரட்ட
வசுக்கள்சா ரணரி யக்கர். 40

785. சந்திர ருடுக்கள் பெத்தர்
தமனியப் பாத லத்தார்
இந்திர னைய வேழு
தீவின்மன் னவர்கள் யாரும்
வந்திறை திருமுன் ருழ்ந்து
மணிக்கடை வாயி னின்ற
நந்தியம் பகவ னேவல்
நயந்திரு மருங்கும் போத. 41

786. சனகநற் சனற்கு மாரர்
சனந்தனர் சனக னாதி
யெனவரு முனிவர் நால்வர்
எழிற்குரு முனிவ சிட்டர்
பனவர்வற் கலர்மார்க் கண்டர்
பராசரர் பாரத்து வாச
ரனைவருங் கைகள் கூப்பி
யாரண மியம்பிப் போற்ற. 42

787. கரிமுக னிலங்கு வேங்கை
கடவுளிங் கிவர்முன் செல்ல
அரிவையோர் பாக மெய்த
அரிபிர மாதி தேவ
ரரியநற் றண்டி மற்றோ
ருடனெழுந் தருளப் பண்ணி
விரிசுடர் கனக மாட
வீதிவாய்ப் போதும் வேலை. 43

788. ஆழியு முகிலுங் கொட்புற்
றகல்விசும் படங்கப் போற்று
றூழிவெள் ளத்து மாழா
வுயர்திரு நகரி தென்றே
வாழிரு சுடர்கள் மன்னி
வந்துபல் வடிவிற் றாகிச்
சூழுவ போல வெங்குந்
துதைந்துபொற் குடைநி ழற்ற. 44

789. பாலநீற் றணியின் னன்பர்
பயில்பரன் பவனி போற்ற
மாலவன் வருத லோடும்
வந்தபாற் கடல்மு ழங்கி
மேலலை யெறிந்த லைக்கும்
வெள்ளைமுண் டகக்கா டொப்பச்
சாலவு மணிபொற் காம்பின்
சாமரைத் தாளி ரட்ட. 45

790. மானத மடுவில் முன்ன
மகபதி கரந்த நண்பி
ஞனமை தன்ஞ லந்நா
ளகன்றிவண் மேவச் சாபம்
போனது காண்டு மென்னப்
புகுந்தசெம் முளரிக் கானந்
தானது போன்று தீபச்
சாலமெண் ணிலத யங்க. 46

791. வரையினுக் கரசு நம்போல்
மணவினை மலரோ ஞற்றும்
விரையநீ காணென் றேவ
வவனுழை விடாத பண்பிற்
கரையறு பணிப்பி ழம்பக்
கடிவரை கந்த மேய்ந்து
பரவிய தன்மை யெங்கும்
பயில்நறு தீப மொய்ப்ப. 47

792. தூபமென் புகைப்பி ழம்பின்
சுரநதி யூட னந்த
தீபமாஞ் செய்ய கஞ்சச்
செழுங்கரை யொழுங்கிற் றேவர்
பூபதி நாட்டு மின்னார்
புனை துகில் நுடக்கம் போலுங்
கோபவண் பட்டின் கோர்வைக்
கேதனக் குழாமுன் போத. 48

793. வடிவுசித் திரத்தை யொப்பார்
மைக்கணீ லத்தை யொப்பார்
கொடியநே ரிடைநூ லொப்பார்
கொங்கைகோங் கரும்பை யொப்பார்
படியில்வா னுலகில் நாகர்
பதியினிற் கணிகை மாதர்
அடிகளார் திருமுன் செல்லும்
அணியினுக் குவமை யின்றால். 49

794. இக்குவேள் முன்னைச் சீற்றத்
திறைவன்மேற் செல்லும் வண்ணந்
தக்கபே ரணிவ குத்த
தானையோ தம்பி ரானார்
பக்கமே யிருந்த பச்சைப்
பாவைதன் னியல்பை நோக்கிப்
புக்கதோர் மயிற்கு ழாமோ
போதுவ தெனவி ளங்கும். 50

794. இக்குவேள்-கரும்பு வில்லேந்திய மன்மதன்.

795. அண்டர்கோன் திருவி ழாவி
லமரரு முனிக்கு ழாமும்
பண்டையந் நகரிற் ருனம்
பரிசன மவைகள் யாரும்
வெண்டிரு நீற்ற முண்ட
வேதியர் செறிவு மென்மைத்
தொண்டர்தங் கணமு மிக்கு
தொடுகடல் நிகர்த்த மாதோ. 51

796. சென்னியிற் கரங்கு விப்பார்
சிந்தைநொந் துருகி நிற்பார்
இன்னியல் துதிவி திப்பார்
எம்மையாட் கொள்ளு மென்பார்
முன்னுற விம்மி நின்று
முகமெலாங் கண்ணீர் வாரப்
பனனிரு வகையட் டாங்கம்
பணிந்துளம் பரிவு கூர்வார். 52

797. வித்தகன் வாஞ்சை மூதூர்
விழாவணி சேவித் துய்ந்தோம்
எத்தவ முயன்று ளோமோ
விதுநமக் கெய்திற் றென்பார்
அத்தனைக் கமைந்த காட்சி
யமைந்தகண் ணிமையா தாக
வைத்தனன் மலரோ னிந்த
வாழ்வெனக் கமையு மென்பார். 53

798. அரியசெம் மேனி யானுக்
கதிசய மன்றோ கண்டங்
கரியது வான கோலங்
காணொணா தென்ப ரந்தோ
பரிவில்மன் னுயிரை யோம்பிப்
பட்டதற் கேது வாக
விரியவோ வடுவுற் றாலும்
விழுமமோ விழுமி தென்பார். 54

799. பாததா மரைக ளேக்கிப்
பண்டிது பாரீ ரிந்தச்
சீதரன் முன்பு தேடத்
தெரிவரி தான தென்பார்
மாதவன் மதுகைக் கன்றோ
வன்னது மறந்து பின்னர்
காதலித் திரப்ப வன்னோன்
கண்ணக லாத தென்பார். 55

800. உடையவெம் பெருமான் றன்னை
இவ்வண முலகு போற்ற
மடல்நெடுங் களிறு பூத
மாடக விமானம் வெள்ளி
யிடபவா கனமி வற்றி
னினிதெழுந் தருளச் செய்து
படர்தரு மகவி ழாவுக்
கமைத்தனர் பைம்பொற் றிண்டேர். 56

---

799. சீதரன்-விஷ்ணுமூர்த்தி.

801. அண்ட முற்று மமைத்த பிதாமகன்
மண்ட லத்தொரு தேர்வகுப் பான்மனங்
கொண்டு சால்பிற் குயிற்றுவித் தானெனில்
விண்டு ரைக்கவற் றேவதன் மேன்மையே. 57

802. புடவி வேறிது போது மமைக்கின்மேல்
நடவி யற்றுபொன் னாகமி தாமெனச்
சுடர்மு டித்தொகை சூழ விளங்குதேர்
வடவ ரைக்கிணை யாய்வரு வித்தனன். 58

803. வடமி யைந்துய ராழி வளைதரித்
தொடிவி லாப்பல வச்சி லுறைந்துபா
ரடியிற் றூங்கி யயன்வர வாற்றலி
னெடிய மாலை நிகர்த்தமற் றேதுவாம். 59

804. திக்க யங்கள் திகைப்பெருங் காவலா
பக்க மேபல தேவர் பயின்றதேர்
நக்கர் தாமதில் நண்ணு தலத்தினு
மிக்க பொன்னினு மேருவொப் பானது. 60

805. பாக மாநிலை பாரித்த தட்டணி
யாக மொய்த்து விதானித் தவம்பர
மாக மார்தலி வாயு பதங்களின்
மேக சாலம் விளங்கிய தொக்குமால். 61

806. திசைக டோறுமத் தேரிற்ப தாகைகள்
அசையும் வெய்யவ னாரழ லாறிட
விசையும் வான்புன லாற்றெறி மாருத
மிசையி லண்ட விடங்க ணனைக்குமால். 62

807. தேரு மாடகச் சிகரத்தின் கும்பமும்
மேரு வுச்சி விளங்கு வியன்றகுஞ்
சீரு மாதனத் தருப்பண கோர்வைக
ளூரும் வானத் துடுக்கண மொக்குமால். 63

808. கூறரிய விவ்வணி குயிற்றியுள பொற்றேர்
தேறமுன மேஉரை சிறந்தமக நாளி
லாறணி சடாமகுட ரம்பிகை குமார
ரேறியரு ளித்தவி சிருக்கவமை வித்தான். 64

809. தந்திமுகன் வேற்கடவுள் தாணுவுமை தண்டி
யிந்தவகை யைவரு மெழுந்தருள் திருத்தே
ரைந்துமணி வீதிவல மாயகில மெல்லாம்
புந்திமகி ழப்பவனி போதுதல்பு ரிந்தான். 65

810. செம்பொனின் வயப்புரவி தீவிகை திருச்சாந்
திம்பர்பர வுந்திரு விழாவிவை முடித்துச்
சம்புமகிழ் புண்ணிய தடத்துதவு தீர்த்தம்
உம்பர்முனி வோரொடு திளைத்துமகிழ் வுற்றான். 66

811. தரைமிசை யினைய வாற்றிச்
சதுமுகன் அத்த லத்தில்
விரைமலர்த் தடாக மொன்று
தன்பெயர் விளங்கக் கீழ்பாற்
பிரமபுட் கரணி யென்னும்
பேருற வமைத்தா னந்தத்
திரையெறி புனல்தி ளைப்பார்
திசைமுகன் பதத்து வாழ்வார். 67

812. முளரிநான் முகத்தோ னின்ன
முறைமையே முடிய வாற்றி
யிளநிலா மவுலி யார்முன்
னிருநிலஞ் சென்னி சேர்த்தி
யளவிலா வகைநின் றேத்த
வந்நிலை விடைமேற் றோன்றி
யுளமகிழ் கருணை யோடு
முரைசெய்தா னுவமை யில்லான். 68

813. அருமறைப் பிரம நீயிங்
கன்பினு லெமக் கமைத்த
திருவிழா மிகவும் நன்று
சிகரிநா யகன்றுன் முன்னம்
மருவிமா சலையை நம்பால்
மணம்புணர் வித்த ஞான்றப்
பெருவிழா வதுவே யாகும்
பிறிதிதற் குவமை யின்றால். 69

814. மகவிழா வதனி லெம்மை
வணங்குதல் வணங்கி னோர்க்குப்
புகலிடங் கொடுத்த லன்னம்
புனல்கன காதி நல்கல்
தகவொடு செய்யு நல்லோர்
தருமமித் தலைய வெல்லாந்
திகழ்புகழ் காசி மேவிச்
செய்தலி னதிகங் கோடி. 70

815. மற்றுமோர் வகைசு வேத
வராககற் பத்தி லாய
விப்பொரு மால யத்தில்
பூருவ வதன மாவோ
முற்றதோ ரேது வொன்றுண்
டுவந்துநீ ரிவண மைத்த
நற்றட மதுதி ளைத்தார்
நண்ணுவர் நம்பா லின்பம். 71

816. இனியும துலகிற் செல்க
யாமுமக் கிறுதி நாளில்
நனியுறு மின்ப முத்தி
நல்குதும் நம்பா லென்று
துனிவில்சீர்க் கருணை நல்கிச்
சோதிலிங் கத்தி னூடே
புனிதனுந் திரோப வித்தான்
போதனும் நாகம் புக்கான். 72

817. முன்னைநா ளிறைவன் இமையமால் வரையின்
முதல்வியைத் திருமணம் புணரு
மன்னபோ தென்னைத் தென்றிசைக் கேவி
யருள லு மப்பெருஞ் செல்வந்
தன்னையான் காண விரும்பலால் வெள்ளித்
தடவரை தணந்துபோந் தருளி
யென்னவா வமயத் தன்மணக் கோல
மெனக்கருள் புரிந்ததந் நகரம். 73

818. செப்பரும் பெருமை யின்னதொன் னகரிற்
சிறந்த கீழ்த் திசைமுதற் றெடங்கி
மெய்ப்புகழ் பிரமர் நாரதர் விசுவா
மித்திரர் பாரத்து வாசர்
தப்பில்சீர் சேடர் இராமர்புத் தேளிர்
சதுமுக னெண்மரெண் டிசைக்கும்
வைப்பென வமைத்த தீர்த்தமோ ரெட்டும்
வழங்குமங் கவரவர் பெயரால். 74

819. வடகிழக் கிசைத்த மகபதி தடத்தின்
வடதிசை வயிரவர் தீர்த்தங்
குடதிசைக் குரைத்த சேடதீர்த் தத்தின்
குடதிசை நாரண தீர்த்தம்
புடையிலீ தொருபா னடுவினி லாதிப்
பொருவில்சீர்ப் புண்ணிய தீர்த்தம்
உடையநா யகன்ற னலயத் துள்ளு
முள்ளதொன் றனந்த கூபம். 75

820. தீர்த்தமற் றிவற்றி லாடிடிற் கோடி
சிதைந்திடும் பிரமகத் திகள்தா
மார்த்தவத் தரணி முந்திய யுகந்தொட்
டாடகம் வெள்ளித மிரமண்
வாய்த்தநால் வகைய யுகங்கள்நான் கிற்கு
வருணமத் தரைக்கென முறையே
கூர்த்தநல் லழிவின் வசிட்டர்பா லினைய
கூறினன் குறுமுனிப் பெருமான். 76

821. அரியமா தவத்தின் முனிவரர் நீவிர்
அனைவருஞ் செவிப்புலத் தமைப்ப
வுரியவாங் காதை யிவைபிர மாண்டத்
துட்புரா ணத்துள துரைத்தேம்
தெரிதரி லினைய காந்தமா புராணந்
திகழ்சநற் குமாரசங் கிதையில்
விரியமிக் குரைத்த கதையுமுன் னுரைத்தே
வீடுபெற் றுயர்ந்தனன் வினையேன். 77

822. ஏற்றமாம் வாஞ்சிய
மென்ப தோருரை
போற்றினர் சிவபதம்
புகுவர் திண்ணமாஞ்
சாற்றுமித் திருநகர்
சரிதை கேட்பவர்
பேற்றினை யாவரே
பேச வல்லவர். 78

823. ஆக்க மெய்துவ வளப்பரும்
புகழுமுண் டாவ
நீக்க மில்திரு வருளுமெய்ஞ்
ஞானமும் நிறைவ
மாக்க லாமதி வேணியர்
வாஞ்சிய புராண
மூக்க முற்றெடுத் துரைப்பவர்
கேட்பவர்க் கென்றும். 79

824. கருத்தி னுற்றவை கடிதின்வந்
தெய்துவ கமலத்
திருத்த ணந்திடா துறைகுவள்
செய்வன நன்றும்
பெருத்த வண்புகழ் வாஞ்சியம்
பிறங்கு மாக்கதைநெஞ்
சிருத்து மன்பொடு கேட்பவர்க்
கிம்மையே சரதம். 80

825. அளவில் மாதவப் பெருமையீ
ரமலன தருளால்
வளமி குந்திரு வாஞ்சிய
மாக்கதை பெரிது
உளம கிழ்ந்துநீர் கேட்பயா
னுரைக்கவும் பெற்றேன்
விளையு மென்றவப் பயனலால்
வேறுமொன் றுள்வோ. 81

826. எனந யப்பொடு நைமிச
வனத்தினி திருக்கும்
முனிவர் யாவரு முகமலர்ந்
தின்புற மொழிந்தான்
றனைநி கர்ப்பவ ரீன்றியத்
தாபதர் பெருமான்
வினையெ லாமற நோற்றுள
சூதமெய்த் தவனே. 82

827. வாழி வாழியிவ் வையமும்
வாஞ்சைமா நகரும்
வாழி மன்னவன் கோல்நெறி
மாமறை வாழி
வாழி யஞ்செழுத் தருண்நிலை
வாழிவெண் ணீறு
வாழி யந்தண ரரனடிக்
கன்பினர் வாழி. 83

828. சீதரன் பரவும் வாஞ்சைத்
திருநகர் சிவபு ராணம்
நாதநான் மறை யொலிக்கும்
நைமிச வனத்தி ருந்து
மாதவ ரவையிற் சூத
மாமுனி யுரைத்த தெல்லாங்
காதலாற் றமிழிற் செய்தான்
களந்தைவாழ் குமர னென்பான். 84

திருவிழாச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் 17-க்கு திருவிருத்தம் 828.

நூல் முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாஞ்சியம்

ஸ்ரீ மங்கள நாயகி யம்மை பிள்ளைத் தமிழ்

ஆசிரியர்:

திரு. முத்துமணியவர்களின் குமாரர்

சிவராமபிள்ளை

அவர்கள்

கயப்பாக்கம்-திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களது

குறிப்புரையுடன்

சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர்

திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்கள் அறிக்கைப்படி,

தஞ்சை அறநிலைய உதவீத்துணையாளர்

திரு. A. சக்கரைச் சேர்வை B.A., B.L., அவர்கள்

அநுமதி பெற்றுத்

திருவாஞ்சிய தேவஸ்தானத்தாரால்

வெளியிடப்பெற்றது.

M. கிருஷ்ண முதலியார்

A. R. R. ராமசுவாமிப் பிள்ளை

தர்மகர்த்தாக்கள்

C. ராஜாபாதர் உடையார்

நிர்வாக தர்மகர்த்தர்

S. நாகசுப்பிரமணியன்

நிர்வாக அதிகாரி.

திருவாஞ்சியம் ஸ்ரீ மங்கள நாயகி யம்மை பிள்ளைத் தமிழ்

பிள்ளைத்தமிழ் வரலாறு:

கடவுளரையேனும், ஆசிரியரையேனும், உபகாரிகளை யேனும் குழந்தையாக வைத்துக் காப்பு, செங்கீரை தால, சப் பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல். ஊசல் முதலிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாராட்டுவது பிள்ளைத் தமிழின் இலக்கணம். சந்தப் பாக்கள் இதில் விரவிவரும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கட்கும், பெண்பால் பிள் ளைத்தமிழ்ப் பருவங்கட்கும் சில வேறுபாடுகள் உண்டு. முதல் ஏழு பருவங்கள் இருவகைப் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவா னவை. ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு 8, 9, 10 வதாக அமைந் தவை சிற்றிற்பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம். பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு 8, 9, 10 வதாக அமைந்தவை· அம்மானை, நீராடல், ஊசல் ஆகும். சிவபெருமானுக்கு மட்டும் பிள்ளைத்தமிழில்லை என்பது மரபு. ஏன்? அவன் பிறவாதவன் இறவாதவன் ஆதலால். சிவ குடும்பத்தினருக்கும் பிறப்பு இறப்பு இல்லை. ஆயினும் உபசாரமாக அம்மையையும், விநாயகரையும், முருகப்பெருமானையும் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பாடப்பெற்றுள்ளன.

முதலாவது காப்புப் பருவம் :

இனி, திருமால் முதலிய தெய்வங்கள் பாட்டுடைத் தலைவ ராகிய குழந்தையைப் பாதுகாக்கவேண்டுமென்று அமைப்பது காப்புப் பருவம். குழந்தை பிறந்த ஏழாவது நாள் காப்பிட லெனும் வழக்கம் தமிழருக்குண்டு. அதனை யொட்டி யமைந்தது இப்பருவம்.

இரண்டாவது செங்கீரைப்பருவம் : பொருள் தெரியாத ஒலியை எழுப்பும் பருவத்தைக் குறிப்பது. இளங்குழந்தை "ங்க்" "ங்க்" எனக் கூறக் கேட்டுத் தாய்மார் மகிழும் பருவம். இவ்வொலி மழலையைக் காட்டிலும், இளம் பருவத்தையுடையது. மழலையேனும் ஒருவகையில் பொருள் செய்தற்குரியது; இவ்வொலி வெறும் ஒலி மாத்திரமேயாய்த் தோற்றுவது. தொடையமைதிகள் இல்லாத ஒன்றைச் செந்தொடை யென்பது போலச் சொல்லுக்குரிய அமைதியில்லாததை செங்கீர் என்றனர் போலும். சீர்=செயல். "ஒரு தாள் உந்தி. ஆடுக செங்கீரை."

மூன்றுவது தாலப்பருவம் : தாலாட்டென்பது தாலென மருவி வழங்கியது. குழந்தைகளைத் தூங்கச் செய்பவர் தம் நாவை யசைத்துப் பாட்டுப் பாடுதல் வழக்கம்.

நான்காவது சப்பாணிப்பருவம் : ஸ+பாணி= கையோடு கை சேர்த்துக் கொட்டல் என்பது பொருள். சப்பாணி கொட்டும்படிக் குழந்தையிடம் கூறுவதாக அமைப்பது இது.

ஐந்தாவது முத்தப்பருவம் : குழந்தையைப் முத்தந்தா என்று தாய்மாரும் பிறரும் வேண்டுவதாகக் கூறல் மரபு. முத்தம் என்னும் சொல் முத்தையும் குறித்தலின், முத்தப் பருவத்தில், புலவர்கள் "பிறவிடங்களிற் கிடைக்கும் பலவகை முத்தங்களினும் நின்வாய் முத்தமே சிறந்தது ஆதலின் அதனைத் தருக" என்று அமைத்துப்பாடுதல் வழக்கம்.

ஆறுவது வருகைப்பருவம் : தளர் நடையிட்டு வரும் குழந்தையை வா என்று அழைப்பதாகக் கூறுவது இப்பருவத்தின் தன்மை.

ஏழாவது அம்புலிப்பருவம் : சந்திரனைக் குழந்தையுடன் விளையாடவா என்று அழைத்தலைக் கூறுவது. அம்புலி-சந்திரன்; இப்பருவம் ஏனைய பருவங்களைக் காட்டிலும் பாடுதற்கரியதென்பர் அறிஞர். "பிள்ளைக்கவிக் கம்புலி புலியாம்," என்பதையும் நோக்குக. சந்திரனை அழைக்கையில் சாம, பேத, தான தண்ட வகையால் முறையே அம்புலிக்கும், குழந்தைக்கும் ஒப்புக் கூறு

தலும், வேற்றுமை கூறுதலும், வராவிடின் நிகழும் துன்பம் கூறுதலும் புலவர் மரபு.

எட்டாவது அம்மானைப் பருவம் : பாட்டுடைத் தலைவியை யம்மானை ஆடும்படிக் கூறுவது. மகளிர்க்கே உரியது இவ் விளையாட்டு.

ஒன்பதாவது நீராடற்பருவம் : இப் பருவத்தில் பாட்டுடைத் தலைவியை நீராடவேண்டுதல் அமைந்திருக்கும்.

பத்தாவது ஊசற்பருவம் : பாட்டுடைத் தலைவியை ஊசலாட வேண்டுதலைச் குறித்துப் பாடப்பெறும். ஊசல் என்பதும் மகளிர்க்கே உரியதொரு விளையாட்டு.

சிவமயம்

ஸ்ரீவாஞ்சியம் என்னும் திருவாஞ்சியம்

ஸ்ரீ மங்கள நாயகியம்மை பிள்ளைத் தமிழ்

(மூலமும் நூதனமாக எழுதிச் சேர்த்த குறிப்புரையும்)

க. காப்புப் பருவம்

காப்பு

நேரிசைவெண்பா

1. வள்ளைக் கமல வயல்வாஞ்சை வாழவந்தாள்
பிள்ளைத் தமிழ்க்குப் பெரிதுதவும்—உள்ளமகிழ்
ஐந்துகரத் துந்துமதத் தம்பதுமச் செங்கணருட்
தந்திமுகத் தெந்தைதுணைத் தாள்.

(கு - ரை) வள்ளைக்கமலம் - வளமைமிக்க தாமரை; வாழவந்தாள்-பார்வதி. அம்பிகை கயிலாயத்தினின்றும் இத்தலம் வந்து சிவபிரானைப் பூசித்து இவ்விடமே வாழவந்தமையால் இப்பெயர் பெற்றனள். உந்து - தள்ளு, அம்பதுமச் செங்கண் - அழகிய தாமரை போன்ற சிவந்தகண்; தந்தி - யானை.

கணபதி

2. சீர்கொண்ட பாசடைத் தாட்டாமரைத் தண்புனல் சூழ்
திருவாஞ்சை மருவுமருந் தீசர்புயந் திளைத்த செல்வி
வார்கொண்ட புணர்முலை நாயகி மருவார் குழலி
மங்கள நாயகி வாழவந்த வளைப்புரக்க

தார்கொண்ட பிருகுவி னாச்சிரம மினிதடைந்த
தன்மனைவி முனிவகலத் தவம்புரிவான் மாலைக்
கார்கொண்ட மேனியருள் வெண்பொரி செங்கரும்பு
கைக்கொண்டு கலங்காமற் காத்தகண பதியே.

பாசடை - பசுமையாகிய இலை; தண்புனல் - குளிர்ந்த நீர்; வார் - கச்சு; மருவார் குழலி - மணம் மிக்க நீண்ட கூந்தலையுடையவள்; மங்கள நாயகி - மங்களகரமான செயல்கட்குத் தலைமை பெற்றுள்ளவள்; புரக்க - காக்க; தார் - மாலை; முனிவு - கோபம்; கார் - மேகம். (1)

முருக வேள்

3. குன்றவர் பாவை பொருப்பினைப்பொரு
கொங்கையின் மீது கரத்தெ டுத்தணி
குங்கும தூளி திளைத்த டிக்கடி
கொங்கிள மேனி சிவப்பெ ழக்களி
துன்றிவ ழாம லுரைத்த சொற்பல
தும்புரு வீணை யெனச்செ விச்சுவை
துஞ்சிய காளை யடித்த லத்திடைத்
தொண்டு குலாவி மிகப்ப ழிச்சுவல்
அன்றொரு சாப மகற்றி வச்சிர
னைந்தரு நாடு கொடுத்த ளிப்பவர்
அஞ்சிறை பாட லளிக்கு லத்திரள்
அன்பொடு தேற லடுத்த டுத்துணு
மன்றல ருத மயிர்ப்பொ குட்டிடை
மைந்தனை நாலு முகத்த னைத்தரு
வண்கயி லாய ரிடத்தி ருத்திய
மங்கள வாழ்வு தனைப்பு ரக்கவே.

குன்றவர் பாவை - வள்ளி; பொருப்பு - மலை; திளைத்து - போகித்து; கொங்கு - வாசனை; களிதுன்றி - மகிழ்ச்சி நிரம்ப; சுவை துஞ்சிய - இனிமையில் மயங்கிய; பழிச்சுவல் - துதிசெய்வேன்; வச்சிரன் - இந்திரன்; அளிக்குலத்திரள் - வண்டுகளின் கூட்டம்; தேறல்-தேன்; மன்றல்-மணம்; கயிலாயர்-சிவபிரான். ()

திருமால்

4. நீர்கொண்ட பச்சைப் பசுங்கொண்ட லனையமைந்
நிறங்கொண் டிரண்ட டியினால்
நீடுமூன் றுலகளந் தவையுண் டியாவரும்
நிகழ்த்துதற் கோரா யிரம்
பேர்கொண்ட தண்ணந் துழாய்ப்படலை முடிகொண்ட
பெம்மானை யெம்மானைநீள்
பேராழி யிற்றுயிலும் வாராழி கைக்கொண்ட
பெருமாள் தனைப்ப ரவுவாம்
கார்கொண்ட சந்தனச் சோலைப் பொதும்பரிற்
களிவண்டு நறையுண்டு செங்
காவித் தடத்திடையு லாவிச் சினந்தெழுங்
கதிர்வாளை வெடிபாய்ந் துலாஞ்
சீர்கொண்ட செந்தமிழ்த் திருவாஞ்சை தழையவருஞ்
செல்வியைக் கல்வி யரசைத்
திருமங்கை பரவவரு மலைமங்கை வண்புகழ்
தெளிந்தசொற் றமிழ்த ழையவே.

கொண்டல் - மேகம்; துழாய் - துளசி; படலை - மாலை; ஆழி-கடல்; சக்கரம்; கார்-மேகம்; பொதும்பர் - சோலை; நறை - தேன்; செங்காவி - செங்குவளை; தடம் - குளம்; சினந்து - கோபித்து; மலைமங்கை - பார்வதி. (3)

திருமகள்

5. கச்சுற்ற கும்பமுலை யிந்த்ராணி கொண்கனுங்
கலைமங்கை கேள்வன் முதலாங்
கடவுளர்கள் நிபிடமொடு முடியடி படுத்திடக்
கட்செவிய ணைத்து யில்கொளும்
பச்சைப்ப சுங்கொண்டல் மணிமார்பி னும்மருண
பங்கேரு கத்த விசினும்
பஞ்சியஞ் சீறடி பரப்புமொரு பெண்பிள்ளை
பலபுகழ் வழுத்தல் செய்வாம்

பிச்சைக்கு நச்சிவரு கங்காள ரொருபுறம்
பிரியாது குடியி ருந்த
பெண்ணரசு மலையரசு பெற்றுவள ரிளவரசு
பிறிதரசி லாமல் வாழ
இச்சிக்கு முக்கட் கரும்பரசு பிரியாம
லினிதிருக் கின்ற வரசேழ்
இசையோங்கு திருவாஞ்சை மருவார்ந்த குழலரசை
ஏத்துமென் கவித ழையவே.

கச்சு - இரவிக்கை; கொண்கன் - கணவன்; கலைமங்கை கேள்வன் - பிரமன்; நிபிடம் - நெருக்கம்; கட்செவி-பாம்பு; பசுங் கொண்டல் - திருமால்; கங்காளர் - சிவபிரான்; முக்கட்கரும் பரசு - சிவபிரான்; எழிசை - குரல், துத்தம்; கைக்கிளை; உழை; இளி; விளரி; தாரம். (4)

கலைமகள்

6. பன்மணி சுமந்திடை யிளைத்தேங்க வோங்கும்
படாமுலைக் களியா னையைப்
பழமறைக் கிழவர்புய வரையெனுங் கந்திற்
படுத்துவிளை யாடு கின்ற
பொன்மணியை யகிலம் புரக்குஞ் செழுஞ்சடைப்
பொற்கொடியை யற்பு றுதடம்
பூரவா கினியையபி ராமியை வலஞ்செய்து
புந்தியு ணினைந்து மகிழ்வாம்
மென்மடுவி னிடையிடை முறுக்கவிழ் மலர்க்குவளை
யின்று துழக்கி யறுகால்
வீணையி னொலிப்பக் கழங்கொடம் மனைமகளிர்
விளையாடு சோலை தோறுஞ்
சொன்மருவு பலவினிடை தூங்குங் குடக்கனி
சுழித்துக் கொழித்த செந்தேன்
றுறையோங்கு திருவாஞ்சை வாழவந் தான்புகழ்
தொடுத்தசொற் றமிழ்த ழையவே.

படாம் - சீலை; பழமறைக்கிழவர்-பிரமன்; புயவரை - மலை போன்றதோள்; கந்து - கட்டுத்தறி; அகிலம் - பூமி; தாது - மகரந்தப் பொடி; அறுகால் - வண்டு; பலவு - பலாமரம்; தூங்கு - தொங்குகின்ற; குடக்கனி-குடம் போன்ற பழம். (5)

இதுவு மது

7. பாடுங் களிவண் டறுகால் கொண்டு
பரந்து துதைந் தாடும்
பதுமத் திருமா ளிகையிற் சதுமறை
பரவத் தண்டமிழ் நூல்
ஏடுந் திருமலி கரநான் குந்துடி
யிடையும் பிடி நடையோ
டிலகத் தனியோ ராணை
செலுத்தி யிருப்பவ ளைத்தொழுவாம்
சூடும் பகுவா யரவும் பிறையுஞ்
சுரநதி யிடையாடத்
துப்புறழ் செஞ்சடை யாட வளந்தரு
தொல்லைத் தில்லையில் மன்
றுடிய சங்கரர் பங்கிற் குடியா
யருளோங் கிய மாதா
ஆழித் திருவாழ் திருவாஞ் சையிலுமை
யவள்கவி வளர்கெனவே.

துடி - உடுக்கை; பிடி - பெண்யானை; ஆணை செலுத்தி யிருப்பவள் - கலைமகள்; பகுவாய் - பிளந்தவாய்; சுரநதி - கங்கை மன்று - நடனசபை; ஆழித்திரு - இலக்குமி. (6)

துர்க்கை

8. மதர்விழியூ டருளைப் பெருக்கினள்
வனமுலையா லிடையைச் சுருக்கினள்
மணமலர்சூழ் சடிலத் தருட்கிளி
மாகதிர்போ லொளிவிட்ட பொற்றுடி

கதிதருபோ ரவுணக் கடற்கிடை
கறுவுகொணே மியைவிட் டுழக்கிய
கவுரிபரா பரைதுர்க்கை கொற்றவை
கடிகமழ்தா ளிணையைப் பழிச்சுதும்
விதியரிசுர ரருச்சித்த சித்திர
விரைமலர்நா றியபொற் பதத்தினர்
வினவியகா ரிகைமுத் தலைப்படை
விளைவுறுயா தனையைத் தவிர்ப்பவர்
புதியநறு வொழுகற் பகத்தலர்
பொலிதரு நீழலி லுற்பவித்தவர்
புனையொரு பாதியி வைத்தசிற்பரை
புணர்முலை நாயகி யைப்புரக்கவே.

சடிலம் - சடை; பொற்றொடி - அம்பிகை; கடிகமழ் - வாசனை வீசும்; பழிச்சுதும் - துதிப்போம்; விதி - பிரமன்; அரி - திருமால்; சுரர் - தேவர்; விரை - வாசனை; முத்தலை - சூலம்; யாதனை - துன்பம். (7)

பதினொருவர் (உருத்திரர்)

9. செம்பவள மொருகோடி கிளைகிளைத் தாலென்ன
செக்கரஞ் சடைமவுலிமேற்
சிறுபொறிக் கணபணக் கட்செவித் தழல்விழிச்
சீற்றவா ளரவி னுடனே
விம்பவிருள் சீத்தெழு மிளநிலாத் துளிதூற்று
வெண்பிறையொ டம்பு சேர்த்து
வென்றிவிடை யேறியெதிர் நண்ணுபதி னொருபுனிதர்
விரைமலர்த் தாள்துதிப்பாம்
அம்பொன்னின் மாளிகையில் வைத்தசித் திரவூச
லார்ந்தகொடி யிடைநலார்கள்
அன்புடன் றண்டாம மணிமிடறு விம்மாம
லங்கைவிரல் வழுவுறுமல்

தம்புருவும் வீணையும் யாழிசை நரம்புமுறை
தைவருமொதன் வாஞ்சி யத்தில்
சந்தனு டவிவாழ வந்தநா யகிதனைச்
சந்ததங் காக்க வென்றே.

செக்கர் - செம்மைநிறம்; மவுலி - முடி; கட்செவி - பாம்பு. (8)

மருந்தீசர்

10. பேசுகின்ற நாலுமறைப் பாட்டினர்
பீடிலங்கு நாகமணித் தோட்டினர்
பேணுகங்கை மோதுசடைக் காட்டினர்
பேறுதந்து தேவர்தொழத் தோற்றினர்
தேசுபொங்க வாடுதிருக் கூத்தினர்
சீறுகின்ற வாளரவக் காப்பினர்
சீதசந்தனு டடவியிற் றேற்றிய
சீர்மருந்தர் தா ளிணையைப் போற்றுதும்
ஓசைவிஞ்சு வீறுசிறைப் பேட்டளி
யோடுதும்பி தேனணுகிக் கூட்டுண
ஊறுகின்ற வெரிமலர்த் தார்க்குழல்
ஓதுமிந்திர சாபநுதற் கார்க்குயில்
மாசகன்றவீணைகையிற் சேர்த்திய
மாமதங்கி வாலையருட் பார்ப்பதி
வாசவன்றனு ரிடரைத் தீர்த்தருள்
வாழவந்தநா யகியைக் காக்கவே.

பீடு - பெருமை; பேறு - பாக்கியம்; தேசு - அழகு; விஞ்சு - மிகுகின்ற; வெரி - வாசனை; குழல் - கூந்தல்; சாபம் - வில்; நுதல் - நெற்றி; மாசு - குற்றம்; மதங்கி - பதினாறு வயது பெண்; வாலை - இளம்பெண்; வாசவன் - இந்திரன். (9)

சூரியன்

11. அறுகாள் வரிச்சுரும் படைகிடக் கின்றபா
சடைமலர்க் கமல மென்போ
தணியினை நகைத்துச் சினத்துக் கனத்தசெவ்
வாம்பலங் கடைய டைப்பத்

தெறுகால் நடாத்திவரு பைம்புரவி யந்தடந்
தேரூர்ந்து வைய முழுதுஞ்
செங்கோல் செலுத்துந் திறற்பரிதி யங்கடவுள்
சேவடி மனத்துள் வைப்பாம்
குறுகாது வெம்முலை சொரிந்தபா லுண்ணுங்
குழக்கன்று துள்ளி யாடிக்
குளிர்புன னிறைந்துசெங் காவித் தடத்திடைக்
குவளைநறு மலர்க லக்கி
யுறுகால் பரப்பிவிளை யாடுதென் றிருவாஞ்சை
யுமையையிம யாச லத்தி
லுருக்கொண்பெண் பிள்ளையைக் கருணையொடு வந்து
உகந்துகாத் தருள வென்றே.

சுரும்பு - வண்டு; பாசடை - பச்சிலை; போது - மலர்; ஆம்பல் - அல்லி; பரிதி - சூரியன்; குழக்கன்று - இளமையுடைய கன்று. (10)

பிரமன்

12\. பாயிருள் முகம்விட் டெறிந்திள நிலாக்கதிர்
பரந்தமுத மூற்றி ருக்கும்
பான்மதி வடஞ்சுமந் தழகுற்ற மென்முலைப்
பாவைதிரு நாவி லிலக
வாயிர விதழ்க்கமல பீடத்தின் மேல்விழியில்
அருள்மடை திறந்து பாய
அண்டகோ ளகைமுகட் டரசிருக் குங்கடவு
ளடியிணை மனத்துள் வைப்பாம்
தூயவுடல் வெளிறுமல் முலைநுனி கருதுபுகை
துன்னும ணுகர்ந்தி டாது
தொல்வளை காய்ப்புளி யருந்திடா மற்பழைய
தூணம்ப யந்த ளித்த
மேயசிறு குழவியொடு கூடப் பிறந்துவளர்
விரைமலர்க் குழல ணங்கை
விமலையைக் கமலையைத் திருவாஞ்சை வளர்மணி
விளக்கைப் புரக்க வென்றே.

பாவை - கலைமகள்; அண்ட கோளகை - முட்டை வடிவான அண்டம்; முகடு-உச்சி; கடவுள் - பிரமன்; சிறுகுழவி - திருமால்; கருப்பமுற்ற பெண்கட்கு உடல் வெளுத்தலும்; முலைநுனி கருமை யடைதலும்; மண், புளி முதலியவற்றை விரும்பி யுண்ணலும் இயற்கை. திருமாலைப் பெற்ற தூண் அவ்வாறு எவ்வித அறிகுறியும் அடையவில்லை என்கிறார் ஆசிரியர்.

உ. செங்கீரைப் பருவம்

13. தங்கவரி வளைசேர்த்த முள்ளரைப் பாசடைத்
தாமரைச் செங்கை தொட்டுத்
தனதுமடி மேல்வைத்து மலையரையன் முத்தந்
தரச்சொல்லி யுச்சி மோந்திட்
டெங்கள்குடி தழையவரு செல்வியே யாமெலா
மிச்சைகூர் மழலை மொழிக
ளின்னஞ்சொல் லென்றுகேட் டுளமுருகு மேந்திள
வெழிற்கொங்கை மங்கை நங்காய்
கொங்குலவு மாறுகா லேழிசைய வரிவண்டு
குமுறநறு முகைநெகிழ்ந்து
கொள்ளைச் செழுந்தேற லூற்றிருந் தருகுபாய்
குலிகவெள் ளத்தி லொளிருஞ்
செங்குமுத மணநாறு பொன்னிவள நாட்டரசி
செங்கீரை யாடி யருளே
திருவாஞ்சை வளர்மங்கை யருளோங்கு விழிநங்கை
செங்கீரை யாடி யருளே.

கீர்-சொல். இதனை நிருத்த விசேட மென்பர். கால்களைப் பின்புறமாக மடக்கிக் கைகளை முன்னர் ஊன்றி ஆடுவது.

வளை - சங்கு; மலையரையன் - பர்வதராசன்; கொங்கு - பூந் தாது; குமுற - ஒலிசெய்ய; சூபிகம் - சிவப்பு; பொன்னி - காவிரி நதி. (1)

14. கங்கா நதிச்செழுஞ் சீகர தரங்கநிரை
கவுரிநின் ருள்ப ணிதல்போற்
கவரிநிரை யிருபுடைச் சுரர்மகளிர் கோற்றொடிக்
கைகொண்டு கால சைப்ப
மங்காத தெய்வதுந் துமியார்ப்ப மாமறையு
மதுரகவி களுமு ழங்க
வச்சிரா யுதக்கடவுள் பணிகேட்ப மற்றுள்ள
வானவர்கள் வந்தி றைஞ்சிக்
கொங்கார் முடித்தலைக ளிடிபட வுதிர்ந்தமணிக்
குப்பையிருள் சீப்ப முத்துக்
குடைநிழலி லண்டரண் டங்களு மடங்கவொரு
கோலோச்சி நவம ணிப்பொற்
சிங்கா தனத்திருந் தரசுபுரி யுங்குமரி
செங்கீரை யாடி யருளே
திருவாஞ்சை வளர்மங்கை யருளோங்கு விழிநங்கை
செங்கீரை யாடி யருளே.

சீகரம் - நீர்த்துளி; தரங்கம் - அலை; சுரர்மகளிர் - தேவ மாதர்; காலசைப்ப - காற்று வீசும்படிச் செய்ய; வச்சிராயுதக் கடவுள் - தேவேந்திரன்; இறைஞ்சி - வணங்கி; கொங்கு-வாசனை; ஆர் - நிரம்பிய; மணி - இரத்தினம். (2)

15. கங்கைப் பெருக்கினறு நீராட்டி வாழைக்
கவானிலழ குறவி ருத்திக்
காமர்செம் பட்டாடை கொடுதுடைத் தைம்புனற்
காப்புமுக் கால்வ ளைத்துச்

சங்கைத் துடைத்திளஞ் சுரபியின் பாலொடு
தழைப்பநெய்த் துளிநி றைத்துத்
தாமரைச் செவ்வாய் புகட்டி நுதல் மீதிலகு
தரளவொளிர் சுட்டி சேர்த்து
துங்கப் பசும்பொனணி மாம்பழக் கொண்டையுந்
துகளற முடித்து முல்லை
துணர்சூட்டி யஞ்சனந் தீட்டிமலை யரையனொரு
தோகைசீ ராட்டி வைத்துச்
செங்கைத் தலங்களி லணைக்கும் பசுங்குழவி
செங்கீரை யாடி யருளே
திருவாஞ்சை வளர்மங்கை யருளோங்கு விழிநங்கை
செங்கீரை யாடி யருளே.

சுவான் - துடை; காமர் - அழகிய; ஐம்புனல் - அழகிய நீர்; சுரபி - பசு; நுதல் - நெற்றி; தரளம் - முத்து; துங்க - பரிசுத்த மான; துகள்அற - குற்றம் நீங்க; துணர் - பூங்கொத்து; சூட்டி - அணிவித்து; அஞ்சனம் - மை; மலையரையன் - பர்வதராஜன், ஒருதோகை-ஒப்பற்ற மயில் போன்ற பார்வதி; பசுங்குழவி-செல்வ முடைய குழந்தையாகிய பார்வதி. (3)

16. பன்னற் கருஞ்சிறைப் பேட்டுவண் டொடுசெழும்
பாட்டளிகள் மோட்டு முதுநீர்
பாசடைய முள்ளரைத் தாட்டா மரைச் செழும்
பசியமுகை முகநெ கிழ்ந்து
துன்னற் கரும்பெரு முறுக்குடைந் தாடகத்
தோடுவிரி பூம்பொ குட்டுத்
துளிநறவு கால்பாய்ந்து சளசள வெனக்கிளர்ந்
தூம்பினிடை பாய வளருங்
கன்னற் செழுந்தோகை மேய்ந்தவம் பகுவாய்க்
கவினுறு பெருஞ்செ குத்தற்
காழ்படு மருப்புப் பொருப்புறழ் புனிற்றிளங்
கார்மேதி கதிர்க நிக்குஞ்

செந்நெற் றடம்பணைப் பொன்னிவள நாட்டரசி
செங்கீரை யாடி யருளே
திருவாஞ்சை வளர்மங்கை யருளோங்கு விழிநங்கை
செங்கீரை யாடி யருளே.

பன்னற்கு அரும் - சொல்லுதற்கு அருமையாகிய; அளிகள் - வண்டுகள்; பசிய - பச்சைநிறமுடைய; முகை - அரும்பு; துன்னற்கு அரும் - நெருங்குதற்கு அரிய; ஆடகத்தோடு - பொன் போன்ற இதழ்; நறவு - தேன்; தூம்பு - மதகு - தோகை மயில்; பொருப்பு உறழ் - மலையை ஒத்த; புனிற்றிளம் - மிக்க இளமை; மேதி-எருமை; கறிக்கும் - கடித்துண்ணும்; தடம்பணை - விசாலமான வயல்; பொன்னி - காவிரி. (4)

17 தருமபுரம் வெண்காடு செங்காடு திருவுசாத்
தானம்நெய்த் தான மருணை
சாய்க்காடு நள்ளாறு வியலூர் மறைக்காடு
சத்திமுத் தம்ப றியலூர்
பரிதிநிய மங்கஞ்ச னூர்நாவ லூர்சேறை
பைஞ்ஞீலி பூந்து ருத்தி
பாச்சிலாச் சிராமங் கருப்பறிய லூர்இடும்
பாவனம் பட்டீச் சுரம்
வருபசுப தீச்சுரம் ராமநந் தீச்சுரம்
மயானமதி முத்தம் வல்லம்
வாட்போக்கி வீரட்டம் மாசில்விற் குடிதிட்டை
வடமுல்லை வாயில் அம்பர்
திருமருகல் அபிமுத்தீச் சரத்திலுறை மடமங்கை
செங்கீரை யாடி யருளே
திருவாஞ்சை வளர்மங்கை யருளோங்கு விழிநங்கை
செங்கீரை யாடி யருளே. (5)

வேறு

18. தானே தன்னை யொப்பனை
யெழுதிய சந்த வனக்குயிலே
தாயா கிப்புவ னம்பதி
னலுந் தந்தருள் திரவியமே

ஆனே றுடையா னொருபாகம்பிரி
யாத வரும்பொருளே
யமரரு முனிவரு முறைமுறை
பரவிய அலைகட லாரமுதே
மானே வெற்பி லொருத்தன் வளர்த்தருள்
மழலைப் பைங்கிளியே
மயிலே யயிலே வெயிலே காண
மலர்ந்தச ரோருகச்செந்
தேனே ஞானோ ததியே நிதியே
செங்கோ செங்கீரை
திருவாஞ் சையில்வளர் மங்கள நாயகி
செங்கோ செங்கீரை.

சந்தவனம் - திருவாஞ்சை; வெற்பிலொருத்தன் - பருவத ராஜன்; சரோருகம் - தாமரை, ஞானோததி - ஞானக்கடல். (6)

19. கலையார்ந் தெழுமுனி வோர்வணங்கு
தாளினர் பங்கா ருந்தேனே
கடியோங் கியமலர் சூடுகின்ற
தாழ்குழ னங்காய் பைங்காவே
இலையார்ந் தெழுசுடர் வேலர்தந்தி
தாமென வந்தா யெந்தாயே
இமவான் றனிமனை யாள்பயந்த
ஞான மடந்தா யந்தோகாய்
அலைவாய்ந் தறிதுயில் மாயவன்ச
கோதர மங்காய் சிங்கார
அகிலாண் டமுமிரு தாள்வணங்க
வாழ்வரு ளன்பர் இன்பாகே
சிலைவா ணுதலணி யாடுகின்ற
நாரணி செங்கோ செங்கீரை
திருவாஞ்சை யில்வளர் வாழவந்த
நாயகி செங்கோ செங்கீரை.

தாளினர் - சிவன்; கடி - வாசனை; கா - சோலை; வேலர் - முருகன்; தந்தி - கணபதி; மனையாள் - மேனை; நாரணி - நாராயணன் சகோதரி. (7)

20. முடியொடு முடிபட மிடைபடு
தடமணி காழிருள் கணஞ்சிற
முனிவரு மமரரு முதல்வரும்
முறைமுறை தாடொழு செந்தேனே
நடுமுதல் கடையறு மருண்முத
லொருபுடை வளரு மரும்பாவாய்
நவசர மொழுகிய கவிசொல
வுருகிய தேவர்கள் தம்தாயே
கடிமல ரிடைநறை படிமிசை
பெருகிட வீறுப சுங்காவே
கவுணிய ரிறையுண முலையமு
தருளிய காமர்செ ழும்பாகே
அடியவ ரிடரற வருள்புரி
மடமயி லாடுக செங்கீரை
அணிமணி யொளியிள வெயில்விடு
புணர்முலை யாடுக செங்கீரை.

காழ்இருள் - மிகுந்த இருள்; கடிமலர் - மணம் மிக்கபூ; நறை - தேன்; படிமிசை - பூமியின்மேல்; வீறு - பொலிவு; கா - சோலை; கவுணியர்இறை - திருஞான சம்பந்தர்; காமர் - அழகிய; மடம் - இளமை. (8)

21. கனைகதிர் வழிவில கிடநெடு
முகடுறு கோவில் வருந்தேவே
களியளி பரவிய சததள
மலரொரு காணிபெ றுங்கோதாய்
மனதினி லனுதினம் நினைபவ
ருறுபெரு வாழ்வுத ருந்தோகாய்
வளமுள பரிமள மிருகமத
மொழுகுப யோதர மென்போதே

இனிதினி தெனமறை முறையிடு
பரிபுரை யேயெனை வந்தாளும்
இருநிதி யனையவள் பரகதி
தருபவள் ஈனம றுந்தேவர்
அனவர தமுமுடி யடிபணி
கொடியிடை யாடுக செங்கீரை
அணிமணி யொளியிள வெயில்விடு
புணர்முலை யாடுக செங்கீரை.

கனை - செறிவு; முகடு - உச்சி; சததளம் - நூறுஇதழ்; காணி - உரிமை; மிருகமதம் - புனுகு; பயோதரம் - தனம்; போது - மலர்; பரிபுரை - அம்பிகை; இருநிதி - செல்வம்; மறை-வேதம். (9)

வேறு

22. நாட மலியும் பழவடியார்
ஞான னந்தக் கடல்மூழ்கி
நயந்து வியந்து முகமலர்ந்து
நவில்வீ டடைந்து நலனெய்தப்
பாடன் மலியு மூவர்தமிழ்ப்
பதிகம் புனைந்து கதிவழங்கும்
பவளச் சடிலக் குழகரொடு
பாகங் கலந்த பசுந்தேனே
யாடன் மலியு மரக்காம்ப
லல்லிக் கதவ மடைத்தொதுங்க
வருங்புங் கமல முகமலர்த்து
மருக்கன் கொடிஞ்சித் தேர்தடுக்கும்
மாடமலியுந் திருவாஞ்சை திருவாஞ்சை
வாழ்வே செங்கோ செங்கீரை
மருவார் குழலே யருட்கடைக்கண்
மாதே செங்கோ செங்கீரை.

மூவர் - சம்பந்தர், அப்பர், சுந்தரர்; சடிலம் - சடை; அருக்கன்-சூரியன்; கொடிஞ்சி - தேர்மொட்டு. (10)

23. நசைதரு தீந்தமி ழறிஞர்கள்
தாம்புகழ் நங்காய் சிங்கார
நயனுடை நோன்றவ முனிவர
ரீண்டிய பைங்கா வின்பூவே
யசைதரு மீர்ங்கவுண் மதகரி
போன்றிடு மெங்கோ வின்றுயே
அலைகடல் வாய்ந்தெழு விடநுகர்
பாந்த ளணிந்தார் கண்காண
விசையொடு சூழ்ந்தர மகளிர்
குழாங்களி னின்ரு டுந்தேவே
இமகிரி யோன்குடி தழைவுற
வோங்கிவ ளர்ந்தா யொன்றேடேழ்
திசைபுகழ் வாஞ்சிய மருவிய
பூங்கொடி செங்கோ செங்கீரை
திருமகள் காந்தனொ டுடன்வரு
மான்பிணை செங்கோ செங்கீரை.

கவுள் - கதுப்பு; மதகரி - யானை; எம்கோ - கணபதி; பாந்தள் - பாம்பு. (11)

---

௫. தாலப் பருவம்

24. காமர் மணிகிம் புரிக்கோட்டு
களிறு மறையுங் கதிர்ச்செந்நெற்
கழனி புகுந்து துழனியெழக்
களிவண் டோச்சி மூச்செறிந்து
வாம மருவு முலைநெரித்து
மருவிச் சொரிந்த பால்மேதி
வள்ளைக் கிடங்கு புகுந்துழக்கி
வளங்கூர் திருவாஞ் சையில்வாழ்வே

நாம மணிக்குண் டகழிநெடு
ஞாலம் பரவு நறைப்பொகுட்டு
நளினக் கிளத்தி பணிகேட்ப
நாவின் கிழத்தி புகழ்கடுக்கைத்

தாம ரிடத்திற் பெருவாழ்வு
தழைக்கும் பரையே தாலேலோ
சந்தா டவியில் வாழவந்த
தாயே தாலோ தாலேலோ.

காமர் - அழகிய; கிம்புரி - யானைக்கொம்பிற்பூண்; துழனி - ஒலி; வாமம் - அழகு; கிடங்கு - குளம்; நாமம் - அச்சம்; ஞாலம் - பூமி; நறைப்பொகுட்டு-தேன் நிரம்பிய தாமரை மொட்டு; நளினக் கிழத்தி - திருமகள்; நாவின் கிழத்தி - கலைமகள்; கடுக்கை - கொன்றை; தாமம் - மாலை. (1)

25. கங்கைத் திரையிற் கோதா
விரியிற் காளிந் திநதியிற்
கன்னித் துறையிற் பொன்னிக்
கரையிற் கவுதம நதிநீரிற்

றுங்கச் சுழியிற் பம்பைக்
கிருபாற் சூழ்பொரு னைக்கிடையிற்
சூன்முதிர் வெள்ளை வலம்புரி
தெள்ளிச் சொரிநித் திலமணியே

பொங்கப் புனையு மெழுத்துஞ்
சொல்லும் பொருளு மலங்காரப்
பொலிவுந் தோன்ற வடித்து
முடித்த பொருத்த மிருத்தியமுச்

சங்கத் தமிழ்சேர் வாஞ்சையில்
வாழ்வே தாலோ தாலேலோ
சங்கரர் பங்குறை மங்கள
நாயகி தாலோ தாலேலோ.

கன்னி - கன்னியாகுமரி; பொன்னி - காவிரி; பொருனை - தாமிரபரணி. (2)

26. பண்டா யிரவா யழல்விரி
துத்திப் பஃறலை வாளரவிற்
பச்சைத் திருமா லச்சுத
னுந்திப் பதுமப் புதுமனையி
லுண்டா கியபைங் குழவி
யிழைத்தரு ளொண்பொன் மணிக்கோயி
லுள்ளுறை சோதிச் சுடரை
விடாதே யோங்கு பொலன்கொடியே
வெண்டா ரணிகுழன் மதியே
குடகா விரியி னிளஞ்செங்கால்
வெள்ளோ திமமே வண்டு
விழாதலர் விரிதரு மொருதெய்வத்
தண்டா மரையே வருதிரி
புரையே தாலோ தாலேலோ
சங்கரர் பங்குறை மங்கள
நாயகி தாலோ தாலேலோ.

துத்தி - புள்ளி; பைங்குழவி யிழைத்த - பிரமதேவனால் நிர் மாணிக்கப் பெற்ற; சோதிச்சுடர் - சிவபிரான்; ஓதிமம் - அன்னம். (3)

27. வருவே தண்டமு மொருமூ
தண்டமும் வடகோ தண்டமுமால்
வளர்வை குண்டமு மெங்கு
நிரைந்து வளந்தரு மஞ்சேயோ

திருவே கம்பத் தொருமாங்
குயிலே தெய்வத் தாமரையிற்
றேனே கற்றோர் நெஞ்சிற்
கெஞ்சித் தேடும் விழுப்பொருளே
உருவே யருவே யொளியே
வெளியே யுலகி லுயிர்ப்பயிருக்
குயிரே யயிரா வதமும்
மதமும் இந்திர ரும்பரும்வாழ்
தருவே மருவார் குழலஞ்
சுகமே தாலோ தாலேலோ
சங்கரர் பங்குறை மங்கள
நாயகி தாலோ தாலேலோ.

வேதண்டம் - கைலாயம்; மூதண்டம் - பிரம்மாண்டத்தின் முகடு; வடகோதண்டம் - மேருமலை; மஞ்சு - மேகம். (4)

28. பங்கந் தழுவிய கயல்பாய்
வயலிற் கயலிற் படர்திடரிற்
பயிரிற் குயிராம் புயல்நீ
ரோடிப் பாய்ந்த விளங்காவிற்
கொங்கந் தழுவிய குவளைக்
குழியிற் சுழியிற் பெருவழியிற்
கொள்ளைப் பிள்ளைச் செங்கா
லன்னங் கூட்ட மிடுந்திரளில்
வங்கந் தழுவிய வாவிக்
கரையின் மஞ்சளி ஞிஞ்சியில்நீள்
வாழைக் கனியுந் தாழைக்
குலையு மலிந்த வனந்தோறும்
சங்கந் தழுவிய திருவாஞ்
சையிலுமை தாலோ தாலேலோ
சங்கரர் பங்குறை மங்கள
நாயகி தாலோ தாலேலோ.

பங்கம் - சேறு; கா-சோலை; கொங்கம் - பூந்தாது; தாழை-தென்னை. (5)

29. கருமத் துயரற வடியார்க்
கருளிய கருணைப் பெருவாழ்வே
கலகப் படையிடு மயிடத்
தலையிரு கழல்கொடு நடமாடு
மொருகொற் றவைவடி விவள்விட்
டிலளென வுரையிட் டொளிர்சேயே
உளம்விட் டொருவரு மளவிட்
டிவையென வுரையிட் டெழுதாத
அருமைப் பழமறை முறையிட்
டலமரு மவனிக் கொருதாயே
அமையத் தமிழ்புனை யிமயத்
தடவரை யரசர்க் கரசனெனுந்
தருமப் பொருடெரி பெருமைத்
துரைமகள் தாலோ தாலேலோ
சங்கரர் பங்குறை மங்கள
நாயகி தாலோ தாலேலோ.

மயிடத்தலை - மகிடாசுரன்தலை; கழல் - திருவடி; கொற்றவை - துர்க்கை; பழமறை - பழைய வேதங்கள்; அலமரும் - வருந்தும்; தடவரையரசர் - பர்வதராசன். (6)

30. முதியவர் சததள விதயமென்
முளரியின் மீதே வாழ்பாவாய்
முழுமதி புரைதிரு முகவழ
கொழுகிய வீறே டோரா று
கதிர்முடி யினனுண முலையமு
தொழுகிய காரா வேதேவே
கறைமிட றுடையவ னொருபுடை
குடியென வேவாழ் சீர்மாதே
மதிதரு பலகலை யிசைமுறை
நிறுவிய யாழ்கூர் நாவாணி
மகிழ்நனு மிமையவ ரிறைவனு
முனிவரு நாவூ டோவாதே

சதுமறை கொடுதுதி செயவரு
திரிபுரை தாலோ தாலேலோ
தரைமகள் மரைமகள் பரவிய
புணர்முலை தாலோ தாலேலோ.

முதியவர் - பக்தி முதிர்ந்தவர்கள்; இதயம் - உள்ளம்; முளரி-தாமரை; , புரை - போன்ற; வீறு - பெருமை; ஓராறு கதிர்முடியினன் - ஆறுமுகப் பெருமான்; காரா - பசு; வாணி மகிழ்நன் - பிரமன்; இமையவர் இறைவன் - தேவேந்திரன். (7)

31. கதிதரு கைக்கட முகனை
யளித்தருள் தாயே சேயான
கவுணிய னுக்கிரு முலையமு
தைத்தரு சீர்சூழ் கோமாதே
நிதியரு ளித்திகழ் கவிஞ
ரிடத்துறை வாழ்வே சூழ்வேலை
நிலம்நெளி யப்பொரு மவுணர்
பொருப்புறழ் தோள்மேல் வாள்வீசும்
மதிநுத லுக்கிர வயிரவி
சிற்பரை யேசே யேபாய்நீர்
மருவிய புட்கர ணியிலொரு
கட்கடை யாலே மேலோர்தாழ்
சதுமுக னைத்தரு பரம
ரிடத்துமை தாலோ தாலேலோ
தமிழை வளர்த்தருள் பொழியு
மடப்பிடி தாலோ தாலேலோ.

கடம் - மதநீர்; கவுணியன் - திருஞான சம்பந்தர்; வேலை நிலம் - கடல்சூழ்ந்தபூமி; அவுணர் - அரக்கர்; பொருப்புஉறழ் - மலையை ஒத்த; மதிநுதல் - பிறை போன்ற நெற்றி; உக்கிரம் - கோபம்; புட்கரணி - தடாகம்; மடப்பிடி - இளமை தங்கிய பெண்யானை போல்பவள். (8)

32. பலபல சமயமு மவரவர்
கடவுளு மாவாய் நாலூறும்
பனுவல்கள் தழுவிய கனைவரி
யளிபயில் கோதாய் ஓதாத

கொலைபயி லவுணர்க டலைமிசை
குருதிக ளாறு யோரேழு
குலகிரி யிமகிரி யருவியி
லொழுகிட வேகூர் வேலாலே

யிலகிட வமரிடை பொருதிற
லறுமுக னூர்தா யேதூயோர்
இதையமென் முளரியி லமுதென
வுறைதரு மாமா னேவாஞ்சித்

தலமகி ழிறையவர் ஒருபுறம்
வளர்கொடி தாலோ தாலேலோ
தரைமகள் மரைமகள் பரவிய
புணர்முலை தாலோ தாலேலோ.

சமயம் - மதம்; பனுவல் - பாட்டு; குருதி - இரத்தம்; அளி - வண்டு; பொருதிறல் - போர் செய்வதில் வல்லமையுடைய; தூயோர் - தெளிந்த மனமுடைய பக்தர்கள்; தரைமகள் - பூமி தேவி; மரைமகள் - திருமகள்; பரவிய - துதிக்கும். (9)

33. பளபள வெனப்பொருளு மிசையுமரு
வுந்தமிழ்சொல் மாமூவர்
பதிகமரு விப்பொலிய நிதியமரு
ளிக்கலிகள் கால்சாய

வளமுள விழிக்கருணை மழைபொழியு
மூக்கணிறை யோர்பாதி
மலியில விதழ்க்கவுரி சிவசமய
வித்தடிய ராஞேர்பா

விளகுமிதை யத்தமலை புளகமுலை
பெற்றகொடி நாடோறு
மிணையுமடி மைக்கொடிவி லருள்பெற
வளர்க்குமுமை தோடுடே
சளசர வெனபெருகும் அருளுதவு
கட்கமலை தாலோ தாலேலோ
தருவினிழ விற்கடிகொள் புணர்முலை
மலைக்குமரி தாலோ தாலேலோ. (10)

ச. சப்பாணிப் பருவம்

34. மாமணிச் செம்பொற் பொருந்திருக் கோயிலணி
மண்டபத் தழகு வாய்த்த
வாலுளைச் சுழல்விழிக் கூருகிர்ப் பொருதிறல்
மடங்கலணி யாச னத்திற்
கோமளக் கங்கைத் தரங்கச் சடாடவிக்
குழகரைப் புழுகு மொய்த்த
குங்கும கதம்பம்ரு கமதபடீ ரச்சேறு
குலவுமெண் டோள ரவரைக்
காமரைச் செற்றமுக் கண்ணரைப்
படநாக கங்கணரை யாலமுண்ட
கண்டரைத் தொண்டரைக் காப்பவரை
வெள்விடைக் கயிலாய ரைக்கடுக்கைத்
தாமரைப் பூசைபுரி தாமரைச் செங்கைகொடு
சப்பாணி கொட்டி யருளே
சந்தன வனத்திலுறை சுந்தரி மலர்க்கமலை
சப்பாணி கொட்டி யருளே.

வால்உளை - மிகுதியான புறமயிர்; கூர்உகிர் - கூர்மையான நகம்; திறல் - வலிமை; மடங்கல் - சிங்கம்; கோமளம் - இளமை

தரங்கம் - அலை; சடாடவி - சடைக்காடு; குழகர் - சிவபிரான்; படீரம் - சந்தனம்; புழுகு - புனுகு; மிருகமதம் - கஸ்தூரி; காமனை - மன்மதனை; செற்ற - அழித்த; கடுக்கைத் தாமர் - கொன்றைமாலை யணிந்தவர். (1)

35. அத்திரி வசிட்டரோ டகத்தியர் புலத்திய
ரகத்தடிய ரிற்ப ரவவே
அச்சுதனு மெச்சுசத பத்திர மலர்த்திருவு
மக்கழல் துதித்து நிறைபூ
வைத்துநல பத்திர மருச்சனைசெய் திட்டுள
மகிழ்ச்சிவர முற்று முறவே
மட்டுறு மலர்க்கிழவன் மற்றுயர் நிலத்தவரும்
வச்சிரனு முச்சி தொழவே
சித்தரு மியக்கரு நெருக்கிட நிலத்தவர்
சிரத்திருகை வைத்தி லகவே
சித்திர சபைக்குளரு மைக்கழல் குனிக்குமொரு
சிற்பர ரிடத்து மயிலே
சத்தமொடு தர்க்கமு முழக்குதிரு வாஞ்சையுமை
சப்பாணி கொட்டி யருளே
தக்கசிக ரத்தொகுதி மிக்கவிம யத்திரவி
சப்பாணி கொட்டி யருளே.

அடியரிற்பரவ - அடியார்கள் போல்வணங்க; அச்சுதன் - திருமால்; சதபத்திரமலர் - நூறு இதழ்களையுடைய தாமரை திரு-இலக்குமி; கழல் - திருவடி; மட்டு - தேன்; மலர்க்கிழவன் - பிரமன்; வச்சிரன் - தேவேந்திரன்; குனிக்கும் - வளைக்கும்; சிகரம் - மலையுச்சி. (2)

36. மோட்டாமை யொடுகோட்டு மழவிளந்
தண்கதிர் முடித்தசெம் பவளவேணி
முக்கட் கபாலத்ரி சூலப்பி ரானுள்ள
முள்ளுருகி முறுவல் கூரப்

பாட்டால் நிறைந்துந்தி பூத்தருள் பழுத்தொழுகு
பைந்துழாய்க் கொண்டல் காண
பலகோடி யண்டமு மெனைப் போன்ற
பேதமைப் பத்தியரு முத்திவேண்டத்
தோட்டால் நிறைந்தழகு சிந்திச் செழுந்தேறல்
துளிதுளித் தூற்றெ டுப்பச்
சுற்றுஞ் சிறைச்சுரும் பொருகோடி யுண்டுமகிழ்
தூங்குமுகை விண்ட லர்செழுந்
தாட்டா மரைச்செய்ய கைக்கொண்டு பையநீ
சப்பாணி கொட்டி யருளே
சந்தன வனத்திலுறை சிந்துர நுதற்கமலை
சப்பாணி கொட்டி யருளே.

மழவிளம் - மிகஇளமை; வேணி - சடை; முறுவல் - நகை; பைந்துழாய்க் கொண்டல் - பசிய துளபமாலை யணிந்த முகில் போன்ற திருமால்; தோடு - இதழ்; தேறல் - தேன்; சிறைச் சுரும்பு - இறகுகளுடைய வண்டு; முகை-அரும்பு; பைய - மெல்ல; நுதல் - நெற்றி. (3)

37. மண்டலமும் விண்டலமு மெண்டிசையு நின்றடி
வணங்க வருபெண்கொ டியினால்
வந்தொரு முகுந்தன்முய லுந்தவ நெடுங்கனல்கண்
மண்டிநிறை குன்ற தெனவே
விண்டதை யறிந்தவர்க ளண்டவுட னன்றிதரு
வென்றிவிடை யொன்றின் மிசையே
வெண்பணில மும்பெரிய துந்துமிக ளும்பழைய
வெங்கட லிலங்க திரவே
கண்டைபுனை யுங்கரி முகன்குகனொ டும்பல
கணங்களு நெருங்கி வரவே
கண்களி துளும்பவெதிர் சென்றொரு கரும்புயல்
கனிந்தலர் சொரிந்து தொழவே

தண்டலில் வரந்தரு மகண்டரொரு பங்கிலுமை
சப்பாணி கொட்டி யருளே
சந்தன வனந்தழைய வந்தரு ணிறைந்தபரை
சப்பாணி கொட்டி யருளே.

மண்தலம் - பூமி; விண்தலம் - ஆகாயம்; (இவை இடவாகு பெயராக அங்குள்ளாரைக் குறிக்கின்றன); முகுந்தன் திருமால்; வென்றிவிடை - வெற்றியுடைய ரிஷபம்; மிசை - மேல்; பணிலம்- சங்கு; துந்துமி - பேரிகை கண்டை - வீரக்கழல்; கரும்புயல் - திருமால்; அகண்டர் - சிவன். (4)

38. கங்கந் தழைத்தவெள் வேற்குறவர் கரைநின்று
கைக்கொண்டு கண்பு தைப்பக்
கனவரைச் சையத் திழிந்துர லடிக்கட்
கரிப்பிறை மருப்பு வாரிச்
சிங்கந் திகைத்திரு புறத்தலம ரப்பிறிது
சென்றகிலின் வேர்க ரைத்து
சீதகுங் குமமர முருட்டிவெம் பாலையுஞ்
செழும்புறவு மொன்று செய்து
பங்கந் தழைத்தெழு கிளைக்கால் நிரப்பிமிகு
படுகர்திடர் செய்து நிலவும்
பால்விரி மணித்தரள முந்தியழ கொழுகுசூல்
படுகுட வயிற்று வெள்ளைச்
சங்கந் திரைத்துவரு குடகா விரிக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே
சந்தன வனத்திலுறை சுந்தர ரிடத்திலுமை
சப்பாணி கொட்டி யருளே.

கங்கம் - பெருமரம் (யாழ். அக); சையம் - மலை; உரலடிக் கடகரி - உரல் போன்ற காலும் மதமுமுடைய யானை. அலமர- வருந்த; புறவு - குறிஞ்சிநிலம்; பங்கம் - சேறு; படுகர் - பள்ளம்; திடர் - மேடு; தாளம் - முத்து; சூல் - கருப்பம்; திரைத்து - அலசி. (5)

39. பைவந்த துத்திப் பெரும்பாந்த ளுடனெளிவு
படமுடியின் மேற்சு மந்த
பாரேழு கடலேழு பொழிலேழு வரையேழு
படியுமழை முகில்க ளேழு
மெய்வந்த தீவேழு தாதேழு பிலமேழு
விரவும் பிறப்பு மேழு
மேவாத பொருளேழு பாவாண ரிசையேழு
விழைவிதரு நதிக ளேழு
மைவந்த நாகங்க ளோரேழு முனிவர்க்கு
வாய்த்ததொல் பொருள்க ளேழு
வாகனமு மோரேழு மாதர்களு மோரெழுவர்
வாய்த்தநாள் தோறு மல்க
சைவந் தழைக்கவரு தெய்வப் பசுந்தோகை
சப்பாணி கொட்டி யருளே
சந்தன வனத்தில்வளர் சுந்தர ரிடத்திலுமை
சப்பாணி கொட்டி யருளே.

பை - பாம்பின்படம், துத்தி - புள்ளி, பாந்தள் - பாம்பு, பார்ஏழாவன - பூலோகம், புவலோகம்' சுவலோகம், மகாலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பனவாம். கடல் ஏழு-உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

வரைஏழு - கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி. முகில்கள் ஏழு - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளாமுகில், நீலவருணம். தீவேழு - சம்புத்தீவு, பிலக்ஷத்தீவு, குசத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சாகரத்தீவு, சான்மலித் தீவு, புட்கரத்தீவு. தாது ஏழு - செம்பொன், வெண்பொன், இரும்பு, ஈயம்; வெண்கலம், தரா. பிலம் ஏழு - அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம். பிறப்பு ஏழு - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, நிற்பன. பொருள் ஏழு - உடன்படல், மறுத்தல், பிறர்மத மேற்கொண்டு களைவு, தாஅனுட்டித் தனது

நிறுப்பு, இருவர் மாறுகோ ளொருதலை துணிவு, பிறர் நூற் குற்றஞ்சாட்டல், பிறிதொடுபடாஅன் தன்மதங் கொளல். இசை ஏழு - குரல், துத்தம், கைக்கிளை; உழை, இளி, விளரி, தாரம். நதிகள் ஏழு - கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி.

முனிவர் ஏழு - அத்திரி, குச்சகன், கௌதமன், பிருகு, காசிபன், அங்கிரா, வசிட்டன். (6)

வேறு

40\. உருவா யருவா யொளியாய்
வெளியாய் உயிராய் விளைபயிராய்
ஒன்றாய்ப் பலவாய் அன்றாய்
அவையாய் உறவாய் வெம்பகையாய்
மருவாய் மலரா யுள தா யிலதாய்
மனமா யெண் குணமாய்
மதியாய் ரவியாய் முதியார் கவியில்
வழுத்திய வொண் பொருளாய்த்
திருவாய் முகிலாய் அகிலாண் டமுமாய்ச்
சில்பல காதை களாய்
தெய்வச் சுடராய் சைவப்
பொருளாய் செம்பொற் பீடிகையிற்
குருவா யருள்வாய் அமலத்
திரிபுரை கொட்டுக சப்பாணி
கொந்தலர் சந்தவ னந்தழைப்
பைங்கொடி கொட்டுக சப்பாணி.

எண்குணம் - தன்வயத்தனாதல்; தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகப் பாசங் களினின்று நீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, முடிவிலாற்றலுடைமை. (7)

41. கடவூர் சிராப்பள்ளி சேய்ஞலூர் பழுவூர்
கருக்குடி குடந்தை தேங்கூர்
கைச்சினஞ் சக்கரப் பள்ளிமுரு கன்பூண்டி
கலயநல் லூர்க டம்பூர்
வடுகூர் பனந்தாள் நெல்வேலி வக்கரைநெல்
வாயி லாலூர் ஆலவாய்
மாந்துறை பயற்றூர் கதித்தூர் களந்தையெதிர்
கொள்பாடி வடதிருப் பூவணூரும்
இடையாறு கண்டியூர் வேளூ ரரத்துறை
யிராமேச நாகை புகலூர்
ஏகம்ப மையாறு நல்லமா ரூர்விளம
ரிந்திரநீ லப்பொ ருப்பு
குடவாயில் முதலான தலமுறையு
மபிராமி கொட்டியருள் சப்பாணியே
கொந்தலர் மலர்க்கமலை சந்தன
வனத்திலுமை கொட்டியருள் சப்பாணியே.

கொந்து - பூங்கொத்து. (8)

வேறு

42. ஒளிவிடு மிருகுழை பளயள வெனவரு
கன்னிய னப்பே டோ
டுடனடை பழகிய சுடர்விடு முடியி
னிமைக்குமோர் பொற் பாவாய்
அளிபயில் கருவிளை மலர்பொரு திலகு
கயற்கண் மடப்பே தாய்
அமரரும் முனிவரும் முறைமுறை
பரவிய கற்பக மெய்க்காவே
களிதரு பலபல தெளிபொருள்
தழுவிய சித்திர வித்தாரக்
கவிஞர்க ளலமர விதுபொரு
ளௌனவு மிலக்கண முற்றோதுங்

குளிர்சடை முடியின னொருபுறம்
வளர்கொடி கொட்டுக சப்பாணி
குலவிய மணியணி பணிகிளர்
புணர்முலை கொட்டுக சப்பாணி.

குழை - காதணி; பேடு - பெண்; பாவாய் - பதுமை போன்றவளே; அளி - வண்டு; கா - சோலை; அலமர - கலங்க; குளிர்சடை முடியினன் - சிவபிரான்; பணி - ஆபரணம். (9)

43. அருவென வுருவென வருவுரு
வெனவுரை யிட்டுல கத்தூடே
அலமரு முனிவரர் கலிதவிர்
தரவருள் மிக்க சுவைப்பாகே
திரிபுர மெரிசெய வொருவடி
கணைவிடு சிற்பர ருக்கரசை
திகழ்தரு குறுநகை அழகொழு
கியவடி வக்கல வப்பேடே
மருமலர் செருகிய சுரிகுழ
லசையு மெருத்தி லசைத்தோடி
மரைமகள் தரைமகள் கலைமக
ளொடுவிழி பொத்தி வியப்போடே
குருமணி யொளிவிட வடியிடு
மொருபரை கொட்டுக சப்பாணி
குலவிய மணியணி பணிகிளர்
புணர்முலை கொட்டுக சப்பாணி.

வடி - கூர்மையான; கலவப்பேடு - பெண்மயில்; எருத்து - பிடர்; மரைமகள் - இலக்குமி; தரைமகள் - பூமிதேவி; மலைமகள் - சரசுவதி; குருமணி - ஒளிமிக்க ரத்தினம். (10)

ரு. முத்தப் பருவம்

44. வெங்கற்றை யிருள்சீத் தெழுந்திள நிலாக்கதிர்
விரித்தமுது துளிது ளித்து
வீங்குகோட் டொருமதி மருப்புப் பொருப்புறழு
மேனியுர லிடிநீள் தரப்
பங்கப் படுங்கலுழி வெள்ளமென் மேற்புடைப்
பரந்தகட தடமு கத்துப்
பலகோடி மழகளிறு துடியடிக் கன்றினொடு
படையிடை படிந்து நான்ற
அங்கைச் சுருக்கினை நிமிர்த்திட முழக்குகுர
லங்காந் தெழுந்த நால்வா
யானையும் வயிறெக்கி வால்முறுக் காற்றிவட
வனலெரி விழித்த திர்க்கும்
சிங்கத்தி னுடனொடு வெள்ளிமலை வளர்மஞ்ஞை
செம்பவள முத்த மருளே
திரைவாய்ந்த புனல்தெங்கு திருவாஞ்சை
வளருமுமை செம்பவள முத்தமருளே.

பொருப்பு உறழும் - மலையையொத்த; கலுழி - மதநீர்; கடம் - மதம்; மழவு - இளமை; களிறு - யானை; துடி - உடுக்கை; நான்ற - தொங்க; மஞ்ஞை - மயில். (க)

45. மீனிருல் தெருமந்த வெண்டிரைக் குண்டகழி
மீமிசை விரைந்தி ரைந்து
வெள்ளத்தை யுள்ளத்தொ டளறுபட மோட்டகடு
வீங்கக் குடித்தெ ழுந்து
கானிரு வாயிடைப் பொழிந்தன்ன
கறையடிப் பிறைம ருப்புக்
கனமலைக ளொருகோடி மதசெலத் துங்கக்
கடாந்திறந் தூற்று சாரல்

வானிரு மற்றலை சுமத்தல்போல் விண்முகடு
வளர்பசுங் கமுகின் மீதில்
மந்தியொடு தாழ்விரகின் முந்திய முசுக்கலைகள்
வரையிடை யிருந்து பாயத்
தேனிறால் கிழியுமுது குன்றத் திளந்தோகை
செம்பவள முத்த மருளே
திரைவாய்ந்த புனல்தேங்கு திருவாஞ்சை வளருமுடை
செம்பவள முத்த மருளே.

தெருமந்த - சுழல; திரை - அலை; குண்டு - ஆழம்; மீமிசை - மேல்; அளறு - சேறு; கறையடி - யானை; பிறை - சந்திரன்; மருப்பு - கொம்பு; கமுகு - பாக்குமரம்; முசுக்கலை - குரங்கு; வரை - மலை; தேனிறால் - தேன்கூடு; தோகை - மயில்; இது அம்பிகைக்கு உவமையாகு பெயர். (2)

46. கூறுங் குறக்குலப் புன்றலைச் சிறுசிறார்
கூட்டமிடு சாரல் தோர
குங்குமச் சந்தனச் சிவிறிநீர் தூற்றக்
குறிந்தன்ன துளிது ளிக்க
ஊறுஞ் செழுந்தே னிறால்கிழிய மந்திபாய்ந்
தோடுதட வரைமு டியின்மே
லொண்கதிர் பரப்பியெழு திங்கள்விட் டகலாம
லொருமா னிருக்கை நோக்கி
வீறுங் கொடுங்கனற் படுவடவை குடிகொண்ட
விழிவிழி துகிரெ டுத்து
வெங்கழல் விசைகொண்டு வாலாட்டி வயிறெக்கி
வெடிபட முழக்கி யார்த்துச்
சீறும் புலிக்குருளை சூழநெரி வரைமஞ்ஞை
செம்பவள முத்த மருளே
திரைவாய்ந்த புனல்தேங்கு திருவாஞ்சை வளருமுமை
செம்பவள முத்த மருளே.

சிவிறி - விசிறி; தேனிறால் - தேன்கூடு; தடவரை - விசால மான மலை; முடி - உச்சி; வடவை - ஊழித்தீ, உகிர்-நகம்; குருளை - குட்டி, மஞ்ஞை - மயில். (3)

47. ஐவர்க்கு முன்னின்ற சீதரன் றணிமவுலி
யணிபசுந் துளப மாலை
யலரவ னெனும்பழ மறைக்கிழவன் முடிவைத்த
வாயிர மிதழ்ச்ச ரோசஞ்
சைவப் பெருஞ்சமயம் வாழப் பிறந்தருள்
தழைக்குமொரு ரத்ந தீபம்
தவளவா ரணவச்ர பாணிக்கு மாறாத
தானகற் பகவி ருட்சம்
பொய்வைத்த நுணுகிடைச் சுரமகளிர் மோகனம்
பூட்டுநுத றீட்டு திலதம்
பூரணா னந்தப் பிரானுக்கு மலையரசு
புனையுமொரு வச்சிர வலையம்
தெய்வப் பசுந்தோகை யழகினுக் கழகுநீ
செம்பவள முத்த மருளே
திரைவாய்ந்த புனல்தேங்கு திருவாஞ்சை வளருமுமை
செம்பவள முத்த மருளே.

அலரவன் - பிரமன்; சரோசம் - தாமரை; தவளவாரணம் - ஐராவதம்; வச்ரபாணி - தேவேந்திரன்; சுரமகளிர் - தேவமாதர் மோகனம் - ஆசை மிகுகை; நுதல் - நெற்றி; வலையம்-வாகுவ லயம். (4)

48. ஆணிமுத் தென்றவுண னிருமருப் பீர்ந்தெடுத்
தைங்கர னளித்த முத்தும்
ஆழ்கடற் றுறையரசு புரிவருண னுலகைவென்
றணிகொடிச் சுறவின் முத்தும்
வாணிமுத் தங்கொள்ளு மொருபழ மறைக்குழவி
மாளிகைக் கமல முத்தும்
மாயவன் றிகிரியொடு தேடிக் கரத்தணி
வலம்புரியின் வாய்த்த முத்தும்

நாணிமிர்த் தடல்மதன னலரம்பு கோத்தெய்யும்
நாகிளங் கழையின் முத்தும்
நானங் கலந்தமரர் சந்தக் குழம்புபொழி
நல்லவே யீன்ற முத்தும்
தூணிமுத் தெனினுமொரு காணிமுத் தொவ்வாது
செம்பவள முத்த மருளே
சுந்தர ரிடத்தில்வளர் சந்தன வனத்திலுமை
துகிரில்விளை முத்த மருளே.

அவுணன் - கசமுகாசுரன், கழை-கரும்பு; நானம்-கஸ்தூரி, வேய் - மூங்கில்; தூணி - நாலுமரக்கால்; துகிர் - பவளம் - இது இதழுக்கு உவமை. (5)

49. தத்துந் தரங்கக் கடல்முத்துந் தண்ணங்
குவளை சொரி முத்துந்
தாமக் குழலார் களமுத்துந் தழைத்த
வேழந் தரு முத்தும்
வித்துஞ் சாலி விளைமுத்தும்
வெவ்வா யிடங்கர் மிசைமுத்தும்
விரைசூழ் தாற்றுக் கதலிமுத்தும் மேவுங்
கமடஞ் செறி முத்தும்
குத்துங் களிற்றுப் பனைமுத்தும் கூர்வெங்
கேழற் கோட்டு முத்தும்
குலவு பழுக்காய்க் கந்திமுத்துங் குடகா
விரியிற் றுறையில் வளை
முத்தும் பழிக்கும் நினது செவ்வாய்
முத்தந் தருக முத்தமே
முகில்சூழ் சந்தா டவியில்முழு
முத்தே தருக முத்தமே.

தரங்கம் - அலை; தாமம்-மாலை; களம் - கழுத்து; வேழம் - கரும்பு; சாலி - நெல்; இடங்கர் - முதலை; கதலி - வாழை;

கமடம் - ஆமை; களிறு-யானை; கேழல் - பன்றி; பழுக்காய் ; பாக்கு; கந்தி - கமுகு; வளை - சங்கு; முகில் – மேகம். (6)

50. வீழிபுத் தூர்வான்மி யூர்அம்பர் மாகாளம்
வேற்காடு நாகீச்சுரம்
வெஞ்சமாக் கூடல்மழ பாடிதிருவொற்றியூர்
வெண்ணெய்நல் லூர்நாரையூர்
பாழியூ றல்கலிக் காழூர்வலஞ்சுழி பராய்த்துறை
தென்மதுரை செம்பொன்
பள்ளியரி சிற்கரைப் புத்தூர்
விருத்தகிரி பாசூர் திருக்கோடிக்கா
வாழிபயில் கச்சியா லங்காடு விற்கோல
மயிலைகா ளுட்டு முள்ளூர்
வடமுல்லை வாயில்கடு வாய்க்கரைப்புத்தூர்
மயேந்திரப்பள்ளி காட்டூர்
காழிபுக் கொளியூர் வலம்புரந் தழையுமுமை
கனிவாயின் முத்தமருளே
கந்தனை நெருக்கிவளர் சந்தனவனத்திலுமை
கனிவாயின் முத்த மருளே.

51. துதிபெருக்குங் கதிர்விரிக்கும் துகள
கற்றுஞ் சுடரிழாய்
துனிபெருக்குந் தலைவர் பக்கந்
துவளாசிற்கும் பவளமெங்
கதிய ளிக்குந் திருமனத்தின்
குறைதணிக்குங் கனகமே
கடிமலர்ச்சந் தனவ னத்தின்
புடைம ணக்குங் கலைநுதால்
மதுரி தச்செந் தமிழ்ம ணக்குங்
கவிஞர் சித்தும் களிகூர
வழியி தழ்ச்செங் கமல மொக்குஞ்
சரணி ருத்தும் பரிபுரை

சதும றைக்கும் பல பொருட்குந்
தலைவி முத்தந் தருகவே
தரள மொக்குங் குறுந கைப்பெண்
தருக முத்தம் தருகவே.

துகள் - குற்றம்; இழை - ஆபரணம், துனி-புலவிநீட்டம்; கனகம் - பொன்; கடிமலர்-வாசனைவீசும்பூ; நுதல் - நெற்றி; மதுரித - இனிமை மிக்க, நறா - தேன்; தரளம் - முத்து. (8)

52. இழையொளி நெருக்கமுறு சுரர்மகளிர் பற்பலரு
மிருபுறம் நெருக்க வருகே
இலகுமொரு சிற்றுலிடை வயிரமிருள் விட்டெறியு
மெழின்மருவு முச்சி தனிலே
குழைமலர் சுருக்கு தொடை குருமணி
யொளிச்சுடிகை குளிர்பிறை திருச்சுடரவே
குழையினை துளக்கிவளை கலகல வெனப்புதிய
சூலமணி கொழித்து விளையா
டுழைவிழி யருட்கமலை மதகரி யடிக்கமல
முதையுற வுதைக்க மடிமே
லுறவுமு னிருத்திவன முலையமு தருத்திவிழை
யுயிரென வளர்க்கு மமுதே
மழவிடை யுடைப்பரம ரொருபுற மிருக்குமுமை
மதலையிதழ் முத்த மருளே
மருவுசிக ரத்திமய வரையரசு பெற்றகொடி
மதலையிதழ் முத்த மருளே.

இழை - ஆபரணம்; சுரர் மகளிர் - தேவமாதர்; சுடிகை - நெற்றிச் சுட்டி; மதகரி - கணபதி; மழவிடை - இடபம், வரையரசு - பர்வதராஜன். (9)

53. எழுகு வட்டையு நுனிம ருப்பினி
லெதிரே டுக்கும் விடைப்பிரா
னிருபு றத்திலு நிரைநி றுத்திய
சுரர்மு டித்தலை பற்றரு

துழைப ரப்பிடு திருவ டிச்சுவ
டுறவ மர்ந்திடு சத்தியே
உலகு யிர்ப்பயி ரீனவ ளர்த்தரு
ளுறுப னிக்கதிர் கிரணமே

பழம றைக்கிழ வரின்மு டித்தலை
திருகி வைத்த கரத்தனர்
பரிம ளப்புழு கொழுகு மற்புய
வரைகி ளைத்தெழு வச்ரமே

மழைம தர்த்துணை விழிம டக்கொடி
வாயின் முத்த மளிக்கவே
மதும லர்பிடி புணர்மு லைக்கிளி
வாயின் முத்த மளிக்கவே.

குவடு - மலை; மருப்பு - கொம்பு; பனிக்கதிர் - சந்திரன்; பழமறைக்கிழவர் - பிரமன். (10)

---

௬. வருகைப் பருவம்

54\. பல்லியத் தொலி பழைய கடலொலியின் மிக்கான
பனிவரைக் கரச னிட்ட
பந்தரிற் றேவாதி தேவருங் காணநின்
பதமம்மி வைத்த குன்ற
வில்லிகைத் தொடைசூட்டு கண்டத்தி லழகான
வெண்டரள மணிய வருக
மென்பவள விரல்வாய்த்த செங்காந்த ளங்கையிணை
வேல்வளை தரிக்க வருக

நல்லிசையில் யாழ்வாணி கேட்பித்த காதினிடை
நற்பணி திருத்த வருக
நாகிளந் தாமரைத் தாளிணையில் நூபுரம்
நயந்தணிய வருக முடியின்
மல்லிகைத் தார்சூட்ட வருகவொரு மொழிகேட்க
வருகவுமை யாள் வருகவே
மழை வாய்ந்த பொழில்சூழ்ந்த திருவாஞ்சை
தனிலோங்கு மருவார்ந்த குழல்வருகவே.

குன்றவில்லி - மலையை வில்லாக வளைத்த சிவபிரான்' தொடை-மாலை; தாளம்-முத்து; வாணி - சரசுவதி; நாகு இளம் - மிகஇளமை; நூபுரம்-காற்சிலம்பு; பொழில்-சோலை; மரு-வாசனை; குழல் - கூந்தல். (க)

55. இழைதுஞ்சு நான்மருப் புப்பொருப் பூர்குலிச
னிடரற விறைஞ்சி யேத்தி
யெம்பிரான் பலவமரர் தம்பிரான் இவனென்று
மிலகுசெம் பவளவரை மேற்
குழைதுஞ்சு தளிரடிக் கொண்டுமெய்ஞ் ஞானக்
கொழுந்து சாய்த்துப்ப டர்ந்து
குறைவின்றி விழிபூத் தருட்கனி கனிந்தொழுகு
கோமளப் பசிய கொடியே
யுழைதுஞ்சு கோட்சுருத் தெருமர வடித்தெழுத்
துவரிநடு வகடு வீங்க
வுண்டிருண் டண்டத்துருத்துத் தடித்திடித்
தொடுங்கி யொளிருங்கமஞ் சூன்
மழைதுஞ்சு சந்தனச் சோலைசூழ் திருவாஞ்சை
வாழவந் தவள் வருகவே
மழைகுமிறு சிகரவரை யரையனருளிய குழவி
மருவுபுணர் முலை வருகவே.

நான் மருப்புப்பொருப்பு - ஐராவதம்; ஊர் - ஏறிச்செலுத்தும்; குலிசன் - வச்சிராயுதமுடைய இந்திரன்; தெருமா - சுழல;

உவரி - கடல்; கமம்சூல் - நிறைந்த கருப்பமுடைய; குமிறு-ஒலி செய்கின்ற; சிகரம் - மலையுச்சி; வரையரையன் - பர்வத ராசன். (2)

56. படிகொண்ட நள்ளிருட் படலங்
கிழித்தொளிப் பரப்பிமழ கதிர்விரித்த
பால்மதிவளைத்துக் கிடந்தன்ன நித்திலப்
பல்தொடை யணிந்த கொங்கை

யடிகொண்ட வன்றுதொட் டின்றைவரை
குறுகுறுப் பகலாத நுழைமருங்கி
லாடமைத் தோட்சுரர் மடந்தையர்
குழாத்தினிடை யம்மனை யெடுத்துநின்று

கடிகொண்ட பின்னலு மசைந்தாட
வேயிருங் கைவீசி மெய்யசக்கி
காணரிய பாதஞ் சிவக்கவினை யாடுவது
கண்டுடல் நோகு மென்ன

மடிகொண்டு மலையரையன் மனைவிசெவ்
வாய்வேண்ட வந்தநாயகி வருகவே
மழையார்ந்த பொழில் சூழ்ந்த திருவாஞ்சை
தனில்வாய்ந்த மருவார்ந்த குழல்வருகவே.

படி - பூமி; பால்மதி - வெள்ளிய சந்திரன்; நித்திலம் - முத்து. தொடை - மாலை; அமை - மூங்கில்; சுரர் மடந்தையர் - தேவமாதர்; குழாம் - கூட்டம்; மடி - வருந்தி; மலையரையன் மனைவி - மேனை; மழை ஆர்ந்த பொழில் - மேகம் நிறைந்த சோலை. (3)

57. வேலையு மசைந்தாட மேருவு
மசைந்தாட மென்முளரி குடியிருக்கும்
மெல்லிய லசைந்தாட மண்ணுள
ரசைந்தாட விண்ணவ ரசைந்தாடவேழ்

சோலையு மசைந்தாட மரியசைந் தாடவொரு
சூரிய ரசைந்தாட பொற்
சுட்டியு மசைந்தாட முத்துமூக் குத்தி
யொளி சூழ்ந்தசைந்தாட வம்பொன்
ஞேலையு மசைந்தாட நவரத்ந
மாலிகையொ ராயிர மசைந்தாடவே
ஒட்டியா ணமுமசைந் தாடவா
ஞேர்நாட்டி னுறுபாரி சாததரு
மாலையு மசைந்தாட வணிமடி யசைந்தாட
மலையரையன் மகள் வருகவே
மழையார்ந்த பொழில்சூழ்ந்த திருவாஞ்சை
தனில்வாய்ந்த மருவார்ந்த குழல்வருகவே.

வேலை - கடல்; முளரி - தாமரை; மெல்லியல் - இலக்குமி

58. முருக்கிற் சிறந்த செங்கனிவாய் முத்தே
வருக சததள மென்
முளரிப் பொகுட்டி னுள்ளிருக்கும்
முருகே பொன்னிநதி
பெருக்கிற் சிறந்த வெள்ளையன்னப்
பேடே வருக பான்மதுரம்
பிறக்கப் பிறக்க மழலைமொழி
பேசுங் கிளியே வருகமறைச்
சுருக்கிற் சிறந்த முக்கோணச்
சுடரே வருக கற்பகத்தின்
றுளிரே வருக வேதாந்தத் தொடர்பே
வருக கயிலை யிறை
வருக்குச் சிறந்த வொருபாதி
மயிலே வருக வருகவே
மருவார் குழலே திருவாஞ்சை
வாழ்வே வருக வருகவே.

முருகு - இளமை; பொன்னி - காவிரி நதி; பேடு - பெண்.

59. பூட்ட வருக மணியரைஞாண்
புனைய வருக வுடற்பூழி
போக்க வருக வொருமாற்றம்
புகல வருக நுதற்றிலகம்
தீட்ட வருக விரலாழி செலுத்த
வருக தோளில் வளை
செறிக்க வருக மேகலைகள் சேர்க்க
வருக மதுமலர்த் தார்
சூட்ட வருக தாட்சிலம்பு துலக்க
வருக நினது கலை
சொல்ல வருக வெடுத்தமலர்
தொடுக்க வருக தொட்டிலிற்று
லாட்ட வருக கொங்கையின்மேல்
அணைக்க வருக வருகவே
அணங்கே திருவாஞ் சையில்வளர்தெள்
ளமுதே வருக வருகவே.

பூழி - புழுதி; மாற்றம் - சொல்; நுதல் - நெற்றி; ஆழி ; மோதிரம்; வளை - வாகுவலயம்; மேகலை - மேகலாபரணம்; மது- தேன்; - தார் - மாலை; தொடுக்க - கட்ட. (6)

60. துறையூர் திருப்பறியல் நின்றியூர்
மயிலாடு துறைகழுக் குன்றுபாலைத்
துறைகுரங் கணின்முட்ட வடகுரங்
காடுதுறை தூங்கானை மாடமாக்கூர்
நறையூர் திருக்குவளை விற்குடி யிரும்பூளை
நாவலூ ரறைய ணிநலூர்
நாட்டியத் தான்குடி யகத்தியான்
பள்ளிநன் னிலந்திரு வழுந்தூர்
இறையூர் கடிக்குளங் கேதார நெல்வெண்ணெய்
இடைமருது தில்லை பாதா
ளீச்சுரம் வல்லம் பனங்காடு தண்டலை
ஈசன்வலி வலம் வேட்களம்

மறையவனூ ரிலம்பயங் கோட்டூர்
புரந்தருள வந்தநாயகி வருகவே
மதியார்ந்த பொழில்சூழ்ந்த திருவாஞ்சை
தனில்வாய்ந்த மருவார்ந்த குழல் வருகவே.

புரந்தருள - காப்பாற்ற. (7)

61. கலையார் மதிபோற் றிலகநுதற் கரிக்கை
போலுங் கவான் மகளிர்
கவின்சூழ் கோங்கி னலங்க வற்றிக்
கச்சு வீக்குங் கருங்கண்வன
முலையார் நானச் செழுங்குழம்பு
முறுக வுலர்த்தும் வானகிலின்
முருடுந் தேனுங் கருப்புரமும்
முதலா யெடுத்துப் புகைத்தபுகை
தொலையா தருக்கன் தேர்தடுக்கும்
துகடீர் மாடங் களினிறைந்து
சூழ்ந்து திருச்சா ளரமருங்கிற்
றுன்னிப் பரந்த தோற்றமுயர்
மலையார் முகில்போன் றொளிர்வாஞ்சை
வாழ்வே வருக வருகவே
மருந்த ரீடத்திற் பொருந்திவளர்
மருவார் குழலே வருகவே.

கலையார் - கலை நிரம்பிய; திலகம் - பொட்டு; கரிக்கை - யானையின் தும்பிக்கை, கவான் - தொடை; கவின் - அழகு கோங்கு - முள் இலவு; கவற்றி - அபகரித்து; நானம் - கஸ்தூரி; முறுக - முதிர; அகிலின் முருடு - அகிற்கட்டை; அருக்கன் - சூரியன்; துகள்தீர் - குற்றமற்ற; மாடம் - உப்பரிகை; சாளரம் - பலகணி; துன்னி - நெருங்கி. (8)

62. குழைபோய்க் கரிய பெரியகருங் குழன்மே
லளவி வளவிய வான்
குமிழ்மேன் மறிந்து விடமமுதுங்
குடியா யிருந்து குலவியமா

னுழைபோன் மருளு மதர்விழியா
ரொண்காந் தளங்கைக் கழகமெறிந்
தோங்கு சினைமா தவிசிழலி
லொளித்துக் களித்து நறுந்தேமாந்

தழைபோய்க் கொய்து விளையாடித்
தாட்டா மரைமேற் சிலம்பலம்பத்
தண்ணந் துறைநீர் படிந்தெழுந்து சலியா
தொருவற் கொருவர் செந்தேன்

மழையாற் புகலுந் திருவாஞ்சை
வாழ்வே வருக வருகவே
மருந்த ரிடத்திற் பொருந்திவளர்
மருவார் குழலி வருகவே.

உழை - பெண்மான்; கழகம் - சூதாடு கருவி. (9)

63. பிள்ளைப் பிறையுஞ் சுழித்தோடிப்
பெருகும் பாகீ ரதிநதியும்
பேணுங் கடுக்கை மலர்த்தொடையும்
பீடா ரெருக்குஞ் சடைக்கணிந்த

வெள்ளைப் புனித விடைப்பரமர்
விரும்புங் கரும்பின் றீம்பாகே
வெற்பிற் பிறந்த செழுந்தேனே
மேவு நறுந்தே மாங்கனியே

கள்ளக் கயற்கட் கடைசியர்தங்
கண்போற் பூத்த கருங்குவளை
களைந்து விளைந்த பசுஞ் செந்நெற்
கதிர்கள் கறித்துக் கவரிதுஞ்சும்

வள்ளக் கமல வயல் வாஞ்சை
வாழ்வே வருக வருகவே
மருவார் குழலே யருட் கடைக்கண்
மாதே வருக வருகவே.

பாகீரதி - கங்கை; கடுக்கை - கொன்றை; வெற்பு - மலை; கறித்து - கடித்து. (10)

எ. அம்புலிப் பருவம்

64. காரிருட் படலங் கிழித்திள நிலாக்கதிர்
கற்றைசெறி கடவுண் மதிநீ
கறைமிடற் றிறைவரொடு பிரியாது பலகலைகள்
கற்குமதி யுதவியிவள் காண்

வாரியிற் படர்திரை முளைத்துக் கிளைத்தெவரும்
வாழ்த்த வரிதான வனுநீ
மழைநிறத் தொருவனுஞ் சதுமறைக் கிழவனும்
வாழ்த்த வரிதானவ ளிவள்

கூரிலைப் புலவுவேற் கட்கடைத் தாரகைகள்
கூட்டமிட வருசெல்வ நீ
கோகநகை முதலான சுரமகளி ரொருகோடி
கூட்டமிடு செல்வி யிவள்காண்

ஆரியத் துறைதவழு நாரியர்க் கரசியுட
னம்புலீ யாட வாவே
அருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழலியுட னம்புலீயாட வாவே.

வாரி - கடல்; மழை நிறத்தொருவன் - திருமால்; சதுமறைக் கிழவன் - பிரமன்; தாரகைகள் -நட்சத்திரங்கள்; கோகநகை - இலக்குமி; சுரமகளிர் - தேவமாதர். (1)

65. கோதிலா நினதுகலை யீரெட்டி லாமலிக்
குவலயத் ததிக மில்லை
கோணமொரு நாற்பத்தி மூன்றிறைல் அன்பர்க்குக்
கொடுத்த மெய்ஞ்ஞான கலைகள்
சீதரா தியர்க்கு மளவிடற் கரிதுநின்
றிருமுகங் கண்ட வளவிற்
சேதாம்ப லொன்றுமே துறைமல்கு மென்னம்மை
திருமுகங் கண்ட வளவின்
மாதரா ரொடுதேவர் தானவர்கள் முனிவோர்கள்
மற்றுளர்க ளுள்ள மலரும்
மாஞென் றுனக்குமலர் மானுநா மானு
மெம்மானுங் கைம்மானு மிவள்தாம்
ஆதலால் நீயிவளை வந்தடைவ தேகருமம்
அம்புலீ யாட வாவே
அருள்வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழலியுட னம்புலீ யாடவாவே.

கோதிலா - குற்றமற்ற; ஈரெட்டு - பதினாறு; குவலயம் - உலகம்; சீதராதியர் - திருமால் முதலியோர்; சேதாம்பல் - செவ்வல்லி; தானவர்கள் - அசுரர்கள்; மலர்மான் - இலக்குமி; கேமான் - சரசுவதி; எம்மான் - சிவன். (2)

66. தண்ணமதி யேயிவளை தந்தடைந் திந்திரன்
றனதுசா பந்த விர்ந்தான்
தணியாத குட்டந் தணிந்து சுதீக்கணன்
றலைபெற்று வாழ் வெய்தினான்
எண்ணரிய வீரதனு வாமரச னொருபிரம
ராக்கதத் தனுவ கன்றான்
இத்திசை துதிக்கவரு மத்திரி மனக்கவலை
யெய்தாமன் மதலை பெற்றான்

கண்ணன் வரப்பிடை விகுட்சிமனை யாடனது
கயரோக மாற்றியுய் ந்தாள்
கைதொழுது நீவரின் னுடற்களங் கத்துடன்
கயரோக மாற்றி விடலாம்
அண்ணலொரு பங்கிலுமை னின்கூ னு மாற்றிடுவ
ளம்புலீ யாட வாவே
அருள்வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த குழலியுட
னம்புலீ யாட வாவே.

தனு - உடல். (3)

67\. இருமருப் பொருமுகத் தவுணனைச் செற்றுலகி
லிடரற வளித்த தறிவாய்
எண்ணுமை யோர்தக்க னூர்பட்ட பாடெலா
மெங்குமுக பாட மன்றோ
குருமணிச் சுடர்முடிச் சண்டன்முத லோரை
வெங்கூரிலைச் சூல மேந்திக்
குருதிப் பெருக்காறு கடல்பாய வுடல்பிளவு
கொண்டதிவள் கோப மாகுந்
தெருமிரக் குறியாது வலியவந் திவளுறவு
தேடுவதை யுட்கு றித்தாற்
கீர்த்திபெற லாமலது முன்றேறந்த
தேசிலுந் தேசுபெற லாகுமுண்மை
யருமறைப் பொருள்வர வழைத்ததே
போது மென்றம்புலீ யாடவாவே
அருள்வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழலியுட னம்புலீ யாடவாவே.

அவுணன் - மகிஷாசுரன்; செற்று - அழித்து; அருமறைப் பொருள் – அம்பிகை. (4)

68\. மஞ்சிலங் குஞ்சினைத் தண்டளிச் சந்தன
வனத்திடை முளைத்தெ ழுந்த
மாணிக்க மால்வரையி லானந்த வெள்ளத்தின்
மலிசுனை புகுந்து முக்கி

விஞ்சுமிந் திரனுதி தேவரிதை யாம்புய
விரைப்பொருட் டிடையின் வெடிபாய்
மெய்க்கய லனையவிழி யழியாத மெய்ஞ்ஞான
வீட்டிலுறை தம்பி ராட்டி
தஞ்சமென் றவர்களைத் தளராம லெழுமையுந்
தண்ணருள் சுரந்து மென்மேற்
றுங்குமெங் கோமாட்டி யலதில்லைப் பாசடைத்
தாட்டா மரைக்கி சைந்த
அஞ்சிலம் பும்பழைய மறையுமுறை யிடுமிவளொ
டம்புலீ யாட வாவே
அருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழலியுட னம்புலீ யாடவாவே.

மஞ்சு – மேகம்; மாணிக்க மால்வரை - சிவபிரான்; விரை – வாசனை. (5)

69. வண்டரு வெழுபொழிலு மிவள்நின்று விளையாட
வைத்தநந் தனவனங் காண்
வரையேழு மங்கையி லெடுத்து முன்விளையாட
வைத்தவம் மனைக ளன்றோ
கொண்டல்தாழ் கடலேழு மிவளுடைய மதர்விழி
கொழிக்கின்ற கருணை கண்டாய்
கொழுஞ்சுடர்ப் பரிதியிவள் ஒருகாதி லிடுகின்ற
கொந்தளத் தோடல் லவோ
சண்டமா ருதமிவளை வீடாது காக்கின்ற
சக்தியின் சுவாசமே காண்
சகலலோ கமுமிவளை வலம்வந்த பேர்கள்பெறு
தானசா தனவீடு காண்
அண்டரா திபரிவட் கடிமைகாண் வலியவந்
தம்புலீ யாட வாவே
அருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழலியுட னம்புலீ யாடவாவே.

பொழில் - சோலை; வரை - மலை; (தானியாகு பெயர்) கொண்டல் - மேகம்; மதர்விழி - களிப்புடைய கண்கள்; பரிதி - சூரியன்; கொந்தளம் - சித்திரவேலை செய்யப்பெற்றது. சண்ட மாருதம் - பெருங்காற்று; அண்டராதிபர் - தேவர்கள்: (6)

70. கொண்டல் மேனியனிவளை வந்தடி வணங்கலாற்
கோகநகை வாழ்வு பெற்றான்
குலவிய மறைப்பிரமன் இவளருட் பார்வையைக்
கொண்டுல கெலாம்படைத்தான்
பண்டைநா ளிறைவனார் கொடியவிட நுகர்வது
பரவுமமு தாக்கி நின்றாள்
பாகசா தனனரசிழந்து மனம் நலியாது
பட்டம் கொடுத்த திவள்காண்
எண்டிசா முகமுமற் றெவருமிவ ளைப்பணிந்
தேத்துவ தியற்கை கண்டாய்
இவளையல் லாமலொரு தெய்வமுண் டென்பவர்க
ளெப்பிறப்பிலு மில்லை காண்
அண்டகோ ளகைமருவு சிகரவரை மங்கையுட
னம்புலீ யாட வாவே
அருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழலியுட னம்புலீ யாடவாவே.

கொண்டல் மேனியன் - திருமால்; கோகநகை இலக்குமி; மறை - வேதம்; இறைவனார் - சிவபிரான்; அண்ட கோளகை- அண்டமுகடு. (7)

71. முனைமுனைந் தெதிர்பொருத சண்டனை
முடிதுளங்கிட இலகுதாள்
முளரி யொன்றுகோ ருதைப நம்பரன்
முறுவல் கொண்டுள முருகவே
கனிக னிந்தொழு கமுதெ னுஞ்சிறு
கவிர்வ ழங்குரை கழறுவாள்
கனக குண்டல மசைய நின்றொரு
கவுணி யன்கவி சொரியவே

தனத டங்களின் மிசைசு ரந்தருள்
தழைய வின்சுவை பெருகுபால்
தரவி ரும்பிய கவுரி புங்கவி
சலசை யந்தரி யமரர்தாய்
மனம கிழ்ந்துனை வரவிரும்பினள்
வருக வம்புலீ வருகவே
மருவு மார்குழன் மலைம டந்தைமுன்
வருக வம்புலீ வருகவே.

கனகம் - பொன்; கவுணியன் - திருஞான சம்பந்தர். (8)

72. கடலிடை வடித்துக் குடித்துத் துடித்தெழுங்
காரெழிலி கன்று றங்கும்
கவினுறு நறுந்தளிர்த் தண்பணைச் சந்தனக்
காவில் வளர்கின்ற வெந்தை
சடைமருவு கங்கைப் பிரானிடத் திவள்கடி
தடத்தினுக் கஞ்சி யோடுந்
தழல்விழிய கணபணத் தரவினுக் கஞ்சுமிடர்
சாற்றலாந் தோற்று மிந்தப்
படபடப் பொழியலாங் கயரோக மாற்றலாம்
பழையகூன் போக்கி விடலாம்
பண்டை நின்பாதகமு மாற்றலாம் முனிதீர்த்த
மும்படிய லாங்குடி யெய்தலாம்
அடர்மணிச் சிகரமலை யரைய னொரு
குழலியுட னம்புலீ யாடவாவே
அருள்வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழலியுட னம்புலீ யாடவாவே.

தடித்து - மின்னல்; எழிலி - மேகம். (9)

73. செம்மயிர்ப் பைங்கட் குறுந்தாட் பெருந்தலைச்
சிலபேரை நிரை நிறுத்திச்
சினமருப் புலவுவேற் கண்ணுதன் முன்னின்று
திரிசடை புறத்து வீழ

வம்மினென் றங்கையிற் றடியால் முழக்கவது
வாய் முழக்கங் கிழக்கு
வாரிதியின் முழக்கொக்கு மவடிருக் கோயிலிடை
வாராது செல்வ தழகோ
கொம்மைவன முலையினை யழைத் தவுட
னேவரிற் குறையில்லை வாராவிடில்
குத்துவார் வயிரவர்கள் மொத்துவார் பின்னையுங்
குறையுடற் பலி கொள்ளுவார்
அம்மையுள் ளஞ்செரு தொருமொழி யழைத்தவுட
னம்புலீ யாட வாவே
அருள்வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த குழலியுட
னம்புலீ யாட வாவே. (10)

வாரிதி - கடல்; செரு து - கோபங்கொள்ளா வண்ணம்.

அ. அம்மானைப் பருவம்

74. சங்குகுட வயிறுகளீ ந் தீன்றவெண் ணித்திலந்
தண்மதிகள் போல்வி ளங்கித்
தாழிருட் குப்பைசீத் திளநிலாக் கதிரொளித்
தும்பவிர வென்ன மிக்க
கொங்குலவு காவிற் சிறைச்சுரும் பொருகொடி
கூடிமக ரந்த மூத
கொழுநறவு கொப்புளிக் குஞ்செழும் பாசடைக்
குமுதங்கள் பொதி யவிழ்க்கும்
பங்கவள வயன்மருவு வாஞ்சியம் தழையும்
பரமருண் மகிழ்வு கூரப்
பவளவிரல் மேல்வைத்த கணையாழி மோதிரப்
பச்சையொளி பத்தி பாயும்

அங்கைமது மலர்சேப்ப நங்கைநீ மனமகிழ்ந்
தம்மானை யாடி யருளே
அருள்பெருகு விழிநங்கை மருவுபுணர் முலைமங்கை
யம்மானை யாடி யருளே.

நித்திலம் - முத்து; தண்மதி - குளிர்ந்த சந்திரன்; கொங்கு - வாசனை; சுரும்பு - வண்டு; நறவு - தேன்; பாசடை - பச்சை இலை.

75. வேரிற் பழுத்துக்கொழுத்த பலவின் கனிகள்
விண்டுதெண் டேன்த தும்பி
வெங்களமர் பகடுசேர்த் துழுதுபழுதற
நாட்டமென் சாலிவேலி பாயுங்
காரிற் பெருக்க முறுசோழ வளநாட்
டியர்கங்கையங் கரை செறிந்து
காசியிற் பதின்மடங் கதிகமென் றெம்பிரான்
கழறுதிரு வாஞ்சி யத்திற்
பாரிற் பொருத்த முறு கார்த்திகைத்
திங்களிற் பானுவாரத்தி னுலகம்
பரவுமுனி திர்த்தம் படிந்து வாஞ்
சீசர்தாள் பணிந்துநின் ருடுகின்றூர்
ஆருக்கு மெதிர்நின்று கேட்டவர மருளுமுமை
யம்மானை யாடி யருளே
அழுகொழுகு விழிநங்கை புழுகொழுகு முலைமங்கை
யம்மானை யாடி யருளே.

களமர் - உழவர் ; பகடு - காளை; சாலி - நெல்; கார் - மேகம்; புழுகு - புனுகு. (2)

76. பைம்புரவி யேழுசேர்த் தோராழி பூட்டிவெம்
பரிதியூ ருங்கொ டிஞ்சிப்
பன்மணித் தேர்தொட வளர்ந்தோங்கு தேங்குமாப்
பலாப்பசுஞ் சோலைபுக்கு

வெம்பணை யசைத்துக் கருங்குவளை மணநாறும்
விரைவாய் சொரிந்த தேறல்
விருந்துண்டு செறிவண் டினத்தை நெடுமுகமாட்டி
விரிநா விளுல் விலக்கி
செம்புறக் கனிகனிந் தொழுகுமிள வாழைமலிதேம்
பொழிலில் மேதி துஞ்சும்
திருவாஞ்சி யத்தெல்லை சேருமுயிர் கட்கெலாந்
தேகம்விடில் வலது செவியில்
அன்பினு லஞ்செழுத் தருளிவீ டருளுமுமை
யம்மானை யாடி யருளே
அருள் பெருகு விழிநங்கை புழுகொழுகு
முலைபங்கை யம்மானை யாடியருளே.

பைம்புரவி-பச்சைநிறக் குதிரை; பரிதி-சூரியன்; கொடிஞ்சி-தேர்மொட்டு; தேறல் - தேன்; மேதி - எருமை; துஞ்சும் - தூங்கும். (3)

77. கண்டல்மண் டொண்டுறைச் சினவாளை வெடிபாய்ந்து
கன்னியங் கமுகின் மலிபூங்
காவிடை யெழுந்துதேம் பாளையொடு பழங்
காய்க்குலை தகர்த்து மீப்போய்
வண்டலம் பும்நறிய மாங்கனிகள் சாடிவழி
மதுரரச வருவி செய்து
வளர்சினை வருக்கைமுட் கனிகிழித் தொழுகிரத
மாரிகோள் மீது தாவிக்
கொண்டலம் புனலோடு மீண்டுகு வளைத்தடங்
குலவு திருவாஞ்சி யத்தில்
குப்தகங் கையினருகு பொன்மணி விமானமார்
கோயில்நா முறைகு வோமென்
றண்டர்முனி பணிகயிலை வரையகன் றணுகுமுமை
யம்மானை யாடி யருளே
அருள்பெருகு விழிநங்கை புழுகொழுகு முலைமங்கை
யம்மானை யாடி யருளே.

கண்டல் - தாழை; மண்டு - நெருங்கியுள்ள; ஒண் துறை-அழகிய துறை; கன்னியங் கமுகு - இளமையுள்ள பாக்குமரம்; கா - சோலை; நறிய - இனிமையுள்ள; வருக்கை - பலா. (4)

78. கொள்ளைச் செழுந்தரள நீற்றைத் திமிர்ந்த
மெய்க் குழகர் தரு மழகளிற்றைக்
கோற்றொடித் தாமரைச் செங்கையி
லணைத்துமென் குவிமுலையால ருத்தி

உள்ளத் துணர்ந்துபனி நீராட்டி வெண்ணீற்றி
ெனாளி பெருகு மத்தகத்தி
ெனாருசுட்டி யும்பட்ட முஞ்சேர்த்தி
யொளிருமிடை யூடுகிண்கிணி யொலிப்ப

எள்ளற் கரும்பயறு மோதகங்
கனிகன்ன லிவைநான்ற கைக்கொடுத்தே
இச்சையொடு விளையாமல் நச்சுமொரு
செல்வியே யெழிலுழவர் விரசியுழுத

அள்ளற் றடம்பணைச் சோழவள நாட்டரசி
யம்மானை யாடி யருளே
அருள்பெருகு விழிநங்கை புழுகொழுகு
முலைமங்கை யம்மானையாடி யருளே.

தரளநீறு - முத்துப்போன்ற வெண்ணிற முடைய திருநீறு; குழகர் - சிவபிரான்; மழகளிறு - கணபதி; மத்தகம் - நெற்றி; கன்னல் - கரும்பு; நான்றகை - துதிக்கை; நச்சும் - விரும்பும்; விரசி - நெருக்கமாக; அள்ளல் - சேறு; தடம்பணை - விசாலமான வயல்வெளி. (5)

79. மணியாட நெற்றியிற் சுட்டியா
டச்செய்ய மதர்விழிக் கருணையாட
வயிடூரி யக்குழை யசைந்தாட மென்பவள
வாய்மழலை கொஞ்சி யாட

கணியாட நித்திலக் கொண்டையாடப்
பெரிய கண்டசர முத்தமாட
கணையாழி யாடநவ ரத்திலக் கங்கணங்
கைச்சரி யுமாட வொண்கிண்
கிணியாட நூபுர மசைந்தாட மேகலை
கிளர்ந்தவயி ரங்க ளாடக்
கேயூர மாடவண் பாலோடு மடியவர்
கிளந்ததமிழ் மாலை யொடுபொன்
அணியாட முன்னின்று விளையாடு மொரு
செல்வி யம்மானையாடி யருளே
அருள்பெருகு விழிநங்கை புழுகொழுகு
முலைமங்கை யம்மானை யாடியருளே.

குழை - காதணி; நித்திலம் - முத்து; கணையாழி - மோதிரம்; நூபுரம் - காற்சிலம்பு; மேகலை - மேகலாபரணம்; கேயூரம் - தோளணி. (6)

80. செந்திரு வேவர சுந்தரி
யேயுமை யேயமை கன்னிகையே
திங்களு லாநுதல் மங்கலை
யேதிரு வேசிவ புண்ணியமே
மந்தர மாமுலை யந்தரி
யேயிம வானருள் பெண்ணமுதே
மஞ்சணி தாழ்குழ லஞ்சுக
மேசுர ரமரர்கள் பொன்னணியே
இந்திர ளுதியர் வந்தெதி ரேபணி
யீசுரர் கண்ணு தலார்
இன்புறு மோகன ரஞ்சகி
யேவரை யாதருள் தண்ணளிசூழ்
ஐந்தரு வாகி வளர்ந்தருள்
காரணி யாடுக வம்மனையே
அஞ்சன வேல்விழி மங்கள
நாயகி ஆடுக வம்மனையே. (7)

81. பணியுடல் நெளிதர முடிமிசை
வளர்தரு பாருளர் தம்முயிரே
பரிபுர மலரடி முறைமுறை
பரவிய தேவர்க டம்மரசே
குணில்கொடு கனிவிழ வெறிமுகி
லொடுவரு சோதர மின்னிடையே
குலமலை யரையனை மருவிய
கிளிமொழி மேனகை கண்மணியே
தணிவுறு முனிவரர் அடியவர்
பலபெரி யோர்செய் தவப்பயனே
சடைமுடி மதியின ரொருபுற
நிலவிய தாழ்குழ லின்னமுதே
அணிமணி யொளியிள வெயில்விடு
புணர்முலை யாடுக வம்மனையே
அழகிய துடியிடை மதர்விழி
யுமைபவ ளாடுக வம்மனையே.

பணி - ஆதிசேடன்; பரிபுரம் - காற்சிலம்பு; மலையரையன் - பர்வதராசன்; மேனகை - பார்வதியின் தாய்; துடி - உடுக்கை. மதர் - களிப்பு. (8)

82. கருணை கரர்படர் சடையார்
பரசிவ ஞரணி பன்னகர்
கருதா ரெயிலடு நகையா
ரொடுநடை மால்விடை யினிதேறி
வருநா யகியெனை யடியார்
குழுவொடு வாழ்வருள் பொன்மாதே
மறையா கமமுறை யிடுபூ
ரணிமுனி வோர்சுரர் கண்காணும்
ஒருபே ரொளியளி யொழியா
தடியவர் சூடிய சொன்மாலை
யுலகே ழையுமுறை யிருதாள்
பரவினர் பாலருள் சொன்மானே

அருளே பொழிவிழி மருவார்
குழலுமை யாடுக வம்மனையே
அமரா திபர்பணி யிமவா
னொருமக ளாடுக வம்மனையே.

கருதார் - திரிபுராதியர்; எயில்-மதில்; அட்டு-சுட்டெரித்த மால்விடை - திருமாலாகிய இடபம்; அளி - கிருபை சொன் மாலை - துதிப்பாடல்கள்; பரவினர்-துதிசெய்வோர்: பால்-இடத் தில்; மருவார் - வாசனை மிகுந்த; குழல் - கூந்தல். (9)

83. வீடாத வெண்டுறை குடந்தையிற் கீழ்க்கோட்டம்
விளநகர் மாதை கருவூர்
மேயகச் சூர்திரு விளங்கோயில் சிவபுரம்
வேட்களம் திருவாப் பனூர்
கோடாத புள்ளூர் கழிப்பாலை மாடமலி
கோவலூர் பந்தண நலூர்
கொட்டையூர் கச்சிநகர் மாகாள மாப்பாடி
சிக்கல்கற் குடிக டம்பூர்
வாடாத பள்ளியின் முக்கூடல்
ஆலவாய் வன்னியூர் புனவாயிலே
வைகன்மா டக்கோயில் நீடிய சிராப்பள்ளி
வலிதாயம் விசைய மங்கை
ஆடானை யாதிநக ருறையிறைவர்
பங்கிலுமை யம்மானை யாடியருளே
அழகொழுகு விழிநங்கை புழுகொழுகு
முலைமங்கை யம்மானை யாடியருளே.

வீடாத - அழிவற்ற; மேய - பொருந்திய; கோடாத - கோணுதலுற்ற; வாடாத - சோர்வற்ற. (10)

9. நீராடற் பருவம்

84. தூக்குகுடல் வாதமுக சன்னிகய
ரோகஞ் சுவாசகா சம்பீனசம்
தொண்டைவலி மண்டைநோக் காடுபல்
வலிவாத சூலைகுட்டம் பிரமியம்
நாக்குளறல் குரனெரிவு மந்தார
காசமுண்ணுக் குவிப்பிருதி பிளவை
நாலுநா ளையில் மாறல் வாதபித்தா
தீகம் நடுக்கஞ் சிலேத்மஞ்சுரம்
வீக்கமந் தாக்கினி கிருணிகா மாலைமது
மேகம்நீ ரிழிவு தினவு
விலக்கல்அரை யாப்பு கிரந்தியுள்
மாந்தைபசி விழிகுருடு சூனியம்பேய்
போக்கியருள் புரிமருந் தீசர்பாகத்
திறைவி புதியநீராடி யருளே
பொருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழன்மங்கை புதியநீ ராடி யருளே. (1)

85. இருபுடை நெருங்கிவான் முழுமதியி னகடுதொடு
மேரிளங் தளிர்முதிய கோட்
டரம் பொழிற்கரிய சுரிகுழல் முடித்துத்
தாண்மேய்ந்தநுத லாடை பொலிய
மருவுகயல் வீழிகூர்ந்து வள்ளையில் மணிச்சுறவு
மகிழ்தூங்க வால்கு லாய
வால்வளைக் கந்தர முழங்கிவெண் டரளமணி
மாலிகை சுமந்து சேந்து
விரிபசுங் காந்தளங் கைநீட்டி முகைநெகிழு
மென்முளரி வாய்மலர்ந்து
மென்குமிழி முலைசு மந்துந்தியஞ் சுழிபூத்து
விரை தளிர்த்தாள் விரைந்து

பொருவினினை யோத்து வருகுடகா விரிப்
புத்துறைப் புதியநீ ராடியருளே
பொருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழன்மங்கை புதியநீ ராடியருளே.

அகடு - நடு; சரிகுழல் - கூந்தல்; நுதல் - நெற்றி; குலாய் - குலவி; வளை - சங்கு; கந்தரம் - கழுத்து; தாளமணி - முத்து; பாலிகை - மாலை; முகை - மொட்டு; முளரி - தாமரை; விரை - வாசனை; தளிர்த்தாள் - தளிர்போன்ற திருவடி; பொருவில் - சமானமில்லாத; இது அம்பிகைக்கும் காவிரி நதிக்கும் ஒற்றுமை காட்டப்பெறுவது. (2)

86. மின்பூத்த தென்னரங் கம்பொலிய வருதலால்
வீசுதிரை வைகை நதியாய்
மிசைதமிழ் சாமிமலை மேவலாற் சிறுதென்றல்
வீசலாற் பொருநை நதியாய்த்

தென்பூத்த வெம்பிரான் சடைமிசைப் பொலிதலாற்
சேர்ந்த வரை யீடேற்றலால்
திருமருவு கங்கையாய்க் காளிந்தி சேர்தலாற்
றேங்குபுனல் யமுனை நதியாய்

மண்பூத்த பலபவம் போக்கலாற் றுங்கையாய்
மருவு மாமாத் தூர்புறம்
வாழ்தலாற் பம்பையாய்த் தொல்வலஞ் சுழி
யில்மத மாவினுற் கம்பைநதியாய்

பொன்பூத்து வருதலாற் பொன்னியாங் காவிரிப்
புதிய நீராடி யருளே
பொருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழன் மங்கை புதியநீ ராடியருளே.

பொருநை - தாமிரபரணி; பவம் - பாவம்; துங்கை - துங்கபத்திரை; (3)

87. பன்னுக மேவலா னுந்திபூத் தெழுதலாற்
பால்வளை சுமந்து வரலாற்
பரிதிமணி யணிதலாற் செய்யதா மரைமருவு
பருவவடி வுடைய வதனால்

மின்னுக மருவலாற் சக்கரஞ் சுழல்கையால்
வேணுவாய் வைத்தூ தலால்
வேளையரு ளுவதினாற் புள்ளரசை யூர்தலாற்
வெங்கா னிடைப் பொலிதலால்

எண்ணுக முறைதலாற் சாரங்க மேந்தலால்
இலகுசுடர் வாளை யுறலால்
இரவிமண் டலமறைய நேமிகொண் டெறிதலா
விடாரில் வரையேந்தி விடலாற்

பொன்னுக மருவலான் மால்போன்ற காவிரிப்
புதியநீ ராடி யருளே
பொருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழன்மங்கை புதியநீ ராடியருளே.

பால்வளை - வெள்ளியசங்கு; பரிதி - சூரியன்; வேணு - புல்லாங்குழல்; வேள் - மன்மதன்; புள்ளரசு - கருடன்; சாரங்கம் - வில்; நேமி - சக்கரம். (இது காவிரி நதிக்கும் திருமாலுக்கும் உவமை.) (4)

88. விரிசடை சுமந்துதண் ணளிபரந் தார்வமொடு
வெள்வளை சிறந்த ணிந்து
வெம்பரசொ டுழை யெடுத் தம்பொற்
சிலம்புவளை யாவடு துறைப்பொலிந்தே

உருகொளித் தும்பிவெண் ணுரைநீறு சேர்சிவப்
பூருநீள் வடிவ மாகி
யோங்குகங் கைச்செறியு மாத்தலை யிலிந்து
வுடனருளுந் திருந்து பெருகும்

மருவுநெடு மால்சூழ நித்தம் பொருந்திமழை
வாய்ந் தகந்தர மிலங்க
மன்றந் தழைத்து மலைமாவொடு பொருந்தி
நறு மலர்சூடி வருதலாலே
பொருதிறற் சூலபா ணியனலனைய காவிரிப்
புதியநீ ராடி யருளே
பொருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழன்மங்கை புதியநீ ராடியருளே.

தண்ணளி - கிருபை; வண்டு; வளை - வளையல்; சங்கு; பரசு - துதி; மழு; உழை - சேறு; மான்; (5)

89. மங்குலா வியவானின் முகடுதொடு கமுகின்மலர்
மடலுக்கி முருகு தேக்கி
வான்குடக் கனிகனிந் தொழுகுதேம் பலவ்வை
நுனிவால் விசைக்கொண்டு சாடிச்
செங்கைகொடு தூண்டி விடை நாட்டமொடு
சீறியிள வாழை மோதி
செந்நெற் பெருங்காடு கன்னற் கருஞ்சோலை
சென்று கருமேதி வெருளக்
கங்கினிடை தெங்கின்முது பழமெலாஞ் சிந்திநிறை
கடைசியர்கள் கைநெரிப்பக்
கட்டுமாம் பழநெறிய மட்டுவார்ந் தொழுகு
மிரு கரைகளித் துக்குளித்துப்
பொங்கிசின வாளைவெடி பாய்ந்தகுட காவிரிப்
புதியநீ ராடி யருளே
பொருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழன்மங்கை புதியநீ ராடியருளே.

மஞ்குல் - மேகம்; கமுகு - பாக்குமரம்; முருகு - அகில் மரம்; குடக்கனி - பலாப்பழம்; கன்னல் - கரும்பு; மேதி - எருமை; கங்கு - வயலின் வரம்பு; கடைசியர் - உழவர்; கட்டுமாம்பழம் - ஒட்டு மாம்பழம்; மட்டு தேன்; (6)

90\. மொழிசரற் காலம்தீ மேனியுஞ் சிறுபிறை
முடித்தபொற் சடைமவுலியும்
முளரிநறு மலரினிடை யழகொழுக யருள்பெருக
முறுக்கவிழ் மலர்காவிபோல்
விழியுமோ ரிலகுபொத் தகமபய வரதமும்
வெண்படிகமாலை யழகாய்
மேவிய திருக்கரமு முபயதன மும்புயமும்
என்னுள மிருத்தி மிகவும்
வழியுஞ் செழுந்தேனு முக்கனியு மான்பாலும்
வாய்ப்புற வடித் தெடுத்து
வைத்தசெம் பாகமா மதுரகவி யொருகோடி
மருவுதன் ருளின்மழை போற்
பொழியும் படிக்குதவி செய்தருளு மலர்வல்லி
புதியநீ ராடி யருளே
பொருள் வாய்ந்த திருவாஞ்சை மருவார்ந்த
குழன்மங்கை புதியநீ ராடியருளே.

மவுலி - முடி; முளரி - தாமரை; (7)

91\. தொண்டைவா யூறலுக் கேக்கற்று நிற்கின்ற
சுந்தரக் கறைமிடற்றுத்
துங்கத்ரி சூலக் கலாமதிச் சடிலத்துத்
துடை செந்தா மரைத்தாள்
அண்டநா யகனோடு கலந்துகட் காவியிடை
அருண் மடை திறந்துபாய
அபயமும் வரதமும் பாசமு மங்குசமும்
புத்தகமு மலரம்பு மொருகழைக்கோ
தண்டமும் புத்தகமு மணிவாலி கையுநிதந்
தாங்குகர மலரு மிளைய
தருணசெங் கதிரனைய வருணமே னியுநகையுஞ்
சார்ந்து தொழுமன் பரிதைய

புண்டரீ கப்பெருங் கோயில்வளர் மடமங்கை
புதியநீ ராடி யருளே
பொருள் வாய்ந்த திருவர்ஞ்சை மருவார்ந்த
குழன்மங்கை புதியநீ ராடியருளே.

தொண்டை - கோவைப்பழம்; (8)

92. ஆரணி பராபரை சவுந்தரி புரந்தரி
யசஞ்சலை கல்யாணி வாணி
யம்பிகை சதானந்தி கங்காளி சாமுண்டி
யாயிமா மாயி கவுரி
நாரணி விசாலாட்சி கௌமாரி செயமங்கை
நளினமலர் மங்கை நங்கை
நான்மறைத் தலைவியபி ராமிதிரி புரைவாமி
நாயகி வராகி யம்மை
காரணி நிராதரி பூரணி புராதனி
கங்கைசூ லினைக பாலி
கனகைபஞ் சாட்சரி சோடசாட் சரிநித்ய
கல்யாணி கன்னி யன்ன
பூரணி கலாவல்லி ஞானவா ரிதியமலை
புதியநீ ராடி யருளே
பொருவின் மழ விடைநம்பர் மருவுபுணர்
மலைமங்கை புதியநீ ராடியருளே. (9)

93. ஆயிர மிதழ்க்கமல மம்மைநின் றிருவடியின்
அழகொக்கு மொக்கு மென்பர்
அறிவிலிக ளொக்குமே லமரர் மாணிக்கமுடி
பணியுமோ வஞ்ஞான மாஞ்
சாயும் வல்லிருள் முகட்டெடறியுமோ சகலசாம்ப்
ராச்சிய வாழ்வு தருமோ
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
சச்சிதா னந்த வடிவே

நீயுநின் றுணைவரு மலர்த்தொப்பி யாவரும்
நிகழ்த்துவது வெண்மை கண்டாய்
நித்தியகல் யாணி நிஷ்களா னந்தியே
நிற்குண மெய்ஞ்ஞான வடிவே
மேயதிரை கரைபொருத குடகா விரிப்புதிய
வெள்ளநீ ராடி யருளே
விரைமலர் குழலிபுணர் முலை மலைக்கிழவி
வெள்ளநீ ராடி யருளே. (10)

கo. ஊசற் பருவம்

94. மென்னரம் பிற்கட்டு மகரயா ழிசைச்செவி
விருந்தூட்டு வேயி னிசையும்
வெறுத்துமிகு வேட்கைவிளை விக்கின்ற வம்மைநின்
மென்மழலை யாங்கள் கேட்ப
இன்னஞ்சொ லின்னஞ்சொலென்று மலையரையனு
மெலமைப்போன்ற தொண்டர் குழுவும்
ஏக்கற்று வைத்தவிழி யன்றமுத லின்றுவரை
யிமையாது பார்த்தி ருப்பக்
கன்னங் கருங்குழற் றுன்னுந் தலைப்பணிகள்
கற்பகத் தாரி னோடும்
கட்டிமா ணிக்கவொளிர் பட்டமும் பொட்டுநுதல்
கவினவிரு காதி லிட்ட
பொன்னங் குதம்பைமணி மின்னவிமை யச்செல்வி
பொன்னூச லாடி யருளே
புங்கவர் தினந்தொழும் மங்களவி நோதிநீ
பொன்னூச லாடி யருளே.

யாழ் - வீணை ; வேய் - மூங்கில் (புல்லாங்குழல்) வேட்கை - ஆவல்; மலையரையன் - பர்வதராசன் ; கவின - அழகுமிக ; குதம்பை - காதணி ; புங்கவர் - வானோர். (1)

95. வெங்கயக் குரிசிலும் வேதாவு மாலுமிகு
விண்ணவரு முனிவர் குழுவும்
வேதமுனி கோசிகர் பராசரர் அனந்தரும்
விகுட்சியுயர் மோட்ச முறவே
தங்கிவளர் கொயிலுள் கணநாதர் பலரையுந்
தாம்வகுத் தருளி வலமாய்த்
தம்பரிவி னூலுறச் சததள பொகுட்டினிற்
றண்மைபுரி யுண்மைமி குமாற்
றிங்களும் தினகரக் கடவுளும் நுழையவுயர்
தேமலர்ச் சோலை யூடு
சித்திர விலாசமுறு செம்பொன்மணி யரியணைச்
சேர்ந்தின்ப முதவு சிவனார்
பொங்கொளிசெய் செம்மேனி பாதிபா சொளிசெய்வாய்
பொன்னூச லாடி யருளே
புங்கவர் தினந்தொழும் மங்களவி நோதினி
பொன்னூச லாடி யருளே.

வெங்கயக்குரிசில் - இந்திரன் ; வேதா - பிரமன். (2)

96. உலகமே யோர்பலகை யோரட்ட குலகிரிக
ளுயர்கால்க ளாகி நிற்ப
வம்பர்பொன் மயமான மேலுலக மேழு
மொளிமேற் கொடுங்கை யணியா
யிலகுமுட வானம் விசித்திர விதான மாம்
இருசுடர்கள் பெருவி ளக்கா
இருநான்கு நாகப் படத்தலை யிருந்தசைய
யாழ்வலோ னூசல் பாடக்

குலவுபே ரூஞ்சலின் ஞானவா னந்தமெய்க்
கோலபரை யாடல் நோக்கிக்
கோதிலா வத்துவா தீதப் பராபரன்
கூறரு மகிழ்ச்சி கூரப்
புலன்வென்ற விதையம் வளர்புணர் முலைச்செல்வியே
பொன்னூச லாடி யருளே
புங்கவர் தினந்தொழும் மங்கள விநோதினி
பொன்னூச லாடி யருளே. (3)

97. ஏடுவிரி கொன்றைமல ரோடுபுனல் நீடுபணி
கோடுபிறை சூடு சடையான்
ஏகபர மானபரி பூரணா னந்தசிவ
னின்பவுரு வான வுமையாள்
நாடுமய னுக்கரிய வீடுமரு ளும்பெரிய
நாயகி தனக்கு வடபால்
நாளுமிகு பீடுபெறு தாதரும்படி
படிபுண்ணிய நற்றீர்த்த மாடி மகிழ்வோர்
கோடிதச கோடிசத கோடிமுனி வோரமரர்
கூடியினி தாடிமகிழ்வார்
கொண்டுமல ரிண்டைகுளிர் சத்தமா னைந்துகொடு
தொண்டுசெய வாழ்வ ருளுவார்
போடுமணை மீதுகமழ் பூமருவு சேக்கைமிசை
பொன்னூச லாடி யருளே
புங்கவர் தினந்தொழும் மங்கள விநோதினி
பொன்னூச லாடி யருளே. (4)

98. விதியுதவு மகனாகி யதிகதவ மேபுரிய
வன்னவன் முன்னாகவெய்தி
விரிபுவன முழுதாளும் விறல்வன மெலாமருள
வீறுபுகழ் கொண்ட தக்கன்

புதியமக மீசர்பத மதியின்மதி யாதுசெய
வாருதிகொ ளாசை மலிவாற்
புவனிமகி ணன்கமல மலரினுறை நான்முகன்
புருகூதன் முதல விமையோர்

நதியென விரைந்தெய்தி வதியுமவை யுறுநீயு
நலமிலவ ளாகி வெகுளா
நண்ணமரர் சின்னமுற வன்னவன் றலையறுத்
தசமாக்கி வைத்த புகழோய்

பொதியமலை மேவுதமிழ் முனிபுகழ் புராதனி
பொன்னூசலாடி யருளே
புங்கவர் தினந்தொழும் மங்கள விநோதினி
பொன்னூசலாடி யருளே.

விதி - பிரமன்; விறல் - வலிமை; வீறு – பெருமை; மகம் - யாகம்; ஆகுதி - அவிர்ப்பாகம்; புவனிமகிணன் - திருமால்; புருகூதன் – இந்திரன்; வெகுளா - கோபித்து; அசம் – ஆடு; தமிழ்முனி - அகத்தியர்: (5)

99. பூமேவு கற்பகக் காமேவு சதமகன்
புலவர்சூழ விருடிகணமும்
புண்டரீ கத்தவன் கொண்டல்வண் ணத்தவன்
விண்டமலர் கொண்டு பணியச்

சேமேவி யருளவரு தெய்வ நாயகர் மருந்
தீசரைச் சேர்ந்து மகிழும்
சிங்கமீ தேறிவரும் மங்கையர்க் கரசியே
தென்னவன் வளர்த்த செல்வி

நாமேவு புகழ்செல்வ வேளாளர் குலதிலகன்
முத்துமணி யீன்ற ரத்தினம்
நாவலர்கள் கற்பகம் சிவராம சுந்தரன்
நன்மன மமர்ந் தருளுவாய்

பூமாது நாமாது புகழ்பாடி யாட்டுமொளிர்
பொன்னூச லாடி யருளே
புங்கவர் தினந்தொழும் மங்கள விநோதினி
பொன்னூச லாடி யருளே. (6)

100. இருளுறு விழியென மலமுறு கேவல
மேவிய வெளியேனை
இருவகை மாயையின் வருகலி
யாதிக ளாலிய லுங்காயம்
மருளுறு பலகையி லிருவினை
வடமலமாகிய விருகான் மேல்
மருவிய வுத்திர மாயையி
னிடையே மாசற வேதூக்கி
இருநில மமருல கிழிநர
குறவலை யூசலில் வைத்தாட்டி
இருவினை யொப்பினில வையுற
வுன்பத வின்பருள் நற்றாயே
அருவுரு வுபயமு மருவு
பராரை யாடுக பொன்னூசல்
அகிலமு முதவிய மருவமர்
குழலுமை ஆடுக பொன்னூசல். (7)

101. ஒன்றாகி யைந்தொழிற் குரியசத் திகளாகி
யொன்பதுறு பேத வீசற்
குருவுபடை தொழிலறி வோ டிச்சையா யைந்தொழி
லுளுற்றிநீ யேயாக் குவாய்
நன்றாய கர்த்தா வெனும்பெய ரளித்தெமது
நவைமூன்று நீக்கி யாவு
நன்குணரு மெய்ஞ்ஞான மாதி மூவிருகுணமும்
நல்கி யாள்கின்ற வம்மே

குன்றுத மும்மாயை யிற்புவனம் யாவுமின்
கூர்விழி விழித்தி மைக்கும்
கொள்கையி னமைத்தழிப் பாய்க்குமயி
டன்றனை கொன்றதுன் புகழாகுமோ
அன்றுல நீழலமர் வாஞ்சீசர் துணைவிநீ
யாடி யருள் பொன்னூசலே
அகிலாண்ட முழுதீன்ற மருவார்ந்த குழலன்னை
ஆடியருள் பொன்னூசலே.

ஐந்தொழில் - ஆக்கல்; அளித்தல்; அழித்தல்; மறைத்தல்; அருளல் என்பனவாம்- ஒன்பதுறு பேதம் - பிருதிவி; அப்பு; தேயு; வாயு; ஆகாயம்; காலம்; திக்கு; ஆன்மா: மனம், நவை மூன்று - காமம்; வெகுளி; மயக்கம். (8)

102. நகைநில வொழுகிய முழுமதி யாடிட
நற்றோ டொளி வீச
நகின்முகிழ் மிசையன நறுமணி மாலிகை
கண்டிகை வில் வீச
முகமல ரைங்கணை கழைபா சங்குச
மொய்கர மொரு நான்கும்
முழுதுண ரன்பின ருள்ளத் தடமலர்
முளரிப் பத மாடத்
தகைமலர் கமழ்சுரிகுழ லணி சந்திர
சூரிய னொளி வீசச்
சங்கன களமிசை மங்கல நாணொலி
தகதக வென வாட
அகருவு மாரம் புழுகலர் கமழ்தர
ஆடுக பொன்னூசல்
அகிலமும் வாழ்தர மங்களநாயகி
ஆடுக பொன்னூசல்.

தோடு - காதணி; நகில் - தனம்; கழை - கரும்பு; உள்ளத் தடம் - மனமாகிய குளம்; முளரி - தாமரை; சங்கு அனகளம்

மிசை - சங்கு போன்ற கழுத்தில்; அகரு-அகில்; ஆரம்-சந்தனம்; புழுகு - புனுகு. (9)

103. அறுவைய தெனவடு புலியத ளுடையி
னரத்தர் மருந்தீசர்
ஆகமு மாயவர் பாகமு மாயவ
ளாடுக பொன்னூசல்
அருமறை முறையிட வடியவ ருளமல
ரம்புய செம்பத மேல்
அணிபரி புரமுத லணிகல கலவென
ஆடுக பொன்னூசல்
அறுமுக மதலையை யைங்கர முதல்வனை
யருளிய மாதாவே
அருள்பொழி இருவிழி மருவமர் குழலுமை
யாடுக பொன்னூசல்
அறிவினர் கொடையினர் தனமலி புகழினர்
அன்பின ரின்பமொடும்
அமர்தரு திருவாஞ் சியநகர் வாழ்பவரை
ஆடுக பொன்னூசல்.

அறுவை - ஆடை; அடு - கொல்; அதள் - தோல்; ஆகம் - உடல்; உளம் - மனம்; அம்புயம் - தாமரை; பரிபுரம் - காற்சிலம்பு; மரு - வாசனை; குழல் - கூந்தல்; கொடையினர் - வள்ளல்கள்; தனமலி - செல்வம் மிக்க. (10)

திருவாஞ்சியம் ஸ்ரீ மங்களநாயகியம்மை பிள்ளைத்தமிழ்

முற்றிற்று.

உ

திருவாஞ்சியத் தலபுராணம்

பாட்டு முதற் குறிப்பகராதி

	பக்க எண்
அக்கணிங்	73
அங்கணைங்	69
அங்கதுசா	234
அங்கவர	108
அங்கவன்விரு	102
அங்கவன்விகு	142
அங்கவன்வை	91
அங்கியில்	230
அங்கிருந்து	98
அங்குமுன்	87
அங்கையின்	190
அடவிமிக்குடை	51
அடவிமிக்குள	129
அடியதெண்	223
அடியவர்க்	94
அடுக்குமிப்	111
அடையத்தெரு	171
அணிபவள	238
அண்டமா	4
அண்டமுங்	189
அண்டமூற்	254
அண்டமெலா	176
அண்டருங்	105
அண்டர்கோ	252
அண்டர்நா	77
அண்டர்பல்	69
அண்டவன்	184
அண்டவோ	223
அண்ணல்கே	121
அண்ணலங்	206
அண்ணல்தன்	191
அதனடு	24
அதனில்நின்	193
அதன்கரை	36
அத்தகுசோ	197
அத்தகைய	97
அத்தடம்பு	87
அத்தலத்	33
அத்திரிகாசி	38
அத்திரிவசி	25
அத்துவாவு	42
அந்தகன்	59
அந்தக்கண	201
அந்தணர்	38
அந்தணர்மி	148
அந்தணாளர்	240
அந்தத்திரு	174
அந்தநற்பதி	24
அந்தநற்றவ	17
அந்தநன்	53
அந்தமில்தவ	154
அந்நகரி	248
அந்நகர்ப்	126
அப்பெருநதி	142
அப்பெருந்	33
அமரர்பொற்	131
அம்பிகை	63
அம்புவியி	194
அயநகர்க்	89
அரக்கவல்	59
அரசரெண்	126
அரசர்மா	241
அரசனுக்கு	132
அரமடந்தை	131

	பக்க எண்		பக்க எண்
அரவமோரிரு	123	அன்புநெஞ்	207
அரியசெம்	253	அன்புற்றற	79
அரியபல்க	170	அன்றுநஞ்	110
அரியமாத	259	அன்றுநான்	139
அரியமாதவமீ	43	அன்னதண்	116
அரியயற்	151	அன்னதேய	109
அரியயன்	6	அன்னதேலு	61
அரியரன்	41	அன்னதொன்	25
அரியாரய	210	அன்னநல்லி	120
அருகுநின்ற	66	அன்னதிற்ற	192
அருகுநின்றி	109	அன்னதோர்	190
அருக்கராயி	139	அன்னநேமி	15
அருக்கன்	231	அன்னபொன்	228
அருத்திமிக்	113	அன்னமன்	212
அருமறைச்சி	46	அன்னமேரு	226
அருமறைநா	81	அன்னவர்த	238
அருமறைப்பொ	110	அன்னவளீ	146
அருமறைப்பி	256	அன்னவள்	144
அருமுனிசா	190	அன்னவனி	81
அருவமென	2	அன்னவன்சு	163
அலகிலித்	47	அன்னவன்வி	23
அலகில்மன்	188	அன்னவெற்பி	179
அலைகடல்	59	அன்னைநீ	106
அல்லலுறு	144	அன்னைநீயெ	177
அல்லார்கு	196	ஆகமப்படி	89
அவற்றி	24	ஆக்கமெய்	259
அவனிநீ	56	ஆங்கதற்கி	218
அவ்வகைவி	149	ஆங்கவனீங்	146
அளவறு	56	ஆங்கவன்	57
அளவில்மா	260	ஆடகப்புரி	53
அறனலாது	54	ஆடகேசர	223
அறனுனக்	127	ஆடுதண்பு	214
அறுசுவைப்	22	ஆண்டொறு	104
அறுவராம	241	ஆதலால்	9
அறையு	12	ஆதலினலி	96
அனையதோர்	21	ஆதவருதை	228
அன்பாலு	196	ஆதனங்கோ	83
அன்புசெய்	112	ஆதிநாயக	219

	பக்க எண்		பக்க எண்
ஆதியினுள	238	இப்பெருந்	188
ஆயவருண	143	இரந்துநீ	216
ஆயுநூலறி	170	இரப்பவ	148
ஆயுமறைப்	158	இருக்குமா	16
ஆவதுகரும	107	இருக்குமிப்	220
ஆவினைத்	168	இருதிறத்	179
ஆழியுமுகி	249	இருந்தவ	52
ஆனியின்	161	இருந்துபின்	80
இக்குவேள்	251	இருவகைய	3
இங்கிருந்த	122	இரைபற்	200
இங்குநா	199	இலகுகார்த்	212
இங்குவந்	52	இல்லற	14
இடைநுட	120	இவ்வகைய	228
இதுதகுமே	62	இறைநவி	42
இதுதவத்	44	இறையுமே	101
இத்தகுமே	37	இறைவகே	212
இத்தகுதவ	122	இறைவநீ	136
இத்தகுபு	138	இறைவர்தாள்	4
இத்தகைய	195	இறைவனன்ன	194
இத்தலத்	167	இறைவனு	237
இத்தலந்	13	இறைவனே	152
இத்திறத்த	120	இறைவியி	178
இத்திறத்தி	88	இனியபா	209
இத்திறத்தின	20	இனியுமது	257
இந்தநன்ன	202	இனையதன்	233
இந்தமாக்	10	இனையவீரி	40
இந்தமாந	115	இன்றுநீபணி	75
இந்தமாமு	118	இன்னதன்	90
இந்தவகைநோ	238	இன்னநல்வி	170
இந்தவகைசா	145	இன்னநல்லெ	127
இந்தவண்ண	122	இன்னநன்	123
இந்தவேலை	118	இன்னயோ	161
இந்திரன்விரி	109	இன்னவாய்	75
இந்திரன்இமை	121	இன்னவாறு	55
இந்துசே	192	இன்னனபு	230
இந்துவாழ்	140	இன்னுமேலு	222
இந்நகர்க்	117	இன்னுமோர்	214
இந்நெறி	91	ஈசனைப்	166

	பக்க எண்		பக்க எண்
ஈண்டிருந்	219	எழுதுசித்	67
உடனணைந்	138	எழுந்துவி	92
உடையநா	203	எழுந்தும	71
உடையவெம்	253	எள்ளருந்	44
உண்டியின்	41	எற்படுமடி	189
உண்ணிறை	122	என்றருமா	125
உதவினரி	167	என்றாலுமித	173
உயர்ந்தொ	52	என்றிசைத்	86
உரியமெய்	230	என்றிவைமு	205
உரைகெழு	26	என்றிவையன்	151
உரைக்குமி	194	என்றிவ்வா	203
உரைசெய	213	என்றுகூடி	32
உலகத்தொரு	172	என்றுசூத	186
உலகமோர்	155	என்றுதரவி	211
உவரொடு	227	என்றுதன்	22
உழந்துபெற்	134	என்றுமிகு	144
உழவர்	40	என்றுமுனி	95
உளவிதற்கு	233	என்றுமுன்னை	156
உள்ளணைந்	68	என்றுமுன்றுதி	115
உள்ளவாறு	134	என்றுமுன்போ	139
உறையுமிப்	221	என்றுரைத்	124
உற்றசித்தி	202	என்றுவான	177
உற்றசெழு	160	என்றுவி	133
உற்றதொரு	235	எனத்துதித்	217
உன்னரு	155	எனநயம்	260
எங்குமாய்	176	எனநவிற்	86
எடுத்தணைத்	73	எனவிரந்து	47
எடுத்தெறி	183	என்னினிது	60
எட்டுமெண்	222	ஏயுமற்றி	229
எண்டகு	190	ஏழிருங்க	198
எண்டிசைப்	111	ஏழுலகு	4
எண்ணில்	129	ஏற்றமாம்	259
எந்தநாளி	130	ஐம்புலவ	92
எந்தைதெ	92	ஐயநீயரு	76
எந்தைநீ	152	ஐயமெனப்	147
எப்பொருள்	57	ஒடுக்கமுற்	198
எம்மனோர்க்	100	ஒடுக்கமெய்	218
எவ்வச்சத்	119	ஒட்டை	17

	பக்க எண்		பக்க எண்
ஒருப்படுதி	103	கருடகந்தி	191
ஒருவர்வாழ்	128	கருமைசெம்	220
ஒருவன்முன்	61	கலியுகமா	141
ஒல்லைசென்	75	கவுதமர்	82
ஒங்கலொன்	223	கவுதமன்	132
ஓசையூரு	85	கழறுமித்	190
ஓதுமன்பர்	6	கறங்குபா	106
ஓதுமின்னக	164	கற்பகத்தருக்	200
ஓரொருதின	229	கற்பகத்தருக்	189
ககனமீதெ	102	கற்றைவார்	123
கங்கையங்	29	கனகமாளி	246
கங்கைச்ச	114	கன்னலின்	28
கங்கையே	136	கன்னியைத்	169
கடலுடு	21	காசிகேதா	156
கட்டளைநி	160	காசியின்னி	117
கட்டுசெங்	242	காடுநீடிய	71
கண்டனர்	46	காண்டலு	193
கண்டுசெங்	113	கார்ந்தமெம்	122
கண்டுதன்	215	காமவெம்	19
கண்ணன்	114	காமவேளெ	119
கண்ணியங்	206	காய்தருவெ	147
கண்ணிரண்	100	காவதந்தி	73
கண்ணிற்பு	173	காவானல	173
கண்ணெதிர்	63	காவியல்மா	244
கண்ணேமணி	211	கானகம்ப	88
கதிர்மணி	34	கானமார்	163
கந்தமாதன	225	கிழக்குமெ	224
கந்தரங்கு	167	குங்குமமெ	247
கந்தவேளொ	113	குயவர்	7
கயிலையம்	199	குரவர்நிற்	133
கரிமுகனி	249	குலவியகலி	165
கரியமாலய	46	குலவியதா	210
கரியமால்	93	குலவுசன்	233
கரியமாலவ	101	குலவுமெய்	97
கருங்கட	108	குலவுவல்	27
கருணைநோ	215	குறியதாளின்	178
கருத்திலின்	101	குறைவில்	85
கருத்தினர்	260	குன்றனைய	5

	பக்க எண்		பக்க எண்
கூறரிய	255	சிந்தைமிக்	210
கூறுமங்க	243	சிறந்தகா	202
கூறுவான்	121	சிறப்புறு	82
கூற்றமுமா	245	சிறியர்	72
கூற்றமும்	181	சீதரன்ப	261
கைகள்பத்	221	சீதரன்மு	105
கைகொள்	180	சீர்தாங்கு	2
கைத்தலம	122	சீலமுற்	218
கையஞ்சலி	79	சுண்டமோ	227
கையும்உங்	98	சுரர்புக	193
கொடியசொல்	39	சுருதிநல்	43
கொடியவா	184	சுருதியா	208
கொடியவெங்	44	சுருதியின்	85
கொண்டலி	229	சூலமொன்	182
கொண்டவெ	99	சூழவெண்	224
கொழுநர்	107	சூழும்பரி	91
கோடியோ	222	செக்கரஞ்	110
கோலமே	76	செக்கர்	1
கோவில்	221	செங்கண்மால்த	12
சகத்திர	209	செங்கண்மாலுக்கு	74
சக்கரம	230	செங்கண்மாலுமு	135
சதுமுகத்தவ	137	செங்கண்மால்தங்	184
சதுமுகத்தனு	7	செங்கண்மாலி	124
சதுமுகன்	191	செடிகொள்	17
சந்தன	15	செந்திரு	30
சந்திவங்	90	செப்பரும்	258
சந்திரரு	248	செப்புமித்	123
சந்திரன்	232	செம்மைதரு	236
சம்புமா	30	செம்பொனி	255
சரதமே	105	செயமிகு	171
சனகநற்	249	செயிரறு	25
சாற்றரும்	22	செய்தபோத	70
சாற்றுமிப்	8	செய்யமுள்	15
சிதைவில்	87	செய்யபங்க	100
சித்தசித்	217	செய்யபொற்	45
சித்தர்	29	செய்யபொற்	119
சித்திரகூட	28	செய்யபொன்வ	209
சித்திரையி	159	செய்யபொன்னி	192

	பக்க எண்		பக்க எண்
செய்யமலர்	94	தவளமாட	247
செய்யமுள்ள	15	தழுவிய	228
செய்யவேல	50	தன்னையாத	65
செருகு	18	தாதைதன்	55
செழுமறை	135	தாமரைத்த	243
செறிந்ததூ	56	தாமரைத்தி	205
செற்றமிக்	183	தாரகமாகி	104
சென்றுசே	182	தாரையா	157
சென்னிநா	136	தானவன்	180
சென்னியாய்	252	திக்கயங்கள்	230
சேணமர்	244	திக்கயங்கள்தி	254
சேலுருவங்	95	திக்கனைத்தி	181
சேனைமுற்	181	திங்களாயி	98
சொல்லுமிப்	32	திசைமுகன்	191
சொற்றதோர்	154	திசைகடோ	254
சொற்றநற்றவரு	52	திருத்தரும	97
சொற்றநற்றவ	232	திருத்தகுமா	248
சொற்றவிங்	221	திருந்தமெய்	186
சொற்றவிச்	80	திருந்தவ	103
சொற்றவிப்	164	திருந்துமே	242
சொன்னவித்	51	திருந்தும	16
தடைபெரு	63	திருப்புனை	53
தண்டுகு	18	திருமகள்பி	102
தண்டுறைப்	28	திருமகள்பொ	125
தண்ணரும்	163	திருமதில்	166
தந்திமுகன்	265	திருவருளின்	94
தந்தைசொல்	35	திருவுளமென்	92
தந்தைசொற்	54	தீயினுஞ்சு	135
தந்தைதா	40	தீர்த்தமற்றி	258
தந்தையை	35	தீர்த்தமிவை	157
தம்பமாயிர	239	துக்கநீள்	137
தம்மையோ	204	துங்கமெய்	60
தருக்கிய	227	துந்துமி	189
தருக்குமி	51	தும்பிமுகன்	238
தருப்பை	14	துய்த்திடு	93
தரைமிசை	255	துரியதீத	190
தலைவர்	31	துருவனேழி	232
தலைவனீங்	99	துளங்கு	240

	பக்க எண்
துற்றபே	21
துன்புறு	229
துன்னிலை	243
தூயமென்பு	251
தூயநான்	70
தூயமாய	80
தெண்டபாணி	236
தெம்முனை	185
தெய்வவெ	208
தெரிந்தவற்	227
தெரிவரும்	48
தெருளுமெய்	62
தெருளும்	118
தெருளுறவு	111
தெளித்தநுண்	69
தென்றிசைபொ	60
தென்திசைக்கு	116
தென்றிசைக்க	226
தேசமர்கோ	245
தேசிகன்ற	133
தேசுசேர்	79
தேருமாட	255
தேவர்கள்	187
தேவிநின்	106
தேவியிப்	179
தேற்றமாகி	126
தையலிவள்	143
தொக்கிரு	117
தொடங்கி	82
தொட்டகய	145
தொலைவிலி	20
தொழுதுகை	45
தொன்மைத	239
தோற்றமீ	236
தோற்றரி	123
நண்ணியவடி	140
நண்ணியயுக	125
நலமிலாத	230

	பக்க எண்
நல்கினர்க்	168
நல்லாரமு	114
நவமிநாட்	185
நாககங்	29
நாதனுக்கு	129
நிரைகொள்	239
நிரைபட	27
நிரையநா	58
நிருமதை	195
நிருமலனினை	152
நிலவுலக	23
நிறைந்ததே	246
நிறைபுனல்	150
நின்மகத்	84
நின்றனைப்	47
நீடுகாவணத்	6
நீடுமன்பினில்	175
நீதிசாலத	78
நீயதற்குள	74
நீயுமங்கதிற்	137
நீலமுநிடத	227
நீள்கடவுட்	189
நெஞ்சறிய	145
நெடியகற்	119
பங்கயம்	176
பணிந்தெழு	216
பணிவார்ப	211
பந்துமெல்	239
பரந்தநதி	235
பரமகாரண	214
பரந்தது	104
பரவுவேண்	81
பரிசனமா	208
பரிசனமெ	239
பரிவொடு	92
பருவமோர்	43
பல்கலைச்	30
பற்றிலா	62

	பக்க எண்		பக்க எண்
பன்னசாலை	129	பெருக்கமா	221
பன்னரும்	37	பெருகுநல்	120
பன்னுநான்	70	பையார்வணைத்	99
பன்னுமேன்	74	பொருகட	141
பாகமாகி	254	பொருவில்	162
பாடினமறை	206	பொருளின்	241
பாததாம	253	பொறிகடோ	120
பாதசால	120	பொறிபுலன்	151
பாதலத்தினு	222	பொன்பொ	32
பாரதி	11	பொன்னயத்	128
பார்த்திபா	161	பொன்னமர்	228
பாலநீற்ற	250	பொன்னியல்	142
பாலலோசன	7	போத	1
பாவலரெு	93	போற்றிய	92
பாற்கடல்	187	போனகமே	177
பாற்பசு	168	மகபதி சாப	140
பிரகற்பதி	174	மகப்பெற	93
பின்புபேர்	58	மகவிழா	256
பின்னணை	14	மங்கைநீ	115
பின்னரும்	93	மங்கைபங்	175
பின்னுமோ	11	மங்கையஞ்	207
புகலிலா	37	மங்கையர்	244
புகலுமத	235	மண்டழற்	128
புடவிவே	254	மதிதவழ்	153
புடைபரங்	225	மந்தரத்த	224
புண்ணியதீ	165	மருங்கெ	27
புண்ணியத்	26	மருத்துவமே	158
புதியமட்	164	மருத்துவரி	191
புதுமணி	205	மருந்தர்	8
புரந்தரன்	130	மலரயனினை	245
புரைசெய்	54	மலரிறு	13
புலத்தினை	33	மலையைநிக	148
புவனமொ	220	மல்லன்மா	134
புறத்து	16	மழைமுனிக்	64
புறந்தழீய	86	மறுகுதிண்	84
புனிதமாந்	9	மறுத்துரைத்	65
பூசைசெய்	216	மறைகள்போ	204
பூசைநீர்	31	மறைகளோ	65
பூமிசைவா	229	மறையவர்க்கன்	169

	பக்க எண்		பக்க் எண்
மறையவர்க்களி	162	முளரிநான்	256
மறையை	35	முனியுரைத்	66
மறையோர்	200	முனிவகேண்	88
மற்றநல்ல	55	முனிவகேளு	187
மற்றதுகா	195	முனிவர்கள்	83
மற்றதுதனை	228	முனிவரர்	34
மற்றந்த	201	முனிவரிம்	45
மற்றவற்	12	முனிவளிப்	162
மற்றுமணி	238	முனிவனே	61
மற்றுமன்ன	222	முன்படிந்த	68
மற்றுமோ	257	முன்பிலாத	48
மன்பெருங்	154	முன்னங்க	197
மன்னர்கோ	39	முன்னமிங்	116
மன்னவ	124	முன்னியகரு	49
மன்னனிப்	49	முன்னியத	155
மாகநீரா	150	முன்னைநா	31
மாசில்தீர்	117	முன்னைவல்	42
மாதமெலா	158	முன்னைவா	20
மாதவத்தி	186	முன்னைநாளி	257
மாதுபங்கனை	41	முன்னையாச்	72
மாதுபாகனே	217	முன்னையென்	52
மாதுபாகன்	220	மூடுநோயி	77
மாதைம	250	மூவாமுத	91
மாதொரு	169	மெய்தரு	36
மாநிலவ	50	மெய்திகழி	123
மாயாதனு	78	மெய்மை	121
மாயையுபா	96	மெல்லவங்	77
மாரிவேனில்	118	மேகநுண்	72
மாலயனம	165	மேதிவெம்	150
மின்றயங்கு	127	மேருவெற்	118
முடித்தசெஞ்	138	மேருவை	227
முண்டகத்த	236	மேவுமித்த	240
முண்டகத்தி	83	மைந்தரின்	84
முதுவானவர்	172	மைம்முகிலே	229
முத்திநாயக	231	மையமர்	166
முத்தொழிலி	237	மொழிந்திடிற்	58
முந்துது	38	மோதுவெண்	49
முத்தொரு	108	யாமதற்கணி	199

	பக்க எண்		பக்க எண்
யோகமெய்	119	வாதைசெய்	203
வச்சிரஞ்	180	வாமனமி	10
வஞ்சமில்	76	வாயுவே	231
வடகிழக்கி	258	வாய்த்ததி	78
வடமியைங்	254	வாய்த்தமா	153
வடவைவெ	178	வாய்ந்தவை	160
வடிவிலோர்	64	வாழிவாழி	261
வடிவுசித்	251	வானகத்து	204
வட்டமிட்டு	183	வானதுந்து	112
வணிகர்	39	வானநாடரு	68
வண்டேன்	101	வானத்திமை	172
வந்தனர்	246	வானவன்	131
வந்துகோ	67	வானுளார்	107
வந்துசித்	174	வான்றரு	222
வந்துபுகுங்	146	விண்ணகத்	185
வந்துபுண்	149	விண்ணகர்க்	118
வந்துபூதல	198	விண்ணவரி	112
வந்துமாமுனி	89	விண்ணவர்	189
வந்துமுனி	143	விண்ணிடை	149
வந்துவிண்	132	விண்ணினின்	121
வயல்வரம்	66	விண்ணியலு	157
வயிரம்வி	242	விண்டுபுர	234
வரதாமழ	90	விண்முதல	197
வரனுடை	11	வித்தகன்	252
வரையினு	250	விரவியிப்	221
வளங்கெ	159	விரிக்கு	18
வளவர்கோ	8	விரிசுபாரி	225
வளவர்தங்	175	விருந்தய	36
வள்ளல்	3	விருப்ப	19
வாக்கிறங்	103	விருப்பினு	215
வாசவன்	121	விலங்கின	16

	பக்க எண்		பக்க எண்
விழுந்தவ	182	வேதனுல	234
விளங்கிய	188	வேற்றுரு	57
விளைபுல	96	வேனில்நன்	48
வீசுவெண்	213	வைகறை	159
வீணையாழி	119	வையங்ந	156
வீதிமுன்னி	247	வைதீகனுளே	147
வேண்டுகின்	71	வைத்தமேரு	226
வேதந்தெரி	196	வையகத்	207

திருவாஞ்கியத் தலபுராணப் பாட்டு முதற்குறிப்பகராதி முற்றிற்று.

திருவாஞ்சியம்

ஸ்ரீ மங்களநாயகியம்மை பிள்ளைத் தமிழ்

பாட்டு முதற்குறிப்பகராதி

	பாட்டு எண்		பாட்டு எண்
அத்திரி	35	குன்றவர்பாவை	3
அருமென	43	குழைபோய்க்	62
அறுகல்	11	கூறுங்குறக்குல	46
அறுவைய	103	கொண்டல்மேனி	70
ஆணிமுத்தென்ற	48	கொள்ளைச் செழுந்	78
ஆயிரமிதழ்க்	93	கோதிலா நினது	65
ஆரணிபரா	92	சங்குகுடவயிறு	74
இருபுடை	35	சீர்கொண்ட	2
இருமருப்	67	செம்பவளமொரு	9
இருளூறுவிழி	100	செம்மயிர்ப்	73
இழைதுஞ்சு	55	செந்திருவே	80
இழையொளி	52	தங்கவரி	13
உருவாயருவா	40	தத்துந்தரங்க	49
உலகமே	96	தண்ணமதி	66
எழுகுவட்டை	53	தருமபுரம்	17
ஏடுவிரிகொன்றை	97	தானே தன்னை	19
ஐவர்க்குமுன்	47	துதிபெருக்குங்	51
ஒளிவிடுமிரு	42	துறையூர்திருப்	60
ஒன்ருகியைந்	101	தூக்குகுடல்	84
கங்கந்தழைத்த	38	தொண்டைவா	91
கங்காநதி	14	நகைநில	102
கங்கைப்பெரு	15	நசைதருதீந்தமி	23
கங்கைத்திரை	25	நாடமலியும்	22
கச்சுற்ற	5	நீர்கொண்ட	4
கடலிடை	76	பங்கந்தழுவிய	28
கடலூர்சிராப்	41	படிகொண்ட	56
கண்டல்மண்	77	பணியுடல்	81
கதிதருகைக்	31	பண்டாயிர	26
கருணுகரர்	82	பலபலசமயமு	32
கருமத்துயரற	29	பல்லியத்தொலி	54
கலையார்ந்தெழு	19	பளபளவென	33
கலையார்மதிபோற்	61	பன்மணி	6
கனைகதிர்வழி	21	பன்னற்கரு	16
காமர்மணி	24	பன்ணுகமேவலா	87
காரிருட்படலங்	64	பாடுங்களிவண்	7

	பாட்டு எண்		பாட்டு எண்
பாயிருள்முகம்	12	முருக்கிற்சிறந்த	58
பிள்ளைப்பிறையு	63	முனைமுனைந்து	71
பூட்டவரு	59	மென்னரம்பிற்	94
பூமேவுகற்பக	99	மொழிசரற் கால	90
பேசுகின்ற	10	மோட்டாமை	36
பைம்புரவி	76	வண்டரு	69
பைவந்ததுத்தி	39	வருவேதண்டமு	27
மங்குலாவிய	89	வள்ளைக் கமல	1
மஞ்சிலங்குஞ்சி	68	விதியுதவு	98
மணியாட நெற்றி	79	விரிசடை	88
மண்டலமும்	37	வீடாதவெண்	83
மதர்விழி	8	வீழிபுத்தூர்	50
மாமணிச்செம்	34	வெங்கயக்	95
மின்பூத்த	86	வெங்கற்றை	44
மீனிருல்	45	வேரிற்பழுத்	75
முடியொடுமுடி	20	வேலையுமசைந்	57
முதியவர்சததள	30		



திருவாஞ்சியக் கோயில் திருவாயில்